# பி.லிட், தமிழ் - முதலாமாண்டு

## *DJL16 :* தாள் : 6 - தமிழக வரலாறும் பண்பாடும்

## பாடத்திட்டம்

### *அலகு 1*

தமிழக வரலாற்றிற்கான அடிப்படை ஆதாரங்கள்

தமிழக நிலவியல் கூறுகள்

புதைபொருள் ஆய்வால் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் பற்றி அறியலாகும் உண்மைகள்

சிந்து சமவெளியும் குமரிக் கண்டமும் தமிழ்ப் பண்பாட்டுடன் கொண்ட தொடர்புகள்

### *அலகு 2*

தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிப பண்பாட்டுத் தொடர்புகள்

சங்கம் இருந்தமைக்கான சான்றுகள்

சங்க இலக்கியங்கள்

பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறைகள்

### *அலகு 3*

களப்பிரர்கள் காலம்

பல்லவர்கள் காலம்

சோழர் காலம்

### *அலகு 4*

பாண்டியர் வரலாறு

நாயக்கர் காலம்

ஐரோப்பியர்கள் காலம்

### *அலகு 5*

இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு

இருபதாம் நூற்றாண்டில் தமிழகம்

**பாடநூல்**

1. முனைவர் ந. அறிவுராஜ், முனைவர் ஆ. குமார்
தமிழக வரலாறும் பண்பாடும்
பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை
2. கே.கே.பிள்ளை
தமிழக வரலாறும் பண்பாடும்

பாடம்


1. தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்கள்
2. தமிழகத்தின் இயற்கை அமைப்புகள்
3. புதைபொருள் ஆய்வால் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் பற்றி அறியலாகும் உண்மைகள்
4. சிந்துவெளியும் குமரிக்கண்டமும் தமிழ்ப்பண்பாட்டுடன் கொண்ட தொடர்புகள்
5. தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிக பண்பாட்டுத் தொடர்புகள்
6. சங்கம் இருந்தமைக்கான சான்றுகள்
7. சங்க இலக்கியங்கள்
8. பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறைகள்
9. களப்பிரர்கள்
10. பல்லவர்கள்
11. சோழர்கள்
12. பாண்டியர்கள்
13. நாயக்கர்கள்
14. ஐரோப்பியர்கள் காலம்
15. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு
16. இருபதாம் நூற்றாண்டில் தமிழகம்

துணை நூல்கள்

மாதிரி வினாத்தாள்

# பாடம் 1

## தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்கள்

தமிழக வரலாற்றை மொழி, இனம், நாடு என்ற மூன்று நிலைகளிலும் காணலாம். தமிழ்மொழியும் இனமும் நாடும் உலகில் மிகவும் தொன்மையானவை. எனவே தொன்மையும் பழமையும் முதன்மையும் உடையது தமிழ்நாட்டு வரலாறு. அவ்வரலாற்றை அறிய உதவுவது வரலாற்று மூலங்கள் ஆகும்.

வரலாற்று மூலங்களைச் சான்றுகள் அடிப்படையிலும், கால அடிப்படையிலும் பகுக்கலாம். கால அடிப்படையில் பகுப்போர் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இக்காலம் என முறைப்படுத்துவர். சான்றுகள் அடிப்படையில் பகுப்போர் புதைபொருள் ஆய்வுகள், இலக்கியங்கள், மொழியியல் பின்புலம், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள், வெளிநாட்டார் குறிப்புகள், அரசு ஆவணங்கள், தனியார் குறிப்புகள்-கடிதங்கள், நாடோடிப் பாடல்களும் செவிவழிச் செய்திகளும் எனச் சான்றுகளை முறைப்படுத்துவர்.

### சான்றுகள் அடிப்படை

### 1. புதைபொருள் ஆய்வுகள்

தமிழர்களுடைய வரலாறும் பண்பாடும் சிந்துவெளி அகழ்வாராய்ச்சிக்குப் பிறகு புதிய கோணங்களில் நோக்கப்பட்டு வருகின்றன. புருஸ் பூட் என்பவரால் ஆதித்தநல்லூர் என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி நல்ல பயனைத் தந்துள்ளது. திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, செங்கற்பட்டு, சேலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற புதைபொருள்கள் தமிழர்களின் அந்நாளைய வாழ்க்கை முறையை அறிய உதவுகிறது. சர் மார்டிமோர் வீலர் அரிக்கமேட்டில் நடத்திய அகழ்வாராய்ச்சியும் பழந்தமிழர்களின் வாழ்க்கைமுறை பற்றி அறிய உதவுகிறது. பூம்புகாரில் நடத்தப்பெற்ற அகழ்வாராய்ச்சியும் நல்ல பயனைத் தந்துள்ளது.

### 2. இலக்கியங்கள்

வரலாற்றை அறியத் துணைநிற்கும் இலக்கியங்களை, நோக்க அடிப்படையில் இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று சமுதாயப் பின்னணி, இரண்டு அரசியல் பின்னணி. தமிழ் இலக்கியங்களுள் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை மூலம் தமிழகத்தின் சமுதாயப் பின்னணியைத் தெரிந்துகொள்ள இயலுகிறது.

சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், பெரியபுராணம், மத்தவிலாச பிரகடனம், கேரளோற்பத்தி, மதுராவிசயம், தலபுராணங்கள் ஆகியவை தமிழக அரசியல் பின்னணியைப் பிரதிபலிக்கின்றன. இலங்கை மன்னன் கயவாகுவுடனும், வடநாட்டு மன்னருடனும் செங்குட்டுவன் கொண்டிருந்த அரசியல் தொடர்பைச் சிலப்பதிகாரம் தெளிவுப்படுத்துகிறது. மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாற்றில் பாண்டியன் சீமாறனை முறியடித்த செய்தியினை நந்திக்கலம்பகம் எடுத்துரைக்கிறது. குலோத்துங்கன் கலிங்க நாட்டை வெற்றி கொண்ட முறைமையையும் கலிங்கநாடு பெற்ற சீரழிவையும் கலிங்கத்துப்பரணி விளக்குகிறது. இவ்வாறு இலக்கியங்கள் தமிழகத்தின் சமுதாய அரசியல் வரலாற்றை இயம்புகின்றன.

### 3. மொழியியல் பின்புலம்

ஒரு மொழியின் எழுத்தமைப்பு அம்மொழிக் குடும்பத்தின் பழமை, வளமை, வளர்ச்சி நிலை ஆகியவற்றைக் கொண்டு அம்மொழி பேசும் மக்களின் வரலாற்றை ஓரளவு கணிக்க இயலுகிறது. திராவிட மொழிகளை ஒரு தனிக்குடும்பமாக மதிக்கத் தொடங்கியபின் தென்இந்திய வரலாறு புதிய கோணத்தில் ஆராயப்படுகிறது. பல்லவர்காலச் செப்பேடுகள் மொழிநிலைகொண்டு அவற்றின் காலத்தை வரையறுப்பது மரபாக உள்ளது. வட்டெழுத்து, கிரந்தலிபி எனக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்களின் வகைகள் அவற்றின் காலத்தைக் கணிக்கப் பெரிதும் துணை நிற்கின்றன.

### 4. கல்வெட்டுக்கள்

பொதுவாகப் பல்லவர்கள் காலத்திற்குப்பின்தான் தமிழக வரலாற்றைத் தொகுப்பதற்கான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. ஏழாம் நூற்றாண்டிற்குப்பின் சோழர் மற்றும் பாண்டியர் வரலாற்றைத் தொகுப்பதற்கான கல்வெட்டுச் செய்திகள் அதிகமாகக் கிடைத்துள்ளன. முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலின் சுவர்களில் பொறித்துள்ள கல்வெட்டுகளும், வீரராசேந்திரன் காலத்தைச் சேர்ந்த திருமுக்கூடல் கல்வெட்டுகளும், மூன்றாம் இராசராசனின் காலத்தைச் சேர்ந்த திருவந்திபுரத்துக் கல்வெட்டுகளும் மிகவும் முக்கியமானவை. சோழ மன்னர்களின் வரலாற்றுக் செய்திகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் சிங்களத்திலும், சாவகத்திலும், சுமத்ராவிலும், பர்மாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டின் தொடக்கத்தில் மங்கல வாசகம், இதனைத் தொடர்ந்து இறைவணக்கம், கல்வெட்டைப் பொறித்த அரசனின் பெயர், அவனது

முன்னோர்களின் பெயர்கள், கல்வெட்டு எழுந்த காலம், அரசனது பெருமைகள், அருஞ்செயல்கள் ஆகியவற்றைக் கொண்ட முகப்புரை, அதன்பின் கொடையாக அளிக்கப்பட்ட பொருள், வில்லங்க விலக்கம் எனக் கல்வெட்டுச் செய்திகள் நிரல்படுத்தப்பட்டுள்ளன. முகப்புரையில் கல்வெட்டு எழுந்த காலம் அரசனின் ஆட்சியாண்டு குறிப்பிடப்பட்டிருக்கும்.

## 5. செப்பேடுகள்

அரசனது முத்திரையுடன் மன்னர் அளித்த மானியம், கொடை, அவர் பெற்ற சிறப்புக்கள் ஆகியன பொறிக்கப்பட்டு செப்புத் தகடுகளில் வெளியிடப்பட்டவை செப்பேடுகள் எனப்படும். வேள்விக்குடிச் செப்பேடுகள், அன்பில் செப்பேடுகள், கரந்தைச் செப்பேடுகள், சின்னமனூர்ச் செப்பேடுகள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ஆகியன கல்வெட்டுகளைப் போலவே மன்னர் புகழ் கூறும் மெய்க்கீர்த்தியைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பெரிதும் கொடைகளைப் பற்றியே கூறுகின்றன.

வீரராசேந்திரனின் ஏழாம் ஆட்சியாண்டில் வெளியான சாரலா செப்பேடு, கன்னியாகுமரிக் கல்வெட்டின் நகல்படி ஆகும். முதலாம் இராசராசனுடைய 21ம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட செப்பேடு டச்சுக்காரர்களால் எடுத்துச் செல்லப்பட்டு இப்போது லெவியடன் அருங்காட்சியகத்தில் உள்ளது. இது செப்பேடு என்றும் தாமிரப் பட்டயம் என்றும் கூறப்படும். அரிதாக வெள்ளியிலும் தங்கத்திலும் கூட பட்டயங்கள் வெளிவந்துள்ளன.

## 6. நாணயங்கள்

நாணயங்களை அவை தரும் வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள அயல்நாட்டு நாணயங்கள், தமிழ்நாட்டு அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் என இருவகையாகப் பாகுபடுத்தலாம்.

மதுரையில் உரோம நாணயமும் மைசூரில் சீன நாணயமும் கிடைத்துள்ளன. இவை அந்நாடுகளுடன் நம்நாடு கொண்டிருந்த வணிக, பொருளியல் உறவைக் காட்டும். நம் நாட்டு நாணயங்கள் நாட்டின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. பொன், வெள்ளி, செப்பு நாணயங்கள் நம் நாட்டில் புழக்கத்தில் இருந்தன. பொன் நாணயங்களைக் ‘கழஞ்சு’ எனக் குறித்தனர். இந்த நாணயங்களில் காணப்படும் எழுத்துக்கள் அக்கால மொழிநிலை, நாணயங்கள் வெளியிடப்பட்ட காலம், காரணம், யாருடைய அரசு என்பதைப் பற்றித் தெரிவிக்கும். எடுத்துக்காட்டாக, கிடைக்கப்பெற்ற

சோழ நாணயங்களில் ரஜோகுணசோழன் என தேவநாகரியில் எழுதியுள்ள பட்டப் பெயரை இராசேந்திரன் பட்டப் பெயராகலாம் என எலியட் கூறுவர்.

## 7. வெளிநாட்டார் குறிப்புகள்

வெளிநாட்டார் குறிப்புகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று தமிழகம் அயல்நாட்டுடன் வணிகத்தொடர்பு கொண்டதால் வெளிநாட்டார்க்குக் கிடைத்த செய்திகள். இரண்டு அயல் நாட்டார் தமிழகத்தில் பயணம் செய்ததால் இந்நாட்டவர்க்குக் கிடைத்த செய்திகள்.

தமிழகம் குறித்து அயல்நாட்டார் எழுதிவைத்த குறிப்புக்களுள் பழமையானவை கிரேக்க, உரோமானியரது குறிப்புகள் ஆகும். உரோமப் பேரரசர் அகஸ்டசு சீசரின் அவைக்குப் பாண்டியரின் தூதுக்குழு சென்றமைப் பற்றி ஸ்ட்ராபோ குறிப்பிடுவர். தமிழகத் துறைமுகங்கள் குறித்து பிளைனியின் ‘இயற்கை வரலாறு’ என்ற நூலின் ஆறாம் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. தமிழக நகரங்கள், துறைமுகங்கள், ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப் பொருள்கள் ஆகியன பற்றிச் ‘செங்கடல் பயணக் கையேடு’ என்ற நூலில் சுட்டப்பட்டுள்ளன. கி.பி. பதினோறாம் நூற்றாண்டில் சோழ அரசுக்கும் சீன அரசுக்கும் இடையே தூதர் பரிமாற்றம் நடந்ததாகச் சீன வரலாற்றுக் குறிப்புக்கள் சுட்டுகின்றன. கி.பி. 641-42ல் சீனப் பயணியான மார்க்கோபோலோவும் தரும் செய்திகள் பல வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. மார்கோபோலோவை ‘இடைக்காலப் பயணிகளின் இளவரசர்’ (Prince of Medieval Travellers) என்பர்.

## 8. அரசு ஆவணங்கள்

முற்காலத்தில் அரசு ஆவணங்களைக் கோயில்களில் வைத்துப் பாதுகாத்தனர். ஆங்கிலேயர் காலத்தில் அரசு ஆவணங்களை நூல்களாக வெளியிட்டனர்.

## 9. தனியார் குறிப்புகளும் கடிதங்களும்

ஆனந்தரங்கம்பிள்ளை பிரெஞ்சுக் கம்பெனியில் அதிகாரியாக இருந்தவர். அவர் எழுதி வைத்துள்ள நாட்குறிப்புக்கள் 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கிலேய, பிரெஞ்சு நிலையங்களின் தலைநகராக அமைந்தமை, 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கில, பிரெஞ்சு வாணிகக் கழகங்கள் போருக்கு ஆயத்தமாக நின்ற சூழ்நிலை, அதற்கான காரணங்கள், விளைவுகள், 1744ல் பிரெஞ்சுக்காரர்களால் சென்னை கைப்பற்றப்பட்டமை குறித்த செய்திகள் இந்தியப் பெருநாட்டில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகியன இந்நாட்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன.

## *10.* நாடோடிப் பாடல்களும் செவிவழிச் செய்திகளும்

இராமப்பையன் அம்மானை, கட்டப்பொம்மன் கதைப்பாடல்கள், கான்சாகிப் கதைப்பாடல்கள், புலித்தேவன் சிந்து, சிவகங்கைக்கும்மி, இரவிக் குட்டிப் பிள்ளைப்போர் முதலிய நாடோடிப் பாடல்கள் செவிவழி வந்த செய்திகளைச் செய்யுளில் பொதிந்து வைத்தவையே. ஆயினும் செவிவழியே பல தலைமுறைகளாகப் பாமர மக்களிடம் வழங்கிப் பலகாலம் பலரிடம் பல ஊர்களில் பல வடிவங்களில் வழங்கிய இவற்றில் குறைகளும் விடுபாடுகளும் பிழைகளும் இடைச்செருகல்களும் மிகுதியாகயிருக்கும். இருப்பினும் நம்பத்தகுந்தவற்றை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

*1.* தமிழக வரலாற்றை அறிய உதவும் இலக்கியச் சான்றுகளைக் கூறுக.

*2.* தமிழக வரலாற்றை அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகளை விவரி

*3.* தமிழக வரலாற்றை அறிய உதவும் வெளிநாட்டார் குறிப்புகளை விவரி

*4.* செப்பேடுகள், நாணயங்கள் எவ்வாறு தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாகின்றன?

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

*1.* தமிழக வரலாற்றை அறிய உதவும் அடிப்படைச் சான்றுகளை விவரித்து எழுதுக.

# பாடம் 2

## தமிழகத்தின் இயற்கை அமைப்புகள்

இயற்கைவளம், தட்பவெப்பம், காற்று, மலை, ஆற்றுப்படுகை போன்ற இயற்கைச்சூழல்கள் மக்களின் வாழ்க்கை இயல்புகளை மாற்றும் ஆற்றல் வாய்ந்தவை. நாட்டின் அரசியல் அமைப்பு, மக்களின் சமுதாய வாழ்க்கைமுறை, உணவு வகைகள், தொழில்கள், சமய வழிபாட்டுமுறைகள், அவர்தம் கலைப்பாங்கு, இலக்கியப் படைப்புக்கள் ஆகியவை இயற்கையமைப்பைத் தழுவியே அமைந்திருந்தமையைக் காண்கிறோம். மக்களின் உணர்வுகள்கூட இயற்கையமைப்பிற்கேற்ப விளங்கியமைக்குச் சங்க இலக்கியங்கள் சான்று அளிக்கின்றன.

### 1. தமிழ்நாட்டின் எல்லைகள்

முதற்சங்க காலத்தில் தமிழகம் குமரிக்கண்டத்தை உள்ளிட்ட பெரும் நிலப்பரப்பாக விளங்கியது என்பர். இடைச்சங்க நூல் எனக் கருதப்படும் தொல்காப்பியத்தின் பாயிரத்தில்,

**“வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ்க்கூறு நல்லுலகம்”**

எனத் தமிழகத்தின் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கும் மேற்கும் கடல்கள் எல்லையாக அமைந்திருந்தன.

**“தென்குமரி வடபெருங்கடல்**
**குணகுட கடலா எல்லை”**

எனப் புறநானூறும் மதுரைக் காஞ்சியும் தமிழகத்தின் எல்லையைச் சுட்டி நிற்கின்றன.

**“பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள”**

(சிலப்பதிகாரம். 11:19-20)

எனக் குமரிமலை கடல் கொள்ளப் பெற்றதைச் சிலம்பு அரண் செய்கிறது. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிக்க வந்த இளங்கோ, “நெடியோன் குன்றமும் தொடியோள் பவ்வமும்” (சிலப்பதிகாரம்:8-1) எனத் தெற்கிலும் கடலை எல்லையாக குறிப்பிடுதல் காண்கிறோம். கி.பி.12 ஆம் நூற்றாண்டில் எழுந்த நன்னூலில் தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாகக் கடல் குறிப்பிடப்படாமல் குடகுநாடு குறிப்பிடப்படுதல் காண்கிறோம்.

**“குணகடல் குமரி கடகம் வேங்கடம்**

**என நான்கு எல்லை”** (நன்னூல் சிறப்புப்பாயிரம்)

கேரளத்தை உள்ளடக்கி நின்ற தமிழகம் மேலும் குறுகிவிட்டதை நன்னூலின் இப்பாயிர வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

## 2. கிழக்கு மேற்கு கடற்கரைகள்

பழந்தமிழ்நாட்டின் கிழக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கில் அரபிக் கடலும் தெற்கில் இந்துமாக் கடலும் இருந்தன. அந்நாளில் தமிழர்கள் மிகுந்த ஆர்வத்துடனேயே கடல் போக்குவரத்திலும், கடல் வாணிகத்திலும், ஈடுபட்டிருக்கின்றனர். கிழக்கு கடற்கரையில் மாமல்லபுரம், பூம்புகார், கொற்கை முதலியனவும், மேற்குக் கடற்கரையில் முசிறி, தொண்டி முதலியனவும் சிறந்த துறைமுகங்களாகத் திகழ்ந்தன. தற்போது எல்லை சுருங்கியுள்ள தமிழ்நாட்டில் சென்னையும், தூத்துக்குடியுமே சிறந்த துறைமுகங்களாக விளங்குகின்றன. அந்நாளில் பல்லவர்களும் சோழர்களும் மிகச்சிறந்த கடற்படைகள் வைத்து, கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றுவதில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். சோழ மாலுமிகள் இந்தியப் பெருங்கடலில் கப்பலோட்டுவதில் வல்லுநர்களாய் விளங்கினர்.

## 3. கிழக்கு மேற்குத் தொடர்ச்சி மலை

மேற்கு தொடர்ச்சி மலையைவிட மிகப் பழமையான கிழக்குத் தொடர்ச்சி மலை, இன்றைய ஒரிஸ்ஸா மாநிலத்தில் தொடங்கி தெற்கு நோக்கிச் சென்று தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் மேற்குமலைத் தொடருடன் இணைகின்றது. மிகப்பெரிய சுவர்போலக் காட்சிதரும் மேற்குத் தொடர்ச்சி மலை, வடகோடியில் ஏறக்குறைய 2000 அடி உயரத்தில் துவங்கி படிப்படியாக உயர்ந்து நீலகிரியிலுள்ள தொட்டபெட்டாவில் 8760 அடியும், ஆனைமுடியில் 8841 அடியும் உயர்ந்து விளங்குகிறது. அம்மலையில் கோயம்புத்தூருக்கு அருகில் 1000 அடி உயரத்தில், தெற்கு வடக்காக 20 மைல் அகலத்தில் பாலக்காட்டு கணவாய் இருக்கிறது. இத்துடன் திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையில் உள்ள அறம்பொலி கணவாயும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டைக் கணவாயும் மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளாகும். அடர்ந்து செழித்து வளர்ந்துள்ள காடுகளும், விரிந்து ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும், துள்ளிவிழும் அருவிகளும், அச்சத்தை ஏற்படுத்தும் காட்டு மிருகங்களும், முகில் தவழும் மலைகளும், சந்தனம், தேக்கு, வேங்கை மரங்கள் நிறைந்த காடுகளும் கண்ணைக் கவரும் வனப்புடன் விளங்குகின்றன. மேற்கு தொடரில் ஆனைமலை வனப்பும் வனவளமும் மிக்கதாக விளங்குகிறது.

கிழக்கு, மேற்கு மலைத் தொடர்களும், மற்றுமுள்ள பல குன்றுகளும் தமிழ்நாட்டில் பல சமவெளிப் பகுதிகளை ஏற்படுத்தி உள்ளன. இச்சமவெளிகளில் வாழ்ந்த மக்கள் ஆங்காங்குத் தனித்தனி நாட்டு மக்களாவே வாழ்ந்து வந்தனர். மிகப்பெரிய நாடுகளான சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு ஆகிய நாடுகள் இவ்வாறு அமைந்தவையே. அந்நாளில் தமிழர்கள் ஒன்றுபட்டு வாழாமல் தனித்தனி அரசியல் சமூகங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்ததற்கு நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாகும். தமிழர் தங்களுக்குள்ளேயே பூசலிலும், போரிலும் ஈடுபட்டமையால் அயலாருக்கு இடங்கொடுக்க வேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்பட்டது.

### 4. ஆறுகள்

தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகளிலேயே தென் கங்கையென்று பெயர்பெற்ற காவிரி ஆறுதான் மிகவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். அது கர்நாடகத்தில் குடகில் தலைக்காவிரி என்னும் இடத்தில் தோன்றி தென்கிழக்காக 475 மைல் அடி ஓடி வங்கக் கடலில் கலக்கிறது. திருச்சிக்கு அருகில் காவிரி ஆறு காவிரி என்றும், கொள்ளிடம் என்றும் இரண்டாகப் பிரிந்து தஞ்சை மாவட்டத்தில் மேலும் பல கிளைகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது. காவிரி கடலில் கலக்குமிடத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகார் நகரம் அந்நாளில் சிறப்புடன் விளங்கியது. அது ஒரு சமயம் சோழர்களின் தலைநகரமாகவும் சிறந்த துறைமுகமாகவும் விளங்கியது.

வையை என்னும் பொய்யாக் குலக்கொடி எனப் போற்றப்பட்ட வைகையாறு சுருளிமலையில் தோன்றி மதுரை மாநகருக்கும் பாண்டிய நாட்டிற்கும் வளமையையும் செழுமையையும் சேர்த்துவிட்டு கிழக்கு நோக்கிச் சென்று வங்கக் கடலோடு கலக்கின்றது.

பல்லாண்டுகளாகச் சோழநாட்டின் எல்லையாக விளங்கிய வெள்ளாறு, சேர்வராயன் மலைகள், கல்லுவராயன் மலைகள், பச்சை மலைகள் ஆகியவற்றில் உற்பத்தியாகிய அருவிகள் ஒன்று சேர்ந்ததால் உருவாகிக் கிழக்கே பாய்ந்து, சிதம்பரத்துக்கு அருகே பறங்கிப்பேட்டையில் கடலில் கலக்கிறது. தொண்டைநாட்டில் ஓடும் பாலாறு, கர்நாடகத்தில் நந்தி துர்க்கம் என்னும் இடத்தில் உற்பத்தியாகி கிழக்காகப் பாய்ந்து சென்று வடஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைக் கடந்து சதுரங்கபட்டினத்தருகில் வங்ககடலில் கலக்கின்றது. தென் பெண்ணையாறு கர்நாடகத்தில் சென்ன நாராயணன்பேட்டை என்னும் இடத்தில் தோன்றி, தமிழ்நாட்டில் சேலம், தென்னார்க்காடு மாவட்டங்கள் வழியாக ஓடி, கூடலூருக்கு அருகில் கடலில்

கலக்கின்றது. மேற்கு மலைத்தொடரின் தென்கோடியில் உற்பத்தியாகும் தாமிரவருணி ஆறு, தென்மேற்குப் பருவக்காற்றாலும் வடகிழக்குப் பருவக்காற்றாலும் நல்ல பயனடைந்து, திருநெல்வேலி மாவட்டத்தில் பயிர்த்தொழிலுக்கு உயிர்நாடியான தண்ணீரை வழங்கிவிட்டு வங்கக் கடலைச் சென்றடைகிறது. அது கடலோடு கலக்கின்ற மன்னார் வளைகுடாவில்தான் முத்துக்கள் கிடைக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடும் பல சிற்றாறுகளில் புகழ்பெற்றது பழையாறு என்பதாகும். இதனை மக்கள் பறளியாறு என்றும் அழைக்கின்றனர்.

### 3. மழையும் பருவநிலையும்

தென் மேற்குப் பருவகாற்றும் வடகிழக்குப் பருவக்காற்றும் தமிழ்நாட்டிற்கு மழையைப் பெற்றுத் தரும் பருவக்காற்றுகளாகும். தென்மேற்குப் பருவக்காற்று ஜூன் முதல் அக்டோபர் முடிய வீசி, கேரள நாட்டில் பெருமழையைப் பெய்விக்கின்றது; தெற்கே கன்னியாகுமரியிலும் தென்காசியிலும் தென்மேற்குப் பருவக்காற்று மழையைப் பெய்விப்பதுண்டு தென்மேற்குப் பருவக்காற்று ஓய்ந்தபின் வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசி, சோழ மண்டலக் கடற்கரையில் நல்ல மழையைப் பெய்விக்கின்றது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் மட்டும் நல்ல அடைமழையைத் தருகின்ற வடகிழக்குப் பருவக்காற்று, தென்மேற்குப் பருவக்காற்றைப் போன்ற பெருமழையைப் பெய்விப்பதில்லை. வடகிழக்குப் பருவக்காற்று சில சமயங்களில் அளவுக்கு மீறிய மழையைப் பெய்தும் கோரப்புயலை வீசியும் நாட்டில் நாசத்தையும் அழிவையும் ஏற்படுத்துவதுண்டு; மழையே இல்லாமல் வறட்சி ஏற்பட்டு பஞ்சத்திற்கும் பயங்கரத் தொத்து நோய்களுக்கும் மக்கள் பலியாவதுமுண்டு.

தமிழ்நாடு முழுவதும் வெப்ப மண்டலத்திற்குள் அடங்கியுள்ளது; எனவேதான் வட இந்தியாவைக் காட்டிலும் இங்கு வெப்பம் அதிகமாக உள்ளது. ஆனால் அங்கு உள்ளதுபோலக் கடுமையான குளிர்காலம் தமிழ்நாட்டில் இல்லை.

### 6. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை

உழவுத் தொழிலே மக்களுக்கு உயிர்த் தொழிலாக இருந்தது. ஆனால் வானம் பார்த்த உழவு என்பதனால் வறட்சி வழக்கமாகவே இருந்து வந்தது. காவிரி, வைகை, தாமிரபரணி பாய்கின்ற இடங்களில் ஆற்றுநீரைக் கொண்டு வேளாண்மைத் தொழில் விரிவாக நடைபெற்றது. ஆற்றுநீர் இல்லாத இடங்களில் கிணற்று நீரைக் கொண்டும் வேளாண்மை நடைபெற்றது. நன்செய் நிலங்களில் நெல், கரும்பு, வாழை, முதலியன பயிரிடப்பட்டன. புன்செய் நிலங்களில் கம்பு, கேழ்வரகு, தினை,

சோளம், பருத்தி முதலியன பயிரிடப்பட்டன. மதுரை, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி போன்ற பெருநகரங்களில் உலோகங்களால் பாத்திரங்கள், வேறு பல கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஆடைநெய்தல் போன்றவை ஏற்பட்டுச் செழித்து ஓங்கின. கொற்கையில் முத்துக்கள் எடுத்தலும், மற்ற துறைமுகப் பட்டினங்களில் கடற்செலவும் கடல் வாணிகமும் போற்றி வளர்க்கப்பட்டன.

உழுது பயிரிட்டு நகரங்களை அமைத்து வாழ்ந்த மக்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டும் கலைகளை வளர்த்துக் கொண்டும் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர். அன்றையத் தமிழர்கள் இயற்கை அமைப்புகளுக்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப்பாகுபாடுகளை ஏற்படுத்தி அவற்றிற்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டனர்.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. தமிழ்நாட்டின் எல்லைகள் யாவை?
2. தமிழக கடற்கரைகள், மலைகள் பற்றி எழுதுக.
3. தமிழக ஆறுகள் குறித்து விவரி

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. தமிழகத்தின் இயற்கை அமைப்புகள் குறித்து கட்டுரை வரைக.

# பாடம் 3

# புதைபொருள் ஆய்வால் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் பற்றி அறியலாகும் உண்மைகள்

வரலாற்றுக்கு முற்பட்ட மக்களின் இனவரலாற்றை ஏழாகப் பகுப்பது மரபு. அவை:

1. **பழங்கற்காலம்**
2. **இடைக்காலம்**
3. **புதியகற்காலம்**
4. **பெருங்கற்காலம்**
5. **செம்புக்காலம்**
6. **வெண்கலக்காலம்**
7. **இரும்புக்காலம்.**

தமிழகத்தில் செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என்பன தனியாகக் காணப்படவில்லை. அதனால் ஏனைய நான்கு காலங்கள் பற்றி இங்கு காணலாம்.

## 1. பழங்கற்காலம் (Paleolithic Period)

கி.மு. 2,00,000 முதல் கி.மு. 50,000 வரை உள்ள காலம் பழங்கற்காலம் என்று கூறுவர். தோற்றகால மனிதன் வளர்ந்த முதற்படி நிலையினைக் கற்காலம் என்பர். மனிதன் பண்படுத்தாத கற்கருவிகளைப் பயன்படுத்திய காலம் பெருங்கற்காலமாகும்.

### கருவிகள்

பண்படுத்தப்படாத கோடாரிகள், ஈட்டிகள், வட்டக்கற்கள், சுற்றிலும் கூரிய முனைகளையுடைய வட்டக்கற்கள், குழிதோண்டும் கருவிகள், இருபுறமும் கூர்மையுடைய கத்திகள், முட்டை வடிவில் கூரிய கருவிகள், கிழங்கு அகழும் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளனர்.

### கிடைக்குமிடங்கள்

இராபர்ட்புருசு பூட் எனும் நிலவியல் ஆய்வாளர் 1863 இல் சென்னை பல்லாவரத்துக்கு அண்மையில் கற்காலகருவியொன்றை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கண்டுபிடித்தார். பெருங்கற்காலக் கருவிகள் செங்கற்பட்டு, வடஆர்க்காடு பகுதிகளில் கிடைக்கின்றன.

**உணவு**

பெருங்கற்கால மக்கள் பண்படாத கருவிகளைப் பயன்படுத்தியதால், விலங்குகளை வேட்டையாட முடிந்திருக்காது. எனவே கிழங்கு அகழவும், காய் வெட்டவும், சிற்றுயிர் விலங்குகளைக் கொல்லவும் பயன்படுத்தியிருக்கலாம். அக்காலத்தில் நெருப்பின் பயனை உணராதிருந்தனர்.

**உடை**

பிற்காலத்தே, ஆடையின்றித் திரிந்தோர் இலை தழைகளை உடையாக உடுத்தி, விலங்குகளின் தோலை உடுத்தக் கற்றிருக்கலாம். முன்னோர் பயன்படுத்திய மரவுரி, புலித்தோல், மான்தோல் இன்று சமயத்துறையில் மதிப்பு பெற்றுள்ளன என்பார் இராசமாணிக்கனார்.

**உறையுள்**

விலங்குகள் போல் உறைவதற்கு இடமற்றுத் திரிந்த மனிதர்கள் குரங்குகள்போல் மரக்கிளையிலும் ஆந்தைபோல் மரப்பொந்திலும் வாழத் தொடங்கினர். பின் குருவிபோல் செடிகொடியால் கூடுகட்டிக் கொண்டனர். விலங்குகளுக்கு அஞ்சிக் கூட்டமாக வாழ்ந்தனர்.

**சமயம்**

மலைநாட்டு மக்களிடையே இன்றும் தேவதை வணக்கம் உள்ளது. இதுபோல் அன்றும் தேவதை வணக்கம் இருந்திருக்கலாம் என்றும், இது மகளிர்க்கு மதிப்பு நல்கும் தமிழர் பண்பு என்றும் இராசமாணிக்கனார் குறிப்பிடுவர்.

கொச்சியைச் சேர்ந்த காடர்களும், புலையர்களும், திருவிதாங்கூர் மலைப் பண்டாரங்களும், வயநாட்டுப் பணியர்களும், ஆந்திரநாட்டுச் செஞ்சுக்களும் பழங்கால வழிவந்தவர் என்பர் இனவியலாளர்கள் (Ethnologists).

## 2. இடைக் கற்காலம் (Mesolithic Period)

கி.மு. 50,000 முதல் 30,000 வரை உள்ள காலம் இடைக்கற்காலம் என்று கூறுவர். இடைக்கற்கால மக்கள் மிகச்சிறிய கற்களாலான கருவிகளைப் பயன்படுத்தினர். இரத்தினக்கல், சிக்கிமுக்கிக்கற்கள் முதலியவையும் பயன்பட்டன. சில்லுக்கற்கள் பயன்பட்டன. சில்லுகளின் விளிம்புகளில் நுணுக்க வேலைகள் செய்யப்பெற்றன. பழங்கற்காலக் கருவிகள் கிடைத்த பகுதிகளிலேயே பெரும்பாலும் இடைக்கற்காலக் கருவிகளும் கிடைக்கின்றன. இவை திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரம், ஏரல், குதிரைமொழி, கூட்டப்புளி, மதுரை மாவட்டம் கோடங்கிப்பட்டி, திருமங்கலம், தஞ்சைமாவட்டம் பூதலூர், வல்லம், செங்கற்பட்டு மாவட்டம்

ஆத்திரம்பாக்கம் பகுதிகளிலும், மைசூர் மாநிலம் பிரம்மகிரியிலும், கிருட்டிணா, கோதாவரி ஆற்றுப் படுகைகளிலும் கிடைத்துள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தே அமைந்த செம்மணல் 'தேரிகள்' இக்காலத்தவை என்பர் இராசமாணிக்கனார். இடைக்கற்காலத்தின் முற்பகுதியில் மண்பாண்டங்கள் கிடைக்கவில்லை. சிறுகற்காலக் கருவிகளால் எளிமையாக வேட்டையாடினர். பிணத்தை மண்ணிலே புதைத்தனர்.

### 3. புதிய கற்காலம் (Neolithic Period)

கி.மு. 30,000 முதல் 15,000 வரை உள்ள காலம் புதிய கற்காலம் என்பர். இக்காலத்தில் பண்படுத்தப்பட்ட கற்கருவிகளைப் பயன்படுத்தினர். இக்காலக் கருவிகளாக மிக நுண்ணிய துளைகளையுடைய கல் மணிகள், மனித, விலங்கு உருவங்கள், தாயத்துகள், தானியங்கள் உடைக்கும் கருவிகள், எழுதுகோல்கள், பொத்தான்கள் கிடைத்துள்ளன. இவை தென்னகத்தே சேலம், ஆனந்தப்பூர், பெல்லாரி முதலிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. வடஆர்க்காடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் புதுக்கற்காலத் தடயங்கள் கிடைத்துள்ளன.

**வாழ்க்கை**

விலங்குகளுக்கு அஞ்சி கூடி வாழ்ந்த மனிதன், கருவிகள் செய்ய அடுத்தவரைப் பயன்படுத்திக் கொண்டான். தொழில்கள் இவ்வாறு தோற்றம் பெற்றன. அடுத்துக் கூடி வாழும் வாழ்வைக் கற்பித்தது உழவு வாழ்க்கையே. தொழில் காரணமாய் திரிந்து கொண்டிருந்த மனிதன் நீர்நிலையை அடுத்து குடியாய்த் தங்கினான். காட்டு விலங்காகிய ஆடு, மாடு இவற்றைப் பழக்கி, வீட்டு விலங்காக்கினான். நெருப்பின் பயனை அறிந்தான்.

**தொழில்கள்**

உழவும், உழவு சார்ந்த தொழில்களும் படிப்படியே வளர்ந்தன. மட்பாண்டத்தொழில் வளர்ச்சி பெற்றது. சேலம், திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை மாவட்டங்களில் சட்டிகள், பானைகள், பொம்மைகள், கிண்ணங்கள், வட்டத்தட்டுகள் ஆகியன கிடைத்துள்ளன.

**ஆடை அணிகள்**

பருத்தி ஆடையை அணியும் வளர்ச்சியைப் பெற்றனர். கல்மணிகள், பொத்தான்கள், சங்காலும் எலும்பாலும் செய்த வளையல்கள் அணிகலன்களாக இருந்திருக்கின்றன.

## சமயம்

பகலவன், நிலவு, மழை, புயல் ஆகிய இயற்கையை அஞ்சி வழிபட்டனர். இலிங்க வடிவக் கற்கள் கிடைப்பதால் இலிங்க வழிபாடு இருந்திருக்கலாம் என்பர்.

## மொழி

இயற்கை ஒலிகள், உணர்வொலிகள், விலங்கினம், பறவையினம் எழுப்பும் ஒலிகள் ஆகியவற்றை ஒலித்த மனிதன் ஒலிகளைக் கூட்டொலிகளாக முழக்கிக் கருத்து வெளியிட முற்பட்டான். சித்திர எழுத்துக்கள் பெருகின. இக்கற்கால மொழி வளர்ச்சியைச் சிந்துவெளி நாகரிக காலத்தில் பார்க்கின்றோம். இம்மொழி தொன்மைத் தமிழ் மொழியே ஆகும்.

## 4. பெருங்கற்புதைவுக் காலம் (Megalithic Period)

### (கி.மு. 15,000 முதல் கி.மு. 8,000 வரை)

புதிய கற்காலத்திற்கும் கனிமப்பொருள் (உலோக) காலத்திற்கும் இடையே அமைந்த காலம் பெருங்கற்புதைவுக் காலம் ஆகும். முதலில் பிணத்தைக் குழியில் போட்டுப் புதைக்கும் வழக்கம் கொண்டிருந்தார்கள். பிற்காலத்தே பானைபோல் தாழிசெய்து அவற்றிலிட்டுப் புதைத்தனர். புதைக்கும் இடங்களை இருவகையாகப் பகுப்பர்.

1. குகைவட்டங்கள்: இப்புதை குழிகள் ஓர் அறையைப் போல் அமைந்துள்ளன. குகை வட்டத்தின் அடியில் பலகை போன்ற கற்கள் பாவப்பட்டுள்ளன. மேல் பகுதியிலும் பலகைக் கற்கள் குழியை மூடி நிற்கின்றன. வாயைச் சுற்றிலும் வட்டக் கற்கள் செங்குத்தாக ஊன்றப்பட்டுள்ளன.

2. குழிவட்டங்கள்: இக்குழியில் முதுமக்கள் தாழியில் வைத்துப் பிணங்கள் புதைக்கப்பட்டுள்ளன. ஒரு குழி வட்டத்தில் ஒன்று அல்லது பல தாழிகள் அமைந்துள்ளன. தாழிகளுக்குக் கால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூரில் நூறு ஏக்கர் பரப்பளவில் உள்ள புதைஇடம் (இடுகாடு) ‘முதுமக்கள் தாழிகளின் தோட்டம்’ என்று கூறப்படுகிறது.

மைசூர், பிரமகிரி, செங்கற்பட்டு, சானூர், அமர்தமங்கலம், குன்றத்தூர், திருக்கழுக்குன்றம், தத்தர், பல்லாவரம், தென்னார்க்காடு, சங்கமேடு, புதுக்கோட்டை பகுதிகளிலும் திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள உறையூர், திருக்காம்புலியூர், அலகரை, கோவை அருகில் கொடுமணல், செட்டிப்பாளையம் ஆகிய ஊர்களிலும் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.

“உலகிலேயே முதன் முதலில் நெல் பயிரிட்டவர்கள் திராவிடரே ஆவர். அவர்கள் பருத்தி, நெசவு, மீன் பிடித்தல் போன்ற தொழில்களில் அக்காலத்திலேயே தலைசிறந்தவர்கள்” என்று எமர்சென் கூறுவார்.

புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் திருநெல்வேலி அருகில் உள்ள ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வுகள் மேற்கொண்டு தமிழகத் தொல்பழங்காலப் பொருள்களை வெளிக்கொணர்ந்தார்.

ஆதிச்சநல்லூர், செங்கற்பட்டு மாவட்டம் பெரும் பேயர், திருச்சூர், தலைச்சேரி ஆகிய இடங்களில் காணப்படும் தாழிகளில் கற்கருவிகளும் இரும்புக்கருவிகளும் உள்ளன.

தென்னிந்தியாவில் புதிய கற்காலத்தை அடுத்து வந்த பெருங்கற்புதைவுக் காலத்திலேயே (கி.மு. 15,000) இரும்புக்காலம் தோன்றுகிறது.

### 5. இரும்புக்காலம்

புதிய கற்காலத்தில், மட்பாண்டங்கள் செய்வதற்காக மக்கள் மண்ணைத் தோண்டி, அவற்றில் செய்த மட்பாண்டங்களைச் சூளையில் சுட்டபோதே தற்செயலாக இரும்பைக் கண்டுபிடித்திருக்கலாம். இரும்புக் காலக் கருவிகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரிலும், சென்னைக்கு அருகாமையிலுள்ள பெரம்பூரிலும், கோயமுத்தூர் மாவட்டத்திலும், மலபாரில் தலைச்சேரிக்கு அருகிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆதிச்ச நல்லூரில் மக்கள் உடம்பின் முழு எலும்புக் கூடுகளும் நேர்த்தியான வழவழப்பான மட்பாண்டங்களும், பொன் அணிகலன்களும், வெண்கலத்தால் செய்யப்பட்ட பொருள்களும், இரும்பு ஆயுதங்களும், சிறு வேல்கள், அரிசி, உமி போன்றவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## பயிற்சி வினாக்கள்

### ஒரு பக்க அளவில் விடை தருக

1. பழங்கற்காலம் பற்றி எழுதுக
2. புதிய கற்காலம் பற்றி எழுதுக
3. பெருங்கற்புதைவுக் காலத்தை விவரி

### மூன்று பக்க அளவில் விடை தருக.

1. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் பற்றி அறியலாகும் உண்மைகளை விவரிக்க.

## பாடம் 4

# சிந்துவெளியும் குமரிக்கண்டமும் தமிழ்ப்பண்பாட்டுடன் கொண்ட தொடர்புகள்

### சிந்துவெளி நாகரிகம் (கி.மு. 8,000 – 1200)

வேதங்கள், பைபிள், புராணங்கள் - மூலம் கடல்கோள், பண்டைய நாகரிகங்கள் ஆகியன பற்றி அறிந்து ஆய்வாளர் புதைபொருள் ஆராய்ச்சியில் ஆர்வம் பெற்றனர். இத்தகைய ஆர்வத்தால் 1922 முதல் 1928 வரை சிந்து வெளி ஆராய்ச்சி நடைபெற்றது. சிந்து மாநிலத்தில் சிந்து நதிக்கண்மையில் மொகஞ்சதாராவும், சிந்து நதியின் கிளைநதிகளுள் ஒன்றான ரவி ஆற்றின் பக்கத்தே ஹரப்பாவும் புதையுண்ட நகரங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆரியர் வருகைக்குமுன் இந்தியாவில் ஒரு சிறந்த நாகரிகம் நிலவியது என்பது உலகிற்கு உணர்த்தப்பட்டது. இந்திய வரலாற்றின் தொடக்கம் ஆரியர் வருகை அல்ல என்பது தெளிவாயிற்று. சிந்துச்சமவெளி மக்கள் கல்லாலும் செம்பாலும் ஆன கருவிகள் பயன்படுத்தியதால் செம்புக்கற்காலம் என ஆராய்ச்சியாளர் கூறுவர். மொகஞ்சதாரோ என்பதற்கு இறந்தவர்களின் நகரம் என்பது பொருள். சிந்துநதியானது மொகஞ்சதாரோ நகரத்திற்குப் பதிமூன்றுமைல் தள்ளி ஓடுகிறது. முற்காலத்தே அதன் பக்கத்தில் ஓடியிருக்கலாம். அம்மக்கள் வெண்கலம் செம்பு போன்ற உலோகங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இரும்பை அறியாதவர்களாக இருந்தனர். கல் ஆயுதங்கள் காணப்பட்டன. எனவே கற்கால இறுதியிலும் உலோகக் காலத்தொடக்கத்திலும் வாழ்ந்து இருக்கலாம். சிந்துவெளியின் பழம்பொருட்கள் சுமேரிய எகிப்திய கிரீக் எகிப்து முதலிய நாடுகளோடு சிந்துவெளி மக்கள் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது.

### 2. நகர அமைப்பு

நகர அமைப்பில் மதில்கள் இருந்தன. நகரங்கள் வட்டங்களாக அமைக்கப்பட்டன. நகரங்கள் அமைத்தவர்கள் ஆரியர் வருகைக்குமுன் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களாக இருக்க வேண்டும். நகரங்கள் தீயினால் வெந்தும் அழிந்தும் காணப்படவில்லை. எனவே மக்கள் அடிக்கடி போர்களில் கலந்துகொள்ளாது அமைதியாக வாழ்ந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம். சிந்துவெளி ஆராய்ச்சியில் 16 கால்வாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மக்கள் செங்கல்செய்யும் முறையைப் பிறநாட்டாரிடம் கற்றதாகத் தெரியவில்லை. கல்தச்சரும், மரத்தச்சரும் இருந்தனர். மொகஞ்சதாரோவில் பல அறைகளைக்கொண்ட

பெரிய மாளிகையொன்று அரசனது அரண்மனையோயென வியக்கும் வகையில் உள்ளது. கிணறும் உள்ளது. ஓரிடத்தில் பல அறைகள் உடைய பெரிய மண்டபம் உள்ளது. இதன் கூரையை 20 செங்கல் தூண்கள் தாங்கியுள்ளன. தெரு ஓரங்களில் வீட்டை மறைத்து, பெரிய சுவர் எழுப்பப்பட்டுள்ளது. தெருமுனைகள் வீட்டுச்சுவர்களின் வளைவாக அமைக்கப்பட்டன. நகரில் நீராடும் மண்டபம் இருந்தது. இம்மண்டபம் 100 அடி நீளமும், 108 அடி அகலமும் உடையது. சுற்றிலும் படிக்கட்டுகளும், அறைகளும் உள்ளன. நீச்சல் குளத்திற்கு வடிகால் வசதியிருந்தது. குளங்கள் தென்னாட்டுக் குளங்களை ஒத்துள்ளன. வீதிகள் நேராகச் செல்கின்றன. இவை கிழக்கு மேற்காகவும் வடக்கு தெற்காகவும் செல்கின்றன. வீதிகளில் செல்லும் வாய்க்கால்கள் செங்கற்களால் மூடப்பட்டிருந்தன. கட்டடங்களுக்குச் சுண்ணாம்பு பயன்படுத்தியுள்ளனர். வீட்டில் கழிவறை, குளியலறை, சமையலறை இருந்தன. ஜன்னல்கள், சாளரங்கள், கூடங்கள் இருந்தன. வீட்டின் கதவுகள் பெரும்பாலும் மூன்றடி நான்கு அங்குலம் அகலமுடையவை. சதுரத் தூண்கள் காணப்படுகின்றன. சமையறையில் செங்கற்களால் உயர்ந்த மேடை உள்ளது. வீடுகளின்று செல்லும் அழுக்குநீர் செங்கற்பதித்த குழியில் விழுந்து நிரம்பிய பின்னே வீதியிலுள்ள கால்வாய்க்குச் சென்றது. கழிவுநீர் அதன் வழியே சென்று நகரின் எல்லைப் புறத்தில் விழுமாறு செய்யப்பட்டது.

### 3. மக்களின் வாழ்க்கை

அருவியில் இருந்து விழும் தண்ணீரைத் தேக்க கருங்கல்லால் கட்டப்பட்ட அணைக்கட்டுகள் காணப்பட்டன. அத்தண்ணீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்தனர். கோதுமை, பார்லி, முதலியனவும் மீன், மாமிசம், பழம், முதலியனவும் உண்டனர். பருத்தி, கம்பளி ஆடைகளை அணிந்தனர். ஆடு, மாடு, எருமை, யானை, காண்டாமிருகம், மான், குரங்கு, நாய், அணில் போன்றவற்றை அறிந்திருந்தனர். பெண்கள் பொன், வெள்ளி, ஆகியவற்றாலான தட்டுமுட்டுச் சாமான்களைப் பயன்படுத்தினர். தந்தத்தாலான சீப்புகளைப் பயன்படுத்தினர். வேட்டையாடுதல், மாட்டுச் சண்டை, கோழிச் சண்டை போன்றவைகளும் யாழ், மேளம், சல்லரி, கொம்பு போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இசைத்தும் பொழுதைக் கழித்தனர். குருமார், அரசர், மந்திரவாதிகள், வணிகர், படகோட்டிகள், மீனவர், வேலைக்காரர், தண்ணீர் எடுப்போர், சங்கறுப்போர், குயவர், பொன் வெள்ளி, செம்பு உலோகங்களில் வேலை செய்யும் கம்மாளர், கொத்தர், முத்திரை வெட்டுவோர் வாழ்ந்தனர்.

## 4. வணிகம்

சிந்துவெளி மக்கள் முத்திரைகளைப் பயன்படுத்தி எகிப்து, சுமேரியா தென்னிந்தியா ஆகியவற்றோடு வணிகம் செய்தனர். அவர்கள் பயன்படுத்திய பொன், மைசூர், கோலாரில்தான் கிடைக்கிறது. பச்சைக்கற்கள் நீலகிரியில் கிடைக்கின்றன. இவர்களைப் போலவே சுமேரியர்களும் முத்திரைகளைப் பயன்படுத்தினர். சிந்துவெளியில் கிடைத்த பொருள்கள் ஆதிச்சநல்லூர், சித்தூர் ஆகிய இடங்களில் கிடைத்த பொருட்களைப் போலவே இருந்தன. சிந்து ஆற்றின் மூலமாகவும் தரைவழியாகவும் வணிகம் நடத்தினர். மொகஞ்சதாரோவில் பன்னாட்டு வணிகர்கள் தங்கியிருந்தார்கள். ஆதலால் மனித எலும்புக்கூடுகளும், மண்டையோடுகளும், மங்கோலியர், அல்பையினர், மத்திய தரைக்கடலினர், ஆஸ்திரேலிய இனத்தவர்கள் ஆகிய பன்னாட்டு மக்களுடையவையாகக் காணப்பட்டன.

## 5. கலை

இந்தியச் சிற்பக்கலை இந்தியாவுக்கே உரியதென மார்சல் கூறுவர். ஹரப்பாவிலும் பல சிலைகள் கிடைத்துள்ளன. அவைகளுள் குரங்குச்சிலை, எருதுச்சிலை, நடனமாதின் சிலை ஆகியன குறிப்பிடத்தக்கவை. முத்திரைகளில் மாடு, எருமை, யானைகள், பொறிக்கப்பட்டுள்ளன. மட்பாண்டங்களும், நிறங்கொடுக்கப்பட்ட மட்பாண்டங்களும் உள்ளன. ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஐந்துவண்ண விலங்கு ஓவியம் கிடைத்துள்ளது. விண்மீன்கள், கோள்கள் பற்றி அறிந்திருந்தனர். வானவியல், சோதிடம் அறிந்திருந்தனர். சிந்துவெளி மக்களின் எழுத்துகள் ஓவிய எழுத்துகள். சிந்துவெளி எழுத்துகளிலிருந்தே பிராமி எழுத்துகள் தோன்றியிருக்க வேண்டும் என லாங்டனும் ஹண்டரும் கருதுகின்றனர். சிந்துவெளி எழுத்துக்களில் உள்ள வேல், வேளாண், ஊர், காய், வேலூர் முதலியன திராவிடச் சொற்கள் என்கின்றனர்.

## 6. சமயம்

மொகஞ்சதாரோவில் ஒருவகைச் சுண்ணாம்புக் கல்லில் வெட்டிய மனிதவடிவம் காணப்பட்டது. அது இடது தோளுக்கு மேலாகப் போர்த்து வலப்பக்கம் வரும்படியாக மேலாடை அணிந்திருக்கின்றது. குறுகிய தாடி மயிர் உள்ளது. மேல் உதட்டு மயிர் மழிக்கப்பட்டுள்ளது. அவ்வடியின் கண்கள் மூடியிருக்கின்றன. இது யோகத்தைக் குறிக்கலாம். இவ்வகை வடிவங்கள் ஹரப்பா, மொகஞ்சதாரோ முதலிய இடங்களில் காணப்படுகின்றன. பெண் உருவங்கள் அரையில் துணியுடையதாக உள்ளன. அணிகலன்கள் அணிந்துள்ளன. விசிறி போன்ற தலையணி அணிந்துள்ளன. ஆண் கடவுளர் தலை மீது கொம்பு உள்ளது. ஒரு முத்திரையில் அட்டணைக்காலிட்டு

இருக்கும் மூன்று தலையுள்ள மனித உருவம் காணப்படுகிறது. அதைச்சுற்றி 2 மான்கள், 2 காண்டாமிருகம், 1 யானை, 1 புலி, 1 எருமை என உருவங்கள் உள்ளன. மனித வடிவின் கையில் பல வளையங்கள் உள்ளன. லிங்க வடிவங்கள், வெண்கல நடனமாதின் சிலை கோயில் தேவரடியாளைக் குறிப்பிடலாம். சக்தி வழிபாடு, சிவன், லிங்க வழிபாடு ஆரியருக்கு முற்பட்ட தமிழ் மக்களுக்கு உரியனவென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இன்று இந்து மதத்தில் உள்ள பெரும்பாலான வழிபாடுகளும் பழக்கவழக்கங்களும் சிந்துவெளி மக்கள் சமயத்தனவே. சைவசமயம் சிந்துவெளி நாகரித்துக்கும் முற்பட்டது. உலகிலேயே மிகப்பழமை வாய்ந்தது.

### 7. சிந்து வெளியினர் யார்?

சிந்துவெளி மக்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. வாபிரி என்ற வரலாற்றாசிரியர் ''இப்பழைய நாகரிகம் வேறு எங்காவது தொடங்கி இங்கு வந்திருக்க முடியாது இந்திய நாகரிகம் இந்தியாவிலேயே தொடங்கிற்று எனத் துணியலாம்'' என்ற கூறுகிறார்.

சிந்துவெளி நாகரிகம் திராவிட எகிப்து மெசபடோமியா நாகரிகங்களின் சேர்க்கை என ஆர்.டி. பானர்ஜி தமது 'வரலாற்றுக்கு முற்பட்ட இந்தியாவில் வலியுறுத்தியுள்ளார். சிந்து வெளி நாகரிகத்துக்குமுன் பாபிலோனிய எல்லை தொடங்கி சிந்துவெளி உள்ளடக்கி திராவிடர் வாழ்ந்தனர் எனப் பேராசிரியர் சேஷஐயங்கார் கூறியுள்ளார்.

### குமரிக்கண்டம் (கி.மு. 2,00, 000 – 25,000)

குமரிமுனைக்குத் தெற்கே ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது எனக் கருதப்படுகிறது. உலகில் மக்கள்இனம் முதன்முதலில் அங்குதான் தோன்றியது எனப் புவியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனை 'லெமூரியாக் கொள்கை' என்ற பெயரால் அவர்கள் அழைப்பர். அந்நிலப்பரப்பிற்கு 'லெமூரியாக் கண்டம்' அல்லது 'குமரிக் கண்டம்' எனப்பெயர் சூட்டுவர்.

குமரிக்கண்டம் பற்றிய குறிப்புப் புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகிறது. பாண்டியனின் தலைநகராய் இருந்த கபாடபுரம் மணி முத்துக்களால் அணிசெய்யப்பெற்றுச் சிறப்புடன் விளங்கியதாக வால்மீகி இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ளது. தலைச்சங்கம் நடைபெற்ற தென்மதுரையும், இடைச்சங்கம் நடைபெற்ற கபாடபுரமும் குமரிக் கண்டத்திலேயே இருந்தன என்பர் புலவர்

கோவிந்தன். குமரிக் கண்டம் இருந்தமை பற்றி இச்சான்றுகள் சுட்டிச் செல்லினும் அதன் எல்லைப் பரப்புப் பற்றியோ, மறைந்த காலம் பற்றியோ அவற்றில் குறிப்புக்கள் இல்லை.

குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்ட செய்தி,

**“ப.ஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்**

**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள”**

(சிலம்பு : 11: 19-20)

எனச் சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டுள்ளது.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. சிந்து வெளி நாகரிகத்தின் நகர அமைப்பினை விளக்குக.
2. சிந்துவெளியினர் யார்?
3. குமரிக் கண்டம் பற்றி விளக்குக.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. சிந்துவெளி நாகரிகம் குறித்து விரிவான விடை தருக.
2. சிந்துவெளியும் குமரிக்கண்டமும் தமிழ்ப் பண்பாட்டுடன் கொண்ட தொடர்புகளை விவரி.

# பாடம் 5

# தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிக, பண்பாட்டுத் தொடர்புகள்

உழவும் தொழிலும் உண்டாக்கிய பொருட்களை வகுத்து வழங்க வல்லரசாக வாணிகர் இருந்தனர். கூல வாணிகர், பொன் வாணிகர், அறுவை வாணிகர், மணி வாணிகர் எனச் செய்யும், விற்கும் பொருளால் பெயர் பெற்றனர். உள்நாட்டு வாணிகம் மட்டுமல்லாது வெளிநாட்டு வாணிகத்திலும் தமிழர் சிறந்திருந்தனர்.

## உள்நாட்டு வாணிகம்

நெய்தல் நிலம் வாணிகம் தொடங்கிய முதல் நிலமாதல் வேண்டும் என்பர் பி.டி. சீனிவாச அய்யங்கார்.

### 1.வாணிகம்

குலத்தொழிலாகவும் பரம்பரைத் தொழிலாகவும் உரிமைப்படுத்தி யாரும் வாணிகத்தை வைத்திருக்கவில்லை. வணிகர் என்றே சங்க இலக்கியங்கள் பேசும். வணிகர்க்குத் தமிழர் வழங்கிய 'எட்டி' என்னும் பட்டம் 'செட்டி' எனப் பிற்காலத்தே குலப்பெயராகி வடவகத்தே 'ரெட்டி, சேட்' என வழங்குகின்றனர். வணிகர் புலவராயும் இருந்தனர் என்பதை அறுவை வாணிகன் இளவேட்டனார், கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் முதலிய பல பெயர்கள் காட்டும்.

### 2.பண்டமாற்று முறை

வாணிகத்தின் அடிப்படை பண்டமாற்று முறையாகும். சங்க காலத்தே நெல்லும் உப்பும் பண்டமாற்றுப் பொருள்களாகப் பயன்பட்டன. காசும் அக்காலத்தே வழக்கத்தில் இருந்திருக்கின்றது. இன்றும்கூட மதிப்பு மிகுதியாக உடைய பொன் உலக நாடுகளிடையே பண்ட மாற்றத்திற்குரிய அடிப்படைப் பொருளாக இருப்பது கருதத்தக்கது. உப்பு, நெல் ஆகியவை பால், தயிர், கள், மீன், காய்கறி ஆகியவற்றிற்கு மாற்றிக் கொள்ளப்பட்டன. இதனால் வாணிகத்தை 'மாற்றுதல்' என்றே குறித்தனர்.

### 3.சாலைகள்

சாலைகள் பெரிதும் செப்பமின்றியும் பாதுகாப்பின்றியும் இருந்தன. 'ஆறலைக் கள்வர்' எனும் வழிப்பறிக் கொள்ளையர் இருந்தனர். மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய முயற்சிகளை அரசன் செய்தான். நகரங்களை இணைக்கும் பெரிய சாலைகள் 'பெருவழி' எனப்பட்டன. நகர எல்லைகளில் குறுக்குச்

சாலைகளில் சுங்கவரி அதிகாரிகளும், பாதுகாவலர்களும் இருந்தனர். வடநாடுகளுடன் நடந்த சங்குகள், முத்துகள், வைரங்கள், யானைகள், மணப்பொருள்கள், பொன், வெள்ளிப் பொருள்கள் தென் நாட்டினின்று மௌரிய நாட்டிற்கு வந்தன என்றும் வருவதற்கு நல்ல வழிகள் இருந்தனவென்றும் சாணக்கியன் கூறியுள்ளான். புணை, பரி, ஓடம், அம்பி, திமில் ஆகிய சிறு கலங்கள் உள்நாட்டிலிருந்து பொருள்களை கடற்கரைக்கு ஆற்றுவழி எடுத்துச் செல்லப்பயன்பட்டன.

### *4. சாத்து*

வணிகம் ஒரே இடத்திலிருந்து விற்பது, எடுத்துச் சென்று விற்பது (Mobile Trade) என இருவகைப்படும். உண்டாக்கியவர் ஒரே இடத்திலிருந்து விற்பதிலிருந்து கடைத்தெரு விற்பனை முறை தோன்றியது. எடுத்துச் சென்று விற்பதிலிருந்து அயல்நாட்டு வாணிகம் தோன்றியது. உமணர் குடும்பத்தோடு சென்று உப்பு விற்றனர். ஆறலைக் கள்வர்க்கும் விலங்குகட்கும் அஞ்சியும், பெரும்பொருள் கொண்டு செல்லவும் கூட்டமாகச் சென்றனர். இவ்வணிகக் கூட்டம் ‘சாத்து’ எனப்பட்டது. கழுதை, வண்டி ஆகியவற்றைப் பொருள் எடுத்துச் செல்ல வணிகர் பயன்படுத்தினர்.

### *5. அங்காடிகள்*

பகலில் விற்பனை செய்யும் நாளங்காடி, சாயுங்காலத்தில் விற்பனை செய்யும் அந்தியங்காடி, இரவில் விற்பனை செய்யும் அல்லங்காடி எனப் பிரிவுகள் இருந்தன. விற்பனை தரும் பொருளைக் குறிக்கப் பகலில் வண்ணக் கொடிகளும் இரவில் வண்ண விளக்குகளும் பயன்படுத்தினர். கணக்கற்ற வணிகப் பொருள்கள் விற்கப்பட்டமையைச் சிலம்பு, மதுரைக் காஞ்சி இவற்றில் விரிவாகக் காணலாம்.

**“கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு”**

எனப் புகார்ப் பண்டகசாலை முற்றங்களைப் பட்டினப்பாலை புகழும்.

### *6. வெளிநாட்டார்*

மதுரை, புகார் முதலிய நகர்களில் வெளிநாட்டு வேற்று மொழியாளர் வந்து வாணிகம் செய்தனர். வந்து தங்கி மீள்பவராகவும், நிலையான குடியாகியவராகவும் இவர் உள்ளனர். பல்வேறு மொழி பேசுவோர் கடைத்தெருக்களிடையே திரிந்தனர்.

உறையூர், மதுரை, புகார், அரிக்கமேடு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட காசுகள் யவனர் குடியிருப்பை உறுதி செய்யும்.

**7. வணிக அறம்**

வணிகர்கள் அறம் சான்றவர்களாக இருந்தனர். அதிக ஊதியம் பெறவிரும்பவில்லை. தங்களுக்கு வரும் ஊதியம் இன்னது என வெளிப்படையாக கூறி விற்றனர்.

**"வடுவஞ்சி வாய்மொழிந்து**
**கொள்வதூஉம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல் கொண்டித் துவன்றிருக்கை"**

(பட்டினப்பாலை)

வணிகத்தில் அறம் பின்பற்றியதோடு வாழ்விலும் அறத்தைப் பின்பற்றினர். ஓதல், வேட்டல், ஈதல், உழுவித்தல், ஆகியன வணிகர் கடமைகளாகக் கருதப்பட்டன.

**8. அளவைகள்:**

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளில் தமிழர் அறிவு சிறந்திருந்தது. இவ்வளவீடுகளில் அளக்கும் பொருட்கள் தராசுகோல், கா, காவு என்று வழங்கும். 'காவிதி மாக்கள்' (காவு உடையராதலால்) வணிகர்கள். பொன் நிறுக்கப் பயன்பட்ட அளவுகோல் 'கன்னம்' ஆகும். துலாக்கோல், மரக்கால் ஆகியன பயன்படுத்தினர்.

**9. காசுகள்:**

அஃகம், காசு, காணம், பொன், கழஞ்சு, யாழை என்பன அக்கால நாணயங்களாக இருந்துள்ளன. அக்காசுகளில் யானை, புலி போன்ற வடிவங்களும் எழுத்துகள் சிலவும் பொறிக்கப்பட்டிருந்தன. எழுத்து கொண்டு இவற்றைக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு எனக் கணிப்பர். அகநானூறு 'பளிங்குக் காசு' எனக் குறிப்பிடுவதால் பிற பொருளாலாகிய காசுகளும் உண்டெனப்புலனாகும்.

**10. வணிகப் பொருட்கள்:**

நானிலத்துப் பொருள்களும் அயல் நிலத்துப் பொருள்களும் நான்கு வகைப் பொன்னும் ஒன்பது வகை மணிகளும் 16 வகை கூலப் பொருள்களும் 96 வகை மணப் பொருள்களும் அணிகலனும், படைக்கலனும், ஆடையும், உடையும் இன்னும்

பல பொருள்களும் விற்றனர். ஆனால் பணத்தை விற்கவில்லை. பொருளை விற்றனர்.

### அயல் நாட்டு வணிகம்:

நிலவழி வணிகம் போல் நீர்வழி வணிகம், கடல்வழி வணிகம் சிறந்திருந்தது. பிறநாடுகளில் விளையாத கிடைக்காத அரிதான பொருள்கள், விலங்குகள், தமிழகத்தினின்று பிற நாடுகளுக்கு கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே ஏற்றுமதி செய்யப்பட்டன என்பர் வார்மிங்டன். மிளகு, இஞ்சி, அரிசி முதலிய உணவுப் பொருள்களும் சந்தனம், அகில் முதலிய மணப்பபொருள்களும் முத்து, வைரம், முதலிய ஆடம்பர அழகு அணிகலப் பொருள்களும், அழகிய துணி வகைகளும், குரங்கு, மயில், மான் முதலிய வளர்ப்பு விலங்குகளும் சிறுத்தை, புலி, யானை முதலிய வல்லுயிர்களும் வெளிநாட்டினர் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்தனர்.

### 1. அயலார் குறிப்புகள்

வெளிநாட்டார் எழுதிள்ள நிலவியல், வரலாறு, பயணநூல், பற்றுவரவுக்கணக்கு ஆகியன தரும் குறிப்புகள் தமிழ் நாட்டு கடல் வாணிகச் சிறப்புக்குச் சான்று பகர்கின்றன.

1.பாண்டியனின் இரு தூதர்கள் வணிகம் பொருட்டு வந்ததாகக் கூறுகிறப்படுகிறது.

மூத்த பிளைனி (கி.மு..77) தம்நூலில் தம்நாடு ஆடம்பரப் பொருள்களுக்காக கோடிக்கணக்கான பணம் வீணாக்குவதாகக் குறிப்பிடுகிறார்.

அலெக்சாண்டிரியாவின் நிலவியலாளர் தாலமி (கி.மு. 150) தம் நூலில் (Map of the World) சேரர், சோழர், பாண்டியர், கரையர், அருவாளர் ஆகியோரையும் கருவூர், மதுரை, உறையூர், மாவிலங்கை, தொண்டி, குமரி, கொற்கை, முசிறி, கொட்டாரக்கரை, கோட்டயம், நாகப்பட்டினம், புதுச்சேரி, சோப்பட்டினம், கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டினம் முதலிய ஊர்களையும் கூறுவார்.

### 2. புதைப்பொருள் சான்றுகள்:

1. சுமேரியாவின் தலைநகராகிய ‘ஊர்’ எனும் இடத்தில் கிடைத்த தேக்கு மரத்துண்டு இந்தியாவிலிருந்து கி.மு. நான்கு ஆயிரம் ஆண்டுகள் முன் வந்தது என்பர் சேஸ் என்ற அறிஞர்.

2. பாபிலோனியக் களிமண் ஏடுகள் இந்திய வணிகர்குழு அங்கு வந்து தங்கியிருந்ததைக் கூறுகின்றது.

3. அரிக்கமேடு, உறையூர், மதுரை ஆகிய இடங்களில் கிடைத்த பொற்காசுகள் ரோமர் குடியிருப்புகளை உறுதி செய்கிறது.

4. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன நாணயங்கள் மைசூர் சந்திரவல்லியில் கண்டெடுக்கப்பட்டுள்ளமை சீனத் தொடர்பை உறுதி செய்கிறது.

### 3. மொழியியல் சான்றுகள்:

1. பாபிலோனியக் களிமண் ஏடுகளிலுள்ள பற்றுவரவுக் கணக்கில் வரும் சிந்து என்ற சொல் தமிழகத்தின் மெல்லிய 'ஆவியன்ன அவி நூற் கலிங்கம்' குறித்தது. துளு, கன்னட மொழிகளில் 'சிந்தி' என்ற சொல் சிறுதுணியைக் குறிக்கும்.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் வாணிகத் தொடர்புடைய கிரேக்கர் மொழியில் ஓரைசா(அரிசி) கார்ப்பியன் (கருவா இலவங்கம்), சிஞ்சிபோரஸ் (இஞ்சிவேர், பெர்பெரி (திப்பிலி) எனத் தமிழ்ச் சொற்கள் உருமாறி உலவிவருகின்றன. 'யவனப்பிரியா' என்னும் மிளகை வடமொழிஞர் வழங்குவதால் யவனர்கள் மிளகை ஏற்றனர் என்பது புலனாகும்.

ஆங்கிலத்தில் உள்ள பல சொற்கள் தமிழோடு ஒப்புமை உடையனவாய் இருப்பதன் காரணம், கிரேக்க இலத்தீன் சொற்கள் பொருளோடு பெற்ற மொழிக் கடன்கள்தான். நாவாய் என்ற சொல் நேவிஸ் என ஆங்கிலத்திலும் வழங்குகின்றது என்பர் பாவாணர்.

வடமொழியில் உள்ள முக்தா (முத்து), பிரவாளம் (பவழம்), மயூரா (மயில்) என்பன தமிழ்ச் சொற்கள் அடிப்படையாக அமைந்தன.

### 4. கடற்கரைகள்

பலகை, கட்டுமரம், மிதவை, பரிசு, பரிசல், புணை, தெப்பம், திமில், படகு, அம்பி, தோணி, வங்கம், நாவாய், கலம் என்பன போன்ற பல பெயர்கள் கடற்கலங்களைக் குறிக்கின்றன. பலகை, கட்டுமரம், மிதவை, புணை, தெப்பம் ஆகியவை மரங்களைக் கட்டி மிதக்கச் செய்த அமைப்பாதல் வேண்டும். திமில், படகு, அம்பி, தோணி ஆகியவை சிறுகலங்களாக ஆற்றில் செல்லவும் மீன் பிடிக்கவும் பயன்பட்டன. வங்கம், நாவாய், கலம் ஆகியவை நெடுந்தொலைவு செல்லும் பெரிய கப்பல்களாகும்.

**"கரிமுக அம்பி, பரிமுக அம்பி"** (சிலம்பு)

**"உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்"** **(**அகம்:25)

என உலகமே உவமை சொல்லத்தக்க அளவு பெரிய கப்பல்கள் இருந்திருக்கின்றன.

## 5. யவனர்

மதுரை, புகார், புதுச்சேரி, அரிக்கமேடு, முசிறி, கரூர் முதலிய இடங்களில் கிரேக்கரும் உரோமரும் வாணிகச் சாலைகள் அமைத்து காவற்படையுடன் தங்கியிருக்கின்றனர் என்பதைப் புதைபொருள் ஆய்வுகளான உரோம நாணயங்களும், பித்யூத்தியன் அட்டவணைக் கூற்றும் சங்க இலக்கியச் செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன. வந்து உறைந்த யவனர் வணிகராகவும், அரசனுக்கு மெய்காப்பாளராகவும், நகர காவலராகவும் வாழ்ந்தனர் என முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் ஆகியவை கூட்டுகின்றன. யவனரைத் தமிழக மிளகும், முத்தும் கவர்ந்தது போல யவனர்தம் தேறலும், கலங்களும் (மதுக்கோப்பைகள்), பாவை விளக்கும் ஒதிம விளக்கும் தமிழரைக் கவர்ந்துள்ளன.

## 6. இலக்கியச் சான்றுகள்

"**முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை**" என்று தொல்காப்பியம் இலக்கணம் சொல்லும் அளவுக்கும், தொண்டியன்ன நலம் என்றும், உவமை சொல்லுமளவிற்கும் கடற்செலவு இக்காலத்தே சிறந்திருந்தது.

1. பெரும்பாணாற்றுப்படை கலங்கரை விளக்கத்தைச் சுட்டுகிறது.

**"வானம் ஊன்றிய மதலை போல**
**ஏணி சார்த்திய ஏற்றருஞ் சென்னி**
**இரவில் மாட்டிய இலங்கு சுடர்ஞெகிழி"**

எனப் பட்டினப்பாலை சுங்க அதிகாரிகள் வரி பெற்றதற்கு அடையாளமாகப் புலி பொறித்த செய்தியைப் பட்டினப்பாலை கூறுகிறது.

2. அகநானூறு, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், ஆகியவை காவிரிபூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி ஆகிய துறைமுகங்களின் வளத்தையும் யவனர்களும் பிற மொழியாளரும் இருந்த இருக்கைகளையும் கூறுகிறது.

3. முசிறி சேரர் துறைமுகம். அது யவனருடன் அதிகத் தொடர்புடையது.

ஐங்குறுநூற்றில் தொண்டிப்பத்து என்னும் பகுதி தொண்டி நகரின் சிறப்புகளைக் குறிப்பிடுகின்றது. 'முத்துபடு பரப்பின் கொற்கை முன்னுரை' என நற்றிணை கொற்கை முத்துக்குப் பெயர் பெற்றது எனச் சுட்டுகிறது. சாலியூர் துறைமுகத்தைப் பற்றி

**"பொன் மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கு இழிதரும்**

**ஆடியாற் பெருநாவாய்**

**மழை முற்றிய மலைபுரையத்**

**துறை முற்றிய துளங்கிருக்கை"**

என்ற அடிகளின்வழி மதுரைக்காஞ்சி மலைபோன்ற கப்பல் நுழையக் கூடிய துறைமுகம் எனக் கூறும்.

### கீழை நாட்டுத் தொடர்புகள்

1. வெகுதொன்மைக் காலத்திலிருந்தே மேற்கு நாட்டாரோடு தொடர்பு கொண்டிருந்தமை போலக் கிழக்கு, தென்கிழக்கு நாடுகளோடு தமிழர் கடல் வழியும், திடல் வழியும் தொடர்பு கொண்டிருந்தனர். போகர் என்ற சித்தர் நிலவழி நடந்தே சீனா சென்றதாகக் கூறுவர். கிழக்கே கொண்ட தொன்மைத் தொடர்பு சீனாவோடுதான். கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே சீனாவிலிருந்து வெடிகள், சீனி, பட்டு முதலியன வந்துள்ளன. சீனத்துக்கு மிளகு, மணப்பொருள்கள் முதலாயின சென்றுள்ளன. இதனைச் சீன வரலாறு நூல்கள் கூறுகின்றன.

2. திராவிடர் "ஆழ்கடல் கடந்து பர்மா, கெடா, மலைநாடு, சிங்கபுரம், தாய்லாந்து, கம்போடியா, சாவகம், சுமத்திரா, கம்பா, போர்னியா" போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று வாணிகம் செய்து அங்கு குடியேறவும் செய்தனர்.

3. சாவகம் என்னும் ஜாவா (இந்தோனேசியா) நாட்டு நாகபுரத்துக்கு வணிகக் கப்பல் சென்றதை மணிமேகலை குறிப்பிடுகிறது.

4. பிலிப்பைனில் கண்டெடுக்கப்பட்ட இரும்புக் கருவிகள், வளையல்கள், கண்ணாடி மணிகள் ஆகியன கி.மு. முதல் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது. தமிழகத்துப் பெரிய கப்பல்களில் வாணிகப் பொருள்கள் சென்றதை கி.மு. விலேயே இக்கீழை நாடுகளுடன் சிறந்த வாணிகத் தொடர்பிருந்தமை புலனாகும். இவ்வாறு அரிசியும், மிளகும், மணப்பொருள்களும், மணிப்பொருள்களும், அணிகலன்களும் அளித்து பொன்னும், பாவை விளக்கும், தேறலும் கொண்டு வாணிகம் செய்த நாகரிகம், பண்பாடு, மொழித் தொடர்பும் உறவும் வளர்ச்சியும் கண்டனர்.

## பயிற்சி வினாக்கள்

### ஒரு பக்க அளவில் விடை தருக

1. தமிழகத்தின் உள்நாட்டு வாணிகம் பற்றி எழுதுக.
2. தமிழகம் அயல் நாட்டினரோடு கொண்டிருந்த வாணிகத் தொடர்புக்குச் சான்றுகள் தருக.

3. தமிழக வாணிகம் குறித்த இலக்கியச் சான்றுகளைத் தருக.

4. தமிழகம் கீழை நாட்டுடன் கொண்டிருந்த தொடர்புகளை விளக்குக.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. தமிழகம் அயல்நாட்டுடன் கொண்டிருந்த வாணிக, பண்பாட்டுத் தொடர்புகளை விவரிக்க.

# பாடம் 6

## சங்கம் இருந்தமைக்கான சான்றுகள்

### 1. சங்கம் என்னும் சொல்

சங்கம் என்னும் சொல் கழகம், கூட்டம் என்னும் பொருள்படும். சங்கம் என்ற சொல் வடசொல். அச்சொல்லுக்கு இணையாகத் தமிழில் அவையம், அவை, மன்றம் என்ற சொற்கள் இருந்தன. சங்கம் என்ற சொல்லை முதன்முதலாகத் திருநாவுக்கரசர்,

**"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி**

**நற்கனகக்கிழி தருமிக் கருளினோன் காண்"**

என வழங்கியுள்ளார். இதுபோல் பிற்காலத்தே திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், வில்லிபுத்தூரார், பரஞ்சோதியார், ஆண்டாள், உரையாசிரியர்களில் நக்கீரர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகியோர் கூறியுள்ளனர். சங்க இலக்கியங்களிலே சங்கம் எனக் குறிப்பிடப்படவில்லையே என்று சிலர் ஐயம் எழுப்புவர். 'சங்கம்' என்ற சொல்தான் வரவில்லையே தவிர சங்கத்தைக் குறிக்கும் சொற்களாக அவையம், மன்றம், கூடல், தொகை. முதலிய சொற்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன.

**"நிலத்தரு திருவின் பாண்டியன் அவையத்து"** (தொல்.பாயிரம்)

**"தொல்லாணை நல்லாசிரியர்**
**புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்**
**நிலத்தரு திருவின் நெடியோன்"** (மதுரைக்காஞ்சி)

**"புலன்நா உழவர் புதுமொழி கூட்டுண்ணும்**
**புரிசைசூழ் புனலூர"** (கலித்தொகை)

### 2. களவியல்- சிலம்பு உரைகள்

முதல் தமிழ்ச்சங்கம் தென் மதுரையில் 444 ஆண்டுகள் இருந்தது. 549 புலவர் இருந்தனர். பரிபாடல், முதுகுருகு, களரியாவிரை ஆகிய நூற்கள் தோன்றின. காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் இறுதியாக 89 பாண்டியர் சங்கத்தில் இருந்தனர்.

இடைச்சங்கம் கபாடபுரத்தில் நிறுவப்பட்டது. 3700 ஆண்டுகள் 3700 புலவாள் கொண்டு வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் இறுதியாக 59 பாண்டியர் சங்கத்தில் இருந்தனர். இக்காலத்தில் பாடப்பட்டவை கலியும்,குருகும், வியாழ மாலை ஆகியனவாகும்.

கடைச்சங்கம் தற்கால மதுரையில் நிறுவப்பட்டது. 1850 ஆண்டுகள் 449 புலவர் கொண்டு முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி இறுதியாக 9 அரசர்கள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தனர். நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும் வரியும், சிற்றிசையும், பேரிசையும் இயற்றினர்.

### 3. சங்கம் இருந்ததா? இல்லையா?

1. "சங்கம் என்பதே இல்லை. அது ஒரு கற்பனையே" என்பர் கே.என். சிவராசப் பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, பி.டி. சீனிவாச அய்யங்கார் ஆகியோர்.

2. களவியல் உரையின் கூற்றுகளில் 3700 ஆண்டு 3700 புலவர்கள் என வருவதும் 49, 449, 549, 59, 89 என எண்ணிக்கைகள் வருவதும், சிவபெருமான், முருகன் ஆகிய கடவுளர் சங்க உறுப்பினராக இருந்ததாகக் கூறுவதும் ஐயம் தருவதாக உள்ளன.

3. நக்கீரர் சொன்ன இவ்வுரை தலைமுறை தலைமுறையாக கூறப்பட்டு இப்போதுள்ள வடிவில் முசிறி நீலகண்டன் என்பார் எழுதியதாக இவ்வுரையிலே எழுதப்பட்டுள்ளது கருதத்தக்கது.

4. ஆண்டுகள், அரசர்கள் மாறுபாடு இருக்கலாம் என்பதும், அரங்கேறியார் பற்றிக் குறிப்பிட்டதில் காலமுன்பின்னாக நூல்கள், பாடல்கள் அமைவதால் பிழையிருக்கலாம் எனவும் கொள்வதே வரலாற்றுத் தொன்மையை எட்ட உதவும்.

5. சங்க வரலாற்றில் ஆட்சியாண்டு வரன்முறை சரிவரத் தெளிவில்லை என்பது குறை கூறுவார் கூறும் கூற்றாகும். சமகாலப் புலவர்கள், சமகால அரசர்கள், அரசியல் சமுதாய ஒற்றுமையும், ஒருங்கமைப்பும், சங்கப்பாடல் மரபு, சங்கம் பற்றிய மரபுக்குறிப்பு ஆகியன சங்கம் இருந்ததை உறுதிசெய்யும்.

6. பாண்டிய நாட்டில் மட்டும் சங்கம் இருந்ததென்பது எவ்வாறு? சேர, சோழ அரசர் நாடுகளில் சங்கம் இல்லையா? ஏன்? என்பனவும் சங்கம் இல்லை என்பார் எழுப்புவர். பழமைத் தொடர்பு பற்றிப் புலவர்கள் பெரிதும் பாண்டியர் அவையை நாடிச் சென்றனர். சீரும் சிறப்பும் மரபும் பாண்டியர் அவைக்களத்துக்கு மதிப்பைத் தேடித்தந்தது.

**"தமிழ்கெழு கடல்"** (புறம்)

**"தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்**
**மகிழ் நனை மறுகின் மதுரை"** (சிறுபாண் 66,67)

**"நிலன்நாவில் திரிதரூஉம் நீண்டமாடக் கூடலார்**

**புலனாவிற் பிறந்த சொற் புதிதுண்ணும் பொழுதன்றோ"**

(கலித் 35)

என்ற சங்ககால நூல்களில் இடம்பெற்றுள்ள அடிகளில் மதுரையில் தமிழ் ஆய்ந்து நுகரப்பட்ட வரலாறு காணக்கிடக்கின்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

**"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவனாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைக என்நிலவரை"** (புறம்: 76)

என வஞ்சினம் கூறுவதால் பாண்டிய வேந்தர்கட்குத் தமிழ்ப் புலவர் குழுக்களைப் பேணுவது கடமையாக இருந்தது புலப்படும்.

### 4. சங்கம் ஒன்றா? மூன்றா?

ஒரு தமிழ்ச் சங்கம் மட்டும் இருந்திருக்க வேண்டும். பிற கற்பனை என்பது சேசகிரி சாத்திரியார், இராமச்சந்திர தீட்சதர், நீலகண்ட சாத்திரியார் ஆகியோர் கருத்தாகும். கடல்கோள், கடல் அரிப்பு ஆகியவற்றின் தாக்குதல்களைப் பற்றி அறிவியல் சான்றுகள், இலமூரியாக் கொள்கைச் சான்று, கல்வெட்டுச் சான்றுகள், இலக்கியத்தில் கடல்கோள் பற்றிய சான்றுகள், புகார், மாமல்லை ஆகியவை கடலுள் மூழ்கிய தற்கால உள்ளிடங்கள் அப்பெயரில் வழங்கி வருதல் ஆகியவற்றால் உறுதி செய்யலாம்.

சங்க நூல்களைவிட காலத்தால் முந்தியதாகத் தோன்றும் தொல்காப்பியத்தில் 'என்ப','மொழிப','என்மனார் புலவர்' என ஏறத்தாழ 230 இடங்களில் தொல்காப்பியர் குறித்ததால் அவர்க்கு முன்னரே பல இலக்கணப் புலவர்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவு.

### 5. செப்பேட்டு, கல்வெட்டுச் சான்றுகள்

சின்னமனூர்ச் செப்பேடு' 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று கூறித் தமிழ்ச் சங்கம் இருந்தமைக்குச் சான்று பகருகிறது.

சிந்துசமவெளியிலும் அரிக்கமேடு மண்பாண்டங்களிலம் காணப்படும் எழுத்து முறையைப் பின்பற்றி அறச்சலூர் குகைகளிலும் மாலகொண்டா குகையிலும் தமிழி அல்லது தாமிழி எழுத்துவடிவிலான கல்வெட்டுகள் உள்ளன. பகமூர், மீனாட்சிபுரம் (கழுகுமலை), திருவாதவூர், விக்கிரமங்கலம், சித்தன்னவாசல், அழகர்மலை, திருப்பரங்குன்றம் முதலிய இடங்கிளில் சங்ககாலக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

“கி.மு. இரண்டாம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் காணப்படும் பிராமி எழுத்துகளும் மொழியும் தமிழின் வளர்ச்சியின்மையைக் காட்டுகின்றன. ஆகவே கி.மு. 200க்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பின்னரே சங்க நூல்கள் தோன்றியிருக்க வேண்டும்” என்பது கே.ஏ. நீலகண்ட சாத்திரியின் கருத்து.

### 6. புதைபொருட்சான்றுகள்

சர் மார்டிமர் வீலர் புதுச்சேரி அருகில் அரிக்கமேட்டில் நடத்திய அகழ்வாய்வு உரோமானியக் குடியிருப்பு அங்கிருந்ததை வெளிப்படுத்தியது. வாசுதேவநல்லூர் அகழ்வாய்வு தென் கீழ்காசியத் தொடர்பைத் தெரிவித்தது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. உரோமக் குடியிருப்பு மதுரையில் இருந்தது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் சங்க இலக்கியங்கள் கூறும் வணிகச் செய்திகளுக்கு இந்தக் காசுகளும், அயலார் குறிப்புகளும் ஒத்துள்ளன.

### 7. அயலார் குறிப்புகள்

அயல்நாட்டார் தங்கள் நூல்களில் எழுதுகிற அளவுக்குத் தமிழ்நாடு வெளிநாடுகளுடன் வணிக உறவு கொண்டிருக்கின்றது. ஸ்டிராபோ (கி.மு. 150) ‘எரித்தியக் கடலின் பெரிப்புளூஸ்’ நூலாசிரியர் (கி.பி. 80), தாலமி (கி.பி. 150) ஆகிய உரோம, கிரேக்க எழுத்தாளர் தமிழ்நாட்டு வணிகத் தொடர்பு பற்றிக் கூறுவர்.

### 8. இதிகாசங்கள்

வால்மிகி இராமாயணத்தில் கிட்கந்தா காண்டத்தில் இரண்டாம் சங்கத்திருப்பிடமாகிய கபாடபுரம் குறித்துக் குறிப்பிடப்படுகிறது. வியாச மகாபாரதம் சாகரதுவச பாண்டியனைக் கூறும். கவுடில்யரின் அர்த்த சாஸ்த்திரம் ‘பாண்டிய கபாடம்’ என்ற பாண்டிய நாட்டு முத்து வகையையும், ‘மதுரம்’ எனும் துணி வகையையும் குறிப்பிடும். கபாடபுரத்தே விளைந்த முத்து ‘கபாடம்’ மதுரையிலே விளைந்த துணி ‘மதுரம்’, காத்யாயணர் எனும் வடமொழி இலக்கண ஆசிரியர் ‘பாண்டி’ என்ற சொல்லைக் குறிப்பிடுகிறார்.

### 9. சங்க இலக்கிய அகச்சான்றுகள்

1. தொல்காப்பியம்
2. பதினெண்கீழ்க்கணக்கு
3. பதினெண்மேற்கணக்கு
4. இரட்டைக் காப்பியம்

என்ற நான்கும் சமய இலக்கியக் காலத்துக்குமுன் தெளிவாகின்றன. இவற்றுள் பதினெண்கீழ்க்கணக்கு திருக்குறள் தவிர பிற இருண்ட காலப் பகுதியிலே தோன்றியது. இரட்டைக் காப்பியங்கள் சங்க மருவிய காலத்தில் தோன்றியவை.

## 1. தொல்காப்பியர் காலப்பகுதி

சங்க இலக்கியங்களுக்குப் பின்னர் தோன்றியது தொல்காப்பியம் என்றும் அதனால் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை அதன் காலமாகலாம் என்றும் எஸ்.வையாபுரிப்பிள்ளை, கே.என் சிவராசப்பிள்ளை, கே. ஏ. நீலகண்டசாஸ்திரி ஆகியோர் கருதுவர்.

'ஐந்திரம் நிறைந்த' என்ற பாயிரம் பகர்வதால் பாணினிக்கு முந்தியநூல் ஐந்திரம். பாணினியின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு ஆகும். மேலும், அதற்கு முந்திய காலம் என்ற கருத்தும் உண்டு. பாணினி சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு என்றும், வடமொழி நூல்களின் கருத்துக்கோவை என்றும சுட்டிக்காட்டி தொல்காப்பியர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர் பி.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

மூவேந்தர் பற்றிய குறிப்பு இருப்பதால் பிற்காலம் என்பர் கே.என். சிவராசப் பிள்ளை.

சங்க இலக்கியம் பல தெய்வங்களைச் சொல்ல தொல்காப்பியர் நிலத்தெய்வம் மட்டுமே சொன்னார். தொல்காப்பியர் அகத்திணை பாட வகுத்த இலக்கணம் மொழி வளர்ச்சியால் மீறப்பட்டு, பரிபாடல் எனும் அகநூல் புறச்செய்தி புகழ்வதாக அமைந்துள்ளது. எனவே கடைச் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பதை இரா. இராவக அய்யங்கார், மு. இராகவ அய்யங்கார், வெள்ளைவாரணனார், ஆர்.சேஷஐயர் ஆகியோர் உறுதி செய்வர்.

**"வட சொற்கிளவி வடவெழுத்தொரீஇ**

**எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும்மே"**

எனத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளதால், வடசொல் கலப்பது பற்றி இலக்கணம் வகுக்க வேண்டிய அளவு காலம் கடந்தபின் வாழ்ந்தவர் தொல்காப்பியர். எனவே கி.மு. இரண்டாம் அல்லது முதல் நூற்றாண்டு தொல்காப்பியர் காலம் என்பர் கே.கே. பிள்ளை.

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் ஆரியர் வந்தனர் எனக்கொண்டு கி.மு. நான்காம் நூற்றாண்டு தொல்காப்பியர் காலம் என்பர் மா. இராசமாணிக்கனார். எனவே,

மேற்கொண்ட கருத்துக்களின் அடிப்படையில் தொல்காப்பியம் கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது உறுதியாகிறது.

***திருவள்ளுவர் காலப்பகுதி (கி.மு. 300)***

*திருவள்ளுவரின் திருக்குறள் அடிகளும், கருத்துகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. வள்ளுவரின் வாழ்வியலுண்மைகள் தாழ்விலா சங்கப் புலவர்களால் பொன்னைப் போல் போற்றியதை உணரலாம். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலும் முறையே, மனுவின் நீதிநூல், கௌடில்யரின் அர்த்தசாஸ்த்திரம், வாத்யாயணரின் கொக்கோகம் இவற்றிலிருந்து பெறப்பட்டன என்றும், இந்நூல்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் எழுந்ததால் திருவள்ளுவர் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என்றும் கூறுவாரும் இருக்கின்றனர். மறைமலையடிகள் கிருத்து பிறப்புக்கு 31 ஆண்டு முன் தோன்றியவர் வள்ளுவர் எனக் குறிப்பிடுகிறார்.*

***2. பதினெண் கீழ்கணக்கு காலப்பகுதி (கி.மு. 300 –கி.பி. 50)***

*எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியனவாகும். கலித்தொகையில் கைக்கிளை, பெருந்திணைப் பாடல்கள் அமைவதாலும், இராக்கதமணம் என்னும் பெண்ணைக் கவர்ந்து மணக்கும் வடவர் மரபை அறன் என கூறுவதாலும், வாரணவாசி என்னும் வடநகரை வழங்குவதாலும், காமன், காமன் தம்பி சாமன் ஆகிய கடவுளரைக் குறிப்பதாலும், சங்கப் பாடல் மரபில் அமைப்பில் நடையில் மாறுபட்டிருந்தாலும் பிற்காலத்து நூல் எனக் கூறுவர். இதனால் களப்பிரர் காலத்துக்குப் பிந்தையநூல் எனக் கே.கே. பிள்ளை குறிப்பிடுவார். பரிபாடல் தொல்காப்பியர் கூறியவண்ணம் அகத்துறை பாடாது புறத்துறை பற்றிப் பாடுவதாலும், வடமொழிச் சொற்களும், புராணக் கதைகளும், மிகுதியாகக் கலந்திருப்பதாலும் பிற்காலத்ததாகக் கருதுவர்.*

*பத்துப்பாட்டுத் தொகுப்பில் திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியன அடங்கும். கடை ஏழுவள்ளல்கள் வாழ்ந்ததாக இறந்தகாலத் தன்மையில் சிறுபாணாற்றுப்படை பேசுகின்றது. பரணர், கபிலர், மோசிகீரனார் ஆகியோர்தம் சமகாலத்தவராக இக்கடையேழு வள்ளல்கள் காட்டப்படுகின்றனர். எனவே ஏனைய பாட்டுகளுக்குச் சிறுபாணாற்றுப்படை பிற்காலமாகின்றது. எனவே இந்நூலை கி.பி. 275 எனச் சொல்வார் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார்.*

திருமுருகாற்றுப்படை, ஆற்றுப்படை எனும் இலக்கியத் தன்மைக்கு மாறுபடுவதாலும், வடசொற்கலப்பு மிகுதியாக இருப்பதாலும் இந்நூல் பிற்காலம் என்பர்.

### 3. சங்கம் மருவிய காலப்பகுதி (கி.பி. 50 – கி.பி. 200)

வானியல் கணிப்பு அடிப்படையில் சிலப்பதிகாரத்தைக் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்று எல்.டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளையும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று வி.ஆர். இராமச்சந்திர தீட்சதரும் கணிப்பர். கண்ணகி விழாவிற்குக் கயவாகு என்னும் இலங்கை மன்னன் வந்ததாகக் கூறுகிறது சிலம்பு. முதலாம் கயவாகுவின் ஆட்சிக்காலம் கி.பி. 114 – 136 ஆகும். செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் என்றும், இளங்கோ அடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் சமகாலத்தவர் என்றும் பதிகம் கூறுவதால் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சமகாலத்தவையாகின்றன. புத்தமதக் கருத்துகள், பல புராணக்கதைகள் ஆகியன கொண்டு சிலம்பையும், மணிமேகலையும் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்பர்.

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தில் பரணர் செங்குட்டுவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். சேரன் செங்குட்டுவனின் வடவெற்றியையோ கண்ணகி கதையையோ கூறவில்லை.

**“ஏதிலாளன் கவலை கவற்ற**

**ஒரு முலையறுத்த திருமாவுண்ணி”**

என நற்றிணை கூறுவதால் சங்கப்புலவர் அறிந்த கதை கண்ணகி கதை என்பது புலனாகும். எனவே கி.பி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிலம்பும் மேகலையும் தோன்றியிருக்க வேண்டும். சிலம்பு, மேகலை இரண்டிலும் வானில் பறப்பது, பூதம் தோன்றுவது முதலிய இயற்கை இகந்த நிகழ்ச்சிகள், வடசொற்கள், புராணக்கதைகள், புத்த சாதகக் கதைகள், சமயச் சொற்போர்கள், சமயப் பிணக்கு, சமயச் செல்வாக்கு ஆகியன இடம் பெறுவதால் பிற்காலத்து நூல்களாக இரட்டைக் காப்பியங்கள் கருதப்படுகின்றன.

இரட்டைக் காப்பியங்கள் கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டுக்கு மிகவும் முற்பட்டவை என்பதும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டவை என்பதும் கே.கே. பிள்ளை முடிவாகும்.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. சங்கம் என்னும் சொல் குறித்த சான்றுகளை விவரி
2. சங்கம் இருந்ததா? இல்லையா?
3. சங்கம் இருந்ததற்கான சான்றுகளை விவரி
4. சங்க இலக்கிய அகச்சான்றுகளை விவரிக்க.
5. திருவள்ளுவர் காலப்பகுதி பற்றிக் கூறுக.
6. சங்கம் மருவிய காலப்பகுதி பற்றி விளக்குக.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. சங்கம் இருந்தமைக்கான இலக்கியச் சான்றுகளை விவரி
2. சங்கம் இருந்தமைக்கான செப்பேடு, கல்வெட்டு, புதைபொருள் சான்றுகளை எடுத்துரைக்க.

# 7. சங்க இலக்கியங்கள்

***(கி.மு.500 - கி.பி.200)***

*பாட்டும் தொகையும் எனப் போற்றப்பெறும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தமிழரின் வாழ்க்கையை உள்ளங்கை நெல்லிக்கனியைப் போலக் காட்டுபவை ஆகும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்றும் குறிப்பிடுவர். இவை முற்காலச் சேர, சோழ, பாண்டியர், காலத்தில் தோன்றியவை. ஆகவே இவற்றைக் கி.மு. 100 - கி.பி. 5 ஆம் நூற்றாண்டுகளுக்கு உட்பட்டவை என்று கூறலாம்.*

## பத்துப்பாட்டு

*பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை என்ற ஐந்தும் ஆற்றுப்படை என்னும் இலக்கிய அமைப்பைச் சார்ந்தவை மதுரைக் காஞ்சி வாழ்க்கை நிலையாமையை வெளிப்படுத்துவதால் அவை புறமும், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்ற மூன்றும் அகமும் சார்ந்தவை. நெடுநல்வாடை அகமும் புறமும் சார்ந்தவை.*

### ஆற்றுப்படை நூல்கள்:

### 1.திருமுருகாற்றுப்படை

*திருமுருகாற்றுப்படை என்பது முருகப் பெருமானைத் தொழுது வீடுபேற்றைப் பெற்றவன், அப்பேற்றை விரும்புவனை ஆற்றுப்படுத்துவது ஆகும். முந்நூற்று பதினேழு (317) அடிகளில் ஆசிரியப்பாவில் இந்நூலை இயற்றியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். தமிழ், வடமொழி இரண்டிலுமே நல்ல புலமை பெற்ற இவர், முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்னும் அறுபடை வீடுகளின் பெருமையையும் சிறப்பையும் இயற்கை எழிலையும் வெளிப்படுத்துகின்றார்.*

**"இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து**
**ஒருநீகத் தோன்ற விழுமிய**
**பெறலரும் பரிசில் நல்குமதி"** (திருமுருக. 290-295)

*திருமுருகாற்றுப்படை பிற்காலப் பக்தி இயக்க வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் உரையும் உள்ளது.*

## 2. பொருநராற்றுப்படை

சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் இருநூற்று நாற்பத்தெட்டு (248) வரிகளில் பாடியதே இப்பாட்டு நூலாகும்.

பரிசில் பெற்று வரும் பொருநன் பரிசில்பெற விழையும் பொருநர்க் கூட்டத்தைக் கரிகாற் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்த எழுந்ததே இப்பாட்டாகும். இந்நூலில் கரிகாற்சோழன் பெருமையும் அவன் இசைக் கலைஞர்களைப் போற்றிய விதமும் வெற்றிச் சிறப்பும் சோழநாட்டுச் சிறப்பும், காவிரிச் சிறப்பும் எனப் பல செய்திகள் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.

வறுமையில் வாடிப் பரிசில் பெறச்சென்ற பொருநர்க் கூட்டத்திற்குக் கரிகாற்சோழன் பெருவிருந்து செய்கின்றான்.

**"கொல்லை உழுகொழு ஏய்ப்பப் பல்லே**
**எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி**
**ஊர்பிப்பிம் பெறஅது உணல் முனிந்து"** (பொருந. 112-119)

காவிரிபாயும் சோழநாட்டு நஞ்சையில் வேலி நிலத்தில் ஆயிரங்கலம் நெல் விளையும், இவ்வாறு பல செய்திகள் பொருநராற்றுப்படையில் சிறப்பித்துப் பாடப் பெறுகின்றன.

## 3. சிறுபாணாற்றுப்படை

பத்துப்பாட்டில் மூன்றாவதாக வைத்து எண்ணப்பெறும் சிறுபாணாற்றுப்படையில் ஓய்மானாட்டு நல்லியக்கோடன் என்னும் வள்ளற் பெருமானை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் போற்றிப் பாடுகின்றார். பரிசில் பெற்று வந்த சீறியாழ் இசைக்கும் பாணன் பரிசில் பெறாதவனை இவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஆசிரியப்பாவில் அமைந்த இப்பாட்டு நூல் இருநூற்று அறுபத்தொன்பது (269) அடிகளைக் கொண்டது.

சிறுபாணாற்றுப்படையின் மூலம் பழந்தமிழகத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம். கடையெழு வள்ளல்கள் பற்றியும் மதுரை, உறந்தை, வஞ்சி, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், கொற்கை எனப் பல ஊர்கள் இந்நூல் வழி அறிய முடிகின்றது. வறுமையின் எல்லைக் கோட்டைத் தொட்ட கலைஞர் கூட்டத்தை நெஞ்சில் பதியும் வகையில் இடைக்கழிநாட்டு நத்தனார் இயற்றி உள்ளார்.

பழுதடைந்த குடிசையில் இசைவாணர் கூட்டம் மயங்கிக் கிடக்கின்றது. இல்லத்தலைவி வறுமையை அடுத்தவர் அறியாத வகையில் கதவடைத்துத் தன் சுற்றத்தினருக்கு வெந்த உப்பில்லாத கீரையைக் கொடுக்கின்றாள்.

**"குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**
**இரும்பேர் ஒக்கலோடு ஒருங்குடன் மிசையும்**
**அழிபசி வருத்தம்....."** *(சிறு. 135-140)*

இவ்வாறு பழந்தமிழகம் பற்றிய பல செய்திகளைச் சிறுபாணாற்றுப்படையின் மூலம் அறிய முடிகின்றது.

### *4.* பெரும்பாணாற்றுப்படை

இந்நூலை இயற்றியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் ஆவார். பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில்பெறாத கலைஞனை ஆற்றுப்படுத்துவது இந்நூற் செய்தியாகும்.

தொண்டைமான் இளந்திரையன் அறமும் மறமும் நிறைந்த மன்னன். அவன்நாட்டில் வழிப்பறிக்கொள்ளை இல்லை. இடி தாக்குவதில்லை. கொடிய விலங்குகளின் தொல்லையும் இல்லையெனப் புலவர் அவன் பெருமையைப் பேசுகிறார்.

**"அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்**
**கைப்பொருள் வௌவும் களவுஏர் வாழ்க்கைக்**
**கொடியோர் இன்றவன் கடியுடை வியன்புலம்**
**உருமும் உறாது அரவும் தப்பா**
**காட்டு மாவும் உறுகண் செய்யா...."** (பெரும்.39-43)

மேற்குறிப்பிட்டவாறு பெரும்பாணாற்றுப்படை பழந்தமிழர் வாழ்க்கையின் பல்வேறு சிறப்புக் கூறுகளை விளக்குகின்றது.

### *5.* மலைபடுகடாம்

இவ்வாற்றுப்படை நூலை எழுதியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்னும் புலவர் ஆவார். இவருடைய நாடு பண்டைய நாட்டிலுள்ள யானை மலையும் அதனைச் சார்ந்த பகுதியும் ஆகும். பரிசில்பெற்ற கூத்தன் ஒருவன் பரிசில்பெறாத கூத்தன் ஒருவனைப் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேன் நன்னன்சேய் நன்னன் என்றும் மன்னனிடம் சொல்ல

ஆற்றுப்படுத்துவது ஆகும். இந்நூல் ஐந்நூற்று எண்பத்து மூன்று (583) அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் அமைந்த ஒன்றாகும்.

**புறப்பொருள்-**

**மதுரைக் காஞ்சி**

இந்நூல் பத்துப்பாட்டில் அதிக அடிகளைக் கொண்டது. இந்நூலில் எழுநூற்று எண்பத்து இரண்டு (782) அடிகள் உள்ளன. இப்பாடலைப் பாடியவர் மாங்குடி மருதனார். பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மன்னனுக்கு வாழ்க்கை நிலையாமையை எடுத்துரைக்க எழுந்த நூலாகும். மாங்குடி மருதனார் பாண்டிய மன்னனின் போர் ஆவலைத் தடுத்து நெறிப்படுத்தப் பல நிலையாமை கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார்.

**"இலங்கிழை மகளிர் பொலங்கலத்து எந்திய**
**மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்**
**மகிழ்ந்தினிது உறைமதி பெரும**
**வரைந்துநீ பெற்ற நல்லூழ் மியையே"** (மது.779 -782)

**அகப்பொருள்:**

**1. முல்லைப்பாட்டு**

ஐந்திணைகளுள் ஒன்றான முல்லைத் திணை அடிப்படையில் இந்நூல் எழுந்ததால் முல்லைப்பாட்டு என்னும் பெயர் பெற்றது. ஆசிரியப்பாவில் நூற்று மூன்று (103) அடிகளில் அமைந்த இவ்வகைப் பாடலை நப்பூதனார் என்னும் புலவர் இயற்றியுள்ளார்.

இருத்தலும் இருத்தல் நிமித்தமும் கொண்ட இம்முல்லைப் பாட்டில் நூலாசிரியர் நப்பூதனார் முல்லைநில வாழ்க்கை முறையைப் படிமமாக அமைத்துத் தந்துள்ளார். கார்காலத்தில் ஆயர்தம் வாழ்க்கை அப்படியே மனதில் நிற்கின்றது. சிறிய கயிற்றால் கட்டப்பெற்ற பசுங்கன்றுகள் பசியால் சுற்றிச் சுற்றி உழல்கின்றன. குளிரில் நடுங்கும் ஆய்மகள் தோளோடு கையைக் கட்டிக் கொண்டு கன்றுவிடம் 'கோவலர் பின்வர நின் தாயார் விரைந்து வருவர்' எனக் கூறுகின்றார்.

**"கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர**
**இன்னே வருகுவர் தாயர் என்போள்"** (முல்லை 12-16)

தலைவனைப் பிரிந்து ஆற்றியிருக்கும் தலைவியின் நிலையை முதல், கருப்பொருளோடு நப்பூதனார் செம்மையாக விளக்கியுள்ளார்.

## 2. குறிஞ்சிப் பாட்டு

ஐந்திணை ஒழுக்கங்களுள் முதலாவதாகிய குறிஞ்சித்திணை பற்றிக் கபிலரால் இயற்றப்பட்டது குறிஞ்சிப்பாட்டு. கபிலர் குறிஞ்சி பாடுவதில் வல்லவர். ஆரிய அரசன் பிரகத்தன் என்பவனுக்குத் தமிழின் பெருமை உணர்த்துவான் வேண்டி ஆசிரியப்பாவில் இருநூற்று அறுபத்தொரு (261) வரிகளில் எழுதப் பெற்றது இக்குறிஞ்சிப் பாட்டாகும். இதற்குப் பெருங்குறிஞ்சி என்றொரு பெயரும் உண்டாம்.

இக்குறிஞ்சிப் பாட்டில் மலையின் வளம் சிறப்பாக வருணிக்கப் பெற்றுள்ளது. தலைவியும், தோழியும் பறித்த பூக்களாகத் தொண்ணூற்று ஒன்பது (99) வகைகளைக் கபிலர் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் அவர் குறிஞ்சி நிலத்தின்பால் கொண்டுள்ள ஈடுபாட்டை உணரமுடியும்

**"……………….வள்ளிதழ்**
**ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்**
**தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி**
**செங்கொடு தேமா மணிச் சிவிகை.."** (குறிஞ்சி 61-64)

## 3. பட்டினப்பாலை

பட்டினப்பாலை என்னும் இவ்வகைப்பாட்டை எழுதியவர் பெரும்பாணாற்றுப்படையை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். முந்நூற்று ஒரு (301) வரிகளைக் கொண்ட இப்பாவில் நூற்று அறுபத்து மூன்று (163) வஞ்சியடிகளும் நூற்று முப்பத்தெட்டு (138) ஆசிரிய அடிகளும் காணப்பெறுகின்றன. அகத்திணையில் பிரிதல் பற்றிய பாலைத்திணை ஒழுக்கத்தில் செலவழுங்குதல் என்னும் துறையைச் சார்ந்ததாகும்.

மனதைவிட்டு நீங்காத தலைவியைப் பிரிவதற்குப் பரிசாக காவிரிப்பூம்பட்டினத்தையே கொடுத்தாலும் பெறேன் எனக் கூறும்போது தலைவனின் அன்பின் ஆழத்தை அறிய முடிகின்றது.

**"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்**
**வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய**
**வாரேன்…………"** (பட்டின. 298- 301)

பட்டினப்பாலையில் சோழமண், அதனில் பாயும் காவிரி, வாணிபம், கரிகாற்பெருவளத்தானின் பெருமை எனப் பல செய்திகள் விளக்கப்பெறுகின்றன.

## அகபுறப் பொருள்

### *1.* நெடுநல்வாடை

நெடுநல்வாடை என்னும் இந்நூலை இயற்றியவர் நக்கீரர். ஆசிரியப்பாவில் அமைந்த இது நூற்றுஎண்பத்தெட்டு *(188)* அடிகளைக் கொண்டது. இந்நூலில் மறைமுகமாக வேப்பமாலை அணிந்த மன்னன் சுட்டப் பெறுவதால் புறப்பொருள் இலக்கியம் எனச் சுட்டப் பெறுகின்றது. இதன்வழி பாட்டுடைத் தலைவன் பாண்டிய மன்னன் என அறிய முடிகின்றது. அரண்மனையின் அந்தப்புரம், கூதிர்காலம் எனப் பல வருணனைகள் நெஞ்சில் பதியும் வண்ணம் உள்ளன. மலையும் குளிரக் கூதிர்பருவத்தின் நடுஇரவு இருந்தது என்று கூதிர்காலத்தின் இயல்புகளை இந்நூல் விவரித்துள்ளது.

**"மாமேயல் மறப்ப மந்தி கூரப்**
**பறவை படிவன வீழக் கறவை**
**கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்**
**குன்று குளிர்ப் பன்ன கூதிர் பானாள்"** (நெடு: *9-12)*

போர்மேற்சென்ற தலைவன் வெற்றிமுகம் கண்டதால் இவ்வாடைக் காலம் நல்வாடையாக அமைந்தது. தலைவனைப் பிரிந்து இருந்ததால் தலைவிக்கு இவ்வாடை நெடுநல்வாடையாக அமைந்ததால் இந்நூல் நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது.

## எட்டுத்தொகை

பத்துப்பாட்டைப் போன்று பழந்தமிழரின் அக,புற வாழ்வியலை விளக்குபவை எட்டுத்தொகை எனும் தொகைநூல்கள் ஆகும்.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்ற ஐந்தும் அகப்பொருள் பற்றியவை. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டும் புறப்பொருள் பற்றியவை. பரிபாடல் அகமும் புறமும் பற்றியது.

## அகப்பொருள்

### *1.* நற்றிணை

நற்றிணை நானூறு என்று போற்றப்பெறும் இந்நூல் ஆசிரியப்பாவால் அமைந்து, ஒன்பது அடி சிற்றெல்லையாகவும் பன்னிரெண்டு அடி பேரெல்லையாகவும் உடைய பாக்களால் தொகுக்கப்பெற்றுள்ளது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர் எப்படி எல்லாம் இயற்கையைப் போற்றி மகிழ்ந்தார்கள் என்பதை நற்றிணைவழி அறியலாம். இந்நற்றிணைப் பாக்களை நூற்று எழுபத்தாறு

(176) புலவர்பெருமக்கள் பாடியுள்ளார்கள். இந்நூலைத் தொகுக்க உதவிய மன்னன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி, தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை. நற்றிணையில் காணப்பெறும் பாக்கள் கருத்தாழம் மிக்கவை.

**"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"** (நற்றிணை:355:6-7)

இவ்வாறு தொகை நூல்களில் முதன்மையில் வைத்து எண்ணப்பெறும் நற்றிணை பல சிறப்புக் கூறுகளைக் பெற்றுத் தமிழுக்குப் பெருமை சேர்க்கின்றது.

### 2. குறுந்தொகை

சங்க இலக்கியங்களில் பலரது ஆய்விற்கு உட்பட்டது குறுந்தொகை ஆகும். ஆசிரியப்பாவால் அமைந்த குறுந்தொகை பாடல்களின் சிற்றெல்லை நான்கு அடிகள். பேரெல்லை எட்டு அடிகள் ஆகும். கடவுள் வாழ்த்துப்பா ஒன்றோடு நானூற்று இரண்டு (402) பாக்கள் இந்நூலில் இருப்பதை அறியலாம். இப்பாக்களைப் பாடியவர்கள் இருநூற்று ஐவர் (205) என்ற அறிய முடிகிறது. குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ என்னும் புலவர் ஆவார். தொகுப்பித்தவர் யாரென்று அறிய முடியவில்லை.

பழந்தமிழரின் அக வாழ்க்கையையும் பல வரலாற்றுச் செய்திகளையும் அறிந்து கொள்ள குறுந்தொகை பெருந்துணை புரிகின்றது. பழந்தமிழரின் அக வாழ்க்கை முறையை உள்ளங்கை நெல்லிக்கனியாக உணர்த்தும் பா கீழ்காணும் குறுந்தொகைப்பா ஆகும்.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"** (குறுந்தொகை: 40)

குறுந்தொகை பாக்கள் குறுகிய அடி வரையறையைப் பெற்று இருப்பதால் கற்பதற்கும் பொருளை எளிதில் புரிந்து கொள்வதற்கும் சிறந்த நூலாகத் திகழ்கின்றது. பாடிய புலவர் பெருமக்களும் தாங்கள் சொல்ல வந்த கருத்துக்களை உவமைகள் வாயிலாகத் தெளிவாகப் பதிய வைக்கின்றார்கள்.

### 3. ஐங்குறுநூறு

அகப்பொருளை விளக்கும் நூல் ஐந்தனுள் மிகவும் குறுகிய அடி வரையறை உடைய பாக்களைப் பெற்றிருப்பது இந்நூலேயாகும். மருதம், நெய்தல், குறிஞ்சி,

பாலை, முல்லை என்ற அடிப்படையில் திணை வைப்பு முறை அமைந்துள்ளது. ஒவ்வொரு திணைக்கும் நூறுநூறு பாக்களாகக் கீழ்காணும் நல்லிசைப் புலவர்கள் பாடியுள்ளனர்.

1. **மருதம் - ஓரம்போகியார்**
2. **நெய்தல் - அம்மூவனார்**
3. **குறிஞ்சி - கபிலர்**
4. **பாலை - ஓதலாந்தையார்**
5. **முல்லை - பேயனார்**

இந்நூலிலுள்ள பாக்கள் அகவல் யாப்பில் மூன்றுஅடிச் சிற்றெல்லையாகவும் ஆறுஅடிப் பேரெல்லையாகவும் அமைந்துள்ளன. இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் மன்னன் யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னன்.

சங்ககாலச் சான்றோர் இவ்வுலகம் வளமோடும் கேடின்றியும் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர்.

**“நெல்பல பொலிக பொன் பெரிது சிறக்க**

**‘விளைக வயலே வருக இரவலர்’**

**‘பால்பல ஊறுக பகடுபல சிறக்க’**

**‘நன்றுபெரிது சிறக்க தீதில் ஆகுக’**

**‘மாரி வாய்க்க வளநனி சிறக்க’** (ஐங்குறு: 1-10)

மேற்குறிப்பிட்டவாறு இன்னும் பல பழந்தமிழரின் உயர்ந்த கோட்பாடுகளை ஐங்குறுநூற்றில் காணலாம்.

### 4. கலித்தொகை

கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று புலவர் பெருமக்களால் புகழப்பெறும் கலித்தொகை அகப்பாடல் நூல்கள் ஐந்தனுள் பிற்பட்ட காலத்ததாகக் கருதப் பெறுகின்றது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற திணை அடிப்படையில் கடவுள் வாழ்த்தோடு நூற்றைம்பது (150) கலிப்பாவில் அமைந்த பாக்கள் காணப்பெறுகின்றன. திணை வாரியாகப் புலவர்களையும் பாக்களையும் கீழ்காணும் பட்டியலில் காணலாம்.

| திணை | ஆசிரியர் | பாக்கள் |
|---|---|---|
| பாலை | பெருங்கடுங்கோ | 35 |
| குறிஞ்சி | கபிலர் | 29 |

| | | |
|---|---|---|
| மருதம் | மருதன் இளநாகனார் | *35* |
| முல்லை | நல்லுருத்திரன் | *17* |
| நெய்தல் | நல்லந்துவனார் | *33* |

இந்நூலில் காணப்பெறும் நாடகப்பாங்கில் உள்ள பாக்கள் கற்போரைத் தம்வயப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளன. உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இந்நூற்கு உரை எழுதியுள்ளார்.

தன்னை விரும்பிய தலைவனோடு தலைவி உடன்போய்விட்டாள். அப்போது தலைவியைச் தேடிச் சென்ற செவிலித்தாய் எதிரில் வந்த அந்தணரைக் கண்டு வினவுகின்றாள். செவிலித்தாய்க்கு அந்தணர் கூறும் மறுமொழி தமிழரின் அகவாழ்வை அப்படியே கண்முன் நிறுத்துகிறது. மலையில் பிறந்த சந்தனம் அதனை மற்றவர் பூசிக் கொள்ளும்போதே பெருமை பெருகின்றது. கடலில் பிறக்கும் முத்து பிறர் அணியும் போதே ஒளிர்கின்றது. யாழில் பிறக்கும் இசை பிறர் கேட்கும்போதே உயர்வடைகின்றது. இவை போலத் தலைவியும் தலைவனோடு சேரும்போதே பெருமை அடைகின்றாள் என அந்தணர் செவிலித்தாயை ஆற்றுப்படுத்துவது சிறந்த கருத்தாகும்.

**"பலவுறு நறுஞ்சாந்தம் படுபவர்க் கல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என் செய்யும்**
**நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே**
**சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை**
**கடலுளே பிறப்பினும் கடலுக்கவைதாம் என்செய்யும்**
**சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே"**

இவ்வாறு கலித்தொகை பல அரிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு பழந்தமிழர் தம் பெருமை விளக்கும் நூலாக உள்ளது.

## *5.* அகநானூறு

அகப்பொருளை விளக்கும் நூல்களுள் ஒன்றான அகநானூறு

*1.* களிற்றியானை நிரை *(1-120)*, *2.* மணிமிடை பவளம் *(121- 300)*, *3.* நித்திலக்கோவை *(301-400)* என முப்பெரும் பாகுபாட்டைக் கொண்டது. இப்பாக்களின் சிற்றெல்லை பதிமூன்று அடிகளாகவும் பேரெல்லை முப்பத்தொரு அடிகளாகவும் உள்ளன. இதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக் கிழார் மகனார் உருத்திர சன்மர் என்பவராவார். இதனைத் தொகுக்க உதவிய மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. இந்நூற்கு நெடுந்தொகை என்ற பெயரும் உண்டு.

திணை விளக்கும் பாடல்களை எண் இடும் முறையில் கொண்டுள்ள முறை ஆய்வு நோக்கில் அமைந்துள்ளது.

| **திணை** | **முடியும் எண்** | **பாக்கள்** |
|---|---|---|
| பாலை | *1.3,5,7,9….* | *200* |
| குறிஞ்சி | *2,8,12,18,22,28….* | *80* |
| முல்லை | *4,14,24,34….* | *40* |
| மருதம் | *6,16,26,36….* | *40* |
| நெய்தல் | *10,0,30,40…* | *40* |

பழந்தமிழகத்து வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றை அகநானூறு விளக்குவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பழந்தமிழரின் திருமண நிகழ்ச்சி எவ்வாறு அமைந்தது என்பதை விளக்க இரண்டு பாக்கள் (86,136) அகநானூற்றில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

நாள், கோள் பார்த்து கடவுளை வணங்கித் திருமணச் சடங்கு செய்தனர் என்பதை,

**“அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்**
**சகடம் அண்டிய துகடீர் கூட்டத்துக்**
**கடிநகர் புனைந்து கடவுட் பேணி”** (அகம். 136: 4-6)

என்ற அடிகளால் அறியலாம்.

## புறப்பொருள்

### 1. புறநானூறு

பழந்தமிழர் வாழ்வில் அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் இரு கண்களாகப் போற்றப் பெறுகின்றன. புறவாழ்க்கையை விளக்கும் நூல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து என்னும் இருநூல்கள் ஆகும்.

பழந்தமிழரின் அகவாழ்க்கையை உணர்த்த ஐந்து நூல்கள் உள்ளன. புற வாழ்க்கையைப் புறநானூறு தெளிவாகவே வெளிப்படுத்துகின்றது. இதன் மூலம் பண்டைத் தமிழரின் வீரம், பெருமை, கொடை, அரசியல், உயரிய கோட்பாடு போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் பழந்தமிழ் நாட்டின் வரலாற்றையும் அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றது.

புறநானூற்றைத் தொகுத்தவர், தொகுப்பித்தோர் பற்றிய குறிப்புக்களை அறிய முடியவில்லை. நூற்று ஐம்பத்தியேழு (157) புலவர்கள் பாடிய நானூறு பாக்களின்

தொகுப்பே இந்நூல். ஆண்பாற் புலவர்களே அல்லாமல் பல பெண்பாற் புலவர்களும் பாக்களை இயற்றியுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். சில பாக்கள் சிதைந்து காணப்பெறுகின்றன. இரு பாக்கள் (267, 268) முழுமையாகக் காணப்பெறவில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மானுட நேயம் பாடும் மனம் இருந்தது. வாழ்க்கையை எவ்வளவு உயர்ந்ததாகவும் எதார்த்தமாகவும் பார்த்தார்கள் என்பதைக் கீழ்காணும் பாடல் வரிகளால் அறியலாம்.

**“யாதும் ஊரே: யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தரவ ாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன**
**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்**
**இன்னாது என்றலும் இலமே”**

‘உண்பது நாழி உடுப்பவை இரண்டே’ (புறம். 189:5) ‘நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்’ (புறம் 195:6-7) என்ற கோட்பாடுகள் சாதி, மதம், இனம், நாடு என எல்லை கடந்து எல்லோருக்கும் பழந்தமிழ் மக்கள் கூறும் அறிவுரையாகும். இவ்வாறு வேண்டியதை வேண்டியாங்கு பெற்றுக் கொள்ள புறநானூறு ஒரு கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

### 2. பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து என்பது பத்துப் பத்துப் பாடல்களாகப் பத்துச் சேர மன்னர்களைப் பற்றிப் பாடிய ஒரு வரலாற்று நூலாகும். தற்போது இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. முதல் பத்து பாக்களும் ஈற்றுப் பத்துப் பாக்களும் கிடைக்கப் பெறாததால் எஞ்சியுள்ள எண்பது பாக்கள் (20 – 90) பதிக்கப் பெற்றுள்ளன.

சங்ககால மன்னர்கள் குறுநில மன்னர்கள், வள்ளல்கள் எனப் பலரைப் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் அறிய முடிகின்றது. ஆனால் மூவேந்தர்களுள் சேர மன்னர்கள் இப்பதிற்றுப்பத்தின் வழித் தனிநூலில் இடம் பெறுகின்றார்கள்.

கிடைத்துள்ள ஒவ்வொரு பத்துப்பாடலுக்கும் பதிகம் ஒன்று காணப்படுகின்றது. பாடிய புலவர், பாடப்பெற்ற மன்னன், அவன் ஆட்சிக் காலம் போன்றவை அறிய முடிகின்றன.

தலையும் கடையும் இல்லாத எட்டுப் பத்துக்களின் பாடியோர் பாடப்பெற்றோர் பட்டியல் கீழே கொடுக்கப் பெறுகின்றது.

**பத்து பாடியவர் பாடப் பெற்றவர்**

2. குமட்டூர்க் கண்ணனார் : இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
3. பாலைக் கௌதமனார் : பல்யானைச் செல்கெழு குட்டுவன்
4. காப்பியாற்றுக் காப்பியனார் : களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல்
5. பரணர் : கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்
6. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் : ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
7. கபிலர் : செல்வக் கடுங்கோ வாழியாதன்
8. அரிசில் கிழார் : தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
9. பெருங்குன்றூர் கிழார் : குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

இந்நூலின் வழிச் சேர மன்னர்களின் வீரமும் கொடையும் சிறப்பாக வருணிக்கப் பெறுகின்றன. சேர மன்னர்கள் புலவர்களைப் போற்றி அளப்பரிய செல்வத்தை அளித்தமையை அறிய முடிகின்றது.

## அகபுறப் பொருள்

### பரிபாடல்

சங்க இலக்கியங்களில் கலித்தொகையோடு பரிபாடலும் மற்றையவற்றை விடக் காலத்தால் பிந்தியது என இலக்கிய, மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

ஓங்கு பரிபாடல் எனச் சிறப்பிக்கப் பெறும் இந்நூல் மதுரை, வையை, திருமருதத்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலை போன்றவற்றின் பெருமைகளையும் இயற்கை எழிலையும் சிறப்பாக வருணிக்கின்றது. பரிபாடலில் எழுபது (70) பாக்கள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. ஆனால் தற்போது இருபத்து இரண்டு பாக்கள் மட்டுமே கிடைக்கின்றன. இவை கீழ்கண்டவாறு திருமால், முருகன், வையை பற்றிய பாடல்களாக உள்ளன. அகப்பாடலும், புறப்பாடலும் கலந்து வருவதால் அகபுறப் பொருள் என்ற பிரிவில் பரிபாடல் அடங்குகின்றது.

திருமால் : 1, 2, 3, 4, 13, 15

முருகன் : 5, 8, 9, 14, 17, 18, 19, 21

வையை : 6, 7, 10, 11, 12, 16, 20, 22

சங்க இலக்கியங்களில் மிகவும் காலத்தாற் பிற்பட்ட பரிபாடல் அக்காலச் சூழலுக்கு ஏற்ப இறைவழிபாட்டை அதிகம் வெளிபடுத்துவதாக உள்ளது.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. ஆற்றப்படை நூல்கள் குறித்து விவரி
2. பத்துப்பாட்டுள் அகநூல்கள் குறித்து விளக்குக.
3. எட்டுத்தொகையுள் அகநூல்கள் பற்றி எழுதுக
4. எட்டுத்தொகையுள் புறநூல்கள் யாவை? விவரி
5. சங்க இலக்கியங்களில் அகப்புற நூல்கள் யாவை? விவரி.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. பத்துப்பாட்டு நூல்கள் குறித்து கட்டுரை வரைக.
2. எட்டுத்தொகை நூல்களை விளக்கி எழுதுக.
3. சங்க இலக்கியங்களை விவரி

# பாடம் 8

# பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறைகள்

## *1.* இயற்கை வாழ்வு

பூவுலகைப் பூப்பெயரால் அழைத்த தமிழர் அந்நிலத்து சிறப்புடைய ஒழுக்கத்தை அவ்வப்பெயரால் குறித்தனர். அகவாழ்வின் காதல்நிலை – வீட்டு வாழ்க்கை சிறந்த பின் நாட்டுவாழ்வு-கூட்டு வாழ்வு மிகுதிப்பட்டது. போர்கள் தொடங்கின. அப்போர் முறையையும் திணைகளாய்ப் பகுத்தனர். நானிலமாம் நன்னிலம் நான்கும், பாலையாம் வன்னிலம் ஒன்றும்போல், புறத்திணையுள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை எனும் நான்கு போரும், வாகை என்னும் வெற்றிப் போருமாக ஐந்து திணைகளைக் கண்டனர். அன்பின் ஐந்திணையோடு கைக்கிளையும், பெருந்திணையும் சேர்த்து ஏழாக்கியது போல பாடாண், காஞ்சி ஆகியன சேர்த்து ஏழாக்கினர். சேரர் பனம்பூவும், சோழர் ஆத்திப்பூவும், பாண்டியர் வேப்பம்பூவும் அணிந்தனர். நிலத்துக்குரிய பறவை, விலங்கு, மரம், யாழ், பண் இவற்றைப் பகுத்தமை தமிழர்தம் இயற்கையோடியைந்த வாழ்வைக் காட்டுகிறது.

## *2.* அகமும் புறமும்

காதலும் போரும் ஆகிய இரண்டுமே வாழ்வின் தலையாய இரு கூறுகள். எனவே தமிழர் தம் வாழ்வை அகம், புறம் எனக் கண்டனர். இல்வாழ்க்கை நெறி 'அகம்' எனப்பட்டது. அகவாழ்வை விளக்கும் இலக்கியங்கள் ஆடவர் பெண்டிரின் மனஉணர்வுகளை மையமாகக் கொண்டு எழுந்தன. புறவாழ்வை விளக்கும் இலக்கியங்கள் அரசரின் செயல்களை அல்லது பொது அறங்களை மையமாகக் கொண்டு எழுந்தன. புறவாழ்க்கைக்கு அறமும் பொருளும் அடிப்படை. அகவாழ்க்கைக்கு அறம், அறம் சார்ந்த இன்பம் அடிப்படை.

## *3.* மகளிர் நிலை

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சங்ககாலம் என்பதுதான் போதிய வரலாற்று தகவல்களைத் தரும் தொடக்க காலமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம் முதற்கொண்டுதான் தெளிவாக வருகிறது. இச்சங்ககாலத்தில் மகளிர் நிலை எவ்வாறு இருந்திருக்கிறது என்பதனை,

**"வினையே ஆடவர்க்குயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க்கவ் வாடவர் உயிரே"**

என்னும் குறுந்தொகை வரிகள் சமூக வாழ்விற்குத் துணை செய்யும் கடமைகள் ஆணுக்கு உயிர் போன்றது என்றும், அத்தகு ஆடவரை உயிராகக் கருதுதல் பெண்ணுக்குரிய கடமை என்றும் உணர்த்துகின்றன.

**வீரமகளிர்**

பண்டைத் தமிழர் காதலையும் வீரத்தையும் தன் இருகண்களாகப் போற்றினர். பெண்களும் இதற்கு விதிவிலக்கு அன்று. போர்களத்தில் போர் தீரமாக நடந்து கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ ஒருவன் ஓடி வருகிறான். ‘‘உன் மகன் புறப்புண்பட்டு இறந்தான்’’ என்ற செய்தியைக் கூறுகிறான். மகனின் இறப்பிற்குக் கலங்கவில்லை வீரத்தாய். மாறாக, புறப்புண்ணுக்கு நாணுகிறாள். ‘‘என் மகன் புறப்புண்பட்டு இறந்திருந்தால் அவனுக்கு உயிர் அமுதமாகப் பாலூட்டிய எனது மார்பகங்களையே வெட்டி எறிவேன்’’(புறம்: 278) என்கிறாள் வீரத்தாய்.

**மகளிரின் கல்வி**

பெண்கள் கல்வியில் உயர்ந்திருந்தனர் என்பது ஔவையார், காக்கைபாடினியார், வெள்ளிவீதியார் போன்ற பெண்பாற் புலவர்களின் பாடல்களால் புலனாகிறது. அதியமான் என்ற அரசன், தான் அரிதிற் பெற்ற நெடுநாள் வாழவைக்கும் நெல்லிக்கனியை ஔவையாருக்கு வழங்கிப் பெண் கல்வியை வளரச் செய்தார்.

**‘‘சிறியலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே’’**

**மகளிர் தூது சென்றமை**

சங்க காலத்தில் பெண்கள் இருநாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சினையைத் தடுக்க தூதுவராகச் சென்றுள்ளதைப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

**‘‘இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து**
**கடியுடை வியன் நக அவ்வே**
**பகைவர்க்குத்திக் கோடு நுதி சிதைந்து**
**கொல் துறைக் குற்றியமாதோ என்றும்**
**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**

**இல்லோர் ஒக்கல் தலைவன்**

**அண்ணல் எம்கோமான் வைந்நுதி வேலே"** (புறம்:95)

தொண்டைமான் அதியமானிடம் கொண்ட பகையின் காரணமாக போர்மேகம் இரு நாடுகளையும் சூழ்ந்தது. ஆனால் ஔவையார் தனது புலமையால் அதியமான் சார்பாகத் தொண்டைமானிடம் தூது சென்று போர் மூளாத வண்ணம் அமைதிபடுத்தினார்.

### மகளிர் திட்டமிடுதல்

பெண்கள் குடும்பத்தின் வளர்ச்சியில் திட்டமிட்டுச் செயல்படுவதைக் காணமுடிகிறது. சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் ஒருவரான பொன்முடியார் மிக ஆணித்தரமாக ஒரு மனிதன் வாழ்வுபெற சமுதாயத்தில் ஒவ்வொருவரும் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**

### பரத்தையர் நிலை

பரத்தமை ஒழுக்கம் சங்ககாலச் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தலைவனின் இப்போற்றா ஒழுக்கத்தைச் சார்ந்த நிகழ்ச்சிகளைப் பல பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. ஔவையார் காட்டும் பரத்தை ஒருத்தி, "தலைவனோடு நான் புனல் விளையாடச் செல்லப் போகிறேன், இயலுமானால் தலைவி தன் கணவனை என்னிடமிருந்து மீட்டுக் கொள்ளட்டும்" என்று இறுமாப்புடன் கூறுவதை ஒரு பாடலில் (குறு.80) காணமுடிகிறது. தலைவனின் குற்றங்களுக்காக வருந்துவதும், அமைதி இழந்து தூங்காது இருப்பதுமே கற்புடைய பெண்ணின் கடமை என்று அறிவுறுத்துகின்றது.

### கைம்மை மகளிர்

கற்புக்கு அணிகலனாக விளங்கிய மங்கையர் தம் தலைவன் இறந்துவிட்டால் அவரோடு உயிர் துறப்பது வழக்கமாயிருந்தது. கணவன் இறந்ததும் சில பெண்கள் தீப்பாய்ந்து உயிர் துறந்தனர். இதற்குச் சேரலாதன் மனைவி நற்சோனையை உதாரணமாகக் கூறலாம். சில பெண்கள் கைம்மை நோன்பினைக் கடைபிடித்து

உடலை வருத்தி உயிர்தாங்கி வருத்தி வாழ்ந்தனர். கைம்மை மகளிர் உட்கொள்ளும் உணவு, வெந்த வேளைக் கீரையோடு அல்லிஅரிசியை (புறம்:246) உண்ட நிகழ்வை வெயிப்படுத்துகிறது. இப்பெண்களின் கூந்தலை மழித்து விடும் வழக்கமும், வளையைக் கழற்றிடும் வழக்கமும் சங்ககாலத்தில் உண்டு.

**மகளிரின் ஒப்பனை**

இளம்மகளிர் கூந்தலுக்கு நெய்தடவி அதை ஐந்து பிரிவுகளாக வகுத்துப் பின்னினர். முதுமகளிர் கூந்தலை வாரிமுடித்துக் கட்டினர். மகளிர் நீராடியபின் கூந்தலுக்கு அகிற்புகையிடுவது வழக்கத்தில் இருந்தது. கண்களுக்கு மை தீட்டுவதும் காணப்பட்டது.

மணமான அல்லது காதல் உறவு கொண்ட பெண்களைத் தவிரப் பிறர் மலர் அணிந்தற்குச் சங்க இலக்கியத்தில் சான்றில்லை. குழந்தைகளும், பருவம் அடையாத மகளிரும், கைம்மை மகளிரும், பூச்சூடுவதில்லை. வேங்கை, வெட்சி, குவளை, அரும்பு, மல்லிகை ஆகிய மலர்கள் விரும்பிச் சூடப்பட்டன. சந்தனம், குங்குமம் ஆகியவற்றை மகளிரது மார்பில் பூசி அதில் ஓவியங்களை வரைவது வழக்கம். இது 'தொய்யில்' எனப்படும். தொய்யில் எழுதும் உரிமை காதலனுக்கே பெரிதும் தரப்பட்டது.

**4. கல்வி நிலை**

சங்க இலக்கியங்களில் கல்வியின் உயர்வைப் பேசும் பாடல்கள் பல உள்ளன. கற்றவரை மக்களாகவும், கல்லாதவரை விலங்காகவும் திருக்குறள் பகுத்துக் காட்டுகிறது.

"**கண்ணுடையர் என்பவர் கற்றார்**" (குறள்:393)

**கேடில் விழுச்செல்வம் கல்வி**" (குறள்:400)

என்னும் தொடர்கள் அக்காலத்தில் கல்விக்குக் கொடுக்கப்பட்டிருந்த உயர்ந்த இடத்தைச் சுட்டி நிற்கின்றன.

"**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**" (புறம்:183)

எனக் கல்வியின் இன்றியமையாமை பற்றியும்

"**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே**" (புறம்:183)

எனக் கல்வியின் பெருமை பற்றியும் புறநூனூறு குறிப்பிடுகிறது. ஆனால் சங்ககாலக் கல்வி நிலையங்கள் அமைந்த இடம், அமைந்த முறை, அவை இயங்கிய முறை, பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை, கல்வி கற்பிக்கப்பட்ட முறை ஆகியவை பற்றிக் குறிப்புகள் இல்லை. சங்ககாலத்தில் வரிவடிவில் எழுதப்படும் முறை வழக்கில் இருந்தது. சங்ககால மக்களிடையே வானநூல் அறிவும் இருந்தது. வால்வெள்ளி தோன்றுதல், சனிமீன் புகைதல், மீன் ஓடுதல், வெள்ளி தென்திசை ஓடுதல் போன்றன தீநிமித்தங்களாகக் கொள்ளப்பட்டன. விண்மீனின் இயக்கத்தைக் கொண்டு யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறந்துபடும் நாளை முன்கூட்டிக் கணித்ததாகக் கூடலூர் கிழார் குறிப்பிடுகிறார்.

### *5. பொருளாதார நிலை*

செல்வரின் மனைகள் மாடியும் நிலாமுற்றமும் கொண்டு விளங்கின. ஏழைகளின் வீடுகள் வைக்கோலும், தழையாலும் வேயப்பட்ட குடிசைகளாக இருந்தன. அரசர்கள் வாழும் இல்லங்கள் “மலைக்கணவாய் போன்ற வாயில்கள்” கொண்டு கம்பீரமாக விளங்கின. நெல்லை உண்ண வந்த கோழியைக் குழை கொண்டு எறியும் அளவிற்குப் பொன்னும் செல்வமும் ஒருபுறம் காணப்பட்டது. குப்பைக் கீரையை உப்பின்றி வேகவைத்து உண்ணும் அளவிற்கு வறுமை மறுபுறம் காணப்பட்டது.

### தொழில்கள்

மக்கள் தாங்கள் வாழும் இடத்திற்கேற்பவும், வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்பவும் குறிப்பிட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவற்றுள் வாணிகம், உழவு, தச்சு, பொன்அணி வேலைகள், இரும்பு வேலைகள், வீடு கட்டுமானப் பணிகள், கப்பல், படகு கட்டுதல், வேட்டையாடுதல், ஆநிரை மேய்த்தல், மீன்பிடித்தல் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

### உழவு

தொடக்க கால நாகரிகத்தை விளக்கும் வெட்சி, கரந்தைப்பாடல்களில் உழவு பற்றி குறிப்பு இல்லை. உழிஞைப் பாடல்களிலேயே உழவும், உழவு பேணப்படும் முறையும் விளக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றன. உழவுபோன்ற இன்றியமையாத தொழிலும் கூடப் போர்க்களம் புகத்தகுதி இல்லாதவர்க்கே தொடக்கநிலையில் அளிக்கப்பட்டது.

## நெய்தல் தொழில்

சங்ககாலத்தில் ஆடைகள் பருத்தி, பட்டு, எலிமயிர் ஆகியவற்றால் நெய்யப் பெற்றன. இவற்றுள் பட்டாடை 'நூலாக்கலிங்கம்' என அழைக்கப்பட்டது. நெய்தல் தொழிலில் ஈடுபட்டிருந்த காருகர் (சாலியர்)களுக்கெனத் தனிக்குடியிருப்புக்கள் இருந்தமையைச் சிலம்பு சுட்டுகிறது. ஆடைகள் அறுவை, கலிங்கம், காழகம், கூறை, துகில் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டன. மெல்லிய ஆடைகள் நுரை, புகை, பால், ஆவி, பாம்புரி ஆகியவற்றோடு ஒப்பிடப்பட்டன.

## 6. சமயநிலை

சங்க இலக்கியங்களில் சமயத்துடன் நேரடித் தொடர்பு கொண்ட துறைகள் இல்லை. எனினும் சமயம் பற்றிய செய்திகள் அகப்புறப்பாடல்கள் அனைத்திலும் பரவிக் காணப்படுகின்றது.

## நிலக்கடவுள்கள்

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நிலங்கள் பற்றிக் குறிப்பிட வந்த தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு கடவுளைக் குறிப்பிடுகிறார்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"** (தொல். அகத். 5)

தொல்காப்பியர் கருத்துப்படி, திருமால் முல்லை நிலக்கடவுள்; முருகன் குறிஞ்சி நிலக்கடவுள்; இந்திரன் மருதநிலக்கடவுள்; வருணன் நெய்தல் நிலக்கடவுள்.

## திருமால் வழிபாடு

முல்லை நிலக் கடவுளாகிய திருமால் சங்க இலக்கியங்களில் மால், மாயோன் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகிறான். சங்க நூல்களில் திருமாலின் நீலவண்ணமும், நீண்ட உருவம், அவனது கொடி, அணி, அணை ஆகியனவும், அவதாரச் செய்திகளும் பேசப்படுகின்றன. திருமால் ஆழி ஏந்தியமை, கைகளில் சங்கு, சக்கரம், தாங்கியமை, மார்பில் திருமகளை வைத்துள்ளமை, ஆல் இலையில் பள்ளி கொண்டமை, அரவு அணையில் துயில்கின்றமை, நான்முகனைத் தோற்றுவித்தமை ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

## முருக வழிபாடு

அழகும் ஆற்றலும் பற்றிப் பேசப்படும் இடங்களில் எல்லாம் முருகனைப் பற்றிய கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெறக் காண்கிறோம். சங்க இலக்கியங்கள் அவனைச் ''சேயோன்'' என அழைக்கும். போர்திறன் கொண்ட அவன் போர்த் தெய்வமாகிய கொற்றவைக்கு மகனாகத் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படுகிறான். தலைவி காதல் நோயுற்ற சூழலில் நடைபெறும் வெறியாட்டு முருகனை முன்னிறுத்தி நடைபெறுவதேயாகும். இம்முருகவழிபாட்டில் ஆரவாரம் மிக்க ஆடல்களும் பாடல்களும் சிறந்து விளங்கின.

முருகனது ஆறுமுகமும் பன்னிருகையும் பற்றியும், அவனது ஆறுபடை வீடுகள் பற்றியும் திருமுருகாற்றுப்படை எடுத்துரைக்கிறது.

## சிவ வழிபாடு

சங்க இலக்கியங்களில் சிவபெருமான் 'நீலமணிமிடற்றன்' 'மழுவாய் நெடியோன்'. 'ஆல்கெழு கடவுள்' எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறான். மூவேந்தருள் சிறந்து விளங்கிய பாண்டியன், சிவனின் முக்கண்களில் சிறந்து விளங்கும் நெற்றிக்கண்ணுக்கு உவமை கூறப்படுகிறான். அதியமானிடம் நெல்லிக்கனி பெற்ற ஔவை, நஞ்சுண்டும் இருந்து அருள்செய்யும் சிவனுடன் அவனை ஒப்பிடுகிறாள்.

## கொற்றவை வழிபாடு

சங்க இலக்கியங்களில் கொற்றவையின் இறைப்பண்பு சுட்டப்படவில்லை. கொற்றவைக்கு உரிய வழிபாட்டுச் சடங்குகள் மட்டுமே சுட்டப்பட்டுள்ளன. மார்பில் குருதி தெளித்தாலன்றிக் கொற்றவை பலி ஏற்றுக் கொள்ளாள் (பதிற்றுப்பத்து 79) என்று நம்பிக்கை நிலைபெற்றிருந்தது. பகைவரை அழிக்குமாறு கொற்றவையிடம் வீரர்கள் வேண்டி நின்றதைச் சங்கஇலக்கியம் சுட்டுகிறது. வெற்றி பெற்றோர் மகிழ்ச்சியைப் பரவிக் கொண்டாடவும், போர்க்குச் செல்வோர் வெற்றி வேண்டிப் பரவவும் எனக் கொற்றவை வழிபாடு நிகழ்ந்திருக்கலாம்.

## இந்திரன் வழிபாடு

தொல்காப்பியத்தில் நிலத்தெய்வங்களாக இந்திரனும் வருணனும் குறிக்கப்படுகின்றனர். ஆனால் சங்க இலக்கியத்தில் இவர்கள் பெரிதும் போற்றப்படவில்லை. இந்திரன் வழிபடப்பட்டமைக்குச் சங்க இலக்கியத்தில் சான்று இல்லை. வருணனைப் பற்றிய செய்தி சங்க இலக்கியத்தில் இல்லை. சங்கமருவிய

காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய நூல்களில் இந்திர வழிபாடு விழாக்கோலம் கொண்டு விளங்குதல் காண்கிறோம்.

## பிறதெய்வங்களின் வழிபாடு

சங்க இலக்கியங்களில் திருமகள், நான்முகன், பலராமன் ஆகியோரைப் பற்றிக் குறிப்புக்கள் உள்ளன. மதில் கதவுகளிலும், வீட்டு நிலைகளிலும் திருமகளின் உருவம் செதுக்கி வைப்பது மங்கலமாகக் கருதப்பட்டது.

**“பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீல மேனி நெடியோன் கோயிலும்”** *(சிலம்பு. 5:169-172)*

எனச் சிலம்பு காவிரிப்பூம்பட்டினம் கோயில்களை நிரல்படுத்திக் கூறும்.

## நடுகல் வழிபாடு

போர்க்களத்தில் இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நினைவுக் குறியீடு நடுகல் ஆகும். தொடக்கத்தில் வீரனைச் சிறப்பிக்கும் நோக்கம் கொண்டு அமைந்த இந்நடுகல் பின்னர் அதனைத் தெய்வமாக்கி வழிபடும் நிலைக்கு உயர்ந்தது.

## பத்தினி வழிபாடு

கண்ணகிக்குப் பத்தினி வழிபாடு நடந்ததைச் சிலம்பு சுட்டுகிறது. ‘உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்’ என்பது காப்பியத்தின் மூன்று குறிக்கோள்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. நடுகல் வழிபாட்டில் கைக்கொள்ளப்பட்ட வழிபாட்டு முறைகளுடன் பத்தினி வழிபாட்டில் கேள்வியும் இணைந்து காணப்படுகிறது.

## புறச்சமய வழிபாடுகள்

சங்ககாலத்தில் சமணபௌத்த சமயச் செல்வாக்குக் குறைவாகவே இருந்தது எனலாம். மதுரையிலும் காஞ்சியிலும் சமண பௌத்தப் பள்ளிகள் இருந்தமைக்குப் பட்டினப்பாலை சான்று தருகிறது.

## வழிபாட்டு முறைகள்

சங்ககால வழிபாட்டு முறைகளை வன்முறை வழிபாடு, மென்முறை வழிபாடு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

### *1.* வன்முறை வழிபாடு

ஆரவாரம் மிக்க பொது வழிபாட்டிலும், போர்ச் சூழலில் காணப்பட்ட வழிபாட்டு முறைகளிலும் வன்முறை வழிபாடு காணப்படுகிறது. வன்முறை வழிபாட்டில் உயிர்ப்பலியிட்டுக் குருதி கலந்த உணவு படைக்கப்பட்டது. மறி

அறுக்கப்பட்டது. வீரர்கள் தங்களையே பலியிட்டுக் கொள்ளும் 'அவிப்பலி' பற்றித் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது.

**2.மென்முறை வழிபாடு**

வீடுகளில் அமைந்த இல்லுறை தெய்வங்களுக்கு மென்முறை வழிபாடு இயற்றப்பட்டது. மென்முறை வழிபாட்டில் பூவும் புகையும் இடம்பெற்றன.

**7. உணவும் விருந்தோம்பலும்**

புழுங்கல் அரிசி, பச்சை அரிசி ஆகிய இருவகை உணவுகளும் சங்க காலத்தில் வழக்கில் இருந்தன.

நெல்லைக் குற்ற இரும்புப் பூண் இட்ட உலக்கைகள் பயன்படுத்தப்பட்டன. சமையல் நுணுக்கத்தை விளக்கும் மடைநூல் இருந்தாகச் சிறுபாணாற்றுப்படை (240-241) குறிப்பிடுகிறது.

**உணவு வகைகள்**

பலவகை உணவுகள் தயாரிக்கப்பட்டன. தினையரிசியும் பாலும் கலந்த பால்சோறு. அவரைப் பருப்பும் அரிசியும் கலந்த பருப்புச் சோறு, இறைச்சியும் அரிசியும் கலந்த 'ஊன் துவை அடிசில்'. புளியும் மோரும், மூங்கில் அரிசியோடு கலந்து ஆக்கப்பட்ட 'புளியங்கூழ்' ஆகியன சங்ககால உணவு வகைகளில் குறிப்பிடத்தக்கவை. ஊன் உணவும் கள்ளும் இனவேறுபாடின்றி அனைவராலும் உண்ணப்பட்டன.

**கறிக்கூட்டு வகைகள்**

கறிக்கூட்டு வகைகளில் அசைவ உணவே பெருவழக்காக இருந்தது. முட்டையுடன் கூடிய உடும்புப் பொரியல், பன்றியின் கொழுப்புக்கறி, செம்மறியாட்டின் தொடைக்கறி, சுட்ட மீன்வறுவல் ஆகியவை கறிக்கூட்டு வகைகளில் குறிப்பிடத்தக்கவை. மாவடுவை ஊற வைத்து மிளகுப்பொடியும் கறிவேப்பிலையும் கலந்து வேகவிட்டு ஊறுகாய் செய்யும் வழக்கம் பெரும்பாணாற்றுப்படை (306-340) குறிப்பிடுகிறது. ஏழைகள் குப்பைப் கீரையை மட்டும் உணவாகக் கொண்டதாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

கறியும் சோறும் கலந்த உணவு 'ஊன் புழுக்கல்' அல்லது 'ஊன்துவை அடிசில்' எனப்பட்டது. உப்புக்கண்டம் 'வாடுஊன்' எனப்பட்டது. குழம்புக்கறி 'கலவை' எனப்பட்டது. ஊறுகாய் 'காடி' எனப்பட்டது. கறியை வேகவைப்பதும் சுடுவதும் வழக்கில் இருந்தன.

## விருந்தோம்பல்

'விருந்தினர்' என்பது 'புதியன' அல்லது 'புதியவை' என்று பொருள். முன்பின் அறிமுகமில்லாத ஒருவருக்கு உணவு, உடை, உறையுள் முதலிய வசதிகளைச் செய்து பேணுவது 'விருந்தோம்பல்' எனப்படும். பண்டைய காலத்தில் உணவகம், தங்கும் வசதிகள் அதிகமில்லாத காலத்தில் புதியதாக வரும் விருந்தினர்களை அவ்வூரில் வாழும் இல்வாழ்வோரின் வீடுகளில் தங்க வைத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தனர். இவ்வாறு விருந்தினரை அன்போடு வரவேற்று உபசரிப்பது சிறந்த அறப்பண்பாக போற்றப்பட்டது.

தமிழரின் பண்பாட்டை வெளிப்படுத்தும் கருத்துப் பேழையாகத் திகழ்வது சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியத்தில் ஆற்றுப்படை நூல்களில் கூத்தர், பாணர், பொருநர், விறலி எனும் நான்கு வகையான கலைஞர்கள் வாழ்ந்தனர். இவர்கள் வறுமையுற்றபோது அரசர்களின் புகழைப்பாடி அதற்கு வெகுமதியாக அரசர்களிடமிருந்து பரிசைப் பெற்று தம் வறுமையைப் போக்கிக் கொண்டனர்.

பணியாளர்களை வைத்து உபசரிக்காமல், தானே முன்னின்று தன் பிள்ளைகளின் முகம்பார்த்து ஊட்டும் ஒரு தாயைப் போல, வள்ளல் தொண்டைமான் இளந்திரையன், பாணர்களுக்கு மரபு பிறழாது பொன்கலத்தில் விண்மீன்களைக் கொட்டியதுபோல வெண்சோறிட்டுப் பெரிய விருப்பத்துடன் தானே முன்னின்று, உடனிருந்து உணவு ஊட்டி மகிழ்ந்தான் என்பதை,

**"விருப்புடை மரபிற் கரப்புடை அடிசில்**
**மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி**
**மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து**
**ஆனா விருப்பில் தான் நின்று ஊட்டி"**

என்னும் பெரும்பாணாற்றுப்படை (476-479) அடிகளால் அறியலாம்.

## 8. விழாக்களும் பொழுதுபோக்குகளும்

### விழாக்கள்

பண்டையத் தமிழர்க் கொண்டாடிய விழாக்களை அவற்றின் நோக்க அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம். அவை:

***1.அரசியல் விழாக்கள்***
***2.சமய விழாக்கள்***
***3.பொது விழாக்கள்***

### *1. அரசியல் விழாக்கள்*

*1. அரசனது பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. இது'பிறந்தநாள் வயின் பெருமங்கலம்' என அழைக்கப்பட்டது. பொதுமக்களும் இவ்விழாவில் பெருங்பங்காற்றினர். நன்னன் பிறந்தநாள் விழா பெரும் ஆரவாரத்துடன் கொண்டாடப்பட்டமைப் பற்றி மதுரைக் காஞ்சி (611-614) குறிப்பிடுகிறது.*

*2. சங்க காலத்தில் முடிசூட்டும் விழா காணப்படுகிறது. சேர, சோழ, பாண்டியர் 'முடிகெழு மூவர்' என அழைக்கப்பட்டனர். வேந்தர்களுக்கு முடிசெய்தற்கெனத் தனிப்பொற்கொல்லர்கள் அமர்த்தப்பட்டமை பற்றிச் சிலம்பு குறிப்பிடுகிறது.*

*3. அரசன் பகைநாட்டின் மீது படையெடுக்கும் முன் தனது குடையையும் வாளையும் நல்ல நாளில் முன்கூட்டி அனுப்பி வைப்பது வழக்கம். இது விழாவாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழா குடைநாள்கோள், வாள்நாள்கோள் என அழைக்கப்பட்டது.*

*4. பகைவரை வென்ற அரசன் போர்க்களத்தில் வெற்றிவிழா கொண்டாடுதல் மரபாக இருந்தது.*

## *2. சமய விழாக்கள்*

***1. கார்த்திகை விழா:*** *கார்த்திகைத் திங்களில், நிலா கார்த்திகை விண்மீனைச் சேரும் நடுஇரவில் கார்த்திகை விழாக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தெருக்களில் வரிசையாக விளக்குகள் ஏற்றப்பட்டன. மாலைகள் தொங்கவிடப்பட்டன.*

***2. ஓணவிழா:*** *ஆவணித் திங்களில் திருமால் வழிபாட்டுடன் இணைந்து இவ்விழாக் கொண்டாடப்பட்டது. ஓணவிழா திருமாலின் பிறந்தநாள் விழாவாகக் கொண்டாடப்பட்டதை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.*

***3. காமன் விழா:*** *காமன் விழா எடுக்கப்படும் நாள் இலக்கியத்தில் குறிக்கப்படவில்லை. ஆனால் பங்குனி-சித்திரையில் நடைபெறும் இந்திர விழாவிற்கு முன்னர் இவ்விழா நடைபெற்றதாகச் சிலம்பு குறிப்பிடுப்பிடுகிறது.*

***4. இந்திர விழா:*** *இந்திர விழாப் பற்றிச் சிலம்பும், மணிமேகலையும் விரிவாக எடுத்துரைக்கின்றன. இவ்விழா 28 நாட்கள் நடைபெற்றது. பங்குனித் திங்களில் தொடங்கி சித்திரைத் திங்கள்முதல் நாளில் முடிவுற்றது.*

***5. முந்நீர் விழா:*** *கடல் தெய்வமாகிய இந்திரனுக்கு எடுக்கப்பட்டும் விழாவின் ஒரு பகுதி இது. 'கடலாட்டுவிழா' எனவும் இது அழைக்கப்பெறும்.*

நிலந்தருதிருவிற்பாண்டியன் கடல் தெய்வத்திற்கு முந்நீர்விழா எடுத்த செய்தி புறநானூற்றில் குறிப்பிடப்படுகிறது.

**6. திருவாதிரை விழா:** மார்கழித் திங்களில் நடைபெறும் விழா இது. மகளிரால் மட்டும் கொண்டாடப்படும் விழாக்களுள் இதுவும் ஒன்று.

## 3. பொதுவிழாக்கள்:

**1. தைப்பொங்கல் விழா:** தைத்திங்கள் முதல் நாளில் இவ்விழாக் கொண்டாடப்பட்டது. நோன்பு இருந்தோர் இந்நாளில் நீராடி விருந்துண்பர் என நற்றிணை சுட்டுகிறது.

**2. புதுப்புனல் விழா:** ஆற்றில் வெள்ளப் பெருக்கு வரும்போது இவ்விழா நடைபெற்றது. இது'நீரணி விழா' எனவும் அழைக்கப்பட்டது. புதுப்புனல் விழாவில் பங்கு கொண்டோர், அவர்தம் செயல்பாடுகள், விழாக் கொண்டாடப்பட்ட முறை, விழா ஆரவாரம் ஆகியன பற்றிப் பரிபாடலின் வையைப் பாடல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.

## பொழுதுபோக்குகள்

சங்ககாலப் பொழுதுபோக்குகளை அவற்றில் பங்கேற்றவர்களது தன்மையின் அடிப்படையில் நான்கு வகைப்படுத்தலாம்.

1. ஆடவரின் பொழுதுபோக்குகள்
2. மகளிரின் பொழுதுபோக்குகள்
3. குழந்தைகளின் பொழுதுபோக்குகள்
4. பொதுப் பொழுதுப்போக்குகள்

## ஆடவரின் பொழுதுபோக்குகள்

கொல்லேறு தழுவுதல், மற்போர் புரிதல், நீரில் மூழ்கி மண் எடுத்து விளையாடுதல் ஆகியன ஆடவரின் பொழுதுபோக்குகள், போர்க்கு முன்னும், பின்னும் குரவைக் கூத்து ஆடி மகிழ்வது. விழாக்காலங்களில் போர்ப் பயிற்சி செய்து காட்டுவது ஆகியன விழாக்களின் பொழுதுபோக்குகள். பாசறையில் விறலியின் ஆடல் கண்டு களிப்பது, அரசவையில் பாணனின் பாடல் கேட்டுச் சுவைப்பது, துணங்கைக் கூத்தைத் தொடங்கி வைத்து ஆடுவது ஆகியன மன்னரின் பொழுதுபோக்குகள்.

## மகளிரின் பொழுதுபோக்குகள்

### பந்தாடுதல்

நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒருவகைப் பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய மகளிர் வழக்கமாக இருந்தது. மாடி வீடுகளில் மேல் மாடத்தில் பெண்கள் வரிப் பந்தாடியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

### கழங்காடுதல்

மகளிர் விளையாட்டுக்களில் கழங்கு என்பதும் ஒன்றாகும். திண்ணைகளில் பொன்னாலான கழங்கினை வைத்து விளையாடியதாகப் புறநானூறு கூறுகின்றது.

### ஊசலாடுதல்

மரத்தின் கிளையில் கயிற்றினை ஊசலாகக் கட்டி அதிலமர்ந்து ஆடி மகிழ்தல் பற்றிய குறிப்புக்கள் பலவுண்டு. அப்போது பாடும் பாடல் ஊசல் வரியாகும்.

## குழந்தைகளின் பொழுதுபோக்குகள்

வண்டல் அயர்தல், சிறுவீடுகட்டி விளையாடுதல், சிறுசோறு சமைத்தல், பாவைக்குப் பாலூட்டி விளையாடுதல் ஆகியன சிறுமியரின் பொழுதுபோக்குகள், சிறுதேர்களை உருட்டி விளையாடுதல் சிறுவரின் பொழுதுபோக்குகள். கிலுகிலுப்பை வைத்து ஆடல், அம்புலியை அழைத்து விளையாடல் ஆகியன சிறுவர், சிறுமியரின் பொழுது போக்குகள்

### முக்காற் சிறுதேர்

சிறுவர்கள் மூன்று கால்கள் உடைய சிறுதேரையுருட்டி விளையாடுவது பற்றிப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன.

### கிலிகிலியாடல்

சிறுவர்கள் கிலுகிலுப்பை என்னும் விளையாட்டுக் கருவியினால் ஒலியெழுப்பி விளையாடுதலை இன்றும் காணலாம். சங்க நாளிலும் இம்மரபு இருந்தது என்று சிறுபாணாற்றுப்படை வழியாக அறிகின்றோம். உமணர்களோடு சென்ற குழந்தைகளைப் போன்ற மந்தி முத்துக்களைக் கிளிஞ்சல்களில் இட்டுக் குழந்தைகளோடு கிலிகிலியாடும் வளமார்ந்த நாடு பாண்டிய நாடு என்கிறது இந்நூல்.

## பொதுப்பொழுதுபோக்குகள்

ஊர்ப்பொது அம்பலங்களில் வட்டு ஆடுவது, மற்போர் கண்டுகளிப்பது, யானைப்போர் போன்ற விலங்குப் போர்களைக் கண்டு களிப்பது, பாணர்களின் பாடல்கள் கேட்பது, விறலியரின் ஆடல் காண்பது, நாடகங்களைக் கண்டு சுவைப்பது, நிலவுக் காலங்களிலும் விழாக் காலங்களிலும் ஆற்று மணலில் அமர்ந்து

மகிழ்வது, வெள்ளப் பெருக்கின்போது புதுப்புனல் ஆடுவது, கள்ளுண்டு மகிழ்வது ஆகியன பொதுப்பொழுதுபோக்குகள்.

### 9. சங்ககாலப் போர்முறை

சங்ககாலப் போர்முறைகளை அறியத் தொல்காப்பியப் புறத்திணையில் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் பெரிதும் துணைநிற்கின்றன. அக இலக்கியங்களில் உவமையாக வரும் வரலாற்றுச் செய்திகளிலும் இப்போர்முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் சுட்டும் போர் வகைகள் நான்கு:

1. வெட்சிப்போர்
2. வஞ்சிப்போர்
3. உழிஞைப்போர்
4. தும்பைப்போர்

இந்நால்வகைப் போர்களும் முறையே ஆநிரை, நாடு, மதில், களம் ஆகிய நான்கு பொருள்களின் அடிப்படையில் நடைபெற்றன. சங்க இலக்கியங்களும் புறப்பொருள் வெண்பாமாலையும் செயல் அடிப்படையில் இப்போர்களை வகைப்படுத்துகின்றன. இந்நூல்களின் கருத்துப்படி ஆநிரை கவர்தல் - வெட்சி, மீட்டல் - கரந்தை, நாட்டின் மீது படையெடுத்தல் - வஞ்சி, எதிர்த்தல் - காஞ்சி, மதிலை வளைத்தல் - உழிஞை, மதிலைக் காத்தல் -நொச்சி, களத்தில் போரிடுதல் - தும்பை, வெல்லுதல் - வாகை.

### போர் உத்திகள்

#### பகைவரைப் பணிய வைக்கக் கையாளப்பட்ட உத்தி

பகைவரைப் பணிய வைக்கவும், அஞ்சச் செய்யவும் பல போர் உத்திகள் கையாளப்பட்டன. பகைவர்நாடு கொள்ளையிடப்பட்டது. பகைப்புலங்கள் எரியூட்டப்பட்டன. நாற்படை கொண்டு பகை நாடுகளின் வளங்களும் நீர்வளங்களும் அழிக்கப்பட்டன. பகை நாட்டைத் தீயிட்டும் கொள்ளையிட்டும் அழிப்பது வஞ்சி, கொற்றவள்ளை ஆகிய துறைகளின் இலக்கணமாகக் குறிக்கப்படுகின்றன. இவை பகைவரைப் பணியவைக்கக் கையாளப்பட்ட உத்திகள்.

#### பகைவரை அச்சுறுத்தக் கையாளப்பட்ட உத்தி

பொதுப் பகைவனாகி நின்ற அரசனைப் பல அரசர்கள் இணைந்து நின்று தாக்கினர். இது துணைப்படை கோடல் எனப்பட்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை ஏழு வேந்தர்கள் இணைந்து நின்று

போரிட்டமை பற்றியும், கரிகாலனைப் பதின்மூன்று அரசர்கள் இணைந்து நின்று போரிட்டமை பற்றியும் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

### பகைவரை வெளிக்கொணர கையாளப்பட்ட உத்தி

முற்றுகையிட்ட அரசர்கள் மதிலில் அடைந்து கிடக்கும் மன்னனின் காவல் மரங்களை வெட்டி அவனது மான உணர்வைத் தூண்டினர். இது கடிமரம் தடிதல் எனப்பட்டது.

### நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளக் கையாளப்பட்ட உத்தி

பொருள் தந்து பேரரசர்களை நட்பாக்கிக் கொள்ளுதல், பகை நாட்டை அழித்து நிற்கும் மன்னர் முன்னர் அதன் அண்டை நாட்டார் பணிந்து திறை தருதல் ஆகியன குறுநில மன்னர்கள் செய்த தற்காப்பு நடவடிக்கைகளாக விளங்கின. இது போரைத் தவிர்த்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளக் கையாப்பட்ட உத்தி.

### போர் அறங்கள்

மண்ணாசையும் போர்வெறியும் கொண்டு படையெடுக்கும் அரசர்கள் போர்க் கொடுமைகளில் ஈடுபட்டனர் எனின், மானமும் வீரமும் கொண்டு போரிட்ட அரசர்கள் போர் அறங்களைக் கட்டிக் காத்தனர் எனலாம். படையெடுக்கும் முன் பறை அறைந்து தன் படையெடுப்பைப் பகைவர்க்குத் தெரிவித்தல் மரபாக இருந்தது.

அஞ்சிப் புறமுதுகுகிட்டு ஓடுவோரைத் தாக்காமை, கையில் உள்ள படைக்கலன்களைப் கீழே போட்டு நின்று சரண் அடைந்தவர்களைக் காத்து நிற்றல் போர் அறங்களாகும்.

**“ஆவும்ஆன் இயல் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர்ப்பெறாஅ தீரும்**
**எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்”** (புறம்:9)

என அறிவித்தல் சங்க காலத்தில் காணப்பட்ட உயர்ந்த போர் அறங்களாகும்.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. பழங்கால மகளிர் நிலை குறித்து விவரி
2. பண்டைத் தமிழரின் தொழில்கள் யாவை?
3. சங்கத்தமிழரின் சமயம் பற்றி விளக்குக.
4. பழந்தமிழரின் உணவு முறை பற்றிக் கூறுக.
5. பண்டைத்தமிழரின் விழாக்கள் பற்றி விவரிக்க.
6. பழந்தமிழர்தம் பொழுதுபோக்குகளை விவரி
7. பழந்தமிழர் கையாண்ட போர் உத்திகள் குறித்து எழுது.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. பண்டைத் தமிழ்மகளிர்தம் வாழ்வியல் நிலை குறித்து கட்டுரை வரைக.
2. பழந்தமிழரின் வழிபாட்டு நிலையை விவரிக்க
3. பழந்தமிழரின் விழாக்களும் பொழுதுபோக்குகளும் குறித்து விவரித்து எழுதுக.
4. பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

# பாடம் 9

# களப்பிரர்கள்

தமிழகத்தை ஆட்சிசெய்த களப்பிரர்களின் காலத்தை ‘இருண்ட காலம்’ எனலாம். அதாவது சங்ககாலம் முடிவுற்றபின் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை தமிழகத்தைப் பலர் ஆட்சி செய்திருக்கின்றனர். ஆனால் இதற்கு எந்தச் சான்றுகளும் இல்லை. ஆனால் அக்காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு களப்பிரர்கள் தமிழகத்திற்குள் புகுந்து ஆட்சிக் கட்டிலிலிருந்த தமிழ் மன்னர்களைக் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றி கொண்டதாகத் தெரிகிறது. ஆனால் இவர்கள் படையெடுத்த காலம், தோற்கடிக்கப்பட்ட தமிழ் மன்னர்கள், கைப்பற்றிய இடங்கள், இவர்கள் தமிழகத்திற்குள் வரக் காரணமாக இருந்த வரலாற்றுச் சூழல் ஆகியன பற்றி முழுமையாக தெரிந்துகொள்ள ஆதாரங்கள் இல்லை. அதனாலேயே களப்பிரர்கள் ஆண்ட இக்காலம் ‘இருண்டகாலம்’ எனப்படுகிறது.

களப்பிரர்களைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் குறிப்புகள், காசுக்குடிச் செப்பேடுகள், கொற்றமங்கலச் செப்பேடுகள், தளவாய்ச் செப்பேடுகள் ஆகிய செப்பேடுகளில் காணப்படுகின்றன. திருப்புகழூர்க் கல்வெட்டுக்கள், காஞ்சிவைகுந்தப்பெருமாள் கோவில் கல்வெட்டுகள் ஆகிய கல்வெட்டுகளிலும் களப்பிரர்கள் பேசப்படுகின்றனர். குறிப்பாகத் தமிழ் இலக்கியங்களான தமிழ் நாவலர் சரிதை, யாப்பருங்கலம், பெரியபுராணம் ஆகியவை களப்பிரர் ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. காசுக்குடி செப்பேடுகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு, களப்பிரர்களைத் தோற்கடித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. வேள்விக்குடிச் செப்பேடுகளும் தளவாய்புரம் செப்பேடுகளும் பாண்டியன் கடுங்கோன் களப்பிரர்களைத் தோற்கடித்ததைக் குறிப்பிடுகின்றது. எனவே சங்ககாலத்திற்குப் பின் தமிழகத்தில் ஏற்பட்ட களப்பிரர்களின் ஆதிக்கம் கி.பி. 1-ம் நூற்றாண்டு வரை நீடித்திருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

**களப்பிரர்கள் யார்**

களப்பிரர்கள் யார், அவர்களின் பூர்விகம் எது என்ற கேள்விக்கு வரலாற்று அறிஞர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

தமிழகத்தின் வடபகுதியில் வாழ்ந்த முத்தரையர்கள் தலைவனுக்குக் கள்வர், கள்வன் என்ற பட்டப்பெயர் ஒன்று உண்டு எனவும், தமிழில் களவர் எனப்பட்டதே

வடமொழியில் களப்பிரர் ஆயிற்று என்று கோபிநாத்ராவ் குறிப்பிடுகின்றார். இதனால் முத்தரையன் இனமே களப்பிரன் இனம் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் டாக்டர் ராஜமாணிக்கனார் களப்பிரர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இவர்கள் தமிழகத்தின் வடக்கில் காளத்திமலையில் வாழ்ந்த கணவர் என்ற இனமே என்ற இனமே களப்பரர் இனம் என்கிறார். கணவர் என்ற இனப்பெயரே கன்னடத்தில் ‘களபரு’ எனவும் வடமொழியில் ‘களப்ரா’ எனவும், தமிழில் களப்பிரர் எனவும் மாறியது என்பது அவரது கணிப்பு. மைசூர் மாநிலத்தில் உள்ள போளுர்க் கல்வெட்டில் களபோரா என்ற இனம் குறிக்கப்பட்டுள்ளதை இக்கருத்தை உறுதி செய்கிறது.

கேரள களப்பிரர்களே ‘களப்பிரர்கள்’ என்று சிலரும், மதுரையைச் சிறிது காலம் ஆண்ட கன்னடரே களப்பிரர்கள் என்று சிலரும் கூறுகின்றனர். சங்க இலக்கியங்களில் வேங்கடமலை பகுதியில் புல்லி என்ற கள்வர் இனத்தின் தலைவன் ஆட்சி செய்து வந்ததாகக் குறிப்பிடுகிறது. களப்பிரர்கள் தமிழகம் புகுந்து முதலில் தொண்டை மண்டலத்திலும், பின் சோழ பாண்டிய மண்டலங்களிலும் இருந்த நிலையான அரசுகளைக் கவிழ்த்துவிட்டு, நாடு முழுவதும் கலவரமான சூழ்நிலையையும், தமிழக வரலாற்றில் ஒரு இருண்ட காலத்தையும் ஏற்படுத்தினர் எனலாம்.

சோழ நாட்டை ஆட்சி செய்து வந்த அச்சுத விக்கிராந்தன் என்பவன் கற்ப குலத்தைச் சேர்ந்தவன் ஆவான். இவன் புத்தசமயத்தைப் பின்பற்றுபவன். கூற்றுவன் என்ற வேறொரு களப்பர மன்னன் தொண்டை நாட்டில் களந்தை என்னுமிடத்தில் ஆட்சி செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவனே பெரியபுராணத்தில் வருகின்ற கூற்றுவநாயனார் என்றும் சிலர் கூறி வருகின்றனர்.

சமணக் கொள்கைகளைப் பரப்புவதற்காக வச்சரநந்தி என்பவர் மதுரையில் கி.பி. 470ல் திராவிட சங்கம் ஒன்றை நிறுவினார். சீவகசிந்தாமணி, குண்டலகேசி, நீலகேசி, யசோதர காவியம் போன்ற இலக்கியங்கள் இச்சங்கத்தின் தொண்டினாலும், முயற்சியாலும் வெளியான காவியங்கள் எனலாம்.

களப்பிரர்கள் தொடக்கத்தில் பௌத்தராகவும் பின்னர் சமணராகவும் இருந்திருக்கின்றார்கள். பாலபிராகிருதம் ஆகிய மொழிகளை ஆதரித்தார்கள். களப்பிரர்கள் காலத்தில் பௌத்தம், சமணம், வைதிகம், சைவம், பிரவாதம், ஆசிவகம், சிகண்டம், சாங்கியம், பௌதீகம், சைசேடிகம் என்ற பல சமயங்கள் இருந்ததாகத் தெரிகிறது. பௌத்தமும், சமணமும் மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு,

மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நல்ல வளர்ச்சியைப் பெற்றிருந்தன. பௌத்தசமயத் துறவிகளும், சமணமுனிவர்களும் பிற உயிர்களைக் கொல்லாமை, மாமிசம் உண்ணாமை, பொய்கூறாமை உயர்வு, தாழ்வு இல்லாமல் ஒற்றுமையுடன் வாழ்தல் போன்ற உயர்ந்த கொள்கைகளை மக்களுக்கு உணர்த்தி இருக்கின்றார்கள்.

**களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகத்தில் ஏற்பட்ட தாக்கம்**

களப்பிரர்களின் ஆட்சிக் காலத்தில் பிராகிருத மொழியும், பாலிமொழியும் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தன. தமிழ்மொழி சற்று செல்வாக்குக் குறைந்தாகவே இருந்தது. செல்வாக்கு குறைந்திருந்தாலும் பௌத்த துறவிகளும், சமண முனிவர்களும் தம் சமயவளர்ச்சி போன்று தமிழ்மொழியையும் போற்றி வளர்த்தனர். ஆனால் களப்பிரர்கள் காலத்திலும் அதற்குப் பிறகும் தமிழகம் சமயப் பூசல்களில் ஈடுபட்டு பார்ப்பனர்களின் பக்தியை மேற்கொண்டு வாழ்க்கையை நரகமாக்கும் அளவிற்கு மாற்றம் ஏற்பட்டது.

பார்ப்பனிய மதமும், களப்பிரர்களின் தவறான போக்கும் தமிழ் அரசுகளை வீழ்த்தியது மட்டுமில்லாது தமிழ் நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் பாதாளத்தில் தள்ளியது.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. களப்பிரர்கள் யார்?

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. களப்பிரர்கள் குறித்து கட்டுரை வரைக

# பாடம் 10

# பல்லவர்கள்

அகத்தியம், தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் பல்லவர் என்கின்ற சொல்லே இடம் பெறவில்லை. பல்லவரைப் பற்றிய குறிப்பு ஏதும் சங்க இலக்கியத்தில் இல்லை என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும். சங்ககாலத்துக்குப் பின்னர் தோன்றிய தமிழ்இலக்கியங்களில் பல்லவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. இதைத்தவிர சமஸ்கிருத இலக்கியங்கள் சிலவற்றில் பல்லவரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பல்லவ வரலாற்றை நமக்குத் தெரியப்படுத்தும் சில இலக்கியங்கள் பின்வருமாறு:

### 1. லோக விபாசம்

'லோக விபாசம்' என்னும் நூல் சமஸ்கிருத நூலாகும். இந்நூல் கி.பி. 458ல் அதாவது பல்லவர் அரசர் சிம்மவர்மனின் 22வது ஆட்சியாண்டில் திருத்தி வெளியிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிம்மவர்மனின் 22-வது ஆட்சியாண்டில் கி.பி. 458-ம் ஆண்டு என்பது இந்த நூலின் மூலம் நமக்கு தெரியவருகிறது. ஆகவே சிம்மவர்மன் கி.பி. 436-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நம்மால் வரமுடிகிறது.

### 2. அவந்தி சுந்தரி கதை

இதுவும் ஒரு சமஸ்கிருதப் நூல். இந்நூலை 'பாரவி' என்ற சமஸ்கிருதப் புலவர் எழுதினார். இப்பாரவிதான் பல்லவ அரசர் சிம்மவிஷ்ணுவிடம் இருந்து பல பரிசுகள் பெற்றார். இந்தச் சிம்மவிஷ்ணுதான் முதலாம் மகேந்திரவர்மனின் தந்தை ஆவார்.

### 3. மத்த விலாச பிரகடனம்

இது ஒரு சமஸ்கிருத நாடகம் ஆகும். இதனைப் பல்லவ அரசர் முதலாம் மகேந்திரவர்மன் எழுதினார். இந்நூல் ஏழாம் நூற்றாண்டின் சமயநிலையைக் குறிப்பிடுகிறது. தென்னிந்தியாவில் புத்தமதம், சமணமதம், இந்துமதம் ஆகிய மதங்கள் எவ்வளவு செல்வாக்குடன் திகழ்ந்தன என்பது இதன் மூலம் தெரியவருகிறது.

## 4. தேவாரம்

### சம்பந்தர்

தேவாரப்பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் 7-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய சமயநிலையைக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக அக்காலக்கட்டத்தில் சைவர்களுக்கும், சமணர்களுக்கும் இடையே நடந்த சமயச் சண்டைகளைச் தேவாரப்பாடல்களில் சம்பந்தர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

### அப்பர்

இவர் இயற்றிய தேவாரப்பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவா முதலாம் மகேந்திரவர்மனின் சமகாலத்தவர் ஆவார். அப்பரின் தேவாரப்பாடல்களில் மகேந்திரவர்மன் பற்றிய குறிப்புகளும், தமிழகத்தில் சமணமதம் வீழ்ச்சி அடைந்தது பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

### சுந்தரர்

இவர் கி.பி. 8ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இரண்டாம் நரசிம்மவர்மனின் சமகாலத்தவர் ஆவார். சுந்தரரின் தேவாரப்பாடல்கள், பல்லவ அரசர்கள் குறுநில மன்னர்களிடம் இருந்து கப்பம் வசூலித்ததாகக் குறிப்பிடுகிறது. இவர் ஏழாம் திருமுறையைப் பாடினார்.

## 5. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

இந்நூல் வைணவ மதத்தைப் பற்றியதாகும். இந்நூலை ஆழ்வார்கள் பாடியுள்ளனர். திருமங்கை ஆழ்வார் பல்லவ அரசர் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தார். இவர் தனது பாடல்களில் பல்லவர்களுக்கும், சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்த போர்களைக் குறிப்பிடுகிறார். இவர் கி.பி. 8-ம் நூற்றாண்டில் வாழ்ந்தார்.

## 6. நந்திக்கலம்பகம்

இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது மூன்றாம் நந்திவர்மனின் போர் செயல்களையும் பல்லவப் பேரரசின் பெருமைகளையும் நமக்குத் தெரிவிக்கின்றது. இந்நூல் நந்திவர்மனின் பட்டப்பெயர்களான பல்லவர்கோன், மல்லைவேந்தன், காவிரி வளநாடன் போன்ற பெயர்களைத் தெரிவிக்கின்றது.

## 7. பாரத வெண்பா

'பாரத வெண்பா' என்ற இந்நூலின் சில பகுதிகள் மட்டுமே கிடைக்கிறது. மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவ அரசன் பகைவர்களைத் 'தெள்ளாறு' என்ற இடத்தில் தோற்கடித்தார் என்ற செய்தியைப் பாரதவெண்பா தெரிவிக்கிறது.

## 8. பெரியபுராணம்

இந்நூல் கி.பி. 12-ம் நூற்றாண்டில் சேக்கிழார் என்பவரால் எழுதப்பட்டது. இந்நூல் 63-நாயன்மார்களின் வாழ்க்கையைக் கூறுகிறது.

அப்பர் என்ற நாயனார் முதலாம் மகேந்திரன் காலத்தில் வாழ்ந்தார். இவர் சமண மதத்தில் இருந்த பொழுது அப்பருக்குப் பல இன்னல்களை விளைவித்தார். ஆனால் சிவன் அருளாலே அப்பர் இச்சோதனைகளில் எல்லாம் தப்பித்தார். இதை அறிந்த முதலாம் மகேந்திரன் சிவபெருமானின் அருளை அறிந்துகொண்டு சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினார்.

சிறுத்தொண்டநாயனார் முதலாம் மகேந்திரவர்மனின் மகனாகிய முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கிய நாட்டின்மீது படையெடுத்து அவர்களின் தலைநகரமாகிய வாதாபியைத் தாக்கினார். இத்தாக்குதலுக்குப் பரஞ்சோதி என்ற படைத்தலைவரின் தலைமையின் கீழ் பல்லவப்படை அனுப்பப்பட்டது. இந்தப் பரஞ்சோதி பின்னர் சிவனடியாராக மாறினார். இவர் தனது பெயரையும் சிறுத்தொண்டர் என மாற்றிக் கொண்டார். முதலாம் நரசிம்மவர்மன் காலத்தைச் சார்ந்த சிறுத்தொண்டரின் வரலாறு (பரஞ்சோதியின் வரலாறு) பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டு உள்ளது.

சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூரில் பூசலார் நாயனார் என்ற சிவன் அடியார் சிவபெருமானுக்குத் தன் மனதில் ஒருகோயில் கட்டியச் சிறப்பினையும் ராஜசிம்ம பல்லவனின் வரலாற்றையும் பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

யுவாங் சுவாங் என்கின்ற சீனப்பயணி முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் பல்லவ நாட்டுக்கு வந்தார். இவரது பயணக்குறிப்பு, காஞ்சிபுரத்தின் அமைப்பையும் பல்லவ நாட்டிலிருந்த சாதி, மதங்கள் பற்றிய பல செய்திகளையும் நமக்குத் தருகிறது.

## கல்வெட்டுகளும் -செப்பேடுகளும்

ஏறக்குறைய 50 பல்லவர் காலக் கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகள் பிராகிருதமொழி, சமஸ்கிருத மொழி, தமிழ் மொழி என மூன்று மொழிகளில் காணப்படுகின்றன. விழுப்புரத்திற்கு அருகில் உள்ள மண்டகப்பட்டு

என்ற இடத்தில் அமைந்து இருக்கும் குகைக்கோயிலில் முதலாம் மகேந்திரன், கல்வெட்டுக்கள் காணப்படுகிறது.

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள குடுமியான்மலையில் முதலாம் மகேந்திரனின் மற்றொரு கல்வெட்டு காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டு "நமச்சிவாய" என்ற சொல்லோடு ஆரம்பமாகிறது. இக்கல்வெட்டு தமிழ் இசையில் உள்ள பற்பல ராகங்களைக் குறிப்பிடுகிறது.

திருக்கழுக்குன்றத்தில் முதலாம் நரசிம்மவர்மனின் கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டு முதலாம் நரசிம்மனுக்கு வாதாபிக் கொண்டான் என்ற பட்டப்பெயர் இருந்ததைக் குறிப்பிடுகின்றது. திருச்சியில் உள்ள வயலூரில் ராஜசிம்மனின் கல்வெட்டு ஒன்று கற்றூணின் மீது காணப்படுகிறது. இக்கல்வெட்டு பல்லவ அரசர்களின் பட்டியலைத் தருகிறது. திருத்தணியில் பல்லவ அரசர் "அபராஜிதன்" வெளியிட்ட கல்வெட்டு காணப்படுகிறது.

## செப்பேடுகள்

பல்லவ வரலாற்றை எழுதச் செப்பேடுகளும் பயன்படுகின்றன. அவற்றில் சில வருமாறு:

### 1. கூரம் செப்பேடுகள்

இதை முதலாம் "பரமேஸ்வரவர்மன்" வெளியிட்டார். இவை பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்த போர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

### 2. காசுக்குடிச் செப்பேடுகள்

இதை இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்டார். சிம்மவிஷ்ணு என்பவர் சிங்கம்போலத் திகழ்ந்தார் என்றும், களப்பிரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் போன்றவர்களை தோற்கடித்தார் என்றும் இச்செப்பேடுகள் கூறுகின்றன.

### 3. வேலூர்பாளையம் செப்பேடு

இந்தச் செப்பேடுகளை மூன்றாம் நந்திவர்மன் வெளியிட்டார். இச்செப்பேட்டில் மூன்றாம் நந்திவர்மனின் முன்னோர்களைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம். சிம்மவிஷ்ணு என்ற பல்லவ அரசர் காவிரி பாயும் வளமான பகுதியைச் சோழர்களிடம் இருந்து கைப்பற்றினார் எனச் செப்பேடுகள் கூறுகின்றன.

## நினைவுச்சின்னங்கள்

பல்லவ அரசர்கள் ஏற்படுத்திய நினைவுச் சின்னங்கள் மண்டகப்பட்டு, மகாபலிபுரம், பல்லாவரம், திருச்சி, காஞ்சிபுரம், பனைமலை ஆகிய இடங்களில்

காணப்படுகின்றன. இந்த நினைவுச் சின்னங்கள் பல்லவர்காலச் சமுதாயநிலை அறிந்து கொள்ள உதவுகின்றன.

## பல்லவர்களின் தோற்றம்

### மணிபல்லவத்தீவு

'மணிமேகலை' என்ற தமிழ்க்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 'ராஜநாயகம்' என்ற இலங்கை வரலாற்று ஆசிரியர் பல்லவர்களை இலங்கைக்கு அருகில் உள்ள மணிபல்லவதீவைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

### பாரசீகம்

பல்லவர்கள் பாரசீகத்தைச் சார்ந்தவர்கள் என்று பேராசிரியர் வேங்கய்யா கூறுகின்றார். பல்லவர்கள் பாரசீகத்தில் இருந்து வட இந்தியாவிற்கு வந்து குடியேற முயற்சி செய்தனர். அந்த முயற்சி தோல்வி அடைந்தது. ஆகவேதான் அவர்கள் அங்கிருந்து வெளியேறி தென்னிந்தியாவிற்கு வந்து காஞ்சிப்புரப் பகுதியில் குடியேறினர்.

இந்தப் பல்லவர்கள் பாரசீகத்தில் இருந்த 'பார்தியர்' என்ற பழங்குடியினர்கள் ஆவர். பார்த்தியன் என்ற பாரசீக வார்த்தை சமஸ்கிருதத்தில் பஹலவன் என்று ஆயிற்று. பஹலவன் என்ற சமஸ்கிருத வார்த்தை தமிழில் பல்லவர் என்று ஆயிற்று.

ஆனால் வேங்கடசுப்பையா பல்லவர்கள் பாரசீகத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்கு வேறு ஒரு ஆதாரத்தை நமக்குத் தருகிறார். வேங்கடசுப்பையர் காஞ்சிபுரம் வைகுந்தபெருமாள்கோயிலில் காணப்படும் சிற்பத்தைப் பார்த்தார். அந்தச் சிற்பத்தில் இரண்டாம் நந்திவர்மனின் தந்தையார் "ஹிரண்யவர்மன்" முடிசூட்டும் விழா சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தில் ஹிரண்யவர்மன் சூட்டிக்கொண்டு இருக்கும் கீரிடம் யானையின் தலையை போன்ற வடிவத்தில் காட்சி அளிக்கிறது. யானையின் தலை போன்ற கீரிடங்களை அணிந்து கொள்பவர்கள் பாரசீகர்கள் ஆவர். ஆகவே வேங்கடசுப்பையர் பல்லவர்கள் பாரசீகத்தைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

### பல்லவர்கள் வடஇந்தியர்கள்

வடஇந்தியாவில் "வகாடகா" என்ற சிறிய அரசவம்சம் இருந்தது. இந்த வம்சம் குப்த வம்சத்தினரோடு திருமண உறவு வைத்துக் கொண்டது. இந்த வம்சத்தின் ஒரு கிளை தமிழ்நாட்டில் புகுந்து குடியேறியது. அந்தக் கிளை வம்சமே பின்னர் பல்லவர் வம்சம் என்று அழைக்கப்பட்டது. இக்கருத்தை பேராசிரியர் கே.பி. ஜெயஸ்வால்

நமக்குத் தருகிறார். இந்த அடிப்படையில் பார்த்தால் பல்லவர்கள் வடஇந்தியர்கள் என்று கருத இடமுண்டு.

### பல்லவர்கள் தமிழகத்து குறும்பர்கள்

தொண்டைமண்டலத்தில் வாழ்ந்த குறும்பர்களே பல்லவர்கள் என்ற கருத்தை அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் வரலாற்றுத்துறை பேராசிரியர் ஆர்.சத்தியநாதஜயர் குறிப்பிடுகிறார். குறும்பர்கள் என்பவர்கள் ஆடு. மாடு மேய்க்கின்ற இனத்தவர்கள் ஆவர்.

மகாபலிபுரத்தில் உள்ள ஒருமண்டபத்தில் ஒருசிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அச்சிற்பத்தில பால் கரக்கின்ற காட்சிச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் பல்லவர்கள் குறும்பர்கள் என்ற கருத்தை சத்தியநாதஜயர் கூறுகிறார்.

ஆனால் இக்கருத்து தவறு என பல வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அதற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:

1. பல்லவர்களும், குறும்பர்களும் ஒரே இனத்தவராக இருந்தால் பல்லவர்கள் தமிழ்மொழியில்தான் கல்வெட்டுகளும், செப்பேடுகளும், வெளியிட்டு இருப்பார்கள். பல்லவர்களோ, சமஸ்கிருதத்தில் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் செதுக்கினர்.

2. பல்லவர்கள் தங்களை “பரத்வாஜ்” கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று பெருமையாக சொல்லிக் கொள்கிறார்கள். குறும்பர்களுக்குக் கோத்திரமே கிடையாது.

3. பல்லவர்களுடைய நிர்வாகத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் அந்த நிர்வாகத்தில் மௌரியர்களின் சாயல்தான் தெரிகிறது. பல்லவர்கள் தமிழர்களாக இருந்திருந்தால் அவர்களின் நிர்வாகத்தில் சங்ககாலத் தமிழரின் நிர்வாக சாயல் இருந்திருக்கும்.

### பல்லவர்கள் ஆந்திரபிரதேசத்தைச் சார்ந்தவர்கள்

ஆந்திரப்பிரதேசத்தில் சாதவாகனவம்சம் ஆட்சி செய்தது. இந்தச் சாதவாகன வம்சத்துக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாகப் பல்லவர்கள் இருந்து ஆந்திராவின் சிலபகுதிகளை ஆண்டு வந்தனர். சாதவாகன வம்சம் பின்னர் வீழ்ச்சி அடைந்தது. ஆகவேதான் பல்லவர்கள் ஆந்திரபிரதேசத்தைவிட்டு வெளியேறி தமிழகத்துக்கு வந்து காஞ்சிபுரம் பகுதியில் ஓர் பேரரசை நிறுவினர். தமிழ்நாட்டு மக்களோடு கலக்க வேண்டும் என்று கருதிய பல்லவர்கள் பண்டைய தமிழ்நாட்டு சேர, சோழ, பாண்டிய அரசர்களைப் போலத் தங்களுக்கென்று ஒரு கொடி மற்றும் ஒரு மாலையும் வைத்துக்கொண்டனர்.

அவர்களது கொடியில் நந்தி பொறிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அணிந்த மாலை தொண்டைக் கொடி மாலையாகும். தளவானூர் குகைக்கோயில் கல்வெட்டு முதலாம் மகேந்திரவர்மன் தொண்டைமாலை அணிந்து இருந்ததாகக் குறிப்பிடுகிறது. பல்லவர்கள் ஆந்திரபிரதேசத்தை சார்ந்தவர்கள் என்ற கருத்தை கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சி. மீனாட்சி, ஆர். கோபாலன், டி. வி. மகாலிங்கம் ஆகியோர் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

## முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 610-630)

முதலாம் மகேந்திரவர்மன் சிம்மவிஷ்ணுவின் மகனும் வாரிசும் ஆவார். இவனுக்கு மகேந்திரவர்மன், மகேந்திரபேத்ரையன் எனப் பல பட்டப்பெயர்கள் இருந்தன. அவற்றில் சில பின்வருமாறு.

### 1. சத்ரு மல்லன்

சத்ரு என்றால் எதிரி. மல்லன் என்றால் வெற்றி பெறுபவர். ஆகவே ‘சத்ரு மல்லன்’ என்றால் எதிரிகளை வெல்பவன் என்பது பொருளாகும்.

### 2. நரேந்திரன்

நரன் என்றால் மனிதன். இந்திரன் என்றால் அரசன். நரேந்திரன் என்கின்ற பட்டப்பெயர் ‘மனித வர்க்கத்தின் தலைவன்’ என்று பொருள்படும்.

### 3. கலகப்பிரியன்

நாட்டில் கலகம் ஏற்படும்போது அதைத் தனது திறமையினால் மகேந்திரவர்மன் அடக்கினார். ஆகவே அவருக்குக் ‘கலகப்பிரியன்’ என்ற பெயர் ஏற்பட்டது. நல்ல குணம் உடையவராக இருந்ததால் ‘குணபரன்’ என்று அழைக்கப்பட்டார். ஆண்களின் உத்தமராகத் திகழ்ந்ததால் அவருக்கு ‘புருசோத்தமன்’ என்ற பெயர் ஏற்பட்டது. சத்தியத்தைப் பின்பற்றி சாந்தனாக வாழ்ந்ததால் அவருக்குச் ‘சத்தியசாந்தன்’ என்ற பெயர் ஏற்பட்டது. கோயில்களை எல்லோரும் மரம், செங்கல், உலோகம் என்ற பொருள்களால் கட்டப்பட்டிருந்த காலத்தில் மலையைக் குடைந்து கோயில் அமைக்கும் புதியமுறையை மகேந்திரவர்மன் அறிமுகப்படுத்தினார். அதனால் ‘விசித்திரசித்தன்’ என்ற பெயர் ஏற்பட்டது. சித்திரத்தை நன்கு ஆழமாகப் பயின்று அதை ஆதரித்ததாலும் ‘சித்திரகாரபுலி’ என்ற பெயர் ஏற்பட்டது. ‘மத்தவிலாசப் பிரகடனம்’ என்ற சமஸ்கிருத நாடகத்தை எழுதியதனால் இவர் ‘மத்தவிலாசன்’ என்று அழைக்கப்பட்டார்.

மகேந்திரவர்மன் காலத்தில் மேலைச் சாளுக்கிய அரசராக இருந்தவர் இரண்டாம் புலிகேசி. இவர் தான் வெளியிட்ட அய்கோலி கல்வெட்டில், மகேந்திரவர்மனைக் காஞ்சிபுரத்தில் தோற்கடித்ததாகக் குறிப்பிடுகிறார்.

இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்ட காசுக்குடிச் செப்பேகளும், இந்தப் பல்லவ சாளுக்கிய போரைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இச்செப்பேட்டில் மகேந்திரவர்மன் சாளுக்கியர்களைக் காஞ்சிபுரத்திற்குத் தெற்கு பத்து மைல் தொலைவில் உள்ள 'புள்ளலூர்' என்ற இடத்தில் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது.

**சமயக்கொள்கை**

முதலாம் மகேந்திரவர்மன் பிறப்பாலேயே சமண மதத்தைச் சார்ந்தவர். இவரை அப்பர் சைவசமயத்திற்குக் மாற்றினார். இக்காலக்கட்டத்தில் முதலாம் மகேந்திரவர்மன் சமணத்தில் இருந்தபோது, சைவ மதத்திற்கு மாறிய அப்பர் மீது கோபம் கொண்டு அவருக்குப் பல இன்னல்களை விழைவித்தார்.

இந்த இன்னல்களை எல்லாம் அப்பர் சிவனின் அருளினாலே பொறுத்துக் கொண்டார். அப்பரின் உயிரைச் சிவபெருமான் காத்தார். இதை அறிந்த மகேந்திரவர்மன் சிவபெருமானின் சக்தியையும் அவர் பக்தர் மீது கொண்டிருக்கும் அன்பையும் உணர்ந்து கொண்டார். ஆகவே கி.பி. 610-ம் ஆண்டு சமணத்தில் இருந்து சைவத்திற்கு மாறினார். மகேந்திரன் சைவ மதத்திற்கு மாறிய நிகழ்ச்சி தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

இது நாள் வரை தமிழ்நாட்டில் கோயில்களைச் செங்கற்களினாலும், மரத்தினாலும், கட்டிக் கொண்டு இருந்தனர். இந்த முறையை மாற்றி மலையைக் குடைந்து கோயில் அமைக்கும் புதிய பாதையை முதலாம் மகேந்திரவர்மன் அறிமுகப்படுத்தினான். இப்படி அமைக்கப்பட்ட கோயில்கள் குடைவரைக்கோயில்கள் என்று பெயர்பெற்றது. இந்தக் கோயில்களில் சிவபெருமானுக்கும் விஷ்ணுவுக்கும் வழிபாடுகள் நடந்தன. மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக் கோயில்களில் முக்கியமானவை பின்வருமாறு.

**1. பல்லாவரம் குகைக்கோயில்**

இது சென்னைக்கு அருகில் உள்ளது. இக்கோயில் ஓர் சிவன் கோயில் ஆகும். பல்லவபுரம் என்பது தான் காலப்போக்கில் மாறி பல்லாவரம் என்று ஆகிவிட்டது.

## 2. வல்லம் குகைக்கோயில்

இதுவும் ஒரு சிவன் கோயில் ஆகும். இக்கோயிலை 'வசந்தபிரியன்' என்ற கல்தட்சன் ஆக்கியதாகக் கல்வெட்டு கூறுகிறது.

## 3. சீயமங்கலம் குகைக்கோயில்

இதுவும் ஒரு சிவன் கோயில். 'சிம்மமங்களம்' என்ற பெயர்தான் மாறி தற்போது சீயமங்களம் என்று அழைக்கப்படுகிறது.

## 4. மண்டகப்பட்டு குகைக்கோயில்

இக்கோயில் விழுப்புரத்திற்கு அருகில் அமைந்துள்ளது. மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக் கோயில்களிலேயே இக்கோயில்தான் முதன் முதலில் அமைக்கப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

## 5. திருச்சி மலைக்கோட்டை குகைக்கோயில்

இதுவும் ஒரு சிவன்கோயில். இந்தக் கோயிலில் 'கங்காதரன்' சிற்பம் உள்ளது. இந்தச் சிற்பத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் மகாபலிபுரத்தில் உள்ள அர்ச்சுனன் தவம் சிற்பம் வடிக்கப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

## விஷ்ணுக்கோயில்

காஞ்சிபுரத்தில் இருந்து 6 மைல் தொலைவில் உள்ள ஊர் மாமண்டூர் ஆகும். இங்கு மகேந்திரவர்மன் விஷ்ணுவுக்காக ஒரு குடைவரைக் கோயிலை அமைத்தார். இந்தக் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் மகேந்திரன் பெற்றிருந்த எல்லாப் பட்டப்பெயர்களும் குறிப்பிடப்பட்டு இருப்பது சிறப்பாகும்.

வடஆற்காடு மாவட்டம் அரக்கோணத்திற்கு அருகில் மகேந்திரவாடி என்ற இடத்தில் மகேந்திரவர்மன் விஷ்ணுவுக்கு ஒரு குடைவரைக்கோயில் அமைத்தார். இக்கோயில் அவரது பெயராலேயே மகேந்திர 'விஷ்ணுகிரகம்' என அழைக்கப்பட்டது.

மகாபலிபுரத்தில் உள்ள அனைத்து ரதங்களும், குடைவரைக் கோயில்களும் நரசிம்மவர்மன் அமைத்தவை என்று பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். "ஹிராஸ்" என்ற பாதிரியார், மகாபலிபுரத்தில் உள்ள ஆதிவராகன் கோயில், தர்மராஜன் ரதம், கொடிக்கால் மண்டபம் ஆகிய மூன்றையும் முதலாம் மகேந்திரன் உருவாக்கியதாகக் குறிப்பிடுகிறார்.

## இசை வளர்ச்சி

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள குடுமியான் மலையில் இசை பற்றிய ஒரு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டை முதலாம் மகேந்திரவர்மன் வெளியிட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இக்கல்வெட்டின் கரகரபிரியா ராகம், கல்யாணி ராகம், சங்கராபரணா ராகம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இக்கல்வெட்டில் பரிவாதினி என்ற யாழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள ‘திருமயம்’ என்ற இடத்திலும், முதலாம் மகேந்திரவர்மன் வெளியிட்ட இசைக் கல்வெட்டு சற்று அழிந்த நிலையில் காணப்படுகிறது. இதிலும் தமிழ் இசைச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

## நாடக வளர்ச்சி

மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகடனம், பாகவத சூத்தியம் என்ற இரண்டு சமஸ்கிருத நகைச்சுவை நாடகங்களை எழுதினார். இவ்விரு நாடகங்களும் மகேந்திரன் காலத்து சமுதாயநிலையைப் படம்பிடித்துக்காட்டுகின்றன. மகேந்திரவர்மன் ஓவியத்தைப் பற்றி ‘தட்சணசித்திரம்’ என்ற நூலை எழுதினார்.

## ஓவியம்

சித்தன்னவாசலில் காணப்படும் தாமரைகுளம் ஓவியம் முதலாம் மகேந்திரன் காலத்தைக் சாரந்தது என்பது சில வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். இந்த ஓவியம் ஒரு குகையின் மேல் விதானத்தில் தீட்டப்பட்டுள்ளது.

இதே குகையில்தான் நடனம் ஆடும் மாந்தர்கள் ஓவியமும் காணப்படுகிறது.

மகேந்திரவர்மன் மாமண்டூரில் ஒரு குளத்தை வெட்டினார். அந்தக் குளம் அவரது பட்டப்பெயரால் ‘சித்திரமேக தடாகம்’ என்று அழைக்கப்பட்டது. மகேந்திரவர்மன் தனது பேரரசில் பல நகரங்களை ஏற்படுத்தினார். அந்த நகரங்கள் எல்லாம் மகேந்திரவாடி, மகேந்திரமங்களம் என்ற பெயர்களில் திகழ்ந்தன. இவரது அவையில்தான் புகழ்பெற்ற சமஸ்கிருத கவிஞர்களாகிய பாரவி, தண்டி போன்றோர் இடம் பெற்று இருந்தனர். முதலாம் மகேந்திரன் கி.பி. 630-ம் ஆண்டு இறந்தார். அவருக்கு பின் அவரது புதல்வர் முதலாம் நரசிம்மன் பல்லவ பேரரசு ஆனார்.

## முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.60- 668)

முதலாம் நரசிம்மவர்மனின் காலம் பல்லவர் வரலாற்றில் ஒரு பொற்காலம் ஆகும். இவரது காலத்தில் வரலாற்று சிறப்புமிக்க ஐந்து நிசழ்ச்சிகள் நிகழ்ந்தன.

1.வாதாபியை வெல்லுதல்

2.இலங்கை படையெடுப்பு

*3.யுவாங் சுவாங் வருகை*

*4.குகைக் கோயில்கள்*

*5.பல்லவர் -பாண்டியர் போர்*

## *1. வாதாபியை வெல்லுதல் (கி.பி. 642 -643)*

முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தொடங்கிய சாளுக்கியப்போர் முதலாம் நரசிம்மவர்மன் காலத்திலும் தொடர்ந்து நடந்தது. இந்தப் போரைப் பற்றி பல்லவர்களின் கூரம் செப்பேடு, உதயேந்திரச் செப்பேடு, வேலூர்பாளையச் செப்பேடு நமக்குப் பல செய்திகளைத் தருகின்றது.

### கூரம் செப்பேடுகள் தரும் செய்திகள்

'கிரண்யன்' என்ற அரக்கனை அழிப்பதற்கு விஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்தார். நரசிம்மன் கிரண்யவர்மனை கொன்றது போல பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிக்கேசி பரியாளம், மணிமங்களம், சூரமாரம் ஆகிய மூன்று இடங்களில் தோற்கடித்துக் கொன்றார். இந்தப் போரை ஒரு காலக்கட்டத்தில் தோற்றுப்போன இரண்டாம் புலிக்கேசியைப் பிடித்து அவருடைய முதுகின் மீதே தனது வெற்றியை எழுதிவிட்டார் முதலாம் நரசிம்மன்.

### உதயேந்திரம் செப்பேடுகள் தரும் செய்திகள்

அகத்தியர் என்ற முனிவர் 'வாதாபி' என்ற அரக்கனைக் கொன்றான். அதுபோல நரசிம்மவர்மன் தனது எதிரி இரண்டாம் புலிக்கேசியை பரியாளம், மணிமங்களம், சுரமாரம் ஆகிய இடங்களில் தோற்கடித்தான்.

### பல்லவ - சாளுக்கிய போர்

முதலாம் நரசிம்மன் பல்லவப்படையைப் பரஞ்சோதி என்பவர் தலைமையில் சாளுக்கிய நாட்டைத் தாக்க அனுப்பி வைத்தார். இந்தப் பரஞ்சோதிதான் பின்னர் சிவபக்தனாக மாறி சிறுத்தொண்டர் எனப் பெயர் பெற்று 63-நாயன்மார்களில் ஒருவராகப் புகழ் பெற்றார். சேக்கிழார் தான் எழுதிய பெரியபுராணத்தில் இப்போரைப்பற்றிக் குறிப்பிடுகின்றார்.

வெற்றிபெற்ற பல்லவத் தளபதி பரஞ்சோதி வாதாபியில் இருந்து ஒரு கணேசர் சிலையைக் கொண்டுவந்து தனது சொந்த ஊரான திருச்சன்காட்டன் குடியில் பிரதிஸ்டைச் செய்தார்.

வாதாபியை வெற்றிப்பெற்ற முதலாம் நரசிம்மவர்மனுக்கு 'வாதாபிக் கொண்டான்' என்ற பட்டப்பெயர் கிடைத்தது.

## 2.இலங்கை படையெடுப்பு (கி.பி. 631)

மானவர்மன் என்பவர் இலங்கை அரசராக இருந்தார். இவரை அரசியல் எதிரியாகிய அட்டதத்தன் நாட்டைவிட்டு விரட்டிவிட்டு இலங்கை அரசைக் கைப்பற்றிக் கொள்கிறார். ஆட்சியிழந்த மானவர்மன் முதலாம் நரசிம்மவர்மனிடம் தஞ்சம் புகுந்தார். முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கியர்களை எதிர்த்துப் போர் செய்துகொண்டு இருக்கும்போது இந்த மானவர்மன் பல்லவ நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டார். இது முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பெரிய உதவியாக இருந்தது. ஆகவேதான் மானவர்மனுக்கு இலங்கை அரசை மீட்டுக்கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். நரசிம்மவர்மன் தனது கப்பற்படையை இலங்கைக்கு இரண்டுமுறை அனுப்பி அட்டதத்தினைத் தோற்கடித்து அந்த ஆட்சியை மானவர்மனுக்கு மீட்டுக் கொடுத்தார். காசுக்குடி செப்பேடுகள் இந்த படையெடுப்பை இராமர், இராவணனை வெற்றி கொண்ட செய்தியோடு ஒப்பீடு செய்கிறது.

## 3. யுவாங்சுவாங் வருகை (கி.பி. 642)

யுவாங் சுவாங் என்ற சீனப்பயணி கி.பி.642ல் காஞ்சிபுரத்திற்கு விஜயம் செய்தார். அப்போது காஞ்சிபுரத்தின் பல்லவ அரசர் முதலாம் நரசிம்மவர்மன் ஆட்சி நடத்தி வந்தார். யுவாங்சுவாங் தனது பயணக்குறிப்பில் பல்லவ நாட்டைப் பற்றிப் பல கருத்துக்களை எழுதியுள்ளார். அவற்றில் முக்கியமான சில கருத்துகள் பின்வருமாறு:

- காஞ்சிபுரமும் அதைச் சுற்றி உள்ள பகுதியும் திராவிடம் என்ற பெயரில் திகழ்ந்தது.
- காஞ்சிபுரத்தில் ஏறக்குறைய 100 புத்த மடாலயங்கள் இருந்தன. அவற்றில் சுமார் 1000 புத்த துறவிகள் வாழ்ந்தனர்.
- மகாபலிபுரம் ஒரு பிரசித்தி பெற்ற துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்தது.
- பல்லவ நாட்டில் இருந்த நிலங்கள் வளமைமிக்கதாய்த் திகழ்ந்தன.
- அசோகர் எழுப்பிய புத்தமத போதனைகள் அடங்கிய தூண்கள் காஞ்சிபுரத்திலும், அதைச் சுற்றி உள்ள இடங்களிலும் அதிகமாகக் காணப்பட்டன.
- உலக புகழ் பெற்ற நாலந்தாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தர்மபாலன் என்பவரின் ஊர் காஞ்சிபுரம் ஆகும்.
- காஞ்சிபுரத்தில் ஏறக்குறைய 80 இந்துக் கோயில்கள் இருந்தன.

## குகைக்கோயில்கள்

முதலாம் நரசிம்மவர்மனின் பட்டப்பெயர்களில் ஒன்று மாமல்லன் என்பது ஆகும். ‘மாமல்லன்’ என்ற சொல்லிற்குச் சிறந்த வீரன் என்று பொருளாகும். முதலாம் நரசிம்மன் ஏற்படுத்திய நகரம் அவருடைய பட்டப்பெயராலே ‘மாமல்லபுரம்’ என

அழைக்கப்பட்டது. இப்பெயர்தான் காலப்போக்கில் மகாபலிபுரம் என்று மாறிவிட்டது. மகாபலிபுரத்தில் உள்ள கீழ்கண்ட மண்டபங்களும் ரதங்களும் முதலாம் நரசிம்மவர்மன் அமைத்தார்

- காளி மகிசாசூரனை வதம் செய்யும் சிற்பம் கொண்ட மகிசாசுர மண்டபம்.
- விஷ்ணு எடுத்த வராக அவதாரம் கொண்டு திகழும் வராக மண்டலம
- சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மூவரின் உருவங்கள் கொண்ட திருமூர்த்தி மண்டபம்.
- அர்ஜுன் ரதம்
- திரௌபதி ரதம்
- தர்மராஜ ரதம்
- பீமரதம்
- சகாதேவ ரதம்

இந்த ரதங்களெல்லாம் ஒரே கல்லில் செய்யப்பட்டவை. இவை கோயில்கள் கட்டுவதற்கும், தேர்கள் செய்வதற்கும் மாதிரியாக அமைக்கப்பட்டவை.

தர்மராஜ ரதத்தின் மேல்பகுதியில் முதலாம் நரசிம்மன் சிற்பம் காணப்படுகிறது.

**பாண்டிய-பல்லவ போர்**

சின்னமனூர் செப்பேடுகளில் மாறவர்மன் அரிகேசரி என்ற பாண்டிய மன்னன் முதலாம் நரசிம்மவர்மனைச் சங்கரமங்கை என்ற இடத்தில் தோற்கடித்தார் என்று கூறப்படுகிறது. முதலாம் நரசிம்மவர்மனுக்கு ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீமதி ஆகிய பட்டப்பெயர்கள் இருந்தன. இவர் கி.பி. 668ல் இறந்ததும் இவரது மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் ஆட்சிக்கு வந்தார்.

**ராஜசிம்மன் இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி 691 – 728)**

ராஜசிம்ம பல்லவன் தலைசிறந்த ஒரு அரசர் ஆவார். ராஜசிம்மன் என்பது இவரது பட்டப்பெயர். நரசிம்மவர்மன் என்பதே இவருடைய இயற்கைப் பெயர் ஆகும். எனவேதான் வரலாற்றில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்று குறிப்பிடுகின்றனர். இவர் காலத்தில் பல்லவ நாட்டில் அமைதி நிலவியது. வளமை இருந்தது. இவர் பல்லவ நாட்டை ஏறக்குறைய 40 ஆண்டு ஆட்சி செய்தார். இவரது கல்வெட்டுக்கள் மிக அதிக எண்ணிக்கையில் நமக்குக் கிடைக்கின்றன.

**ராஜசிம்மனின் கலைப்பணி**

ராஜசிம்மபல்லவன் ஆற்றிய கலைத்தொண்டு வரலாற்றில் சிறப்புமிக்கதாகும். காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலை இந்த இராஜசிம்மனே கட்டினார்.

இக்கோயில் கட்டும்பணியில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. அக்கோயில் அவருடைய பட்டப்பெயரோடு இணைந்து ‘ராஜசிம்மன் ஈஸ்வரம்’ என்று அழைக்கப்பட்டது. மகாபலிபுரத்தில் கடற்கரையோடு ஒட்டி அமைந்துள்ள கடற்கரைக்கோயில் ராஜசிம்மன் கட்டியதே ஆகும்.

கைலாசநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் இருந்து ராஜசிம்மனின் மனைவியின் பெயர் “ரங்கபதாகா” என்று தெரியவருகிறது. இவரது பட்டப்பெயர்கள் கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன அவற்றில் சில பின்வருமாறு:

- ரனஜெயன் என்பது போர் வெற்றியாளன் என்று பொருளாகும்.
- ரனவிக்ரமன் என்பது போரில் வீரம் காட்டுபவன் என்று பொருளாகும்.
- அபராஜிதன் என்பது வெல்ல முடியாதவன்
- அரிமர்த்தனன் என்பது எதிரிகளை அழிப்பவன்.
- ஆகவகேசரி என்பது போர் காலத்துச் சிங்கம்

### ராஜசிம்மனும் இலக்கியமும்

‘தண்டி’ என்ற சமஸ்கிருத இலக்கணமேதை ராஜசிம்மன் காலத்தில் வாழ்ந்தார். அவருடைய அரசவை புலவராகவும் திகழ்ந்தார். ராஜசிம்மனுக்கு இந்தத் தண்டி ஆசிரியராக இருந்து இலக்கணம், இலக்கியம் போதித்தார். சமஸ்கிருத புலவர்களையும் இலக்கியவாதிகளையும் ராஜசிம்மன் மிகமிக அன்போடு ஆதரித்தார். காஞ்சிபுரத்தில் ‘கடிகை’ (கல்வி நிறுவனம்) அமைத்து கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெருமையும் ராஜசிம்மனுக்கு உண்டு.

### ராஜசிம்மனின் போர் செயல்கள்

ராஜசிம்மன் காலத்து மேலைச் சாளுக்கிய அரசராக இருந்தவர் வினையாதித்தன் ஆவார். இவனை ராஜசிம்மன் தோற்கடித்து அவருக்குச் சொந்தமான ‘புரம்’ என்ற இடத்தை அழிவுக்கு உள்ளாக்கியதாகக் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் கல்வெட்டு கூறுகிறது.

ராஜசிம்மன் களப்பிரர்களையும் தோற்கடித்தார். களப்பிரர்களை வென்ற பின்னர் அந்த வெற்றிகள் நினைவாக ராஜசிம்மன் ‘காலகாலன்’ என்ற பட்டபெயரைச் சூட்டிக்கொண்டான்.

சுந்தரர் தனது பாட்டில் ராஜசிம்மனை ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார். அந்த வரிகள் பின்வருமாறு:

**“கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்”**

**“காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்”**

கழற்சிங்கம் என்பது ராஜசிம்மனின் பட்டப்பெயர்களில் ஒன்று. கழற்சிங்கன் வடபுலம் வென்றார் என்று பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இதை வைத்துக்கொண்டு பார்த்தால் ராஜசிம்மன் வடநாட்டையும் வென்று இருக்கவேண்டும் என்று கருதலாம்.

திருச்சி மாவட்டம் வயலூரில் உள்ள கற்றூண் கல்வெட்டு ராஜசிம்மனின் நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அக்கல்வெட்டில் ராஜசிம்மன் லட்சத்தீவுகளையும் நிர்வாகம் செய்தார் என்று குறிப்பிடுகிறது.

சீனநாட்டில் இருந்து கி.பி. 720ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு கல்வெட்டு தமிழ் அரசர் ஒருவர் தனது போர் யானைகளையும், குதிரைகளையும், சீன அரசுக்குக் கொடுத்து உதவினார் எனக் கூறுகிறது. இந்தப்படை உதவியோடுதான் சீனர்கள் அரேபியர்களைத் தோற்கடித்தனர் என்று இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் தமிழ் அரசர் என்று குறிப்பிடப்பட்டு இருப்பது இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற ராஜசிம்மனே ஆவார்.

பல்லவர்களுக்கும் கங்கர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. ராஜசிம்மன் காலத்திலும் இந்த தகராறு தொடர்ந்து நடந்தது. ராஜசிம்மன் கங்கநாட்டைத் தாக்கினர். அப்போது கங்கநாட்டின் அரசனாக இருந்தவர் சிவமாறன் அவார். இவர் ராஜசிம்மனைத் தோற்கடித்தார் என்ற கங்க நாட்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றனர்.

### ராஜசிம்மனும் புத்தமதமும்

வியாபாரத்தின் பொருட்டு பல சீன வியாபாரிகள் நாகப்பட்டினத்திற்கு வந்தனர். அவர்கள் தங்களின் வழிபாட்டுக்கு நாகப்பட்டினத்தில் ஒரு புத்தகோயில் கட்டிகொள்ள ராஜசிம்மனிடம் அனுமதி கேட்டனர். அந்த அனுமதியை ராஜசிம்மன் மகிழ்ச்சியோடு கொடுத்தார். இதன் விளைவாக புத்தகோயில் ஒன்று நாகப்பட்டினத்தில் சீனர்களுக்காகக் கட்டப்பட்டது.

## இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 710- 775)

பல்லவ அரசர் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் கி.பி. 750ம் ஆண்டு முதல் 710 வரை ஆட்சி நடத்திவிட்டு இறந்துவிட்டார். அவர் இறந்ததும் பல்லவ நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இத்தருணத்தில் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹிரண்யவர்மன் தன் மகன் இரண்டாம் நந்திவர்மனை பல்லவ அரசனாக்கினான்.

இரண்டாம் நந்திவர்மன் அரசபதவியை ஏற்றுக்கொண்டபோது அவனுக்கு வயது 12 ஆகும்.

நந்திவர்மன் என்ற பல்லவ மன்னன் கி.பி. 710-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தான். 775 வரை ஆட்சி நடத்தினான். இவரது மொத்த ஆட்சிக்காலம் 65 ஆண்டுகள் ஆகும். சிறுவயதிலேயே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதால் நீண்டகாலம் ஆட்சி நடத்தினான். பல்லவ அரசர்களிலேயே மிக அதிக காலம் ஆட்சி நடத்திய பெருமை இரண்டாம் நந்திவர்மனைச் சாரும்.

பல்லவ வரலாற்றைக்கூறும் காசுக்குடி செப்பேடுகளை இரண்டாம் நந்திவர்மனே வெளியிட்டார். நந்திவர்மன் சைவசமயத்தைச் சார்ந்தவர்.

இத்தகைய நந்திவர்மன் காஞ்சிபுரத்தில் விஷ்ணுவுக்கு ஒரு கோயில் கட்டி அக்கோயிலுக்குப் பரமேஸ்வர விண்ணகரம் என்று பெயர் வைத்தார். இந்தப் பரமேஸ்வர விண்ணகரம்தான் தற்போது வைகுந்தப்பெருமாள்கோயில் என்று அழைக்கப்படுகிறது.

நந்திவர்மன் பல்லவ மன்னன் பற்றி அறிந்து கொள்ள உதவும் சான்றுகள்:

- நந்திவர்மன் பல்லவ மன்னன் வெளியிட்ட 21-வது ஆட்சியாண்டில் வெளியிட்ட உதயேந்திரம் செப்பேடுகள்.
- பல்லவமல்லன் தனது 22-வது ஆட்சியாண்டில் வெளியிட்ட காசுக்குடி செப்பேடுகள். பல்லவ மன்னன் 58-வது ஆட்சியாண்டில் வெளியிட்ட தண்டக்கோட்டம் செப்பேடுகள்
- பல்லவமல்லன் தனது 61-வது ஆட்சியாண்டில் வெளியிட்ட ஒற்றன்குடிச் செப்பேடுகள்
- பல்லவமல்லன் தனது கடைசி ஆட்சியாண்டாகிய 65-வது ஆண்டில் வெளியிட்ட மகாபலிபுரம் கல்வெட்டு
- வைகுந்தப்பெருமாள் கோயிலில் உள்ள சிற்பங்கள்
- வைகுந்தப்பெருமாள் கேரியலில் காணப்படும் மேலைச்சாளுக்குரிய அரசன் இரண்டாம் விக்கிரமாதித்தன் கல்வெட்டுகள்
- திருமங்கை ஆழ்வாரின் பாசுரம்
- பாண்டியர்கள் வெளியிட்ட சின்னமனூர் செப்பேடுகள்
- வேள்விக்குடிச் செப்பேடுகள்

**பல்லவச்சாளுக்கிய போர் (கி.பி. 733- 738)**

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் பல்லவச் சாளுக்கியப் போர் தொடர்ந்தது. இரண்டாம் நந்திவர்மன் பல்லவ அரசராக இருந்தபோது மேலைச் சாளுக்கிய அரசராக இருந்தவர் இரண்டாம் விக்கிரமாதித்தியன். இவர் இரண்டாம்

நந்திவர்மனைப் போரில் தோற்கடித்தார். இதன் விளைவாக பல்லவர்களின் தலைநகரம் காஞ்சிபுரம் இரண்டாம் விக்கிரமாதித்தன் கட்டுப்பாட்டிற்கு வந்தது.

நல்ல எண்ணம் கொண்ட இரண்டாம் விக்கிரமாதித்தன் கைலாசநாதர் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார். மேலும் அவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தக் பிராமணர்கள், ஏழைகள், ஆதரவற்றோர் ஆகியோர்களுக்குப் பல தானங்களை வழங்கினார். இரண்டாம் விக்கிரமாதித்தனால் காஞ்சிக்கு நன்மைகள் பல ஏற்பட்டன.

**பல்லவ பாண்டியப் போர்**

1. பல்லவ நாட்டின் வாரிசுரிமைப்போர் சித்திரமாயனுக்கும், இரண்டாம் நந்திவர்மனுக்கம் இடையே நடந்தது.

2. கொங்கு நாடு பாண்டியர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. இந்தக் கொங்கு நாட்டைப் பாண்டியர்களிடமிருந்து கைப்பற்ற வேண்டும் என இரண்டாம் நந்திவர்மன் திட்டம் தீட்டினார். பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையே போர் ஏற்பட்டது. இப்பல்லவப்படை பாண்டியர்களை சங்கரகிராமம், மன்னிக்குறிச்சி ஆகிய இடங்களில் தோற்கடித்தது. இறுதியில் இரண்டாம் நந்திவர்மன் வெற்றிபெற்றார்.

**பல்லவ இராஸ்டிரக்கூடப் போர்**

கி.பி. 753ல் இராஸ்டிரக்கூட வம்சத்தைத் தோற்றுவித்தவர் தந்திதுர்கன் ஆவார். இந்தத் தந்திதுர்கன்தான் இரண்டாம் நந்திவர்மனை எதிர்த்துப் போர் தொடுத்தான். இந்தப் போரில் தந்திதுர்கன் இரண்டாம் நந்திவர்மனைத் தோற்கடித்தான்.

**பல்லவ கங்கப் போர்**

இரண்டாம் நந்திவர்மனின் சமகாலத்துச் சங்க அரசர் ஸ்ரீபுருசன் ஆவார். இந்த ஸ்ரீபுருசனை இரண்டாம் நந்திவர்மன் போரில் தோற்கடித்து அவரிடம் இருந்த உக்ரோதயம் என்ற வைரமாலையை இரண்டாம் நந்திவர்மன் கைப்பற்றினார் எனத் தண்டன் தோட்டச் செப்பேடுகள் கூறுகின்றன. இரண்டாம் நந்திவர்மன் பற்பல கோயில்களைக் கட்டினார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

1. காஞ்சி வைகுந்தபெருமாள் கோயில்
2. கூரம் கேசவப்பெருமாள் கோயில்
3. திருவதிகை ஈராட்டானீஸ்வரா் கோயில்
4. காஞ்சி முக்தீஸ்வரர் கோயில்
5. திருவல்லிக்கேணி பெருமாள் கோயில்

திருவல்லிக்கேணி நகரத்தையும், அங்கு உள்ள பெருமாள் கோயிலையும் இரண்டாம் நந்திவர்மன் அமைத்தார் எனத் திருமங்கை ஆழ்வார் தனது பாசுரத்தில் கூறியுள்ளார்.

## மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 825- 850)

இவரது வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சான்றுகள்.

1. மூன்றாம் நந்திவர்மன் தனது 6-வது ஆட்சியாண்டில் வெளியிட்ட வேலூர்பாளையம் செப்பேடுகள்
2. இவர் தனது 12வது ஆட்சியாண்டில் வெளியிட்ட செந்தலைக் கல்வெட்டு
3. இவர் தனது 17வது ஆட்சியாண்டில் வெளியிட்ட திருவல்லம் கல்வெட்டு
4. இவர் தனது 22வது ஆட்சியில் வெளியிட்ட திருப்பராய் துறை கல்வெட்டு

## மூன்றாம் நந்திவர்மனும் தெள்ளாறுப் போரும்

மூன்றாம் நந்திவர்மனைப் பற்பல கல்வெட்டுகள் 'தெள்ளாறு' எறிந்த நந்திவர்மன் என்று குறிப்பிடுகின்றன. ஆகவே மூன்றாம் நந்திவர்மன் தனது எதிரிகளைத் 'தெள்ளாறு' என்ற இடத்தில் வென்றார் என்று தெளிவாகிறது.

1. தெள்ளாறு என்ற இடம் வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுக்காவில் அமைந்து இருந்தது. இந்தத் தெள்ளாறு என்ற இடம் தற்போது தெள்ளார் என்று அழைக்கப்படுகிறது.
2. மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாறு என்ற இடத்தில் பாண்டிய அரசர் இரண்டாம் வரகுணனை வென்றார்.
3. மூன்றாம் நந்திவர்மன் வெளியிட்ட கல்வெட்டுகளில், அவர் 10வது ஆட்சியாண்டிற்கும் அதற்குப் பின்னரும் வெளியிட்ட கல்வெட்டுகளில்தான் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்ற சொற்றொடர் வருகிறது.
4. மூன்றாம் நந்திவர்மன் தனது 6-வது ஆட்சியாண்டில் வேலூர்பாளையம் செப்பேடுகளை வெளியிட்டார். அந்த வேலூர்பாளையம் செப்பேடுகளில் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்ற சொற்றொடர் காணப்படவில்லை. ஆகவே மூன்றாம் நந்திவர்மன் தனது 6–வது ஆட்சியாண்டிற்குப் பின்னரும், 10-வது ஆட்சிக்கு முன்னரும் உள்ள காலக்கட்டத்தில்தான் 'தெள்ளாறு' என்ற இடத்தில் போர் செய்து வெற்றி பெற்றிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். மூன்றாம் நந்திவர்மனின் வரலாற்றைத் தொகுத்து சொல்லும் நந்திக்கலம்பகம் என்ற நூல் இந்த தெள்ளாறு வெற்றியைக் குறிப்பிடுகிறது.

## மூன்றாம் நந்திவர்மனைப் பற்றி நந்திக்கலம்பகம் தரும் செய்திகள்

நந்திக்கலம்பகம் என்ற நூல் பெயர் தெரியாத ஒரு ஆசிரியரால் எழுதப்பட்டது.

1. மூன்றாம் நந்திவர்மன் சந்திரமரபைச் சார்ந்தவர்.
2. இவர் சோழர், சேரர், பாண்டியர் ஆகியோரைப் பழையாறு, வெள்ளாறு, தெள்ளாறு ஆகிய இடங்களில் தோற்கடித்தார்.
3. சேர, சோழ, பாண்டிய அரசர்களிடமிருந்தும் வட இந்திய அரசர்களிடமிருந்தும் கப்பம் வசூலித்தனர்.
4. இவர் காவிரிப் பகுதிக்கும், கொங்கு தேசத்திற்கும் அரசராக இருந்தார்.
5. இவர் வலிமை பொருந்திய ஒரு கப்பற்படையை வைத்திருந்தார்.
6. இவர் தமிழில் ஒரு சிறந்த மேதையாகத் திகழ்ந்தார். இதனை நந்திக்கலம்பம் பின்வருமாறு குறிப்பிடுகிறது. ‘‘பைந்தமிழை ஆய்கின்ற கோன்நந்தி’’ எனக் குறிப்பிடுகிறது.

## மூன்றாம் நந்திவர்மனும் இராஸ்டிரகூடர்களும்

மூன்றாம் நந்திவர்மன் தனது வலிமையை இராஸ்டிரகூடர்களுக்குக் காட்டுவதற்காக அவர்களின் குறுநில மன்னர்களாகிய சாளுக்கியர்களை எதிர்த்து ஒருபோரைத் தொடங்கினார். இப்போர் துங்கபத்திரை நதிக்கரையில் ‘குருக்கோட்டை’ என்ற இடத்தில் நடந்தது. இக்குருக்கோட்டைப் போரில் மூன்றாம் நந்திவர்மன் சாளுக்கியரைத் தோற்கடித்தார்.

## மூன்றாம் நந்திவர்மனும் தாய்லாந்தும்

இவர் காலத்தில் பல்லவநாட்டிற்கும் தாய்லாந்துக்கும் இடையே வணிகத் தொடர்பு இருந்தது. இவரது காலத்தில் மகாபலிபுரம் வெளிநாட்டு வியாபாரிகளுக்குப் பெயர் பெற்றுத் திகழ்ந்தது. தாய்லாந்தில் கிடைக்கும் ஒரு கல்வெட்டு மூன்றாம் நந்திவர்மன் அந்த நாட்டில் ஒரு குளம் வெட்டினார் என்று கூறுகிறது.

## மூன்றாம் நந்திவர்மனின் சமயப்பணிகள்

மூன்றாம் நந்திவர்மன் சிவபெருமானை வழிபடுபவராகத் திகழ்ந்தார். மூன்றாம் நந்திவர்மன் சிவபக்தர் என்பதை அவர் வெளியிட்ட வேலூர்பாளையம் செப்பேடுகள் பின்வருமாறு குறிப்பிடுகிறது. ‘‘சிவனது திருஅடையாளம் (திருநீர்) நெற்றியில் கொண்ட நந்திவர்மன். மேலும், இவர் கிளியனூர் கிராமத்தில் உள்ள விஷ்ணுக் கோயிலைக் கட்டினார். மேலும், இவர் திருவிடைமருதூர் சிவன் கோயிலைப் புதுப்பித்தார்.

இவர் பிராமணர்களுக்கு நிலங்களும் ஊர்களும் தானமாகக் கொடுத்தார். தஞ்சை மாவட்டம் திமயம் என்ற ஊரில் வாழ்ந்த பிராமணர்களுக்கு அந்த ஊரையே தானமாகக் கொடுத்தார். அந்த ஊர் இவரது காலத்தில் 'அவனிநாராயண சதுர்வேதிமங்கலம்' என்று அழைக்கப்பட்டது.

## மூன்றாம் நந்திவர்மனும் சோழ நாடும்

நந்திக்கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனைக் ''காவிரிநாடன்'' என்றும் ''காவிரிவளநாடன்'' என்றும் ''பொன்னி நன்னாட்டு மன்னன்'' என்றும் குறிப்பிடுகிறது. ஆகவே மூன்றாம் நந்திவர்மன் சோழநாட்டை ஆண்டார் என்பது உறுதியாகிறது.

''திருநெய்தானம்'' என்ற ஊரில் மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு தஞ்சையில் இருப்பதனாலேயே மூன்றாம் நந்திவர்மன் தஞ்சையையும் ஆண்டார் (சோழ நாடு) என்று உறுதியாகிறது.

மூன்றாம் நந்திவர்மன் இறப்புக்குப் பிறகு அவரது மகனாகிய நிருபதுங்கன் பல்லவப் பேரரசராக கி.பி. 850-ம் ஆண்டு முடிசூட்டிக்கொண்டார்.

## பல்லவர்களின் நிர்வாகம்முறை

பல்லவப் பேரரசு பல இராஸ்டிரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு இராஸ்டிரமும் பல விசயங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. சோழர்காலத்திலிருந்த மண்டலத்தோடும் கோட்டத்தோடும் இந்த இராஸ்டிரத்தை ஒப்பிடலாம்.

### மன்னர்

பல்லவநாட்டில் மன்னராட்சி நடந்தது. மன்னர் வம்சாவழி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓர் அரசர் இறந்த பின்னர் அவரது மூத்த மகன் ஆட்சிக்கு வந்தார். பல்லவ அரசர்கள் மகாராஜா, தர்மமகாராஜா, மகாராஜாதிராஜா ஆகிய பட்டப்பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். ஆரம்பகாலப் பல்லவர்கள் சிங்கக்கொடியை வைத்துக்கொண்டனர். அவர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் சிங்க உருவமே பொறிக்கப்பட்டது. பின்னர் வந்த பல்லவ அரசர்கள் தங்கள் கொடியிலும் நாணயங்களிலும் நந்தி உருவத்தைப் பொறித்துக் கொண்டனர்.

### அரசு அதிகாரிகள்

அமைச்சர்கள் 'அமத்யா' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர். பல்லவ அரசரின் அரண்மனையில் ஏராளமான சாசணாச்சாரியர்கள், பொற்கொல்லர்கள், புலவர்கள் ஆகியோர் இருந்தனர். இந்தச் சாசணாச்சாரியர்கள் அரசர் வெளியிடும்

ஆணைகளைக் கல்வெட்டுகளாகப் பொறிக்கும் பணியைச் செய்தனர். புலவர்கள் பல்லவ அரசர்களின் மெய்கீர்த்திகளை எழுதிக் கொடுத்தனர்.

**நீதி நிர்வாகம்**

வழக்குகளை விசாரிக்க பல்லவப் பேரரசில் இரண்டு வகையான நீதிமன்றங்கள் இருந்தன.

1. சிவில் நீதிமன்றம் என்று அழைக்கப்படும் உரிமையியல் நீதிமன்றம்.
2. கிரிமினல் நீதிமன்றம் என்று அழைக்கப்படும் குற்றவியல் நீதிமன்றம்.

இந்த நீதிமன்றத்திற்கு நீதிபதியே அரசன் ஆவார்.

வழக்குகளை விசாரிக்கின்ற போது பின்வரும் சாட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அவைகள்

1. **ஆட்சி:** ஆட்சி என்பது அனுபவ பாக்கியம் ஆகும்.
2. **ஆவணம்:** இது எழுத்தில் இருக்கும் ஆவணம் (சாட்சியம்) ஆகும். ஓலைச்சுவடியாகவோ, செப்புப் பட்டயமாகவோ காணப்படும்.

**படை நிர்வாகம்:**

பல்லவப் படையில் யானைப்படை, குதிரைப்படை, காலாப்படை என மூன்று பிரிவுகள் இருந்தன.

பல்லவப் படைக்குத் தேர்படைப் பிரிவு இருந்ததாகத் தெரியவில்லை. பல்லவப் படைக்கு வெளிநாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

விஷ்ணுவர்மன் என்பவர் பல்லவ அரசர் சிம்மவர்மன் காலத்தில் படைத் தலைவராக இருந்தார்.

பரஞ்சோதி என்ற சிறுத்தொண்டர் முதலாம் நரசிம்மவர்மனுக்குப் படைத்தலைவராக இருந்தார்.

பல்லர்கள் கப்பற்படை மகாபலிபுரம், மயிலாபூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் இருந்ததாகக் கல்வெட்டுகள் குறிக்கப்படுகின்றன. பல்லவர்கள் சீனர்களோடு ஒரு வாணிபத் தொடர்பு வைத்திருந்தனர். இந்த வியாபாரக் கப்பல்களை அனுப்பும்போது, அவற்றின் பாதுகாப்புக்காக அவற்றோடு கப்பற்படையை அனுப்புகின்ற வழக்கம் அக்காலத்தில் இருந்தது.

**நீர்ப்பாசனம்**

பல்லவ அரசர்கள் காடுகளை அழித்து அவற்றை விளை நிலங்களாக மாற்றினார். ஆகவேதான் அவர்களுக்கு ‘காடுவெட்டி’ என்ற பட்டப்பெயர் ஏற்பட்டது.

பல்லவநாட்டில் விவசாய நிலங்களுக்குக் காவிரி, பாலாறு ஆகிய ஆறுகள் நீர் பாசனத்திற்கு உதவியன.

**நாணயங்கள்**

பல்லவர்கள் தங்கத்திலும், வெள்ளியிலும், செம்பிலும் நாணயங்கள் வெளியிட்டனர். இந்த நாணயங்களில் எல்லாம் ஒரு பக்கத்தில் பல்லவர்களின் சின்னமாகிய நந்தி பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பக்கத்தில் கீழ்காணும் உருவங்களில் ஏதாவது ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.

1. ஸ்வஸ்திக் வடிவம்
2. சங்கு வடிவம்
3. சக்கர வடிவம்
4. மீன் வடிவம்
5. குடை வடிவம்
6. குதிரை வடிவம்
7. சிங்க வடிவம்

முதலாம் மகேந்திரவர்மன் தங்கத்தினால் நாணயங்களை வெளியிட்டார். பல்லவ அரசர்கள் தங்களது வெற்றியின் நினைவாகவும் நாணயங்கள் வெளியிட்டனர். அந்த நாணயங்களில் நந்தி உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

**கிராம நிர்வாகம்**

பல்லவர் நிர்வாகத்தில் அடிமட்டத்தில் இருந்த சிறிய அமைப்புதான் கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தில் இருந்த நிர்வாகசபை ‘ஊர்’ என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கிராம சபையில் உறுப்பினர்கள் ‘ஊரார்’ என்று அழைக்கப்பட்னனர். இந்த ஊராருக்குப் ‘பெருமக்கள்’ என்ற பேரும் இருந்தது. ஒவ்வொரு கிராமசபையும் பற்பல கிராமப் பணிகளைச் செய்து வந்தது. அவற்றில் குறிப்பிடத்தக்கவை:

1. கோயில் நிர்வாகம்
2. நீர்பாசனம் நிர்வாகம்
3. நீதி நிர்வாகம்

இந்தக் கிராமசபை கிராமப்பணிகளைப் பற்பல குழுக்களிடம் ஒப்படைத்து இருந்தது. அந்தக் குழுக்கள் ‘வாரியம்’ என்று அழைக்கப்பட்டன. இந்த வாரியங்கள் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்ய அமைக்கப்பட்டு இருந்தன. ஏரி வாரியம் கிராமத்தின் நீர் நிலைகளைக் கவனித்துக் கொள்ளும்.

நிலங்களை நிர்வகிக்க ஒவ்வொரு ஊரிலும் தோட்ட வாரியம் இருந்தது. பல கிராமங்கள் சேர்ந்தது ‘நாடு’ என அழைக்கப்பட்டது. நாடு என்ற சபையின் உறுப்பினர்கள் ‘நாட்டார்’ என அழைக்கப்பட்டனர். நகரங்களை நிர்வாகம் செய்தவர்கள் ஆளுங்கணத்தார் என அழைக்கப்பட்டனர்.

பல்லவர்கள் நிர்வாகத்தில் மிகவும் தேர்ச்சி பெற்று இருந்தனர். இவர்களின் நிர்வாகத்தை ஓர் எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டுதான் பிற்கால சோழர்கள் நிர்வாகத் துறையில் முன்னேற்றம் அடைந்தனர். சோழர்காலத்து குடவோலை முறைக்கு வித்திட்டப்பெருமை இந்தப் பல்லவர்களையே சாரும்.

## பல்லவர்காலச் சமுதாயநிலை

பல்லவர் காலத்தில் சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன.

1. பிராமணர்கள்
2. சத்திரியர்கள்
3. வைசியர்கள்
4. சூத்திரர்கள்

ஒவ்வொரு சாதியும் அதற்குரிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று பல்லவ அரசர்கள் குறிப்பிட்டனர். ஆகவேதான் அவர்கள் வர்ணாசிரம தர்மத்தைப் போற்றிப் பாதுகாத்துப் கடைப்பிடித்தனர் எனச் செப்பேடுகள் குறிப்பிடுகிறது.

### 1. பிராமணர்கள்

சமுதாயத்தில் எண்ணிக்கையில் பிராமணர்கள் மிகக் குறைவாக இருந்தனர். ஆனால் அவர்களே சமுதாயத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருந்தனர். இவர்கள் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் மேதையாகத் திகழ்ந்தனர். நான்கு வேதங்களைக் கற்ற பிராமணர் ‘சதுர்வேதி’ என்றும், மூன்று வேதங்களைக் கற்ற பிராமணர் ‘திரிவேதி’ என்றும் அழைத்னர். பிராமணர்களுக்குப் பல்லவ அரசர்கள் பிரமதேய நிலத்தானங்களை வழங்கினர். இந்தப் பிராமணர்கள் யாகங்கள் செய்வதைத் தலையாயப் பணியாகக் கொண்டிருந்தனர். இந்தப் பிராமணர்களில் வைணவ பிராமணர்கள், சைவப் பிராமணர்கள் என்று இரண்டு பிரிவு இருந்தது.

பிராமணக் குழந்தைக்கு ஏழுவயதில் உபநயனம் (பூநூல் கல்யாணம்) செய்யப்பட்டது. ஆகமங்கள், இராமாயணம் மற்றும் மகாபாரதம் போதிக்கப்பட்டன. பெரும்பான்மையான பிராமணர்கள் ஆசிரியர்களாகவும் கோயில் அர்ச்சகர்களாகவும் பணிபுரிந்தனர். சில பிராமணர்கள் அமைச்சர்களாகவும் அரசு அலுவலர்களாகவும் படைத்தளபதியாகவும் பணிபுரிந்தனர்.

## 2. சத்திரியர்கள்

சமுதாயத்தில் இரண்டாவது பிரிவு ஆட்சியாளர்களாகத் திகழ்ந்தவர்கள் சத்திரியர்கள் என்ற அரச வம்சத்தினர் ஆவர். பல்லவ அரசர்கள் ஆட்சியை நேர்மையாக நடத்தினர். மக்களின் நன்மைக்கும், பாதுகாப்புக்கும் சிறந்தவர்களாகவும் இருந்தனர். தர்மத்தைக் காப்பாற்றியதனால் அவர்களை மக்கள் 'தர்மமகாராஜாக்கள்' என்று அழைத்தனர். சில பல்லவ அரசர்கள் சிறந்த அறிஞர்களாகத் திகழ்ந்தனர். முதலாம் மகேந்திரவர்மன் சமஸ்கிருதத்தில் புலமைபெற்று இருந்தார். மூன்றாம் நந்திவர்மன் தமிழ் அறிஞராகத் திகழ்ந்தார்.

காடுகளை அழித்து நிலங்களாக மாற்றியதால் 'காடுவெட்டி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல்லவ அரசர்கள் பக்திமிக்கவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் துலாபாரம் மேற்கொண்டு எடைக்கு எடை தங்கத்தைக் கோயிலுக்குக் கொடுத்தனர். தர்பார்மண்டபத்தில் அரசர், நாட்டில் நிர்வாகம் பற்றிய கருத்துக்களை அறிந்து கொண்டு ஆணைகளைப் பிறப்பித்தார். இங்கேதான் புலவர்களுக்குப் பரிசுகளும் கொடுக்கப்பட்டது. மேலும், இந்தத் தர்பார்மண்டபத்தில் இருந்துதான் பல்லவஅரசர் தனது குறுநில மன்னர்களிடமிருந்து கப்பத்தொகையை வசூலித்துக்கொண்டார்.

பல்லவஅரசர்களைப் போலவே பல்லவஅரசிகளும் பக்திமிக்கவர்களாகத் திகழ்ந்தனர். ராஜசிம்ம பல்லவனின் மனைவி 'ரங்கா' காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் பிரகாரத்தில் சிற்றாலயங்களைக் கட்டினார்.

## 3. வைசியர்கள்

பல்லவர் கல்வெட்டுகளில் வைசியர்கள் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே உள்ளன. சோழர் காலத்தில் வணிகக் குழுக்கள் இருந்தன. அக்குழுக்களுக்குச் சில பெயர்களும் கொடுக்கப்பட்டிருந்தன. அவையாவன,

1. மணி கிராமத்தார்
2. நானா தேசிகன்
3. நூற்றுவர்

பல்லவர்கள் இத்தோசீனா, இந்தோனேஷியா, இலங்கை, பாரசீகம் ஆகிய நாடுகளோடு வியாபாரத் தொடர்பு கொண்டு இருந்தனர். உள்நாட்டுச் சந்தைகளில் இந்த வியாபாரிகள் தானியங்கள், எண்ணெய், நெய், தேங்காய், வெல்லம், பூ, உப்பு ஆகிய பொருட்களை விற்றார்கள் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## 4. சூத்திரர்கள்

பல்லவர் கல்வெட்டுக்களில் சூத்திரர்களைப் பற்றி மிகக் குறைவாகவே கூறப்பட்டுள்ளது. சூத்திரர்கள் ஊரின் ஒதுக்குப்புறத்தில் வாழ்ந்தார்கள். தங்களை உயர்ந்த சாதிகள் என்று சொல்லிக் கொள்கின்ற மக்கள் வாழ்கின்ற பகுதியில் இருந்து வெகுதொலைவில் வாழ்ந்தார்கள். இந்தச் சூத்திரர்கள் களிமண்ணாலும் ஒலையினாலும் அமைக்கப்பட்ட குடிசை வீடுகளில் வாழ்ந்தனர்.

### உணவுப்பழக்கம்

பல்லவர்காலத்து மக்கள் சாப்பிட்ட உணவு வகைகள் சில கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் நெய் அல்லது பால் கலந்த உணவை உண்டனர். இதனைக் கல்வெட்டு 'அக்காரம் பாலில் கலந்து' என்று குறிப்பிடுகிறது.

அக்காரம் என்பது இனிப்பை குறிக்கும். சர்க்கரைப் பொங்கலையும் மக்கள் உண்டனர். இச்சர்க்கரைப் பொங்கல் கல்வெட்டில் 'அக்கார அடிசில்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தயிர் சாதத்தையும் இவர்கள் உண்டனர் என்ற செய்தியைக் கல்வெட்டுக்கள் கூறுகிறது. தயிர் சாதத்தைக் கல்வெட்டு 'தயிர்போசனம்' என்று குறிப்பிடுகிறது. நெல்லைப் பொறித்து அவல் தயாரித்தும் உண்டனர் என்று குறிப்பிடுகிறது. விருந்து சாப்பிட்ட பின்னர் வெற்றிலை போடும் பழக்கம் இம்மக்களிடம் இருந்தது.

### ஆபரணங்கள்

பல்லவகாலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆபரணங்களின் பெயர்கள் ஆழ்வார்களின் பாசுரம் மற்றும் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது.

அவை:

1. காதில் அணிந்த ஆபரணங்கள்
    1. காதோலை
    2. கொடிப்பூ
    3. செவிப்பூ
    4. தோடு
    5. வட்டவடிவிலான குண்டலம்
    6. மகரக்குழை
2. காலில் அணியும் ஆபரணங்கள்
    1. முத்து அல்லது மாணிக்கக் கற்கள் கொண்ட சிலம்பு
    2. மணிகள் கோர்க்கப்பட்ட கிங்கினி

3. குழந்தை ஆபரணங்கள்

கிங்கினி, நெற்றிசுட்டி, மோதிரம் ஆகிய ஆபரணங்கள் பெண் குழந்தைக்கு அணிவிக்கப்பட்டது. பல்லவர்காலத்தில் இடதுகாதில் ஒரு விதமான தோடும் வலது காதில் மற்றொரு விதமான தோடும் போடும் வழக்கம் இருந்தது. மகாபலிபுரத்தில் காணப்படும் சிற்பங்களில் இடது காதில் மகரக் குண்டலமும் வலது காதில் பத்ர குண்டலமும் காணப்படுகிறது.

வளையல்கள், தங்கம், தந்தம், கிளிஞ்சல்கள் ஆகியவற்றால் செய்யப்பட்டன. வளையலைப் பல்லவர்கால இலக்கியம் ‘சூடகம்’ என்று கூறப்படுகிறது. கைகளில் ஆண்கள் நான்கு வளையல்களும் பெண்கள் ஆறு வளையல்களும் அணிந்திருந்தனர். அட்டிகை அணிகின்ற வழக்கம் இருபாலரிடமும் காணப்பட்டது.

**உடைப்பழக்கம்**

பல்லவர் காலத்து ஆண்கள் “கட்சை” முறையில் கீழாடையாக அணிந்து கொண்டனர். அவர்களின் மேலாடையாக ஒரு துண்டு இருந்தது. பெண்கள் கீழாடையாக ஓர் இறுக்கமான சிறிய கால்சட்டையை அணிந்திருந்தனர். ஆடையைப் பொதுவாக இக்காலத்தில் ‘கலிங்கம்’ என்று அழைத்தனர். சிவப்புநிறப் பட்டாடையைப் பீதாம்பரம் என அழைத்தனர்.

1. இளம்பெண்கள் தங்கள் வீடுகளில் கிளிகளை வளர்த்தனர். இக்கிளிகளுக்கு உணவராகப் பாலும் பழமும் கொடுக்கப்பட்டது.

2. திருமணமாகாத இளம்பெண்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் நீராடி நோன்பிருந்து இறைவனை வழிபட்டனர். இது பாவை நோன்பு என அழைக்கப்பட்டது.

3. பல்லவர் காலத்தில் காதல் கடவுளாகிய மன்மதனை வணங்குவதற்காக மன்மதவிழா தை மாதத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின்போது மன்மதனின் உருவம் சுவற்றின் மீது பொறிக்கப்பட்டு, அந்தத தெரு முழுவதும் வெண்மணல் பரப்பி மன்மதனுக்கு ஆயுதமாகிய கரும்பும், அவருக்குப் பிடித்தமான நெற்கதிர்களும் படைக்கப்பட்டது. திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சி வேண்டி இந்த மன்மத விழா கொண்டாடப்பட்டது.

4. பல்லவர் காலத்தில் திருமணம் எப்படி நடந்தது என்பதை ஆண்டாளின் பாசுரம் நமக்குக் கூறுகிறது. திருமணத்திற்கு நல்லநாள் குறிக்கப்பட்டு, வீட்டின் முன்புறம் இளநீரும் பனம்பழமும் தொங்கவிடப்பட்டன. வேதவிற்பன்னர்கள் வேதங்களை ஓதினர். தாலியை “மங்கள நாண்” என்று குறிப்பிட்டனர். மணமகன்

மணமகளுக்குத் தாலியை அணிவித்தான். மணநாளில் மணமக்கள் தீயைச் சுற்றி வலம்வந்தனர்.

## பல்லவ காலத்துப் பொருளாதாரநிலை

பல்லவர் காலத்தில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே இருந்தது. மேலும், நாட்டில் தொழில் வளமும் விவசாயமும் சிறப்பாகயிருந்தது. மக்கள் மிக வசதியாக வாழ்ந்தனர். உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரம் மிக நன்றாக நடந்தது.

### நிலங்கள்

பல்லவப் பேரரசில் பற்பல வகையான நிலங்கள் இருந்தன என்பதனைக் கூரக் செப்பேடு, காசக்குடி செப்பேடு, பாகூர் செப்பேடு நமக்குத் தெரிவிக்கின்றன.

1. பிராமணர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்ட நிலம் ‘‘பிரம்மதேயம்’’ என அழைக்கப்பட்டது.

2. ஒரு தனிப்பட்ட பிராமணருக்கு மட்டும் சொந்தமாகின்ற வகையில் கொடுக்கப்பட்ட நிலம் ‘‘ஏகபோக பிரம்மதேயம்’’ என்று அழைக்கப்பட்டது. இந்த இரண்டு வகை நிலங்களும் அரசாங்கத்திற்கு வரி செலுத்தத் தேவையில்லை. ஆனால் இந்த இரண்டு வகையான நிலங்களைப் பெற்றுக்கொண்ட பிராமணர்கள் இவற்றை விற்கமுடியாது.

3. சிவன் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ‘தேவதானம்’ என அழைக்கப்பட்டது.

4. விஷ்ணுக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ‘திருவிளையாட்டம்’ என்று அழைக்கப்பட்டது. சமண,புத்த மடாலயங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ‘பள்ளிசந்தம்’ என அழைக்கப்பட்டது.

5. கிராமத்தில் உள்ள ஏரிகள், குளங்கள், பராமரிப்புக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ‘ஏரிப்பட்டி’ என அழைக்கப்பட்டது.

### வரிகள்

பல்லவர்காலத்தில் நிலவரியே முக்கிய வரியாகயிருந்தது. இதைத்தவிர தொழில் வரிகளும் பல்லவர் காலத்தில் வசூலிக்கப்பட்டது. இந்தத் தொழில்வரிகளின் பெயர்களைக் காசுக்குடி செப்பேடுகளும் வேலூர்பாளையம் செப்பேடுகளும் குறிப்பிடுகிறது. அவை:

1. இளம்பூட்சி: இந்த வரியைக் கள்ளிறக்கும் நபர்கள் அரசுக்குச் செலுத்தினர்.

2. தட்டுக்காணம்: இந்த வரியைப் பொற்கொல்லர்கள் செலுத்தினர்.

3. குசக்காணம்: இந்த வரியை மட்பாண்டம் செய்கின்ற குயவர்கள் செலுத்தினர்.

4. திருமுகக்காணம்: அரசாங்கத்திற்குக் கடிதத்தை அனுப்புகின்றவர்கள் செலுத்திய வரி

5. பட்டிகைக்காணம்: இந்த வரியை நெசவாளர்கள் செலுத்தினர்.

6. கல்யாணக்கானம்: திருமணவீட்டார் அரசுக்குச் செலுத்திய வரி

7. இடைப்பூச்சி: பணப்பயிர்களுக்குச் செலுத்திய வரி

8. செங்கரை: இந்த வரியைத் எண்ணெய் தயாரிக்கின்றவர்கள் செலுத்தினர்.

9. தரி இறை: இந்த வரியைத் தறி நெய்பவர்கள் செலுத்தினர்.

10. பாறைகாணம்: சலவைத் தொழிலாளர்கள் செலுத்திய வரி.

**அளவுகள்**

பல்லவர்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் அளக்கப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டது. இந்த நிலங்கள் வேலி, குழி ஆகிய அளவைகளினால் குறிக்கப்பட்டது. எடைக்கற்களும் முகத்தல் அளவைகளும் அரசின் முத்திரை பெற்ற பின்னரே பயன்படுத்தப்பட்டது. தானியங்கள், அரிசி, நெல் ஆகியவை 'பிடி' (ஒரு கைப்பிடி) என்ற அளவினால் அளக்கப்பட்டது.

மேலும், பால், தயிர், நெய், எண்ணெய் ஆகியவை செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி ஆகியவற்றினால் அளக்கப்பட்டது. தங்கத்தைக் கழஞ்சு என்ற அளவையினால் நிறுத்தினார்.

**நீர்ப்பாசனம்**

ஏரிகள், குளங்கள், கிணறுகள், ஆறுகள் ஆகியவைகள் நீர்ப்பாசனத்திற்காக அமைக்கப்பட்டு இருந்தன. இவற்றைக் கண்காணிகின்ற பணியையும், பராமரிக்கின்ற பணியையும் அரசாங்கமும், தனியார்களும் செய்தனர்.

**பல்லவர்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஏரி, குளங்கள் பின்வருமாறு:**

1. புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள குண்ணான்டார் என்ற ஊரில் உள்ள வாழி ஏரி

2. கூரம் என்ற ஊரில் உள்ள பரமேஸ்வரத்தடாகம்

3. மாமண்டூரில் உள்ள சித்திரமேகதடாகம்

4. செங்கல்பட்டில் உள்ள உத்திரமேரூரில் உள்ள ஹைமேகதடாகம்

இந்த குளங்களும், ஏரிகளும் மழைநீரையும் ஆற்றுநீரையும் தேக்கி வைக்கப் பயன்பட்டன.

**பல்லவர் காலத்தில் இருந்த கால்வாய்கள்:**

நீர்ப்பாசனத்திற்காக பல்லவ நாட்டில் பல வாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவைகள்:

1. திருச்சி மாவட்டம் நந்நிமங்களத்தில் உள்ள வைரமேக வாய்க்கால்

2. செங்கல்பட்டு மாவட்டம் கூரம் என்ற ஊரில் இருந்த பெரும்பிடுகு வாய்க்கால்

3. இந்த பெரும்பிடுகு வாய்க்காலில் இருந்து கிளை வாய்க்கால் ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் கிளை வாய்க்கால் கணபதி வாய்க்கால் என்று பெயர் பெற்று இருந்தது.

4. பெரும்பிடுகு வாய்க்காலில் இருந்து மற்றொரு வாய்க்கால் இருந்தது. அதற்குத் ஸ்ரீதரவாய்க்கால் என்று பெயர் கொடுத்தனர். இந்த வாய்க்கால்கள், குளங்கள், கிணறுகள், ஆறுகள் ஆகியவற்றைப் பராமரிக்க ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வாரியம் இருந்தது. அந்த வாரியம் ஏரி வாரியம் என்று அழைக்கப்பட்டது.

**பஞ்சம்:**

மழை பெய்யாமையினாலும், பல்லவ அரசர்கள் அடிக்கடிப் போர்களில் ஈடுபட்டதாலும் பல்லவ நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்ச காலத்தில் நிவாரணப் பணிகள் செய்வதற்கென்றே ஒவ்வொரு கிராமத்தில் ஒரு வாரியம் இருந்தது. அந்த வாரியம் ‘பஞ்சவாரியம்’ எனப்பட்டது. பஞ்சகாலத்தில் வழங்க சேகரிக்கப்பட்ட நெல்லை ‘பஞ்சவாரம்’ என்றே அழைத்தனர்.

தந்திவர்மன், நிருபதுங்கன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் காலத்தில் பல்லவநாட்டில் பஞ்சம் ஏற்பட்டதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இந்தப் பல்லவ அரசர்கள் பஞ்சத்தைப் போக்க பல புதிய குளங்களையும, கால்வாய்களையும் வெட்டினர் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரம்**

ஒவ்வொரு கிராமத்திலும் பல கடைகள் இருந்தன. அந்தக் கடைகளில் எண்ணெய், நெய், வெற்றிலை, பாக்கு, காய்கறிகள், பூக்கள், வெல்லம், துணி, சந்தனம் போன்ற பல்வகைப் பொருள்கள் விற்கப்பட்டன. ஒவ்வொரு கோயில்களைச் சுற்றியும் கடைகள் இருந்தன.

மகாபலிபுரமும், நாகப்பட்டனமும் மிகச் சிறந்த துறைமுகமாகத் திகழ்ந்தன. மகாபலிபுரம் சிறந்த துறைமுகப்பட்டினம் என்று சீனப் பயணி யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். பல்லவ நாட்டிற்கும் சீனாவிற்கும் இடையே வாணிபத் தொடர்பு இருந்தது. இந்த வாணிபத் தொடர்பைப் பற்றி நந்திக்கலம்பகம் மிக உயர்வாக பேசுகிறது.

## பல்லவர்காலத்துக் கலை மற்றும் கட்டடக்கலை

இந்தியக் கட்டடக் கலையை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1. நாகரம்
2. வேசரம்
3. திராவிடம்

இந்த விந்தியமலைக்கு வடக்கே உள்ள பகுதியில் ‘நாகரம்பாணி’ கோயில்கள் காணப்படுகின்றன. விந்திய மலைக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட பகுதியில் ‘வேசரம்’ பாணியில் கட்டப்பட்ட கோயில்கள் அமைந்துள்ளன. கிருஷ்ணா நதிக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியில் ‘திராவிடக்கலை’ கோயில்கள் காணப்படுகின்றன.

## மகேந்திரவர்மன் பாணி மண்டபங்கள்

மகேந்திரவர்மன் பாணி மண்டபங்களைக் மண்டகப்பட்டு, மகாபலிபுரம், பல்லாவரம் மற்றும் பல இடங்களில் பார்க்கிறோம். இப்பாணி மண்பங்கள் கற்றூண்கள் எளிமையாகக் காணப்படுகின்றன. மண்டபத்தில் ஒரு அறை அல்லது பல அறைகள் காணப்படுகிறது. மண்டபத்தின் முன்பகுதியில் வரிசையாக கற்றூண்கள் உள்ளன.

மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோயில்கள் எல்லாம் அமைப்பில் சிதம்பரம் நடராஜர் கோயிலின் கர்ப்பகிரகம் போல் காட்சியளிக்கின்றன.

நரசிம்மவர்மன் அமைத்த பத்து மண்டபங்கள் மகாபலிபுரத்தில் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை வராக மண்டபம், ஆதிவராக மண்டபம், துர்க்கை மண்டபம், கிருஷ்ணன் மண்டபம் ஆகியவை ஆகும்.

இம்மண்டபங்கள் எல்லாம் அமைப்பில் கோயிலின் தேர்களைப் போல் காட்சியளிக்கின்றன.

## பல்லவர்களின் கட்டுமான கோயில்கள்

பல்லவர்காலத்து கட்டுமான கோயில்களை ராஜசிம்மன் வகை, நந்திவர்மன் வகை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். கற்களை ஒன்றன் மீது ஒன்றாக

அடுக்கிக் கட்டுகின்ற கோயில் ‘கட்டுமானக் கோயில்’ என அழைக்கப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் காணப்படும் பழமையான கட்டுமான கோயில் மகாபலிபுரம், கடற்கரை கோயிலாகும். இங்குள்ள சிங்கம் சிற்பத்தின் உள்ளே ஓர் உருண்டை கல் காணப்படுகிறது. இந்தக் கல்லை சிங்கத்தின் வாய்க்குள்ளே உருட்டலாமே தவிர, வெளியில் எடுக்க முடியாது. இச்சிற்பம் பல்லவர்காலத்து சிற்பியின் திறமையை இன்றைக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்குப் பின்னரும் இந்த கடற்கரை கோயில் இயற்கை சீற்றங்களையெல்லாம் தாண்டி பல்லவ சிற்பக் கலை திறனை நமக்கு பறை சாற்றுகிறது.

## காஞ்சி கைலாசநாதர் கோயில்

ராஜசிம்மன் காஞ்சிகைலாசநாதர் கோயிலைக் கட்டினார். கைலாசநாதர் கோயில் விமானமும், தஞ்சை பெரியகோயில் விமானமும் அமைப்பில் ஒத்திருக்கின்றன.

கைலாசநாதர் கோயில் 154 அடி நீளமும், 80 அடி அகலமும் கொண்டு இருக்கிறது. இங்குள்ள கர்ப்பகிரகத்தில் ஒரு பெரிய லிங்கம் காட்சியளிக்கிறது. இதன் விமானம் பிரமிடு வடிவில் உள்ளது. கைலாசநாதர் கோயில் வளாகத்திற்குள் 58 சிற்றாலயங்கள் உள்ளன. ராஜசிம்மன் வகை கோயில்களுக்குச் சில இலக்கணங்கள் உண்டு. அவை:

1. விமானம் பார்ப்பதற்கு தேர் போல் காட்சியளிக்கும்
2. இக்கோயில்களில் சிங்கச் சிற்பங்கள் காணப்படும். இந்தச் சிங்கங்களின் பின் இரண்டு கால்கள் உட்கார்ந்த நிலையிலும் முகத்தில் மிகுந்த கோபம் வெளிப்படும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.
3. ராஜசிம்மன் வகைக் கோயில்களில் எல்லாம் சோமஸ்கந்தர் சிலை காணப்படும்.

## காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயில்

காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயிலும் ராஜசிம்மன் கலைப்பாணியைச் சேர்ந்தது தான். இதை இரண்டாம் நந்திவர்மன் கட்டினார். இக்கோயிலின கர்ப்பகிரகம் 90 அடி சதுரத்தின் மீது அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள தூண்கள் பலவற்றில் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் பல்லவர் வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன. காஞ்சிவைகுந்தப் பெருமாள் கோயில் விமானம் நான்கு அடுக்குகளைக் கொண்டது.

60 அடி உயரம் உடையது. இக்கோயிலில் விஷ்ணு மூன்று கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

1. நின்ற திருக்கோலம் (Standing)
2. இருந்த திருக்கோலம் (Sitting)
3. கிடந்த திருக்கோலம் (Sleeping)

**நந்திவர்மன் வகை**

நந்திவர்மன் வகை கோயிலுக்கு உரிய இலக்கணங்கள் பின்வருமாறு:

1. இக்கோயில் மகாபலிபுரத்தில் உள்ள சகாதேவன் ரதம் போலக் காட்சியளிக்கிறது.

2. இக்கோயிலில் உள்ள இலிங்கம் உருளை வடிவில் உள்ளது.

3. இக்கோயில்களில் உள்ள துவாரபாலகருக்கு நான்கு கைகள் இருக்கின்றன.

4. இக்கோயில்களில் உள்ள தூண்களில் கர்ஜிக்கும் சிங்க உருவம் இருக்காது.

**பல்லவர்காலத்துக் கலை வளர்ச்சி**

**இசை வளர்ச்சி**

நாயன்மார்களில் தலைசிறந்தவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பல்லவர் காலத்தில் வாழ்ந்தனர். இவர்கள் இயற்றிய தேவாரப்பாடல்கள் எல்லாம் இசையோடு பாடப்பட்டன.

**அப்பர் என்ற திருநாவுக்கரசர்**

இவர் ஈசனின் திருவடி எத்தன்மையானது என்பதை விளக்கி ஒரு தேவாரப் பாடல் எழுதினார். அப்பாடலில் இறைவனின் திருவடி வீணையின் இசை போன்று மகிழ்ச்சி தரக்கூடியது எனக் குறிப்பிடுகிறார். இந்தப் பாடல் பல்லவர் காலத்தில் இசை வளர்ச்சிப் பெற்று இருந்தது என்பதையும் அது மக்களுக்கு மகிழ்ச்சி கொடுத்தது என்பதையும் நமக்குத் தெரிவிக்கிறது.

சம்பந்தர் இயற்றிய தேவாரப் பாடல்களை எல்லாம் இசையோடு அந்தக் காலத்தில் பாடினர். இப்பாடல்களுக்கு இசைஅமைப்பாளராக இருந்தவர் திருநீலகண்ட பாணர் என்பவர் ஆவார். தேவாரப்பாடல்களைக் கோவில்களில பாடுபவருக்கு நெல் தானமாகக் கொடுக்கப்பட்டது என மூன்றாம் நந்திவர்மனின் திருவல்லம் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## மகேந்திரவர்மனும் இசையும்

மகேந்திரவர்மன் தனது பல்லாவரம் கல்வெட்டில் தன்னைச் 'சங்கீரண்சாதி' என்று குறிப்பிட்டுக் கொள்கிறார். சங்கீரணம் என்ற தாளத்தை மகேந்திரவர்மனே கண்டுபிடித்தார். ஆகவேதான் முதலாம் மகேந்திரவர்மன் சங்கீரண் சாதி என்ற பட்டப்பெயரைப் பெற்றார்.

குடுமியான்மலை கல்வெட்டு முதலாம் மகேந்திரவர்மனால் வெளியிடப்பட்டது. இது இசையைப் பற்றிய கல்வெட்டு ஆகும். இந்தக் கல்வெட்டு பல்வேறு வகைப்பட்ட தாளங்களைப் பற்றியும், பண்புகளைப் பற்றியும் கூறுகிறது.

## திருமயம் இசைக்கல்வெட்டு

திருமயம் மலைச்சரிவில் அமைக்கப்பட்டுள்ள சிவன் கோயிலில் முதலாம் மகேந்திரவர்மன் வெளியிட்ட இசைக்கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு 'பரிவாதினி' என்ற வீணையில் வாசிக்கக்கூடிய ராகங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த வீணையையும் இராகத்தையும் முதலாம் மகேந்திரவர்மனே கண்டுபிடித்தார் எனவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## நாட்டியம்

பல்லவர் காலத்தில் நடனமாதர்கள், ரிஷபத்தளியர், தேவர்அடியாள், தளிச்சேரி பெண்டுகள் கூத்திகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் தாங்கள் இயற்றிய பாடல்களில் இந்த நடனமாதர்களை மிகப் பெருமையாகப் குறிப்பிட்டு இருக்கிறார்கள். சித்தன்னவாசல் குகைக்கோயிலில் நடனமாதர்களின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் அக்காலத்து நடனமாதர்களின் ஆடைகளையும், ஆபரணங்களையும் அறிந்துகொள்ளப் பெரிதும் துணைபுரிகின்றன.

பல்லவர்காலத்தில் குழுநடனம் இருந்தது என்பதற்கு வைகுந்தப்பெருமாள் கோயிலில் காணப்படும் இரண்டு சிற்பங்கள் ஆதாரமாகின்றன.

அரசரின் அரண்மனையைத் தவிர கோயில்களிலும் பல்லவர்காலத்தில் நாட்டியங்கள் நடைபெற்றன. பல்லவர்காலத்தில் கோயிலில் நடனமாதர்கள் இருந்தனர் என்பதற்கு இரண்டு கல்வெட்டுக்கள் ஆதாரமாக உள்ளன. அவை :

1. காஞ்சிபுரம முக்திஸ்வரர் கோயில்
2. திருவொற்றியூர் சிவன் கோயில்

இந்த நடனமாதர்கள் தினந்தோறும் கோயிலில் நடைபெறும் பூசை சமயத்திலும் கோயில் திருவிழாக்களிலும் நடனமாடினர்.

## ஓவியம்

ஓவிய வளர்ச்சிக்குப் பல்லவர்கள் பெரிதும் பாடுபட்டனர். மகேந்திரவர்மன் ‘சித்திகாரப்புலி’ என்ற பட்டப்பெயரைப் பெற்று இருந்தார். இதில் இருந்து அவர் சித்திரத்தை வரைவதில் மிக திறமையானவராக இருந்தார் என்பது உறுதியாகிறது. ஓவியத்தைப் பற்றி நூல் எழுதும் அளவிற்கு முதலாம் மகேந்திரவர்மன் திறமை உடையவராக இருந்தார்.

பல்லவர்காலத்தில் கல்மண்டபத்திற்கும் சிற்பத்திற்கும் வர்ணம் பூசுகின்ற வழக்கம் இருந்தது. கல் மண்டபங்களையும், பல்லவர் காலத்தின் வர்ணம்பூசி அழகுபடுத்தினர்.

வடஆர்க்காடு மாவட்டம், மலையம்பட்டு என்ற கிராமத்தில் பல்லவர்காலக் குகைக்கோயில் ஒன்று உள்ளது. இக்குகைக்கோயிலில் ஓவியங்கள் காணப்படுகின்றன.

சித்தன்னவாசல் ஓவியங்களை 9-ம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும், பாண்டியர் காலத்து ஓவியங்கள் என்றும் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. இந்தச் சித்தன்னவாசலில் நடனமாதர் ஓவியங்கள், தாமரைக்குளம் ஓவியம், அரசன், அரசி ஓவியம் ஆகியவை உள்ளன.

காஞ்சி கைலாசநாதர் கோயிலில் உள்ள பல்லவர் ஓவியங்களை 1931ம் ஆண்டு டூப்ரில் கண்டுபிடித்தார். பல்லவர்கள் இசை, நாட்டியம், ஓவியம் ஆகிய நுண்கலைகளை ஆதரித்து வளர்த்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## பல்லவர் காலத்துச் சமயநிலை

பல்லவர் காலத்தில் இந்துமதத்தின் பிரிவுகளாகிய சைவமதத்தையும், வைணவ மதத்தையும் வளர்ப்பதற்காக ஒரு இயக்கம் துவங்கியது. அந்த இயக்கமே தமிழக வரலாற்றில் பக்தி இயக்கம் எனப்படுகிறது. இதன் விளைவாகத்தான் நாத்திக மதங்களாகிய புத்தமதமும், சமணமதமும் செல்வாக்கை இழந்தன. நாயன்மார்கள் சைவமதத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். வைணவமதத்தை பனிரெண்டு ஆழ்வார்கள் வளரச் செய்தனர். 63 நாயன்மார்களில் நான்கு நாயன்மார்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

1) **அப்பர் என்ற திருநாவுக்கரசர்**
2) **திருஞானசம்மந்தர்**
3) **சுந்தரர்**
4) **மாணிக்கவாசகர்**

## அப்பர்

கடலூர் மாவட்டம் திருவாமூரில் வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். இவர்தான் முதலாம் மகேந்திரவர்மனைச் சைவமதத்தில் இருந்து சமணமதத்திற்கு மாற்றினார். சமணமதத்தில் கடலூரில் இருந்த அப்பருக்கு வயிற்றுவலி நோய் ஏற்பட்டது. இந்த நோயை அவரது தமக்கை திலகவதியார் திருநீறு கொடுத்துத் தீர்த்துவைத்தார். இதன்பின் அப்பர் சிவபெருமானின் அருளை உணர்ந்தார். மீண்டும் சைவமதத்திற்கு வந்தார். அப்பர் சைவமதத்திற்குச் சென்றதை அறிந்து மகேந்திரவர்மன் கோபம் அடைந்தார். ஆகவேதான் மகேந்திரவர்மன் அப்பருக்கு பல தீங்குகளை விளைவித்தார். இருந்தாலும் அப்பர் சிவனின் அருளினால் இந்தச் சோதனைகளில் இருந்து தப்பித்தார். இதைப்பார்த்த மகேந்திரவர்மன் சிவனின் சக்தியை அறிந்துக்கொண்டார். ஆகவேதான் மகேந்திரவர்மனும் பின்னர் சமணமதத்தில் இருந்து சைவமதத்திற்கு மாறினார்.

## சம்மந்தர்

சம்மந்தர் சீர்காழியில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவரை மூன்று வயதில் சிவபெருமான் ஞானப்பாலைக் கொடுத்து ஆட்கொண்டார். சம்மந்தர் எழுதிய பாடல்கள் 12 திருமுறைகளில் முதல் மூன்று முறைகளாக அமைந்து உள்ளது. இவர்தான் பாண்டியநாடு சென்று அங்கு சமணமதத்தைத் தழுவி இருந்த பாண்டிய அரசர் நெடுமாறனை மீண்டும் சைவமதத்திற்கு மாற்றினார். இவர்தான் இயற்றிய தேவாரப்பாடல்களை இன்னிசையோடு பாடும் வழக்கத்தைக் கொண்டு இருந்தார். ஆகவேதான் சுந்தரர் தனது தேவாரப்பாடலில் சம்மந்தரைக் கூறும் போது ‘‘நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்மந்தர்’’ எனக் குறிப்பிடுகிறார். சம்மந்தரின் தேவாரப்பாடல்களில் 23 வகையான பண்கள் காணப்படுகின்றன.

## சுந்தரர்

சுந்தரர் பண்ருட்டிக்கு அருகில் உள்ள திருநாவலூர் என்ற ஊரில் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். சுந்தரரின் திருமணத்தின்போது சிவபெருமான் பிராமண முதியவர் வேடம் புனைந்து தடுத்து நிறுத்தினார். இதனால் கோபம் அடைந்த சுந்தரர் சிவபெருமானை அவர் கடவுள் என்பதை அறியாமல் வயதான பிராமணர் என்று நினைத்துகொண்டு பைத்தியக்காரன் என்று திட்டினார். இதன்பின் சிவபெருமான் தனது சுயஉருவத்தைச் சுந்தரருக்குக் காட்டினார். சிவனைப் பார்த்த சுந்தரர் மகிழ்ச்சியடைந்து சிவனைப் புகழ்ந்துபாட சிவனே அடியெடுத்து கொடுக்க வேண்டும் எனச் சுந்தரர் கேட்டார். அப்போது சிவபெருமான் ‘பித்தா’ என்று அடியெடுத்து

கொடுத்தார். உடனே சுந்தரர் தனது முதல் பாடலின் முதலஅடியாக ‘பித்தா பிறைசூடி பெருமானே அருளாளர்’ என்று பாடினார்.

சுந்தரர் சிவபெருமானைத் தனது தோழனாகக் கருதினார். சுந்தரர் தனது தேவாரத்தில் “காடவர் கோன் கழற்சிங்கன்” என்று ஒரு பல்லவ அரசரைக் குறிப்பிடுகிறார். இந்த பல்லவ அரசர் ராஜசிம்மனாக இருக்க வேண்டும் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவர் 18 ஆண்டுகள் வாழ்ந்தார்.

**ஆழ்வார்கள்**

பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார், பேயாழ்வார் இவர்கள் மூவரையும் முதல் ஆழ்வார்கள் எனக் குறிப்பிடுகின்றனர். பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்தில் பிறந்தார். பூதத்தாழ்வார் மகாபலிபுரத்தில் பிறந்தார். பேயாழ்வார் மயிலாப்பூரில் பிறந்தார். அவர்கள் மூவரும் முறையே முதல் அந்தாதி, இரண்டாம் அந்தாதி, மூன்றாம் அந்தாதி ஆகியவற்றை இயற்றினர். ஒவ்வொரு அந்தாதியிலும் 100 பாசுரங்கள் உள்ளன. இவர்களின் பாடல்கள் எளிமையானது. முதல் மூன்று ஆழ்வார்களும் சமய சகிப்புத் தன்மையுடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் திருப்பதி வெங்கடேசபெருமாள் உருவத்தில் சிவனின் அம்சங்களையும், விஷ்ணுவின் அம்சங்களையும் கண்டதாகப் பாசுரங்கள் இயற்றியுள்ளனர்.

திருமழிசைஆழ்வார் கடவுள் ஒருவரே என்றும் அக்கடவுள் விஷ்ணுவே ஆவார் என்றும் தனது வாழ்நாள் முழுவதும் போதித்தார். திருமங்கைஆழ்வார் தஞ்சைப்பகுதியில் திருவாலிநாடு என்ற சிற்றரசின் அரசனாக இருந்தார். இவர் திருட்டுத் தொழில்புரிந்து அதன்மூலம் கிடைத்த பணத்தை விஷ்ணு கோயில் கட்டுவதற்கும் அவற்றைச் செப்பனிடவும் பயன்படுத்தினார். இவர் நாகப்பட்டினத்தில் இருந்த புத்தர்கோயிலைக் கொள்ளை அடித்தார். அக்கோயிலில் இருந்த தங்க புத்தர்சிலையைத் திருடி அதை விற்று கிடைத்த பொருளைக் கொண்டு ஸ்ரீரங்கம் விஷ்ணு கோயிலின் திருப்பணியைச் செய்தார்.

இந்தத் திருமங்கைஆழ்வார் இரண்டாம் நந்திவர்மனின் சமகாலத்தவர் ஆவார். பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்து வைணவத் தொண்டு செய்தார். இவரது வளர்ப்பு மகளாக இருந்தவரே ஆண்டாள் ஆவார். ஆண்டாள் விஷ்ணுவைப் போற்றி திருப்பாதத்தைப் போற்றினர். தொண்டர்அடிபொடியாழ்வார் கி.பி. 9-ம் நூற்றாண்டில் தஞ்சாவூர் மாவட்டம், திருமந்தன்குடி என்ற ஊரில் பிறந்தார். தொண்டரடிப்பொடிஆழ்வார் திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

## குலசேகர ஆழ்வார்

இவர் ஸ்ரீராமரை விஷ்ணுவின் அவதாரம் எனத் தனதுப் பாடல்களில் குறிப்பிடுகிறார். இவர் சிதம்பரத்தில் உள்ள கோவிந்தராஜப் பெருமாளைப் புகழ்ந்து பாசுரங்கள் இயற்றியுள்ளார். பல்லவ அரசர்கள் இந்துமதத்தைச் சார்ந்திருந்தாலும், புத்தமதத்திற்கும், சமணமதத்திற்கும் ஆதரவு கொடுத்தனர். பல்லவர்காலத்தில் பக்திஇயக்கம் தழைத்ததால் தானாக சமணமதமும், புத்தமதமும் செல்வாக்கை இழக்க ஆரம்பித்தன.

## முதல் பாண்டிய பேரரசர் (கி.பி. 575 – 900)

கி.பி. 3ம் நூற்றாண்டிலிருந்து 6-ம் நூற்றாண்டுவரை தமிழகம் முழுவதையும் களப்பிரர்கள் ஆண்டனர். கி.பி. 6ம் நூற்றாண்டின் இறுதியில் கடுங்கோன் என்ற அரசன் பாண்டியநாட்டைக் களப்பிரர்களிடமிருந்து கைப்பற்றி முதல் பாண்டியப் பேரரசை ஏற்படுத்தினார். வேள்விகுடிச் செப்பேடுகள் இந்தக் கடுங்கோன் சங்க காலத்துப் பாண்டியர்கள் வழியில் வந்தவர் எனக் கூறுகிறது.

## மாறவர்மன் அவனி சூளாமணி (கி.பி. 600 – 625)

இவர் கடுங்கோவின் புதல்வர் ஆவார். இந்த அரசருக்கு தமிழைவிட சமஸ்கிருதத்தில் அதிகப் பற்று இருந்தது. ஆகவேதான் தனது பெயரைச் சமஸ்கிருதப் பெயராக வைத்துக்கொண்டார்.

## ஜெயந்த்வர்மன் என்ற சேந்தன் (கி.பி. 625-640)

சேந்தன் என்ற தமிழ்ச் சொல்லே சமஸ்கிருதத்தில் ஜெயந்தவர்மன். இவர் வானவன் எனற பட்டப்பெயரைச் சூட்டிக் கொண்டார்.

சீனப்பயணி யுவாங் சுவாங் தமிழகம் வந்த போது பாண்டிய நாட்டை இந்த ஜெயவர்மன்தான் ஆட்சி செய்து கொண்டு இருந்தார். இந்தப் பாண்டிய அரசர் ஜெயந்த்வர்மன் திருநெல்வேலி மாவட்டம் மலையிடைக்குறிச்சி என்ற ஊரில் ஓர் குகைக் கோயிலை ஏற்படுத்தினார்.

## அரிகேசரி மாறவர்மன் (கி.பி. 640-670 )

ஜெயந்த்வர்மனைத் தொடர்ந்து அரிகேசரி மாறவர்மன் பொறுப்பை ஏற்றார். அரிக்கேசரி மாறவர்மனின் வெற்றிகளைப்பற்றி வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகிறது. இந்தப் பாண்டிய அரசர் பாலை, நெல்வேலி, உறையூர், செந்நிலம் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் வெற்றி பெற்றதாகக் கூறுகிறது.

இந்த அரிகேசரி மாறவர்மன்தான் திருஞானசம்மந்தரால் சமணத்தில் இருந்து சைவமதத்திற்கு மாற்றப்பட்டவர் ஆவார்.

### கோச்சடையன் ரணதீரன் (க.பி. 670-710)

இவர் அரிகேசரி மாறவர்மனின் மகனாவார். இவரும் வானவன், செம்பியன் ஆகிய பட்டப்பெயர்களைச் சூட்டிக்கொண்டார்.

ரணதீரன் என்பது இவரது பட்டப்பெயர் ஆகும். சாளுக்கிய அரசர் முதலாம் விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தபின்னர் இந்தப் பாண்டிய அரசர் ரணதீரன் என்ற பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டார்.

### மாறவர்மன் முதலாம் ராஜசிம்மன் (கி.பி. 710-765)

இப்போரில் மாறவர்மன் முதலாம் ராஜசிம்மன் பாண்டிய அரசர் சித்திர மாயனை ஆதரித்தார். இப்பாண்டிய அரசர் பல்லவர்களின் வாரிசு உரிமைப் போரில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### பராந்தக நெடுஞ்சடையன் (765-790)

வேள்விக்குடி என்ற கிராமத்தைப் பிராமணர்களுக்குச் சேர்த்தப் பெருமை இவருக்கு உண்டு. பின்பு களப்பிரர் ஆட்சி ஏற்ப்பட்டது. சங்ககாலத்தில் இருந்த பாண்டிய அரசர் தானமாகக் கொடுத்த கிராமத்தை உரியவர்களிடம் சோர்த்த பெருமை நெடுஞ்சடையனுக்கு உண்டு. இவர் காஞ்சி ‘வாய்ப்பேரூர்’ என்ற இடத்தில் திருமாலுக்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டினார் எனக் கல்வெட்டு கூறுகிறது.

### முதலாம் வரகுணன் (கி.பி. 792-835)

முதலாம் வரகுணன் இரண்டாம் நந்திவர்மனின் மகனாகிய நந்திவர்மன் என்ற பல்லவ அரசனைத் தோற்கடித்தார். இவர் வேப்பந்தூரில் இருந்த கோட்டையை அழிவுக்குள்ளாக்கினார். இவரைப் புகழ்ந்து மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

### ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லவன் (கி.பி. 835-862)

இவர் ‘வேதவீரன்’ என்ற பட்டப்பெயரைப் பெற்றிருந்தார். சின்னமனூர் செப்பேடுகளும் தளவாய்ச் செப்பேடுகளும் இவரது பெருமையைக் கூறுகின்றன. மேலும், இவர் சேரர், சோழர், பல்லவர் ஆகிய மூவரையும் வென்றார் எனச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

### இரண்டாம் வரகுணன் (கி.பி. 862-880)

இவர் ஸ்ரீமாறன் வல்லவனின் மூத்த தம்பி ஆவார். இரண்டாம் வரகுணன் பல்லவ நாட்டைத் தாக்கினார். சோழர்கள், பல்லவர்கள், கங்கர்கள் ஆகிய மூவரும் கூட்டணி அமைத்துக்கொண்டு இந்தப் பாண்டிய அரசர் இரண்டாம் வரகுணனை எதிர்த்துப் போர் செய்தார். இப்போரில் இரண்டாம் வரகுணன் தோற்கடிக்கப்பட்டார். இதன்பின் வரகுணன் பக்தி மார்க்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

**பராந்தக வீரநாராயணன் (கி.பி. 880-900)**

இவர் ஸ்ரீமாறன், ஸ்ரீ வல்லவனின் இரண்டாவது புதல்வன். மேலும், இவன் வரகுணனின் தம்பி. இவன் 'உக்கரா' என்ற இடத்தைக் கைப்பற்றினான் எனச் சின்னமனூர் செப்பேடு குறிப்பிடுகின்றது.

பராந்தக வீரநாராயணனுக்குப் பின்னர் அவரது மகன் மூன்றாம் ராஜசிம்மன் ஆட்சிக்கு வந்தார். அதன்பின் மூன்றாம் ராஜசிம்மனின் மகன் வரகுணபாண்டியன் ஆட்சிக்கு வந்தார். கி.பி.962-ம் ஆண்டு முதல் பாண்டியப் பேரரசு ஒரு முடிவுக்கு வந்தது. பாண்டிய நாடு சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. பல்லவ வரலாற்றைத் தெரியப்படுத்தும் இலக்கியங்களை விவரி
2. பல்லவ வரலாற்றைக் கூறும் கல்வெட்டுகள், செப்பேடுகள் குறித்து எழுதுக
3. பல்லவர்களின் தோற்றம் எது? விளக்குக.
4. முதலாம் மகேந்திரவர்மனின் சிறப்புகளை விவரி
5. முதலாம் மகேந்திரவர்மனின் கலைப்பணியைக் கூறுக.
6. முதலாம் நரசிம்மவர்மன் பற்றிக் கூறுக.
7. ராஜசிம்மனின் போர் செயல்களைக் கூறுக.
8. மூன்றாம் நந்திவர்மன்- குறிப்பு வரைக
9. பல்லவர்களின் நிர்வாக முறை குறித்து எழுதுக.
10. பல்லவர் கால சமுதாயப் பிரிவுகளைக் கூறுக.
11. பல்லவர் காலத்துப் பொருளாதார நிலை பற்றி விளக்குக.
12. பல்லவர் காலத்துக் கலை மற்றும் கட்டடக்கலை பற்றி விவரி
13. பல்லவர் காலச் சமயநிலையை விளக்குக.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. பல்லவர் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளை விவரிக்க.
2. முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் ஆட்சிச் சிறப்பினை வரைக.
3. பல்லவர் காலச் சமூக, பொருளாதார நிலையை விவரித்து எழுதுக.
4. பல்லவர் கால கலை மற்றும் சமய வளர்ச்சி பற்றி விவரி.

# பாடம் 11

# சோழர்கள்

பிற்கால சோழர் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளை ஐந்து வகைகளாக பிரிக்கலாம். அவை,

1. கல்வெட்டுகள்
2. செப்பேடுகள்
3. நாணயங்கள்
4. நினைவுச் சின்னங்கள்
5. இலக்கியங்கள்

## 1. கல்வெட்டுகள்

பிற்காலச் சோழவம்சத்து அரசர்கள் ஏராளமான கல்வெட்டுக்களை வெளியிட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு சோழ அரசரும் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களை வெளியிட்டனர்.

### நன்மைகள்

1. கல்வெட்டுக்கள் காலத்தினால் அழியாத சான்றுகளாகத் திகழ்கின்றன.
2. கல்வெட்டுக்களில் இடைச்செருகல் சேர்க்க முடியாது.

### தீமைகள்

1. கல்வெட்டுக்களில் செய்திகளைப் பொறிப்பது கடினமாகும். ஆகவேதான் அச்செய்திகளை கல்வெட்டில் மிகச் சுருக்கமாகக் கூறியிருக்கின்றார்கள். சுருக்கமான அச்செய்தி சில சமயங்களில் குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது.

2. கல்வெட்டுக்களை எல்லோரும் எளிதாகப் படிக்க முடியாது. அதைப் படிப்பதற்குத் தனிப் பயிற்சி தேவைப்படுகிறது.

3. சோழர்களின் கல்வெட்டுக்கள் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் காணப்படுகின்றன. முதலாம் ராஜராஜனும் கல்வெட்டின் துவக்கத்தில் மெய்கீர்த்தி எழுதுகின்ற வழக்கத்தைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினார்.

(எ.கா)

1. முதலாம் ராஜராஜனின் மெய்க்கீர்த்தி “திருமகள் போல” என்ற சொற்றொடருடன் துவங்குகிறது. கல்வெட்டின் துவக்கத்தில் ‘திருமகள் போல்’ என்ற

வார்த்தையைப் பார்த்தால் உடனே அக்கல்வெட்டை வெளியிட்டவர் முதலாம் ராஜராஜன் என்று தெரிந்துக்கொள்ளலாம்.

2. முதலாம் ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி "திருமன்னி வளர" என்று துவங்குகிறது.

3. முதலாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி "திருமன்னி விளங்கும்" எனத் தொடங்குகிறது. இந்த மெய்க்கீர்த்தியில் வெளியிட்ட அரசரின் சாதனைகளும் அவரது முன்னோர்களின் சாதனைகளும் பட்டியலிட்டு சொல்லப்பட்டு இருக்கிறது.

**முதலாம் பராந்தன் வெளியிட்ட உத்திர மேரூர் கல்வெட்டு**

இக்கல்வெட்டுக்கள் சோழர்காலத்தில் நிலவிய கிராம ஆட்சிக்குக் கிராமசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக் குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறது.

**முதலாம் ராஜராஜன் வெளியிட்ட தஞ்சைக் கல்வெட்டுக்கள்**

தஞ்சாவூர் சிவன் கோவிலில் அன்றாட நிரவாகம் பற்றிக் குறிப்பிடுகிறது. இவ்வாறு ஆண்டு நிர்வாகச் செலவைச் செய்ய 365-கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன என்று முதலாம் ராஜராஜனின் தஞ்சைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**வீரராஜேந்திரன் வெளியிட்ட திருமுக்கூடர் கல்வெட்டு**

திருமுக்கூடர் கிராம அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த மருந்துகளைப் பற்றியும், அம்மருந்துகளின் இருப்புப் பற்றியும் குறிப்பிடுகிறது.

**மூன்றாம் ராஜராஜன் வெளியிட்ட திருவந்திபுரம் கல்வெட்டு**

இக்கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இவரை, இவரது குறுநில மன்னன் கோப்பெருஞ்சிங்கன் கைதுசெய்து சிறையில் அடைத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

**செப்பேடுகள்**

| செப்பேட்டின் பெயர் | வெளியிட்ட அரசர் |
|---|---|
| சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் | உத்தமச்சோழன் |
| அன்பில் செப்பேடுகள் | சுந்தரச் சோழன் |
| லெய்டன் செப்பேடுகள்(ஹாலந்து) | முதலாம்ராஜராஜன் |
| திருவாலங்காட்டுச் செப்பேடுகள் | முதலாம் ராஜராஜன் |
| கரந்தைச் செப்பேடுகள் | முதலாம் ராஜேந்திரன் |
| சார்லாச் செப்பேடுகள் | வீரராஜேந்திரன் |

## நாணயங்கள்

சேரர்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் நாணயங்கள் வெளியிட்டனர். இந்த நாணயங்கள் தற்போது பற்பல இடங்களில் இருந்து கிடைக்கின்றன. சோழர் காலத்து தங்க நாணயம் ‘பொன்’ என்றும் ‘மாடை’ என்றும் அழைக்கப்பட்டது. இது 72-நெல்மணி எடை உடையதாகயிருந்தது. சோழர்காலத்துச் செப்புக்காசு “ககை” என்றே அழைக்கப்பட்டது. இந்த நாணயங்களில் அரசர்களின் உருவங்கள், அவர்களின் பெயர்கள் பட்டப் பெயர்கள் மற்றும் சோழர் வம்சத்தின் சின்னம்(புலி) ஆகியவை பொறிக்கப்பட்டன. இந்த நாணயங்கள் மூலம் பல செய்திகள் கிடைக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:-

1. நாணயங்களிலிருந்து அரசனின் பட்ட பெயர்கள் கிடைக்கின்றன.

2. நாணயத்தில் உபயோகப்படுத்தியிருக்கும் உலோகத்தை வைத்துக் கொண்டு நாட்டின் பொருளாதார நிலையை அறிந்து கொள்ளலாம். ஓர் அரசர் தங்கக்காசை வெளியிட்டிருந்தால் அவரது காலத்தில் பொருளாதார நிலை நல்ல முறையில் இருந்தது என்று அறிந்து கொள்ளலாம்.

3. மூன்றாம் குலோத்துங்கன் காசு, பாண்டியநாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன.

இதை வைத்துக் கொண்டு பாண்டியநாடு மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை அறியலாம்.

## நினைவுச் சின்னங்கள்

கன்னியாகுமரியிலிருந்து கிருஷ்ணா நதிவரை உள்ள பகுதியில் சோழர்காலத்து நினைவுச் சின்னங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை கோயில்கள்தான். இந்த நினைவுச் சின்னங்கள் சமுதாயத்தையும் பண்பாட்டு வரலாற்றையும் எழுதுவதற்கு ஏராளமான செய்திகளைத் தருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கக் கோயில்கள் பின்வருமாறு:-

1. முதலாம் ராஜராஜன் கட்டிய தஞ்சை பெரியக் கோயில்

2. முதலாம் ராஜேந்திரன் செயங்கொண்டத்தில் கட்டிய கங்கைகொண்ட சோழபுரம் சிவன் கோவில்

3. முதலாம் குலோத்துங்கன் தஞ்சையில் கட்டிய சூரியன் கோயில்

4. இரண்டாம் ராஜராஜன் கும்பகோணத்திற்கு அருகில் கட்டிய தாரசுரம் சிவன்கோயில்

5. மூன்றாம் குலோத்துங்கன் கும்பகோணத்தில் கட்டிய திருபுவனம் சிவன் கோயில்.

இக்கோயில்களில் உள்ள சிற்பங்களில் இருந்து சோழர்காலத்து மக்கள் அணிந்த ஆடைகள், ஆபரணங்கள் ஆகியவற்றைத் தெரிந்துக் கொள்ளலாம்.

**இலக்கியம்**

சீவக சிந்தாமணி என்ற நூலைத் திருத்தக்கதேவர் சோழர்காலத்தில் எழுதினார். இது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. இந்நூலில் சமணமதத்தைப் பற்றிய செய்திகள் உள்ளன.

**கம்பராமாயணம்**

கம்பர் எழுதிய இராமாயணம் 12 ஆயிரம் பாடலைக் கொண்டுள்ளது. சோழர்காலத்தில் எழுதப்பட்ட இந்நூல் அக்காலத்து சமுதாயம் மற்றும் பண்பாட்டையும் படம் பிடித்துக்காட்டுகிறது.

**கலிங்கத்துப்பரணி**

இது முதலாம் குலோத்துங்கன் காலத்தில் எழுதப்பட்ட போர் இலக்கியம் ஆகும். இதில் போர் காட்சி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சோழர் காலத்தில் எவ்வாறு போர் நடந்தது என்பதை அறிந்துக்கொள்ள கலிங்கத்துப்பரணி உதவுகிறது.

**மூவருலா**

ஒட்டக்கூத்தர் மூவருலா என்ற நூலை எழுதினார். இவர் மூன்று சோழ அரசர்களுடன் நெருங்கிப் பழகினார். அவர்களின் அவைகளில் புலவராகவும் இருந்தார். எனவே அவர்களைப் பற்றி செய்திகளைத் தொகுத்து மூவருலா என்ற இலக்கியத்தைப் படைத்தார். இந்த இலக்கியத்தில் விக்கிரமச் சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன் ஆகிய மூன்று அரசர்களின் சாதனையைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்கனின் சாதனைகளை விளக்கி பிள்ளைத்தமிழ் என்ற இலக்கியத்தைப் படைத்தார்.

**கருவூர்தேவர்**

கருவூர்தேவர், முதலாம் ராஜராஜனுக்கும் முதலாம் ராஜேந்திரனுக்கும் குருவாகத் திகழ்ந்தார். தஞ்சை பெரியக் கோயிலையும் கங்கை கொண்ட சோழபுரம் சிவன் கோயிலையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

**சேக்கிழார்**

இவர் பெரியபுராணம் என்ற நூலை எழுதினார். இவர் இரண்டாம் குலோத்துங்கனின் முதல் அமைச்சராகவும், அரசவைப் புலவராகவும் இருந்தார். இவர் எழுதிய பெரியபுராணம் பன்னிரெண்டாவது திருமுறையாகக் கருதப்படுகிறது.

இந்நூல் 63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூலிலிருந்து சோழர்காலத்துச் சமுதாய நிலையைத் தெரிந்து கொள்ளலாம்.

**புத்தமித்திரர்**

இவர் புத்தமதத்தைச் சார்ந்தவர். இவர் 'வீரசோழியம்' என்ற இலக்கண நூலை எழுதிநார். இவர் வீரராஜேந்திரன் காலத்தில் வாழ்ந்தவர்.

**ஔவையார்**

ஔவையார் சோழர்காலத்தில் வாழ்ந்தவர். இவர் சங்ககாலத்து ஔவையாரிடமிருந்து வேறுபட்டவர். இவர் எழுதியன சிறிய நூல்களாகிய கொன்றைவேந்தன், ஆத்திச்சூடி ஆகிய நூல்கள். அதே சமயம் சோழர்காலச் சமுதாயமும் இவருடைய நூல்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**பட்டினத்தார்**

இவர் 'கோயில் மணிமாலை' என்ற நூலை எழுதினார். இந்த நூலில் சோழர்கலத்தில் புகழ்பெற்று இருந்த கோயில்களின் குறிப்பும் உள்ளன. அவர் சிதம்பரம், சீர்காழி, திருவொற்றியூர், காஞ்சிபுரம், திருவிடைமருதூர் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களின் சிறப்பைக் கூறுகிறார்.

**மார்க்கோபோலோ**

இவர் இத்தாலியில் இருந்து இந்தியாவிற்கு கி.பி. 13-ம் நூற்றாண்டில் வந்த பயணி ஆவார். இவர் சோழநாட்டிற்கும் வந்தார். இவருடைய பயணக்குறிப்பில் இருந்து சோழர்காலத்து ஆபரணங்கள், ஆடைகள், உணவுகள், வியாபாரம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்கிறோம்.

**விஜயாலயன் (கி.பி. 846-881)**

பிற்காலச்சோழ வம்சத்தைத் தோற்றுவித்தவர் விஜயாலயன் ஆவார். விஜயாலயன் சங்ககாலத்து சோழ அரசனாகிய கரிகாலன், செங்கன்னான் வழியில் வந்தவர் என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன. பல்லவர்களிடம் குறுநில மன்னர்களாக இருந்தவர்கள் முத்தரையர்கள். விஜயாலன் தஞ்சாவூரில் போர்க் கடவுளாகிய துர்கைக்கு ஒரு கோயில் கட்டினார் எனத் திருவாலங்காடு செப்பேடுகள் கூறுகின்றன. விஜயாலன் மேனியில் 96 விழுப்புண்கள் இருந்ததாக ஒட்டக்கூத்தர் எழுதிய மூவருலா கூறுகிறது. புதுக்கோட்டைக்கு அருகே உள்ள நார்த்தாமலை என்ற ஊரில் உள்ள ஒரு சிறுகுன்றின் மீது ஒரு அழகான சிவன் கோயிலைக் கட்டினார். விஜயாலன் கி.பி.831-ம் ஆண்டு இறந்தார். அவரது இறப்புக்குப்பின் அவரது மகன் முதலாம் ஆதித்தியன் ஆட்சிச்செய்தான்.

## முதலாம் ஆதித்தியன்

இவர் இராஜகேசரி என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.கி.பி.880-ம் ஆண்டு கும்பகோணத்துக்கு அருகே 6.கி.மீ தொலைவில் உள்ள திருபுறம்பியம் என்ற ஊரில் ஒருபோர் நடந்தது. இதன்விளைவாக பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தொண்டைமண்டலம் சோழர் ஆட்சிக்குக்கீழ் வந்தது. ஆகவே பல்லவர் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. திருபுறம்பியம் போர் வரலாற்று அடிப்படையில் மிக முக்கியமான போர் ஆகும். இந்தப் போர் தமிழக வரலாற்றை திசைதிருப்பியது என்று கூறலாம். இப்போர்தான் பல்லவ வம்சத்தின் வீழ்ச்சிக்கும் சோழவம்சத்தின் எழுச்சிக்கும் காரணமாக அமைந்தது. இதன்பின்னர் சோழமண்டலமும் தொண்டைமண்டலமும் முதலாம் ஆதித்யனின் ஆட்சிக்குக்கீழ் வந்தது.

## கொங்கு நாட்டை வெல்லுதல்

தற்போதைய ஈரோடு, கோவை ஆகிய பகுதிகள் அக்காலத்தில் கொங்கு நாடாக இருந்தன. திருபுறம்பியம் போருக்குப் பின்னர் முதலாம் ஆதித்யன் தனது கவனத்தைக் கொங்கு நாட்டின்மீது செலுத்தினார். அப்போது கொங்குநாட்டை வீரநாரயணன் என்ற பாண்டிய அரசர் ஆண்டுவந்தார். இவரை எதிர்த்து முதலாம் ஆதித்யன் போரை ஆரம்பித்தார். இதில் முதலாம் ஆதித்யன் வீரநாராயணனைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினார். இதன் விளைவாக பாண்டியன் வசம் இருந்த கொங்குநாடு சோழர் வசம் வந்தது. கொங்குநாட்டை வென்று தனது பேரரசை விரிவுப்படுத்திய பெருமை முதலாம் ஆதித்யனுக்கு உண்டு.

## முதலாம் ஆதித்யனும் சைவ சமயமும்

முதலாம் ஆதித்யன் சைவசமயத்தைச் சார்ந்தவர். இவர் சமய வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்தார். சிதம்பரம் நடராஜர் கோயிலின் கூரைக்குப் பொன் வேய்ந்தார். இவர் 48 கோயில்களைக் கட்டியதாக வரலாற்று போரறிஞர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் கூறுகிறார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை:

1. புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியம் அருகில் உள்ள கன்னனூர் சிவன் கோயில்

2. கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சீனிவாச நல்லூர் சிவன்கோயில் ஆகும்.

முதலாம் ஆதித்தனின் கற்சிலைகள் நாகை மாவட்டம் செம்மனார்கோயிலும் ஆக்கூரிலும் தஞ்சாவூர் மாவட்டம் திருகருகாவூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களில் காணப்படுகின்றன.

## முதலாம் பராந்தகனும் பாண்டியர்களும்(கி.பி. 919)

முதலாம் பராந்தகன் சோழ அரசராக இருந்தபோது பாண்டிய நாட்டின் அரசராக இருந்தவர் மூன்றாம் ராஜசிம்மன் ஆவார். முதலாம் பராந்தகன் பாண்டியர்களின் விலை மிக்க மகுடங்களைக் கைப்பற்ற பாண்டிய நாட்டின்மீது கி.பி 919ம் ஆண்டு படையெடுத்தார். இப்போரில் முதலாம் பராந்தகன் வெற்றி பெற்றான். இதன் நினைவாக முதலாம் பராந்தகன் ‘மதுரை கொண்டான்’ என்ற பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டார். வெற்றி பெற்ற இவர் மதுரை அரண்மனையில் இருந்த கருவூலத்தைக் கைப்பற்றி அதைத் திறந்து பார்த்தார். அதில் பாண்டியர்களின் மகுடங்களும் ஆபரணங்களுமில்லை. இது முதலாம் பராந்தகனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

## பராந்தகனும் இலங்கையும்

பாண்டிய அரசரின் மகுடங்களும் ஆபரணங்களும் இலங்கை அரசர் நான்காம் உதயனின் பாதுகாப்பில் இருப்பதாக முதலாம் பராந்தகன் அறிந்தார். ஆகவேதான் இந்த மகுடங்களைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு நான்காம் உதயனுக்கு ஒரு தூதுக்குழுவை முதலாம் பராந்தகன் அனுப்பினார். நான்காம் உதயன் அந்த மகுடங்களைச் சோழர் வசம் ஒப்படைக்க மறுத்துவிட்டார். இதனால் சோழநாட்டிற்கும் ஈழநாட்டிற்கும் ஒரு போர் நடந்தது. முதலாம் பராந்தகன் இலங்கைமீது படையெடுத்து நான்காம் உதயனைத் தோற்கடித்தார். தோற்றுப்போன உதயன் தனது கருவூலத்தில் இருந்த மகுடங்கள் ஆபரணங்கள் அனைத்தும் எடுத்துக்கொண்டு இலங்கையின் தென்கரைக்கு ஓடிப்போனார்.

இந்தப் போரில் முதலாம் பராந்தகன் பாண்டியனின் மகுடங்களைக் கைப்பற்ற முடியவில்லை. ஈழநாட்டை வென்ற முதலாம் பராந்தகனின் இந்த வெற்றியின் நினைவாக ஈழம் கொண்டான் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டார். இதன்படி முதலாம் பராந்தகன் மதுரையும் ஈழமும் கொண்ட சோழன் என்ற பட்டப்பெயரைப் பெற்றார். முதலாம் பராந்தகனின் இந்தப் பட்டப்பெயர்கள் ஜெயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணியில் காணப்படுகிறது.

## முதலாம் பராந்தகனும் இராஸ்டிரக்கூடரும் (கி.பி.910)

சோழர்களுக்கும் இராஸ்டிரக்கூடர்களுக்கும் இடையே வடஆற்காடு மாவட்டம் ‘திருவல்லம்’ என்ற ஊரில் போர் ஏற்பட்டது. இந்தப் போரில் முதலாம் பராந்தகன் இராஸ்டிரக்கூடர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். இராஸ்டிரக்கூடர்களினால்

சோழப்போருக்கு ஏற்பட்டிருந்த போராட்டத்தை நீக்கியவர் முதலாம் பராந்தகன் ஆவார். இதனால் தனக்கு வீரசோழர் என்ற பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டார்.

### முதலாம் ராஜராஜன் (கி.பி. 985 – 1014)

ராஜராஜனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பதாகும். இவர் சுந்தரசோழன் இரண்டாம் பராந்தகனுக்கும், வானமாதேவிக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்கு ராஜராஜன் என்ற பட்டத்தைக் கொடுத்தவர்கள் சிதம்பரம் தீட்சிதர்கள் ஆவார். ராஜராஜன் என்ற சொல்லிற்கு ‘அரசனுக்கு அரசன்’ என்று பொருளாகும். சங்ககாலச் சோழர்களில் கரிகாலன் சிறந்தவராக இருந்தார். அதுபோலப் பிற்காலத்தில் தலைசிறந்தவராக முதலாம் ராஜராஜன் திகழ்ந்தார். முதலாம் ராஜராஜனின் அடிசுவடுகளை அப்படியே பின்பற்றிப் புகழ் பெற்றவர் இவரது மகன் முதலாம் ராஜேந்திரன் ஆவார்.

முதலாம் ராஜராஜனின் வரலாற்றை அறிய கிடைக்கும் சான்றுகள் பின்வருமாறு

1. திருமகள் போல என்ற மெய்க்கீர்த்தியோடு தொடங்கும் இவரின் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள்
2. முதலாம் ராஜராஜன் வெளியிட்ட லெய்டன் செப்பேடுகள்
3. முதலாம் ராஜேந்திரன் வெளியிட்ட கரந்தைச் செப்பேடுகள்
4. ஜெயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணி
5. ஒட்டகூத்தர் எழுதிய மூவருலா

### முதலாம் ராஜராஜனும் சேரநாடும் (கி.பி 989)

முதலாம் ராஜராஜன் காலத்தில் சேர நாட்டின் அரசராக இருந்தவர் பாஸ்கர ரவிவர்மன் ஆவார். சேரநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் இடையே போர் ஏற்பட்டது. இப்போரில் முதலாம் ராஜராஜன் வெற்றிபெற்றார். இந்தப் போர் நிகழ்ச்சியை முதலாம் ராஜராஜனின் கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**“காந்தளூர் சாலை கலமறுத்தருளிய**

**கோ ராஜகேசரி வர்மன்”**

முதலாம் ராஜராஜனின் சேரநாட்டு படையெடுப்பு ஒரு கப்பற்படையொடு என்று கே.கே. பிள்ளை குறிப்பிடுகிறார். முதலாம் இராஜராஜன் கப்பற்படையொடு சென்று காந்தளூர்ப் பகுதியில் இருந்த சேரநாட்டு கப்பல்களை அழிவுக்கு உள்ளாக்கி வெற்றிபெற்றார் என்பது கே.கே பிள்ளையின் விளக்கமாகும். முதலாம் ராஜராஜன் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்று காந்தளூர் இருந்த ஆயுதக் கிடங்கை

முதலில் அழிவுக்கு உள்ளாக்கினான். சேரர்களை வலிமையிழக்கச் செய்யவேண்டும் என்பதற்கு இந்த ஆயுதச்சாலை தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இந்தப் படையெடுப்பு ஒரு தரைமார்க்க படையெடுப்பு என்பது என்.சுப்பரமணியத்தின் கருத்தாகும்.

**முதலாம் ராஜராஜனும் பாண்டிய நாடும்**

முதலாம் ராஜராஜன் காலத்தில் பாண்டிய அரசராக இருந்தவர் அமரபுஜங்கன் ஆவார். முதலாம் ராஜராஜன் அமரபுஜங்கனைத் தோற்கடித்தார் என்று இவருடைய மெய்க்கீர்த்தி கூறுகிறது. இந்தப் பாண்டியநாட்டின் வெற்றியின் நினைவாக முதலாம் ராஜராஜன் 'பாண்டியகுல சனி' என்ற பட்டப்பெயரைச் சூட்டிக் கொண்டார். மேலும் அவர் பாண்டியநாட்டின் பெயரை ராஜராஜன் மண்டலம் என மாற்றினார். இதன்பின் தனது மகன் முதலாம் ராஜேந்திரனைப் பாண்டியநாட்டின் அரசப் பிரதிநிதியாக நியமித்து விட்டு சோழநாடு வந்தார்.

**முதலாம் ராஜராஜனும் இலங்கையும் (கி.பி.991)**

இலங்கையில் முதலாம் ராஜராஜனின் சமகாலத்து அரசராக இருந்த ஐந்தாம் மகிந்தனை எதிர்த்து அவரது படை வீரர்களே கிளர்ச்சி செய்தனர். இந்தக் குழப்பமான சூழ்நிலைளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ராஜராஜன் இலங்கைமீது படையெடுத்தார்.

முதலாம் ராஜராஜன், சேரர்களையும் பாண்டியர்களையும் எதிர்த்துப் போர் செய்தபோது அவர்களுக்கு ஐந்தாம் மகிந்தன் உதவி செய்தார். ஆகவேதான் முதலாம் ராஜராஜனுக்கு ஐந்தாம் மகிந்தன்மீது கோபம் ஏற்பட்டது. இந்தக் கோபமே போராக வடிவெடுத்தது. முதலாம் ராஜராஜன் ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து இலங்கையின் வடக்குப்பகுதியைக் கைப்பற்றினார். இதனை "முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டலமும்" என மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது. இந்த வெற்றிக்குப்பின் சேரநாடு, பாண்டியநாடு, ஈழநாடு ஆகிய மூன்று மன்னர்களும் ராஜராஜனின் கீழ்வந்தனர்.

இந்த மும்முடிகளையும் பெற்ற இவர் 'மும்முடிச்சோழன்' என்ற பட்டப்பெயரைச் சூட்டிக் கொண்டார். இதன்பின் இலங்கையின் வடக்கு பகுதி 'மும்முடிச்சோழ மணடலம்' எனப்பட்டது. தான் கைப்பற்றிய வடஇலங்கை பகுதிக்குப் 'பொனருவா' என்ற நகரத்தைத் தலைநகரமாக்கினார். பின்னர் அவர் இந்தப் பெயரை 'ஜனநாத மங்களம்' என்று மாற்றினார்.

## ராஜராஜனும் மைசூரும் (கி.பி.990)

முதலாம் ராஜராஜன் கி.பி.990-ம் ஆண்டு மைசூர்மீது படையெடுத்து இராஸ்டிரகூடர்களைத் தோற்கடித்து மைசூரின் தென் பகுதியில் இருந்த கங்கபாடி, நொளம்பாடி, தடிகைபாடி ஆகிய மூன்று இடங்களைக் கைப்பற்றினார்.

## முதலாம் ராஜராஜனும் மேலைச் சாளுக்கியரும்

மேலைச்சாளுக்கிய அரசர் இரண்டாம் கைலன் முதலாம் ராஜராஜனைத் தோற்கடித்து 150 யானைகளைக் கைப்பற்றினார் என்று மேலைச் சாளுக்கிய கல்வெட்டுகள் கூறுகின்றன. இரண்டாம் தைலனுக்குப் பின்னர் சாளுக்கியர்களை முதலாம் ராஜராஜன் தோற்கடித்தார்.

தோற்றுப்போன மேலைச் சாளுக்கியர்கள் தான் சோழர்களிடம் இழந்த சில பகுதிகளை மீட்டனர். பின்னர் சோழ நாட்டிற்கும், மேலைச்சாளுக்கிய நாட்டிற்கும் எல்லைக்கோடாக துங்கபத்திரை நதி நிர்ணயிக்கப்பட்டது.

## முதலாம் ராஜராஜனும் கீழைச் சாளுக்கியரும்

கீழைச் சாளுக்கிய நாட்டில் இருந்த அரச வம்சத்தினரிடையே ஆட்சிபிடிப்பதில் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியில் சட்டப்பூர்வமான அரசர்களாகிய சக்திவர்மனும், விமலாதித்யனும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். நாடு இழந்த சத்திவர்மனும் விமலாதித்யனும் தஞ்சாவூர் வந்து ராஜராஜனிடம் அடைக்கலம் பெற்றனர். அப்போது விமலாதித்யனுக்கும் முதலாம் ராஜராஜனின் மகள் குந்தவைக்கும் இடையே காதல் ஏற்பட்டது.

இதன்பின் முதலாம் ராஜராஜன் கீழைச் சாளுக்கிய அரசைக் கைப்பற்றி சக்திவர்மனிடமும் விமலாதித்யனிடமும் ஒப்படைத்தார். இதன்பின் ராஜராஜன் தன் மகளாகிய குந்தவைக்கும், விமலாதித்யனுக்கும் இடையே இருந்த காதலைப் புரிந்துக் கொண்டு அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்தார். இந்தத் திருமணம் சோழவம்சத்தையும் கீழைசாளுக்கிய வம்சத்தையும் மிக நெருக்கமாக ஆக்கியது.

## சமயப்பணிகள்

1. முதலாம் ராஜராஜன் தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டி அவருடைய பெயரையே சூட்டினார். அக்கோயில் 'ராஜராஜேஸ்வரம்' என்று அழைக்கப்பட்டது. தற்போது அப்பெயர் மறைந்து தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் விமானம் மிக உயர்ந்தது. இது 216 அடி 73 மீட்டர் உயரம் கொண்டது.

2. சிதம்பரம் நடராஜர் கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தேவாரப் பாடல்களை முதலாம் ராஜராஜன் திருநாரையூரைச் சார்ந்த நம்பியாண்டார் நம்பி உதவியோடு அவற்றைப் புதுப்பித்தார்.

3. கர்நாடக மாநிலம் மணலூரில் முதலாம் ராஜராஜன் ஒரு விஷ்ணுக் கோயிலைக் கட்டினார்.

4. நாகப்பட்டிணத்தில் ஸ்ரீவிஜயம் என்ற நாட்டின் பேரரசர் விஜயோத்துங்கவர்மன் புத்த மடாலயங்கள் கட்டிக் கொள்ள முதலாம் ராஜராஜன் இடமும், அனுமதியும் கொடுத்தார். மேலும் அவர் இந்தப் புத்த மடாலயத்திற்கு ‘ ஆணைமங்களம்’ என்ற கிராமத்தைத் தானமாக அளித்தார். சைவராகிய இவர் விஷ்ணு கோயில் கட்டியதையும், புத்த மடாலயங்களுக்கு நன்கொடை கொடுத்ததையும் பார்க்கும் போது இவர் சமயச்சகிப்புத் தன்மை உடையவராக இருந்தார் என்று தெரிகிறது.

முதலாம் ராஜராஜன் 36-பட்டப்பெயர்களைப் பெற்று இருந்தார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை சத்திய சிகாமணி, மும்முடிச்சோழன், ஜெயங்கொண்டார், சிவபாதசேகரன், நிகரிலிச்சோழன், நித்தியவினோதன், சிங்களாந்தகன் முதலியவையாகும்.

முதலாம் ராஜராஜன் கி.பி. 1014-ம் ஆண்டு இறந்தார். அவருக்குப்பின் அவரது மகன் முதலாம் ராஜேந்திரன் ஆட்சிக்கு வந்தார்.

## முதலாம் ராஜேந்திரன் (கி.பி.1014 – 1044)

முதலாம் ராஜேந்திரனின் இயற்பெயர் மதுராந்தகன் ஆகும். இவர் முதலாம் ராஜராஜனின் புதல்வர் ஆவார். இவர் பரகேசரி என்ற பட்டப்பெயரைப் பெற்றுத் திகழ்ந்தார். முதலாம் ராஜராஜன், சேரர்களையும் மேலைச்சாளுக்கியர்களையும் எதிர்த்துப்போர் செய்ய முதலாம் ராஜேந்திரன் முழுத் துணையாக இருந்தார். முதலாம் ராஜராஜன் போர்க்களங்களில் இருந்த போதெல்லாம் சோழநாட்டின் நிர்வாகத்தைக் கவனித்து கொண்டவர் முதலாம் ரஜேந்திரன் ஆவார். இவர் தன் தந்தையின் அடிச் சுவடுகளை அப்படியே பின்பற்றிப் பெரும் புகழ் பெற்றார். முதலாம் ராஜேந்திரன் தனது தந்தையைப் போலவே சேரர்களையும் பாண்டியர்களையும் வென்றார். ஈழத்தைக் கைப்பற்றினார். கீழைச் சாளுக்கிய மன்னர்களோடு நல்லுறவு கொண்டார். மேலும், இவர் தனது தந்தையைப் போலவே ஒரு பிரம்மாண்டமான சிவன் கோயிலைக் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டினார்.

இவருக்கு முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன், வீரராஜேந்திரன் என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர். முதலாம் ராஜேந்திரன், இறப்புக்குப் பின்னர் இந்த மூன்று புதல்வர்களும் ஒருவர் பின் ஒருவராகச் சோழ பேரரசராகி நாட்டைத் திறம்பட ஆட்சி செய்தனர்.

## முதலாம் ராஜேந்திரனும், இலங்கையும் (கி.பி.1017)

இலங்கையின் வடக்குப் பகுதியை ஏற்கனவே முதலாம் ராஜராஜன் வெற்றி பெற்றார். தென் இலங்கையைக் கைப்பற்ற 11-ம் ராஜேந்திரன் 1017-ல் படையெடுத்தார். அப்போது இலங்கை அரசராக இருந்தவர் ஐந்தாம் மகிந்தன் ஆவார். முதலாம் ராஜேந்திரன் ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து இலங்கை முழுவதையும் தன் ஆட்சிக்குக் கொண்டுவந்தார். மேலும் அவர் இலங்கை அரண்மனையில் வைக்கப்பட்டு இருந்த பாண்டிய அரசர் மற்றும் அரசியின் கீரிடங்களையும் கைப்பற்றினார். அந்தக் கீரிடங்களைக் கொண்டு வந்து அவர் மதுரையில் சூட்டிக் கொண்டு அங்கே ஒரு வீராபிசேகம் செய்துகொண்டார். இலங்கை வெற்றியின் நினைவாக செய்துக் கொண்ட முதலாம் ராஜேந்திரன் இலங்கை படையெடுப்பு விவரங்களை அவர் வெளியிட்ட கரந்தச் செப்பேடுகள் நமக்கு தெரிவிக்கின்ளன.

முதலாம் ராஜேந்திரன் இலங்கையில் இருந்த புத்தக்கோயில்களை உடைத்து அவற்றில் இருந்த தங்கத்தினால் ஆன புத்தர் சிலைகளைக் கொள்ளை அடித்தார். மேலும் அவர் ஐந்தாம் மகிந்தனின் கருவூலத்தையும் கொள்ளை அடித்தார். தோற்றுப் போன இலங்கை அரசர் ஐந்தாம் மகிந்தனைக் கைது செய்து சோழ நாட்டுக்குக் கொண்டு வந்தார்.

## முதலாம் ராஜேந்திரனும் சேரநாடும் (கி.பி. 1018)

முதலாம் ராஜேந்திரன் காலத்தில் சேரநாட்டு அரசராக இருந்தவர் பாஸ்கர ரவிவர்மனே ஆவார். முதலாம் ராஜேந்திரன் சேரநாட்டின் மீது படையெடுத்தார். இப்படையெடுப்பில் முதலாம் ராஜேந்திரன் பாஸ்கர ரவிவர்மனைத் தோற்கடித்தார். அவரை மீண்டும் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார். இப்போரில் முதலாம் ராஜேந்திரனுக்கு உதவியாக இருந்தது அவரது மூத்த மகன் முதலாம் ராஜேந்திரன் ஆவார்.

## முதலாம் ராஜேந்திரனும் பாண்டிய நாடும் (கி.பி. 1020)

முதலாம் ராஜேந்திரன் பாண்டிய நாட்டின் மீது கி.பி. 1020ல் படையெடுத்தார். பாண்டிய நாடும் சோழரின் ஆதிக்கத்தின் கீழ்கொண்டுவரப்பட்டது. முதலாம்

ரஜேந்திரன் தனது மூத்த மகன் முதலாம் ராஜாதிராஜனைப் பாண்டிய நாட்டின் தனது அரசர் பிரதிநிதியாக அறிவித்து வந்தார்.

## முதலாம் ராஜேந்திரனும் கீழைச் சாளுக்கியரும்

கீழைச் சாளுக்கிய அரசர் விமாலாதித்யன் முதலாம் ராஜேந்திரன் தங்கை குந்தவையைத் திருமணம் செய்து கொண்டார். இந்த அரசத் தம்பதியினருக்குப் பிறந்த புதல்வரே ராஜராஜநரேந்திரன் ஆவார்.

மேலைச் சாளுக்கிய அரசர் ஜெயசிம்மன் ராஜராஜநரேந்திரனைக் கீழைச் சாளுக்கிய நாட்டைவிட்டு விரட்டி அடித்தார். நாடு இழந்த அவர் தனது தாய்மாமன் முதலாம் ராஜேந்திரனிடம் வந்து உதவி கேட்டார். தனது தங்கை மகன் ராஜராஜநரேந்திரனுக்குக் கீழைச்சாளுக்கிய நாட்டை வாங்கிகொடுக்க முதலாம் ராஜேந்திரன் சோழப்படையை அனுப்பினார். இந்தச்சோழப்படை ஜெயசிம்மனையும் ஏழாம் விஜயாதித்தனையும் தோற்கடித்தது. இதன் விளைவாக கீழைச்சாளுக்கிய நாடு ராஜராஜநரேந்திரனுக்கு மீட்டுக் கொடுக்கப்பட்டது.

மேலைச் சாளுக்கிய அரசர் ஜெயசிம்மனைத் தோற்கடித்த பின்னர் சோழர்ப்படை கங்கை சமவெளிப் படையெடுப்பைத் தொடங்கியது. முதலாம் ராஜேந்திரன் வெற்றியைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. கலிங்க நாட்டை வென்றார்
2. ஒட்டநாட்டை வென்றார். ஒட்டநாடு என்பது தற்போதைய ஒரிஸ்ஸா மாநிலம் ஆகும்.
3. சக்கரக் கோட்டம், பஞ்சப்பள்ளி, இந்திர பிரஸ்தம், கோசலை நாடு ஆகியவற்றையும் முதலாம் ராஜேந்திரன் வெற்றிப்பெற்றார். இந்த நான்கு இடமும் தற்போதைய மத்தியப்பிரதேச மாநிலத்தில் இருக்கிறது.
4. வங்காளத்தின் அரசர் மதுபாலனையும் முதலாம் ராஜேந்திரன் வென்றார்.
5. தண்டபுக்தி நாட்டு ரணசூரனை வென்றார்.

இந்தப் படையெடுப்பு கங்கை கொண்டசோழன் என்ற பட்டத்தைக் கொடுத்தது. மேலும், முதலாம் ராஜேந்திரன் தான் புதிதாகக் கட்டிய புதிய தலைநகரத்துக்கும் ‘கங்கை கொண்ட சோழபுரம்’ என்று பெயர் வைப்பதற்கும் இந்தப் படையெடுப்பு காரணமாக அமைந்தது. கங்கைக் கொண்ட சோழபுரத்தில் ஒரு பெரிய ஏரியை வெட்டினார். அந்த ஏரியில் கங்கையில் கொண்டு வந்த தண்ணீர் ஊற்றப்பட்டது. அந்த ஏரிக்குச் சோழநாட்டில் உள்ள கங்கை என்ற பொருளில் ‘சோழ கங்கை’ எனப் பெயரிடப்பட்டது.

## முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1071-1020)

கீழைச் சாளுக்கிய அரசர் ராஜராஜநரேந்திரனுக்கும், சோழ அரசர் முதலாம் ராஜேந்திரன் மகள் அமங்களாதேவிகக்கும் பிறந்தவர்தான் முதலாம் குலோத்துங்கன் ஆவார். இவர் தந்தை வழியில் கீழைச் சாளுக்கியர், தாய்வழியில் சோழ வம்சத்தாருக்கு உறவினர்.

சோழர் பேரரசின் அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் முதலாம் குலோத்துங்கனை ஆதரித்தனர். அவர்களின் ஆதரவோடு சோழப் பேரரசர் ஆனார். இவரும் இவருக்குப் பின்னர் வந்த சோழ அரசர்களும், தமிழக அரசர்களும் கீழைச் சாளுக்கியச் சோழர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். முதலாம் குலோத்துங்கன் ஐம்பது ஆண்டுகள் சோழநாட்டைத் திறமையுடன் ஆட்சி செய்தார்.

இவரது மெய்க்கீர்த்திகள்

1. திருமன்னி விளங்கும்
2. புகழ்மாது விளங்க,
3. ஜெயமாது விரும்ப
4. திருமகள், ஜெயமகள் திருப்புயத்திருப்ப

## முதலாம் குலோத்துங்கனும் மேலைச் சாளுக்கியர்களும் (கி.பி.1076)

மேலைச்சாளுக்கிய அரசு சகோதரர்களிடம் இருந்த பகைமையை முதலாம் குலோத்துங்கன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அவர் சோமேஷ்வரனின் ஆதரவைப் பெற்று ஒரு கூட்டணியை அமைத்தார். இதன் விளைவாக சோழர்களுக்கும் மேலைச்சாளுக்கியர்களுக்கும் போர் ஏற்பட்டது. இப்போரில் முதலாம் குலோத்துங்கன் மாபெரும் வெற்றி பெற்றார். முதலாம் குலோத்துங்கன் 1000 யானைகளைக் கைப்பற்றினார் என்று கலிங்கத்துபரணிக் குறிப்பிடுகிறது. இதன் மூலம் முதலாம் குலோத்துங்கன் சோழநாட்டிற்கு மேலைச் சாளுக்கியர்களால் ஏற்பட இருந்த போர் ஆபத்தைத் தவிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் குலோத்துங்கனும் பாண்டிய நாடும் (கி.பி 1081)

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்த பின்னர் பாண்டியர்கள் சோழரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு தங்களைக் சுதந்திர அரசர்கள் என்று பிரகடனம் செய்தனர். மேலும் அவர்கள் சோழர்களுக்கு அதுவரை கொடுத்து வந்த கப்பத்தையும் நிறுத்தினர். ஆகவே முதலாம் குலோத்துங்கன், தனது படையை வலிமைப்படுத்திக் கொண்டு இருந்த ஐந்து பாண்டிய அரசர்களையும் தோற்கடித்தார்.

வெற்றிபெற்ற முதலாம் குலோத்துங்கன் பாண்டியநாட்டைப் பாண்டியர்களிடமே ஒப்படைத்தார். அதேசமயம் அவர்கள் கப்பத்தை ஒழுங்காகச் செலுத்த வேண்டும் என்று எச்சரிக்கை செய்துவிட்டு வந்தார். இவ்வாறாக பாண்டியநாடு தொடந்து சோழர்களின் ஆதிக்கத்தின்கீழ் வைக்கப்பட்டது.

**முதலாம் குலோத்துங்கனும் சேரநாடும் (கி.பி.1081)**

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்ததும், சேரர்கள், சோழர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட முயற்சி செய்தனர். கப்பம் கட்டுவதை நிறுத்தினர். உடனே முதலாம் குலோத்துங்கன் சேரநாட்டின் மீது படையெடுத்தார். சேரர்படைக்கும் சோழர்படைக்கும் இடையே போர் இரண்டு இடங்களில் நடந்தது. அந்த இடங்கள் பின்வருமாறு;

1. திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள "விழிஞம்"
2. கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள "கோட்டாறு"

தோற்றுப்போன சேரர்கள் பின்னர் சோழர்களுக்குப் கப்பம் கட்ட ஆரம்பித்தனர். எதிர்காலத்தில் சேரர்கள் கிளர்ச்சி செய்வதைத் தடுக்க ஒரு நிலையான சோழப்படை 'கோட்டாறு' என்ற இடத்தில் வைக்கப்பட்டது.

**இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1136 – 1150)**

சோழப் பேரரசர் விக்கிரமச் சோழன் கி.பி. 1136-ம் ஆண்டு இறந்தார். இறந்ததும் அவரது மகன் இரண்டாம் குலோத்துங்கன் ராஜகேசரி என்ற பட்டப்பெயரோடு சோழப் பேரரசர் ஆனார். இவருடைய மெய்க்கீர்த்திகள் மொத்தம் ஆறாகும். இவைகள் "பூ" என்கிற மங்களச் சொல்லோடு தொடங்குகின்றன. இந்த மெய்க்கீர்த்திகளிலெல்லாம் இவருடைய ஆட்சியைப் பற்றிய புகழ்செய்திகள் இருக்கின்றன. இவரது ஆட்சிக் காலத்தில் போர்கள் ஏதும் நடக்கவில்லை. அமைதியான சூழ்நிலை இருந்தது. ஆகவேதான் இவரது காலத்தில் இலக்கியம் நன்கு வளர்ச்சி அடைந்தது.

**இரண்டாம் குலோத்துங்கனின் செயல்கள்**

1. சிதம்பரம் நடராஜன் கோயிலில் நான்கு பக்கங்களிலும் உள்ள நான்கு வீதிகளையும், இரண்டாம் குலோத்துங்கன் செப்பனிட்டு அகலப்படுத்தினர். அந்த வீதிகளில் பல மண்டபங்களைக் கட்டினார்.

2. நடராஜர் கோயில் வளாகத்தில் சிவகாமி அம்மனுக்கு தனிக்கோயில் கட்டினார்.

3. சிவகாமிக்குத் தனியாக ஒரு தேரைச் செய்து கொடுத்தார்.

4. தங்கத்தினால் ஒரு கற்பகத்தரு செய்து கொடுத்தார்.

5. நடராஜர் கோயில், சிவகாமி கோயிலுக்கு எதிரே உள்ள குளத்தை இரண்டாம் குலோத்துங்கன் வெட்டினார். இதற்குச் 'சிவகங்கைகுளம்' என்று பெயரிட்டார்.

6. இரண்டாம் குலோத்துங்கன் நடராஜர் கோயிலில் கர்ப்பகிரகத்தின் விமானத்திற்குப் பொன் முலாம் பூசினார்.

## மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178 – 1218)

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் காணப்படும் மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு, அவரது தந்தை தாரசாசுரம் சிவன் கோயிலைக் கட்டினார் என்று குறிப்பிடுகிறது. இந்தக் கல்வெட்டின் அடிப்படையில் மூன்றாம் குலோத்துங்கன் இரண்டாம் ராஜராஜனின் மகன் என்று உறுதியாகிறது. மூன்றாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள் மொத்தம் மூன்று.

1. புயல் வாய்த்து வளம் பெறுக
2. மலர் மன்னு பொழில் எழும்
3. பூ மருவிய திசை முகத்தோன்

சோழ அரசர்களிலேயே கடைசி தலைசிறந்த அரசர் மூன்றாம் குலோத்துங்கன் ஆவார்.

## மூன்றாம் குலோத்துங்கனும் பாண்டியர்களும்

## முதல்போர் (கி.பி. 1180)

பாண்டிய நாட்டின் அரசராக வீரபாண்டியன் இருந்தார். வீரபாண்டியன் சோழர்களுக்கு எதிரிகளாகிய இலங்கை அரசரோடு சேர்ந்து கொண்டதை மூன்றாம் குலோத்துங்கன் அறிந்தார். தனக்கு விசுவாசமில்லாமல் நடந்து கொண்ட வீரபாண்டியனை எதிர்த்து ஒரு போர் தொடங்கினார். இப்போரில் மூன்றாம் குலோத்துங்கன் அணி வெற்றி பெற்றது. வீரபாண்டியனும் துணைபுரிந்த இலங்கை அரசரும் தோற்கடிக்கப்பட்டனர்.

## இரண்டாவது போர் (கி.பி.1188)

முதல் அணியில் வீரபாண்டியனும் சேரர்களும் இருந்தார்கள். இரண்டாவது அணியில் விக்கிரமப் பாண்டியனும், மூன்றாவது குலேத்துங்கனும் இருந்தார்கள். இவர்களுக்கிடையே மதுரைக்குக் கிழக்கே உள்ள நெட்டூர் என்ற இடத்தின் போர் நடந்தது. இதில் மூன்றாம் குலோத்துங்கன் அணி வெற்றி பெற்றது.

## மூன்றாவது போர் (கி.பி.1202)

பாண்டிய அரசர் விக்கிரம பாண்டியன் கி.பி.1190-ல் இறந்தார். அவர் இறந்ததும் அவரது மகன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய அரசனார். அவர் சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட கிளர்ச்சி செய்தார். உடனே மூன்றாம் குலோத்துங்கன் சடையவர்மனை எதிர்த்துப் போரைத் தொடங்கினர். இப்போர் பாண்டிய நாட்டின் இரண்டு இடங்களில் நடந்தது. 1. மட்டியூர் 2. களக்கோட்டை இப்போரில் மூன்றாம் குலோத்துங்கன் வெற்றி பெற்றார். பாண்டியநாட்டின் வெற்றியின் நினைவாகத் தனக்குக் தானே சோழபாண்டியன் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டார். இதன்பின் மூன்றாம் குலோத்துங்கன் மதுரை மீனாட்சி கோவிலுக்குத் தானமாக விலைஉயர்ந்த நகைகளைக் கொடுத்தா

## சோழப் பேரரசின் வீழ்ச்சி

1. சோழர் வம்சத்தின் அரசர்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதி அரசர்கள் சோழ வம்சத்தின் மூல அரசர்கள் ஆவார்கள். இந்தச் சாளுக்கிய சோழ பெரும்பான்மையான அரசர்களின் திறமையின்மையே சோழ வம்சத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

2. இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பின் வந்த சோழர்கள் இருவருமே திறமையற்றவர்கள். அவர்களால் அளவில் பெரியதாக இருந்த சோழப் பேரரசை ஆளமுடியவில்லை. அவர்களால் சோழ வம்ச குறுநில மன்னர்களையும் அடக்கிக் கட்டுபாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. பேரரசு வீழ்ச்சி கண்டது.

3. மூன்றாம் ராஜராஜன் உரிமையற்ற அரசர் என்பதைப் பாண்டியர்களும் வேறு அரசர்களும் உணர்ந்து கொண்டனர். ஆகவேதான் அவர்கள் மூன்றாம் ராஜராஜன் காலத்தில் பலமுறை சோழநாட்டின் மீது படையெடுத்தனர். இந்தப் படையெடுப்புகள் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துவிட்டது.

4. கி.பி. 1219ம் ஆண்டு பாண்டிய அரசர் முதலாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் சோழ நாட்டைத் தாக்கினார். இந்த மாறவர்மன் சுந்தரப்பாண்டியனின் படையெடுப்பும் சோழப் பேரரசை வீழ்ச்சிப்பாதையை நோக்கி வேகமாக நடைபோடவைத்தது.

5. கி.பி. 1231ம் ஆண்டு மீண்டும் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்தார். இப்படிப் பாண்டியர்கள் சோழநாட்டின் மீது தொடர்ந்து நடத்திய படையெடுப்புகளே சோழப்பேரரசை வீழ்ச்சி அடையச் செய்தன.

6. சோழப் பேரரசின் குறுநில மன்னர்கள் விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை. ஆனால் இந்தக் குறுநில மன்னர்களே சோழப் பேரரசுக்கு எதிரிகளாக மாறி ஆபத்தை விளைவிக்க ஆரம்பித்தனர். இவர்கள் எல்லாம் தங்களைச் சுதந்திர அரசர்கள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டனர். சோழப் பேரரசோடு இருந்த உறவைத் துண்டித்துக் கொண்டனர்.

7. ஹொய்சாலர்கள் சோழர்களுக்கு எதிரிகளாக மாறினர். அவர்கள் பாண்டியர்களோடு சேர்ந்துக் கொண்டு சோழர்களைத் தாக்கினர். இதனால் சோழப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது.

8. பாண்டிய அரசர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் தென்னாடு முழுவதும் வெற்றிக்கொள்ள திட்டம் தீட்டிப் படையெடுத்தார். இந்தப் பாண்டியர் படையெடுப்பு சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது.

9. சோழநாட்டின் பொருளாதார நிலைகளை அடுத்து சோழப் பேரரசில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டதாக கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இதனால் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது. அந்தச் சிக்கலும் சோழப்பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

10. மூன்றாம் ராஜேந்திரனே சோழப்பேரரசின் கடைசி அரசராக அமைந்துவிட்டார்.

11. உலக வரலாற்றுமேதை டோபி (Toybee) என்பவர் பிறக்கின்ற ஒவ்வொரு பேரரசும் ஒரு காலக்கட்டத்தில் வீழ்ச்சி அடைந்துவிடும் என்று குறிப்பிடுகிறார். முதலாம் ராஜராஜன் காலத்தில் சோழப்பேரரசு அதன் வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடைந்தது. மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் அந்தச் சோழப்பேரரசு 1279-ம் ஆண்டு வீழ்ச்சி அடைந்தது.

## சோழர் கால நிர்வாகம்

சோழர்களின் நிர்வாக முறை திறமையானதாகவும் புகழ் மிக்கதாகவும் இருந்தது. இந்த நிர்வாகத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. மத்திய அரசாங்கம்
2. மாநில அரசாங்கம்
3. கிராம ஆட்சி

கிராம ஆட்சி சோழ நாட்டில் மிகச் சிறப்பாகத் தனித்துவம் மிக்கதாக இருந்தது. ஒரு நாட்டின் நிர்வாகம் சிறப்பாக இருக்க வேண்டுமேயானால் அந்நாட்டின்

பொருளாதாரம் நன்றாக இருக்க வேண்டும். சோழ நாட்டில் பொருளாதாரநிலை சிறப்பாக இருந்தது.

விஜயராமன் காலம் தொடங்கி முதலாம் ராஜராஜன் காலம் வரை தஞ்சாவூர் சோழர்களின் தலைநகராக இருந்தது. முதலாம் ராஜேந்திரன் காலம் தொடங்கி கடைசி அரசர் மூன்றாம் ராஜேந்திரன் காலம் வரை கங்கைகொண்டசோழபுரம் தலைநகரமாக இருந்தது. தலைநகருக்குப் பெருமை சேர்ப்பதற்காக அங்கே பிரம்மாண்டமான சிவன் கோயில்களை சோழ அரசர்கள் கட்டினர்.

**மத்திய அரசாங்கம்**

சோழ நாட்டில் அரசபதவி வம்சவழி அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஓர் அரசர் இறந்தால் அவரது மூத்த மகன் அரசராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அரசரை மக்கள் நடமாடும் தெய்வமாக கருதினர். அவருக்கு மக்கள் மரியாதை கொடுத்து அவரின் அறிவரையின்படி நடந்தனர்.

அரசருக்கு நிர்வாக உதவி செய்ய ஓர் அமைச்சரவை இருந்தது. அந்த அமைச்சர்களெல்லாம் அரசால் நிர்ணயிக்கப்பட்டனர். அரசர்கள் அமைச்சர்கள் கூறுகின்ற நல்ல ஆலோசனைகளைக் கேட்டு நாட்டை நிர்வாகம் செய்தனர்.

அரசர் முடிசூட்டிக் கொள்கின்ற நாளில் 'பாரகேசரி' அல்லது 'ராஜகேசரி' என்று பட்டப்பெயரைச் சூட்டிக் கொண்டனர். அரசருக்கு நிர்வாக உதவி செய்ய சில அதிகாரிகள் இருந்தனர். இவர்கள் அரசர் எங்கு சென்றாலும், அவருடன் கூட்டமாகச் செல்வார்கள். ஆகவேதான் அந்த அரசு அதிகாரிகளுக்கு 'உடன் கூட்டத்தார்' என்ற பெயர் ஏற்பட்டது.

சோழ நிர்வாகத்தில் பணிபுரிந்த முக்கிய அதிகாரிகள் திருவாய்கேள்வி, திருமந்திரஓலை, விடையில் அதிகாரி, பாழகாவல் அதிகாரி ஆகியோர் ஆவர்.

1. அரசர் சொல்கின்ற வாய்மொழி ஆணைகளைக் கேட்டு மனதில் பதிய வைத்து கொள்ளும் அதிகாரி 'திருவாய்கேள்வி' ஆவார்.

2. அரசரின் ஆணைகளைத் திருவாய்கேள்வி என்ற அதிகாரியிடம் கேட்டு, அதை ஆணையாக எழுத்தால் எழுதுபவர் 'திருமந்திரஓலை' ஆவார்.

3. திருமந்திரஓலை கொடுக்கும் ஆணையைக் குறிப்பிட்ட துறைக்கு அல்லது நாட்டுக்கு அனுப்பும் அதிகாரி 'விடையில் அதிகாரி' என்று அழைக்கப்பட்டார்.

4. காவல்துறையில் தலைமை அதிகாரி 'பாழக்காவல் அதிகாரி' என்று பெயர் பெற்று இருந்தார்.

மத்திய அரசின் முக்கிய வருவாயாக இருந்தது நிலவரியாகும். இந்த நிலவரியை விலக்க ஒரு வாரியம் இருந்தது. அந்த வாரியத்தில் பணிபுரிந்த அதிகாரிகளும், அவர்களின் பணிகளும், பின்வருமாறு:

*1.* **கண்காணி** *:* இவர் நிலவரி வசூலைக் கண்காணிப்பவர்.

*2.* **வரிப்பொத்தகம்** *:* வரி வசூலிக்கும் அதிகாரியின் தலைவர் 'வரிப்பொத்தகம்' என்று அழைக்கப்பட்டார்.

*3.* **முகவெட்டி** *:* வரி செலுத்த வேண்டியவரின் பெயர் பட்டியலை அகர வரிசைப்படி வைத்து இருந்த அதிகாரி 'முகவெட்டி' என்று அழைக்கப்பட்டார்.

*4.* **வரிப்பதிவேடு** *:* இந்த அதிகாரி வரிசம்மந்தமான பதிவேட்டில் கணக்கு எழுதும் அதிகாரியாக இருந்தார்.

*5.* **பட்டோலை** *:* வரிவதிப்புக்குச் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு அல்லது தனிநபருக்கு கடிதம் எழுதும் அதிகாரி பட்டோலை என்று அழைக்கப்பட்டார்.

## மாநில அரசாங்கம்

முதலாம் ராஜராஜன் காலத்து சோழப்பேரரசில் ஒன்பது மண்டலங்கள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு மண்டலமும் பலப்பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வளநாடு என்பது தற்போதுள்ள மாவட்டம் ஆகும். ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாக பிரிக்கப்பட்டிருந்தது.

பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊர் சதுர்வேதி மங்கலம் என்று பெயர் பெற்று இருந்தது. சோழர்காலத்தில் சிதம்பரம் ஒரு தலைமை ஊராகத் திகழ்ந்தது என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பிராமணர்களின் ஊரில் இருந்த நிர்வாக சபை 'சபா' என்று அழைக்கப்பட்டது. பிராமணர்கள் அல்லாதவர்கள் வாழ்ந்த ஊரில் இருந்த நிர்வாக சபை 'ஊர்' என்று அழைக்கப்பட்டது. இந்தக் கிராமசபைகள் செய்த முக்கியப்பணிகள் பின்வருமாறு:

1. வரிகள் வசூலித்தல்
2. விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்
3. கோயிலை நிர்வாகம் செய்தல்
4. நீதி வழங்குதல்

## கிராம ஆட்சி

முதலாம் பராந்தகன் வெளியிட்ட உத்திரமேடு கல்வெட்டுக்கள் இரண்டு. அவை சோழர்காலத்தில் கிராமஆட்சியை நமக்குக் காட்டுகிறது. முதல் கல்வெட்டு கி.பி.

919ல் வெளிப்பட்டது. இதில் சபை உறுப்பினராக ஆவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்தகுதிகள் பின்வருமாறு:

1. சபையின் உறுப்பினராக விரும்புபவர்கள் கால்வேலிக்குமேல் சொந்த நிலம் வைத்திருக்க கூடாது.

2. அவர் சொந்த இடத்தில் கட்டிய சொந்த வீட்டில்தான் குடியிருக்க வேண்டும்.

முதலாம் பராந்தகன் கி.பி.921-ம் ஆண்டு வெளியிட்ட உத்திரமேரூர் கல்வெட்டில் சபை உறுப்பினராக அல்லாதவர்கள் யார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1. கடந்த மூன்று ஆண்டுகளில் சபை உறுப்பினராக இருந்தால் பிறகு உறுப்பினராக முடியாது.

2. பஞ்சமா பாதகங்கள் என்று கூறப்படும் கொலை, கொள்ளை, நீதிக்குப் புறம்பான உடலுறவு, குடி மற்றும் ராஜதுரோகம் ஆகிய ஐந்து பாவங்களைச் செய்தவர்கள் உறுப்பினராக நிற்க முடியாது.

## குடவோலை முறை தேர்தல்

சபை உறுப்பினராகத் தகுதி உடையவர்களின் பெயர்கள் ஓலை நறுக்குகளால் எழுதப்பட்டது. அந்த ஓலைகள் ஒரு குடத்திற்குள் போடப்பட்டது. அந்தக் குடம் நன்கு குலுக்கப்பட்டது. அதன் பின் அந்தக் குடத்திலிருந்து எத்தனைபேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமோ அத்தனை ஓலையை எடுப்பார்கள். அப்படி எடுக்கப்பட்ட முப்பது பேரில் பனிரெண்டு பேர் பொதுவாரிய உறுப்பினர்களாகவும் பனிரெண்டு பேர் தோட்ட வாரிய உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பொன்வாரியம்**

இது கிராமத்தின் வரவுசெலவு கணக்கைக் கவனித்தது.

**பஞ்சம் வரா வாரியம்:**

இந்த வாரியம் பஞ்சகாலத்தில் நிவாரண நடவடிக்கைகள் எடுத்தது. இந்த வாரிய உறுப்பினர்கள் ‘வாரியப் பெருமக்கள்’ என அழைக்கப்பட்டனர். இந்த வாரியப் பெருமக்கள் கிராமத்தில் செய்த முக்கியப் பணிகள் வருமாறு:

1. நிலங்களைத் தரம்வாரியாகப் பிரித்து அவற்றின் விளைச்சலை அடிப்படையாக வைத்துக் கொண்டு நிலவரியை நிர்ணயித்தனர்.

2. கிராமத்தினுடைய ஏரிகள், குளங்கள், சாலைகள் ஆகியவற்றைப் பராமரித்தனர்.

3. கோயில், மருத்துவச்சாலை ஆகியவற்றிற்குத் தேவையான பணம் கொடுத்து அவற்றைக் கண்காணித்தனர்.

4. இந்தக் கிராம ஆட்சியில் கிராமத்தின் பணிகள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டிருந்தன.

## சோழர் காலத்துப் பொருளாதாரநிலை

சோழர்காலத்தில் முக்கியத் தொழிலாக விவசாயம் இருந்நது. அக்காலத்தில் நிலங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

### 1. வென்னான் வகை நிலங்கள்

விவசாயிகள் வைத்திருந்த நிலம் ‘வென்னான் வகை நிலங்கள்’ என அழைக்கப்பட்டன. இந்த நிலங்களை வைத்திருந்த விவசாயிகள் அல்லது நிலக்கிழார்கள் “நிறைக்குடிகள்” என அழைக்கப்பட்டனர்.

### 2. தர்மமாகக் கொடுத்த நிலங்கள்

1. சிவன்கோயிலுக்குத் தர்மமாகக் கொடுத்த நிலம் ‘வேததானம்’ ஆகும்.

2. விஷ்ணுக்கோயிலுக்குத் தர்மமாகக் கொடுக்கப்பட்ட நிலம் ‘திருவிடையாட்டம்’ ஆகும்.

3. சமணம் மற்றும் புத்தக்கோயிலுக்குத் தர்மமாகக் கொடுக்கப்பட்ட நிலம் “பள்ளிச்சந்தம்” ஆகும்.

ஒரு பிராமணருக்கு ஒரு முழு ஊரும் தானமாகக் கொடுக்கப்பட்டால் அந்த ஊருக்கு “ஏகப்போக பிரம்மதேயம்” என்று பெயர். தர்மமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

### 3. ஜீவித நிலங்கள்

சோழர் காலத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கு மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நிலங்கள் கொடுக்கப்பட்டன.

1. அர்ச்சனைச் செய்பவருக்குச் சம்பளத்திற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்ட நிலம் “அர்ச்சனை போகம்” என அழைத்தனர்.

2. கிராமத்தில் இருந்த வைத்தியருக்குச் சம்பளத்திற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்ட நிலம் ‘வைத்தியப்போகம்’ ஆகும்.

3. வேதங்களைச் சொல்லி கொடுத்தவருக்குக் கொடுத்த நிலம் “வேதவிருத்தி”.

இசைக்கலைஞர்களுக்கும் சம்பளத்திற்கு பதிலாகச் சோழர் காலத்தில் நிலங்களே கொடுக்கப்பட்டன. அப்படிக் கொடுத்த நிலங்கள் “காணி” என அழைக்கப்பட்டன.

1. நாட்டியம் சொல்லிக்கொடுத்த ஆசிரியருக்குக் கொடுத்த நிலம் “நட்டுவாக்காணி” .

2. கூத்தாடியவருக்குக் கொடுக்கப்பட்ட நிலம் “கூத்துக்காணி” ஆகும்.

3. தேவாரம், திருவாசகம் ஓதியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் “திருப்பதிக காணி”

4. போர்களத்தில் இறந்தவர்களின் மனைவி, குழந்தைகளுக்குக் கொடுத்த நிலம் “உதிரப்பட்டி”.

**வருமானம்**

சோழர் காலத்தில் அரசுக்கு மூன்று வகைகளில் வருமானம் கிடைத்தது.

1. பகைவர் நாட்டைத் தாக்கி வெற்றிபெற்ற பின் அங்கிருந்து கொண்டுவரும் பொருள்.

2. குறுநிலமன்னர்கள் கொடுக்கும் கப்பம்.

3. சோழர்காலத்தில் வசூலிக்கப்பட்ட சிலவரிகள்.

**நீர்ப்பாசனம்**

ஏரிகள், வாய்கால்கள், கிணறுகள் வெட்டப்பட்டன. இந்த நீர்நிலைகளை அரசாங்கமும் அமைத்து கொடுத்தது. பொதுமக்களும் அமைத்துக்கொண்டனர். குளம் வெட்டுவது, கிணறு தோண்டுவது ஆகியவை நற்செயலாகக் கருதப்பட்டது. எல்லா தருமங்களையும் விடத் தண்ணீர் தர்மத்தை உயர்வாகக் கருதினர்.

**நிலங்களை வளப்படுத்தல்**

வளமை குன்றிய நிலங்களைச் சீரமைத்த நிலங்களாக மாற்றுகின்ற பணியை அரசு, பொதுமக்கள், கிராம சபை மற்றும் கோயில் நிர்வாகம் முதலியோர் செய்தனர். அவர்களை அரசு உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துவதற்குக் பல வரிச்சலுகைகளைக் கொடுத்தது. இதன் விளைவாக தரிசு நிலங்கள் பல விவசாய நிலமாக மாறின.

**பொருட்கள்**

சோழர் காலத்தில் வியாபாரிகள் ‘ஞானதேசிகன்’, ‘திசைஆயிரத்து ஐநூற்றுவர்’ என அழைக்கப்பட்டனர். நான்கு திசைகளிலும் சென்று வியாபாரம் செய்பவர்கள் ‘ஞானதேசிகன்’ எனவும் பல திசைகளில் சென்று வியாபாரம்

செய்பவர்கள் 'திசை ஆயிரத்து ஐநூற்றுவர்' எனவும் பெயர் பெற்றனர். நகரத்தில் வாழ்ந்த வியாபாரிகள் 'நகரத்தார்கள்' என அழைக்கப்பட்டனர்.

### வெளிநாட்டு வியாபாரம்

சீனாவுடன் முதலாம் இராஜராஜன் வியாபாரத் தொடர்பு வைத்ததையும், சீனாவிற்கு ஒரு வியாபாரக் குழுவை அனுப்பி வைத்ததையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. மலேசியா, அரேபியா போன்ற நாடுகளுடன் சோழர்கள் வியாபாரத் தொடர்பு வைத்திருந்தனர். அரேபியாவிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்து அதற்குப் பதிலாகப் பட்டு, முத்து தந்தம், பாக்கு, பருத்தி ஆகியவற்றை ஏற்றுமதி செய்தனர்.

## சோழர்காலத்துச் சமுதாயநிலை

### பிராமணர்கள்

சோழர்காலச் சமுதாயத்தில் பிராமணர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பக்தியே வாழ்க்கை என்று வாழ்ந்தார்கள். ஆகவேதான் அவர்களின் நலனைக் கவனிப்பதற்காக கோயில்களில் ஆயிரக்கணக்கான அறக்கட்டளைகள் அமைக்கப்பட்டன. அவர்களுக்கு உணவு அளிப்பது புண்ணியம் என்று மக்கள் கருதினர். பெரும்பான்மை பிராமணர்கள் கோயில் அர்ச்சகர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்தனர். சில பிராமணர்கள் அமைச்சர்களாகவும் அரசு அதிகாரிகளாகவும், படைத்தலைவர்களாகவும் திகழ்ந்தனர்.

### வேளாளர்கள்

வேளாளர்கள் விவசாயத்தைச் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் செய்தனர். இவர்களுக்கு என்று தனியாக ஒரு சபை இருந்தது.

### சத்திரியர்கள்

சத்திரியர்கள் விவசாய வேலைகளைச் செய்தனர். இவர்கள் நெசவு, தச்சு வேலைகளையும் செய்தனர். இவர்கள் படைவீரர்களாகவும் திகழ்ந்து வந்தனர். வீடு கட்டுதல், கோயில் கட்டுதல், சாலைகள் அமைத்தல், கிணறு வெட்டுதல் ஆகிய வேலைகள் எல்லாம் அந்தப் பிரிவினரே செய்து வந்தனர்.

### பெண்களின் நிலை

சோழர் காலத்தில் பெண்கள் மதிப்பும், மரியாதையும் பெற்றுத் திகழ்ந்தனர். அரசுக் குலத்துப் பெண்களாகிய செம்பியன்மாதேவி, வானவன்மாதேவி, பெரியகுந்தவை ஆகியோர் சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டனர்.

### தேவராயர்கள்

தேவராயர்கள் கோயில்களில் துப்புரவு பணி, மெழுகுதல், விளக்கு ஏற்றுதல், நடனம் ஆடுதல், இசையோடு பாடல்கள் பாடுதல் ஆகிய பணிகளைச் செய்தனர்.

### வரதட்சணை

திருமணத்தில் வரதட்சணை வாங்கும் பழக்கம் இருந்தது. அந்த வரதட்சணை பணமாகவோ, வீடாகவோ அல்லது நிலமாகவோ கொடுக்கப்பட்டது.

### உடன்கட்டை ஏறுதல்

கணவன் இறந்ததும் அவருடைய உடலை எரிக்க மூட்டும் தீயில் புகுந்து மனைவியும் இறப்பது சதி எனப்பட்டது. சுந்தரச்சோழனின் மனைவி வானவன்மாதேவி சதி மேற்கொண்டு இறந்தாள். சதியின் மூலம் இறந்தவர்கள் தெய்வங்களாகக் கருதப்பட்டு வழிபட்டனர்.

### அடிமைமுறை

சோழர்காலத்தில் அடிமை முறை இருந்தது என்பதற்குக் கல்வெட்டு ஆதாரம் அதிகம் உள்ளது. மூன்றாம் ராஜராஜன் காலத்தில் கொற்கைச் சிவன் கோயிலில் நூறு அடிமைகள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அரண்மனைக்குச் சோழர்களின் சின்னமாகிய ‘புலிச்சின்னம்’ பொறிக்கப்பட்டது. ஒவ்வொரு மடத்திலும் விவசாயப்பணிகள் மற்றும் இதர பணிகள் செய்ய அடிமைகள் இருந்தனர். இவர்கள் ‘மடஅடிமைகள்’ என்று அழைக்கப்பட்டனர்.

### இடங்கைச் சாதி மற்றும் வலங்கைச் சாதி

சமுதாயத்தில் இருந்த இரண்டு பிரிவினரிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. இரண்டு பிரிவினருக்கும் இடையே பல தகராறுகள் நடந்தன. இடங்கைப் பிரிவில் 98 உட்பிரிவுகள் இருந்ததாகச் சோழர் காலத்துக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### உடையும் உணவும்

சோழர் காலத்தில் பருத்தி, பட்டு ஆகியவற்றால் உடைகள் தயாரிக்கப்பட்டன. ஊடைகளைத் தைத்து அணியும் பழக்கம் அவர்களுக்கு இருந்தது. தையல்காரரைக் கல்வெட்டுகள் “ தையன்” என்று குறிப்பிட்டுள்ளன. காதணி அணிகின்ற வழக்கம் சோழர் காலத்தில் இருந்தது. ஆண்கள் வேட்டியும், மேல் துண்டும் அணிந்தனர். செந்நெல், மூங்கில் அரிசி, பாசிப்பருப்பு, மிளகு, இஞ்சி ஆகிய பொருள்கள் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. மேலும், புளி, பொங்கல், தயிர்சாதம், நெய்சாதம், காய்கறிகள் போட்ட குழம்பு சோழர் காலத்தில் தயாரிக்கப்பட்ட உணவுகளில் குறிப்பிடத்தக்கவை.

## விளையாட்டுக்கள்

கோழிச்சண்டை, பந்து எறிதல், இசை, நாட்டியம், நாடகம் ஆகியவை சோழர்காலத்துப் பொழுதுபோக்காக இருந்தன.

## சோழர்காலத்து இலக்கிய வளர்ச்சி

சோழர்காலம் தமிழ்இலக்கியத்தில் பொற்காலமாகும். ஏனெனில் இக்காலத்தில்தான் புகழ்பெற்ற தமிழ்ப்புலவர்களாகிய கம்பர், திருத்தக்கதேவர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், சேக்கிழார், பட்டினத்தார் ஆகியோர் வாழ்ந்தனர்.

## பன்னிரு திருமுறைகள்

சம்பந்தர் எழுதிய பாடல்கள் முதல் மூன்று திருமுறையாக உள்ளன. அப்பர் எழுதிய தேவாரப் பாடல்கள் 4,5,6ம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சுந்தரரின் தேவாரப் பாடல்கள் ஏழாம் திருமுறையாக அமைந்துள்ளது. இந்த ஏழு திருமுறைகளையும் தொகுத்து வெளியிட்ட பெருமை முதலாம் ராஜராஜனைச் சாரும். எட்டாவது திருமுறையாக அமைந்திருப்பது மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம்.

9,10,11,12 ஆகிய நான்கு திருமுறைகளும் சோழர்காலத்தில்தான் தோன்றின.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் திருத்தக்கதேவர் என்ற சமணத்துறவி சீவகசிந்தாமணி என்ற நூலை எழுதினார். சிறுகாப்பியங்கள் சிலவும் சோழர் காலத்தில் தோன்றின. நீலகேசி என்ற சிறுகாப்பியம் சோழர் காலத்தில் எழுதப்பட்டது. மற்றொரு சிறுகாப்பியமாகிய சூளாமணி என்ற காப்பியத்தைத் தோலாமொழித்தேவர் என்பவர் சோழர்காலத்தில் எழுதினார்.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஜெயங்கொண்டான் என்ற புலவர் கலிங்கத்துப்பரணியை இயற்றினார். இது கலிங்க நாட்டு வெற்றியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்நூலில் இருந்து சோழர் வரலாற்றுக்குக் கிடைக்கும் செய்திகள் சில சான்றுகள்.

1. சங்ககாலச் சோழ அரசர் கரிகாலன் இமயத்தை வென்று அங்கு தனது புலிக்கொடியை நாட்டினார்.

2. மூவருலா என்ற இலக்கியத்தை ஒட்டக்கூத்தர் எழுதினார். இதில் மூன்று சோழ அரசர்களின் சாதனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. விக்கிரமசோழன்

2.இரண்டாம் குலோத்துங்கன்

3.இரண்டாம் ராஜராஜன்

3. கவிச்சக்கரவர்த்தி கம்பர் சோழர் காலத்தில்தான் வாழ்ந்தார். இவர் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

## சோழர்காலத்துக் கலை மற்றும் கட்டடக்கலை

பல்லவர்களின் கலை மற்றும் கட்டிடக்கலையைப் பின்பற்றிச் சோழர்களும் கோயில்கள் கட்டினர். கி.பி. 10ம் நூற்றாண்டில் சோழர்கள் கட்டிய கோயில்கள் அளவில் சிறியதாக இருந்தன. கி.பி. 11, 12ம் நூற்றாண்டுகளில் சோழர்கள் கட்டிய கோயில்கள் அளவில் பெரியதாக இருந்தன. முதலாம் ராஜராஜன் தஞ்சாவூரில் கட்டிய சிவன் கோயில் பெரிய கோயிலுக்கு எடுத்துக்காட்டாகும்.

### 1.நார்த்தாமலை விஜயாலயன் சோலீஸ்வரம் கோயில்

சிறிய மலையின் மீது அமைந்துள்ளது. இக்கோயில் விமானம் முழுவதும் கல்லினால் ஆனது. இங்கு மிக அழகிய விமானம் நான்கு அடுக்குகளுடன் முழுமையாக கல்லால் கட்டப்பட்டு இருக்கிறது.

இந்த விஜயாலய சோலீஸ்வரம் கோயில்களில் உள்ள துவாரப்பாலகருக்கும் இரண்டு கைகள் உள்ளன. இதிலிருந்து இந்தக் கோயில் பல்லவர்களின் கட்டிடக்கலைப் பாணியில் அமைக்கப்பட்டது என்பது உறுதியாகிறது.

### 2. கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோயில்

இக்கோயிலை முதலாம் ஆதித்தனார் கட்டினார். இங்கேயும், விமானம் ஆனது. இந்தக் கோயிலின் நான்கு முனையிலும் கல்லாளான யானைகள் காணப்படுகிறது. முருகனுக்குத் தனியாகக் கோயில் கட்டி, முருகனை வழிபட்டனர்.

### 3. மூவர் கோயில் (கொடும்பாலூர்)

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள 'கொடும்பாலூர்' என்ற இடத்தில் மூவர் கோயில் உள்ளது. இக்கோயில்கள் கி.பி. 10ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இவற்றைக் கட்டியவர் 2-ம் பராந்தனின் குடும்ப மன்னர் விக்கிரமகேசரி ஆவார். இக்கோயில்களில் விமானங்களும் கல்லால் ஆனவை. இந்த விமானங்கள் உள்ள அர்த்தநாரீஸ்வரம், தட்சிணாமூர்த்தி, கங்காதரன், கரிகாலன் ஆகிய சிற்பங்கள் மிகவும் அழகுவாய்ந்தவை.

### 4. தஞ்சைப் பெரிய கோயிலும் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலும்

முதலாம் ராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலின் வடிவத்தில் அவரது மகன் முதலாம் ராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரம் சிவன் கோயிலைக் கட்டினார். இக்கோயில் செவ்வக வடிவத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள விமானம் 186 அடி உயரம் உடையது. கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள இலிங்கம்

தஞ்சை லிங்கம் போல அளவில் பெரியது. தஞ்சை விமானத்தில் 13 அடுக்குகள் காணப்படுகின்றன. இந்தக் கோயிலுக்குள் நுழைந்தால் கோடை காலத்திலும் குளிர்ச்சியாக இருக்கும்.

### 5. தாராசுரம் சிவன் கோயில்

இதனை இரண்டாம் ராஜராஜன் கட்டினார். இங்குள்ள மண்டபத்தில் மிக அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

### 6. திருபுவனம் சிவன் கோயில்

இக்கோயிலை மூன்றாம் குலோத்துங்கன் கட்டினார். இக்கோயில் உள்ள விமானம், செங்கல் சுண்ணாம்பால் ஆனது.

சோழர்காலத்துக் கட்டிடக் கலையோடு ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளும் வளர்ச்சி அடைந்தன. சோழர் காலத்தில் செப்புத்திருமேனிகளைச் செய்து அவற்றைத் திருவிழாக்களின் போது உற்சவத்திற்காகப் பயன்படுத்தினர். இதனால் செப்புத்திருமேனிகள் செய்யும் கலையும் வளர்ந்தது.

ஒவ்வொரு கோயிலும் நாட்டியம் ஆட நடனமாதர்கள் நியமிக்கப்பட்டனர். இதனால் நாட்டியக்கலை வளர்ச்சி பெற்றது. ஆகவேதான் சோழர்கள் காலம் கலை மற்றும் கட்டிடக்கலையின் பொற்காலம் எனக் கூறப்படுகிறது.

## பயிற்சி வினாக்கள்

### ஒரு பக்க அளவில் விடை தருக

1. சோழர் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளைக் கூறுக.
2. முதலாம் ராஜராஜன் பற்றி எழுதுக.
3. முதலாம் ராஜராஜனின் போர்ச் சிறப்பை விவரி.
4. சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?
5. சோழர் கால மத்திய அரசாங்கப் பணிகளைக் கூறுக.
6. சோழர் காலப் பொருளாதார நிலையை விவரி.
7. சோழர் காலச் சமுதாய நிலையைக் கூறுக.
8. சோழர் கால இலக்கிய வளர்ச்சியை விவரி.
9. சோழர் கால கலை வளர்ச்சியை விவரி.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. சோழ அரசர்கள் குறித்து கட்டுரை வரைக.
2. சோழப் போர்கள் பற்றி விவரி
3. சோழர் கால நிர்வாக முறையை விளக்கி வரைக.
4. சோழர் கால சமூக, பொருளாதார நிலையை எடுத்துரைக்க
5. சோழர்களின் கலை, இலக்கியப் பணிகளை விவரி

# பாடம் 12

# பாண்டியர்கள்

## பாண்டியப் பேரரசின் தோற்றம்

### பாண்டியர்களின் எழுச்சி

ஆரம்பகாலத்திலிருந்து சோழர்களிடம் தங்களுடைய சுதந்திரத்தைப் பறிகொடுத்த பாண்டியர்கள், அதை மீட்பதற்குத் தொடர்ந்து முயன்றனர். இதனால் சோழ மன்னர்கள் பாண்டியர்களின் கிளர்ச்சியை அவ்வப்போது மூன்றாம் குலோத்துங்கன் திறமையாக அடக்கினான் எனலாம். சோழப் பேரரசுக்குத் திறை செலுத்தும் நாடாக இருந்த வந்த பாண்டிய அரசு கி.பி. 1218ல் மூன்றாம் குலோத்துங்கன் இறந்த பிறகு வரி செலுத்தாமல் தன்னுரிமை பெற்றது.

### சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1190-1217)

விக்கிரமபாண்டியரின் இறப்புக்குப் பிறகு அவனுடைய மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் அரியணையில் ஏறினான். இவனுடைய ஆட்சியின்போது இன்றைய திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் இவனுடைய கட்டுப்பாட்டில் இருந்துள்ளது. ஆரம்பகாலத்தில் சோழர்களுக்குக் கட்டுப்பட்டுவந்த குலசேகரப்பாண்டியன், பின்னர் பாண்டிய சுதந்திரத்தை மீட்க எதிர்த்து நின்றான். இதனால் சினம் கொண்ட மூன்றாம் குலோத்துங்கன் இவனைத் தோற்கடித்து வெற்றி கண்டான். இவ்வெற்றியின் நினைவாக மூன்றாம் குலோத்துங்கன் 'சோழப்பாண்டியன்' என்று பட்டம் சூட்டிக்கொண்டு வீராபிசேகம் செய்துகொண்டான்.

### முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216- 1238)

சடையவர்மன் குலசேகரனுக்குப் பிறகு முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மதுரையில் ஆட்சி செய்தான். தன்னிடம் சரணடைந்த மூன்றாம் இராசராசனுக்கே சோழ அரியணையைச் சுந்தரபாண்டியன் மீண்டும் வழங்கினான். வட மற்றும் தென் கொங்குநாட்டு மன்னர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாகச் சுந்தரபாண்டியனிடம் தஞ்சம் புகுந்தனர். அவர்களுடைய பிரச்சனையைத் தீர்த்ததின் விளைவாக நாட்டின் ஒரு பகுதியைப் பாண்டியநாட்டோடு சுந்தரபாண்டியன் இணைத்துக் கொண்டான். சுந்தரப்பாண்டியனுக்குப் பிறகு இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் அரியணை ஏறினான்.

## முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1268)

இரண்டாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் காலத்தில் மூன்றாம் இராசேந்திரசோழன் பாண்டியநாட்டின் மீது படையெடுத்து சுந்தரபாண்டியனைத் தோற்கடித்தான். பாண்டியப் பேரரசு சடையவர்மன் சுந்தரப்பாண்டியன் காலத்தில்தான் நன்கு வளர்ச்சி பெற்றது எனலாம். இதற்காகப் பல போர்களைச் செய்தான்.

## இலங்கையின்மேல் படையெடுப்பு

சுந்தரப்பாண்டியன் இலங்கையின்மேல் கி.பி. 1254ல் படையெடுத்துச் சென்று, அந்நாட்டின் வடபகுதியைத் தாக்கிக் கைப்பற்றினான். இலங்கையில் இருந்து திரும்பிய பாண்டிய படைகள், யானைகளையும் முத்துக்களையும் கைப்பற்றிக்கொண்டு நாடு திரும்பினான். தொடர்ந்து சுந்தரப்பாண்டியன் தெலுங்குச் சோழ மன்னன் கண்ட கோபாலனையும், காகீதிய மன்னன் கணபதியையும், பின்னர் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டு தொடர்ந்து நெல்லூரையும் கைப்பற்றினான்.

சுந்தரபாண்டியன் சைவம், வைணவம் ஆகிய இரண்டுக்குமே ஆக்கமும் ஊக்கமும் அளித்தான். சிதம்பர நடராசர் ஆலயத்துக்குப் பாண்டியன் பொன் வேய்ந்ததோடு, அக்கோயிலின் வடக்குக் கோபுரத்தையும் கட்டினான்.

முதலாம் சடையவர்மன் சுந்தரப்பாண்டியன் காலத்தில் பாண்டியப்பேரரசு வடக்கே நெல்லூர், கடப்பை ஆகிய மாவட்டங்கள் வரையிலும், தெற்கே கன்னியாகுமரி வரையிலும் பரவியிருக்கிறது.

## முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 1268-1308)

சடையவர்மன் சுந்தரபாண்டியனின் இறப்புக்குப்பிறகு பாண்டியப்பேரரசின் அரசனாக மாறவர்மன் குலசேகரன் முடிசூடிக்கொண்டான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் சோழநாடு, சேரநாடு, மகதநாடு, கொங்குநாடு, ஹொய்ளம், சிங்களம் ஆகியவை பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

மூன்றாம் இராசேந்திரச் சோழனைத் தோற்கடித்துச் சோழநாட்டைப் பாண்டியநாட்டோடு இணைத்துக் கொண்டான். 1284இல் ஒரு பெரும்படையை இலங்கைக்கு அனுப்பினான். பாண்டியர்படை இலங்கையைத் தோற்கடித்து, ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு நாடு திரும்பியது.

குலசேகரனை மணந்த மனைவியின் மூலம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்றொரு மகனும், வைப்பு மனைவியின் மூலம் சடையவர்மன் வீரபாண்டியன் என்றொரு மகனும் இருந்தான். அவர்களுக்குள் அரியணைச் சண்டை ஏற்பட்டது. அப்பொழுது தெற்கு நோக்கி படையெடுத்து வந்த டில்லி சுல்தான் அலாவூதின்

கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூரின் உதவியைச் சுந்தரபாண்டியன் வேண்டியதாகக் கூறப்படுகிறது. மாலிக்காபூரும் பாண்டியநாட்டின் மீது படையெடுத்து வந்து ஏராளமான விலையுயர்ந்தப் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றான்.

**பாண்டியர் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

1. பாண்டியர் ஆட்சியில் தோன்றிய அரசுரிமைப் போர் பாண்டியரது வீழ்ச்சிக்கு வித்திட்டது. அவர்களது ஒற்றுமையின்மையும், அயலார் படையெடுத்து வந்தபோது அவர்களை எதிர்க்கும் ஆற்றலின்மையும் பாண்டியரது வீழ்ச்சிக்கு வழிவகை செய்தது.

2. சுந்தரபாண்டியன் பழிவாங்கும் நோக்குடன் வீரபாண்டியன் காகீதிய மன்னனின் துணையை நாடினான். இங்ஙனம் பாண்டிய நாட்டைப் பங்கிட அதன் இளவரசர்களே புறப்பகையை விரும்பி வரவேற்றனர்.

3. தொடர்ந்து வந்த முஸ்லிம் படையெடுப்புக்களால் மதுரையில் அவர்களது சார்பாளர் ஆட்சி நிறுவப்பட்டது.

4. வீழ்ந்த பாண்டிய அரசு தமிழக வரலாற்றில் மீண்டும் தலைதூக்கவில்லை. தென்காசி போன்ற சிறு பகுதிகளைத் தனதாகக் கொண்டு சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் போன்ற சிற்றரசர்கள் மட்டுமே தோன்றினர்.

5. முஸ்லிம் தலையீட்டால் தோன்றிய குழப்பம் பாண்டிய நாட்டை நிலைகுலையச் செய்தது. விசயநகரப் பேரரசின் தோற்றமே இக்குழப்பத்திற்கு ஒரு முடிவு கண்டது.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. பாண்டிய அரசர்கள் பற்றி எழுதுக.
2. பாண்டியர் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. பாண்டிய பேரரசு குறித்து கட்டுரை வரைக.

# பாடம் 13

# நாயக்கர்கள்

## விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-1564)

கிருட்டிணதேவராயர் தம்மிடம் படைத்தலைவராகவும், பண்டகசாலைப் பொறுப்பாளராகவும், கருவூல அதிகாரியாகவும், வருவாய் அதிகாரியாகவும் திறமையுடன் செயலாற்றி வந்த நாகமநாயக்கரை மதுரைக்கு ஆளுநராக நியமித்திருந்தார். நாகம நாயக்கருக்கு 1495-ல் விசுவநாதன் என்றொரு மகன் பிறந்தான். கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்ற விசுவநாதன், பதினோறாவது வயதினிலேயே விசயநகரப் பேரரசின் பணியில் அமர்த்தப்பட்டான். பேரரசர் கிருட்டிணதேவராயரின் அன்பையும் ஆசியையும் பெற்றுப் பணியாற்றிக் கொண்டிருந்தான். கிருட்டிணதேவராயர் விசுவநாதரின் அரச கடமையைப் பாராட்டி மதுரைக்கு நாயக்கராக (1529) நியமித்தார்.

## திருச்சியில் திருப்பணிகள்

விசுவநாதரும் திருச்சியின் பாதுகாப்புக்கு வேண்டிய பல ஏற்பாடுகளைச் செய்ததுடன், கோயில்களையும் செப்பனிட்டார். மலைக்கோட்டைக்கு அருகில் உள்ள தெப்பக்குளத்தை வெட்டினார்.

## பஞ்சபாண்டியர்கள் கிளர்ச்சி

விசுவநாதர் திருச்சியில் இருக்கும்பொழுது, தென்பாண்டிய நாட்டில் ‘கயத்தாறு’ என்னும் ஊரைச் சுற்றி இருந்த பஞ்சபாண்டியர்கள், மதுரை நாயக்கர்களாட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். விசுவநாதரே நேரில் வந்து கிளர்ச்சியாளர்களை ஒடுக்கி அவர்களையும் தம்முடைய பாளையக்காரர்களாகச் சேர்த்துக் கொண்டார்.

## தாமிரபரணி ஆற்றங்கரைப் போர் (கி.பி. 1532)

திருவாங்கூர் மன்னர் திறை செலுத்த மறுக்கவே, பேரரசர் அச்சுதராயர் படையெடுத்து வந்து திருவரங்கத்தில் முகாமிட்டிருந்தார். 1532ல் தாமிரபரணி ஆற்றின் கரையில் நடைபெற்ற போரில், திருவாங்கூர் மன்னனையும், அவனுக்குத் துணையாக வந்த கிளர்ச்சியாளன் சாளுவ வீரநரசிம்மனையும் பேரரசுப்படைகள் தோற்கடித்தன. விசுவநாதர் திருநெல்வேலி நகரத்தை விரிவாக்கி, அதன் பாதுகாப்பைப் பலப்படுத்தினார். கம்பம், கூடலூர்ப் பகுதிகளில் ஏற்பட்ட கலகத்தை இராமபத்திர நாயக்கரை அனுப்பி ஒடுக்கினார்.

## முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1564- 1572)

1564ல் விசுவநாதர் இறந்த பின்னர், முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் மதுரை நாயக்கரானார். தும்பிச்சி நாயக்கன் என்பவன் சில பாளையக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு, பரமக்குடியைக் கைப்பற்றிக்கொண்டு, மதுரைநாயக்கருக்கு அடிபணிய மறுத்துக் கிளர்ச்சியிலங்கினான்.

மதுரைநாயக்கர், பெத்தகேசவப்பனின் மகனான சின்னகேசவப்பன் தலைமையில் ஒருபெரும் படையை அனுப்பினார். சின்னகேசவப்பனும் தும்பிச்சி நாயக்கனைத் தோற்கடித்து, அவன் தலையைத் துண்டித்தான். ஆனால், கிருட்டிணப்பர் தும்பிச்சி நாயக்கனின் இரு புதல்வர்களையும் மன்னித்து, அவர்களுக்குப் பரமக்குடியையும், பறம்பூரையும் அளித்து மற்றப் பாளையக்காரர்களுக்கு அச்சத்தை உண்டாக்கும் பொருட்டு மற்ற ஊர்களைக் கைப்பற்றினார்.

## இலங்கைப் படையெடுப்பு

இலங்கையைச் சேர்ந்த கண்டி மன்னர் திறை செலுத்தாததால் கிருட்டிணப்பர் இலங்கையின் மீதும் படையெடுத்துச் சென்றார். இருமுறை நடைபெற்ற போர்களின் இறுதியில் கண்டிமன்னன் தோற்கடிக்கப்பட்டான்.

தம்முடைய மைத்துனரான விசயகோபால நாயக்கர் தலைமையில் படையொன்றை இலங்கையில் நிறுத்திவைத்து, திறைப்பணம் முறையாகச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு கிருட்டிணப்பர் மதுரைக்குத் திரும்பினார்.

## இரண்டாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1595-1601)

இரண்டாம் கிருட்டிணப்பரும் விசயநகரத்துக் கட்டுப்பட்டே ஆண்டு வந்தார்.

## முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி. 1609- 1623)

1609ல் இறந்த முத்துகிருட்டிணப்பநாயக்கருக்கு, முத்து வீரப்பன், திருமலை, குமாரமுத்து என்ற மூன்று மகன்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவரான முத்து வீரப்பன் தந்தை இறந்த பின்னர் மதுரை நாயக்கரானார். விசயநகரப் பேரரசன் இரண்டாம் சீரங்கனைக் கொன்றுவிட்டு மதுரை, செஞ்சிநாயக்கர்களின் துணையுடன் வேலூர் சக்கராயன் பேரரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார்.

## திருமலை நாயக்கர் (கி.பி 1623-1659)

1584ல் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கருக்கு இரண்டாவது மகனாக திருமலை சவுரி நாயினு அய்யுலுகாரு பிறந்தார். 1627ல் முத்து வீரப்பர் இறந்த பின்னர் திருமலை மதுரை நாயக்கரானார். துவக்கத்தில் திருச்சியிலிருந்தே ஆட்சி செய்த

திருமலை வடக்கே இருந்துவரும் ஆபத்துக்கள் இனிக் குறைவு என்பதனாலும் புனிதமான நகரான மதுரையில் வாழ விரும்பியதாலும் 1634ல் தலைநகரைத் திருச்சியலிருந்து மதுரைக்கு மாற்றினார்.

### முதல் மைசூர்ப் போர் (கி.பி.1625)

மைசூர் மன்னன் சாமராசஉடையார், 1625ல் நந்திராசன் தலைமையில் ஒரு படையை அனுப்பி மதுரையைத் தாக்கச் செய்தார். திருமலைநாயக்கர், ராமப்பய்யன் தலைமையில் படை ஒன்றைத் திண்டுக்கலுக்கு அனுப்பினார். மைசூர் படையைக் கடுமையாக தாக்கி திண்டுக்கல்லை விடுவித்து எதிரிகளை மைசூர் வரைக்கும் கூடத் துரத்தி சென்றார். மைசூரில் இருந்து திரும்பிய வெற்றி வீரன் இராமப்பய்யனுக்கு திருமலை நாயக்கர் தகுந்த பரிசுகள் அளித்து பாராட்டினார்.

### திருவிதாங்கூர் படையெடுப்பு (கி.பி. 1634- 1635)

திருவிதாங்கூர் மன்னன் உன்னிகேரளவர்மன் கப்பங் கட்ட மறுத்தற்காகவும், தன் நாட்டை விரிவுபடுத்துவதற்காகவும், புகழைத் தேடியும் திருமலை நாயக்கர் ராமப்பய்யன் தலைமையில் படை ஒன்றை திருவிதாங்கூருக்கு அனுப்பினார். இராமப்பய்யன் இம்முறையும் வெற்றிவீரனாக மதுரை திரும்பினான்.

### இரண்டாவது மைசூர்ப் போர் அல்லது மூக்கறுப்புப் போர் (கி.பி. 1656)

பேரரசன் சீரங்கனுக்கு எதிராக சுல்தான்களைப் படையெடுக்க தூண்டிய திருமலையின் மீது ஆத்திரம் கொண்ட மைசூர் மன்னன் தன்னுடைய தளபதி தளவாய் அம்பையா தலைமையில் மதுரையை தாக்குவதற்குப் படையொன்றை அனுப்பிவைத்தான். மைசூர்ப்படை வீரர்களும் சத்திய மங்கலத்தைக் கைப்பற்றிக் கொண்டு மதுரையை நோக்கி முன்னேறினர். செல்லும் வழிகளில் தஙகளிடம் பிடிபட்ட மதுரை போர் வீரர்களையும் மற்றவர்களையும் மூக்கை அறுத்து விரட்டிவிட்டனர். அறுபட்ட மூக்குகளையெல்லாம் மூட்டை மூட்டையாக கட்டி மைசூருக்கு அனுப்பி தக்க பரிசு பெற்றனர். அப்போது நோய்வாய்ப்பட்டு இருந்த திருமலை மைசூர்ப்படையின் தாக்குதலின் இருந்து மதுரையைக் காப்பதற்கு ரகுநாத சேதுபதியின் துணையை நாடினார். சேதுபதியும் 60,000 போர் வீரர்களுடன் புறப்பட்டு மைசூர் படையைத் தாக்கினார். அப்பொழுது நடைபெற்ற கடுமையான போரில் இருதரப்பிலும் அநேக வீரர்கள் உயிரிழந்தனர். இதில் தோற்றுப்போன மைசூர் வீரர்கள் வந்த வழியே திரும்பி ஒடலானார்கள். வெற்றி பெற்ற மதுரைப் படை மைசூர் வரையும் எதிரியைத் துரத்திச் சென்றது. மதுரை வீரர்கள் பழிக்குப் பழி வாங்கும் நோக்குடன் மைசூர் வீரர்களையும் மற்றவர்களையும் மூக்கறுத்தனர்.

இந்த மூக்கறுப்புப் போரை துவங்கிய கந்தீரவ நரச நாயக்கனின் மூக்கும் அறுபட்டது. வெற்றி வீரனாக மதுரை திருமபிய ரகுநாத சேதுபதியைத் திருமலைநாயக்கர் வெகுவாக பாராட்டி மதுரைக்குக் கப்பம் கட்டுவதிலிருந்து விடுதலை அளித்ததுடன் அவருக்குத் திருமலை சேதுபதி என்னும் பட்டப் பெயரையும் சூட்டினார்.

### இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி 1659)

1659ல் திருமலை மன்னன் இறந்த பின்னர், மதுரை மன்னனான அவருடைய மகன் முத்து வீரப்ப நாயக்கன் நான்கு மாதங்களுக்குள்ளேயே இறந்து விட்டான். இவருடைய ஆட்சியின் போது மதுரை நாட்டைக் தாக்க வந்த முஸ்லிம்களுக்குப் பணம் கொடுத்து திருப்பி அனுப்பினான்.

### மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி 1682-1689)

1682ல் சொக்கநாதருக்குப் பின் அவர் மகன் அரங்ககிருட்டிண முத்து வீரப்பன் அரியணை ஏறினான். மதுரையைக் கைப்பற்ற கிழவன் சேதுபதி செய்த முயற்சியும் முறியடிக்கப்பட்டது. தில்லி சுல்தான் அனுப்பிய செருப்பு ஊர்வலத்திற்கும், இளமையும் வீரமும் மிக்க வீரப்பன் சரியான பதிலடி கொடுத்தான். வெளி ஆபத்துக்கள் மறைந்ததால் உள்நாட்டு சீர்திருத்தங்களிலும், தம் மக்கள் நலம் பேணுவதிலும் கவனம் செலுத்தினான். ஒழுக்கம் குறையாத உத்தமனாக, மக்கள் மனம் மகிழ ஆண்ட மன்னன் 1689ம் ஆண்டு மரணம் அடைந்தார்.

### ராணி மங்கம்மாள் (கி.பி. 1689-1706)

1689ல் அரங்ககிருட்டிணமுத்து வீரப்ப நாயக்கன் இறந்த போது அவனுடைய மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள். ஆண் குழந்தை ஒன்றை பெற்று பாட்டி மங்கம்மாளிடம் கொடுத்துவிட்டு தீக்குளித்து உயிர் துறந்தாள். பிறந்த மூன்றாம் மாதத்திலேயே அக்குழந்தை விசயரங்க சொக்கநாதன் என்ற பெயரில் அரியணை ஏற்றி வைக்கப்பட்டது. மங்கம்மாள் தன் பேரனுக்காக பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்யத் துவங்கினாள்.

## நாயக்கர்களின் ஆட்சி முறை

### மத்திய அரசாங்கம்

விசய நகரப் பேரரசின் ஆதிக்கம் தமிழகத்து நாயக்கர்கள் மீது முழுமையாக இருந்ததில்லை. திருமலை நாயக்கர் காலத்தில் இருந்து மதுரை, செஞ்சி, அரசுகள் சுதந்திரமாகவே செயல்பட்டன. தமிழகத்து நாயக்கர்கள் பரம்பரை அடிப்படையிலேயே முடிசூட்டிக் கொண்டனர். மூத்த மகனே பட்டத்துக்குரியவராக கருதப்பட்டான்.

ஆண்மகன் இன்றி அரசர் இறந்துவிட்டால், அவருடைய தம்பியோ அல்லது மனைவியோ முடிசூட்டப் பெற்றனர். திருமலையும் பின்னர் மீனாட்சியும் இந்த வகையில் அரசுரிமை பெற்றனர். நாயக்கர்கள் அமைச்சர் குழுவின் உதவியோடு ஆட்சி செய்தார்கள் எனினும் முழு அதிகாரத்துடன் ஆண்டார்கள்.

### அமைச்சர் குழு

நாயக்கர்களுக்கு அரசாங்கத்தை நடத்திச் செல்வதில் அமைச்சர் குழு உதவியது. தளவாய், பிரதானி, இராயசம், கணக்கன், தானாபதி ஆகியோர் அமைச்சர் குழுவில் இடம்பெற்று இருந்தனர். முதன் மந்திரியாகச் செயல்பட்ட தளவாய், நாயக்கருக்கு அடுத்தபடியாக எல்லா அதிகாரங்களையும் கைக்கொண்டிருந்தார்.

### நீதித்துறை

நீதித்துறையின் தலைவராக நாயக்கரே செயல்பட்டார். நீதி வழங்குவதில் நாயக்கருக்குச் சில நேரங்களில் தளவாயின் பிரதானியும் உதவியுள்ளனர். நடுவர்களைக் கொண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

### வருவாய்

நாயக்கர்கள் ஆட்சியில் நிலவரியே அரசின் முக்கிய வருவாயாக இருந்தது. நிலங்கள், நன்செய், புன்செய் என்று பிரிக்கப்பட்டு வரிகள் விதிக்கப்பட்டன. விளைச்சலில் அரைப்பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. பஞ்சகாலத்தில் வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டன. சொத்துவரி, வாணிக வரி, தொழில் வரி, படைக்கொடை, சமுதாயக்குழு வரி, பாசி வரி, ஏரி வரி போன்ற பல வரிகள் வசூலிக்கப்பட்டன.

### படைகள்

நாயக்கர்கள் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை முதலியன வைத்திருந்தனர். பீரங்கிப்படையும் அவர்களிடம் இருந்தது. அரெபியா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்து குதிரைகளைத் தருவித்து படையை வலுப்படுத்தினர்.

### ஆட்சிப் பிரிவுகள்

நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. விசுவநாத நாயக்கர் காலத்தில் மதுரை 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. பாளையங்களை உருவாக்குதில் அரியநாதரின் பங்கு முக்கியமானதாகும். அக்காலச் சூழ்நிலையில் பாளையப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டது. எனினும், பாளையக்காரமுறை புகுத்தப்பட்டதால், சோழ பாண்டியரின் ஆட்சிக் காலத்தில் பெயருடனும் புகழுடனும் செயல்பட்டு வந்த கிராமச் சபைகள் அழிந்து போயின.

## நாயக்கர்கள் காலத்து சமுதாய நிலை

### சாதிப் பிரிவுகள்

நாயக்கர்கள் பழமை விரும்பிகளாய் இருந்தமையால், சாதிகளைப் போற்றிப் பாதுகாப்பதைத் தங்களது கடமையாகக் கொண்டு இருந்தனர். எனவே, அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் தமிழகத்தில் சாதிகள் வேரூன்றி இருந்தன. ஒவ்வொரு சாதி மக்களும் ஊரின் தனித்தனி பகுதிகளில் குடியிருந்தனர். பார்ப்பனர்கள் வாழ்ந்த அக்ரகாரங்கள், கைக்கோளர் தெரு, கம்மாளர் தெரு, வேளாளர் தெரு, செட்டித் தெரு, பறைச்சேரி முதலியவை இருந்தன. சமுதாயத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் தொடர்ந்தது. தெலுங்கர்களும், கன்னடியர்களும் பல்வேறு சாதிகளைக் கொண்டு வந்து தமிழகத்தில் சாதிப் பிரிவுகளை மேலும் வளர்த்தனர்.

### சமயம்

நாயக்கர்கள் இந்து மதக் காவலர்களாக விளங்கினார்கள். பல கோயில்களுக்கு அறப்பணிகளும், திருப்பணிகளும் செய்துள்ளனர். மதுரையை விழாக்கள் நிறைந்த நகரமாக்கியதே நாயக்கர்கள்தான். செஞ்சிகிருட்டிணப்ப நாயக்கன் சிதம்பரம் நடராசர் கோயிலில் பெருமாள் சிலையை வைத்த போது, பெருங்கிளர்ச்சியே நடைபெற்றது. முஸ்லிம்களின் ஆதிக்கத்திலிருந்து மதுரையை மீட்ட நாயக்கர்கள், முஸ்லிம் மசூதிகளுக்கும் மானியங்கள் வழங்கி உள்ளனர். பொதுவாக நாயக்கர்கள் சமயப் பொறையுடனே ஆண்டனர். நாயக்கர்கள் ஆட்சியின் போதுதான் கிருத்துவம் தமிழகத்தில் தலைகாட்டத் துவங்கியது. இராபர்ட்-டி-நோபிலி, சான்-டி-பிரிட்டோ ஆகியோர் கிருத்துவ மதத்தைத் தமிழகத்தில் பரப்புவதில் முன்னணியில் இருந்தனர்.

திருமலை நாயக்கன் கிருத்துவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து இருந்தார்.

### பெண்களின் நிலை

பெண்கள் இல்லற வாழ்க்கையையே நல்லற வாழ்க்கையாக கொண்டு இருந்தனர். பெண்கள் கல்வி பேணப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பலர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். குமார கம்பனின் மனைவி ‘வீரகம்பராய சரிதம்’ என்ற நூலை எழுதினார். ராணி மங்கம்மாளும், மீனாட்சியும் மதுரையை ஆண்டு இருக்கின்றனர். கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறுவதும் வழக்கத்தில் இருந்தது. உடன்கட்டை ஏறாதவர்கள், தலையை மொட்டை அடித்துக் கொண்டு துன்பம் மிகுந்த வாழ்க்கையை

நடத்தினார்கள். தேவரடியார்கள் கோயில் பணிகளில் ஈடுபட்டுவந்தனர். தேவரடியார்கள் பெரும்பாலும் வேசியர்களாகவே வாழ்ந்தனர். வேசித் தொழில் தமிழகம் முழுவதும் பரவி இருந்தது.

## தொழிலும், வாணிகமும்

பெரும்பாலான மக்கள் கிராமங்களிலேயே வாழ்ந்து பயிர்த்தொழில் செய்து வந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் புரோகிதன், குடியானவன், வண்ணான், தச்சன், ஆசாரி முதலியோர் வாழ்ந்தனர். நகரங்களில் வாழ்ந்த மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்து வந்தனர். மதுரையில் நெசவுத் தொழிலும், தூத்துக்குடியில் முத்து எடுத்தலும் சிறப்பாக நடைபெற்று வந்தது. நாயக்கர்கள் காலத்தில் உள்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது.

## கல்வி

நாயக்கர்கள் காலத்தில் கோவில்களும், மடங்களும் கல்வியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தன. திண்ணைப் பள்ளிகூடங்களும் நடைபெற்று வந்தன. எனினும், அக்காலத்தில் உயர்வகைக் கல்வி பார்ப்பனர்களுக்கே உரியதாகக் கருதப்பட்டது. தமிழ்க்கல்வி தமிழகத்து மடங்களால் போற்றி வளர்க்கப்பட்டது. கிருத்துவப் பாதிரியார்களும், பள்ளியை நிறுவி கல்வியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## இலக்கியம்

நாயக்கர்கள் காலத்திலும் தமிழ் இலக்கியம், சமயச் சார்புள்ளதாகவே வளர்ந்தது. வில்லிபாரதத்தை வில்லிபுத்தூர் ஆழ்வாரும், திருப்புகழை அருணகிரி நாதரும், திருவிளையாடற்புராணத்தைப் பரஞ்சோதி முனிவரும், ஹரிச்சந்திர புராணத்தை வீர கவிராயரும், பிரபுலிங்க லீலையைச் சிவப்பிரகாச சுவாமிகளும், தாயுமானவர் பாடல்ளைத் தாயுமான சுவாமிகளும் இயற்றினர். குமரகுருபரர் அடிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம் ஆகியவற்றை இயற்றினார். உமறுப்புலவர் கம்பராமாயணத்திற்கு இணையாகக் கூறப்படும் சீறாப்புராணத்தை எழுதினார். படிக்காசுபுலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு போன்ற பல முஸ்லிம் புலவர்களும் தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்த்தனர். வீரமாமுனிவர் தேம்பாவணியையும், இலக்கண நூல்கள் சிலவற்றையும் எழுதி உள்ளார். கிருத்துவர்கள் தமிழுக்கு ஆற்றி உள்ள பணி குறிப்பிடத்தக்கது.

**கட்டடக்கலை**

நாயக்கர்கள் காலத்தில் கட்டிடக்கலை போற்றி வளர்க்கப்பட்டது. கோயில் திருப்பணியைத் தம் பெரும் பணியாகவே நாயக்கர்கள் கொண்டு இருந்தனர். சிதம்பரம், காஞ்சிபுரம் கோயில்களில் புதிதாகக் கோபுரங்கள் கட்டப்பட்டன. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலிலும், திருவண்ணாமலை கோயிலிலும் திருப்பணிகள் செய்யப்பட்டன. திட்டமிட்ட ஓர் அமைப்பில் மதுரை மீனாட்சி கோயில் விரிவடைவதற்கும் திருமலை நாயக்கன் மேற்கொண்ட முயற்சிகள் துணைபுரிந்தன. திருமலை நாயக்கர் மதுரையில் கட்டியுள்ள அரண்மனையும், வெட்டியுள்ள வண்டியூர் தெப்பக்குளமும் நாயக்கர்களின் கட்டடக் கலை மேம்பாட்டை இன்றும் உலகுக்கு எடுத்துக் காட்டி கொண்டு இருக்கின்றன.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

1. விசுவநாத நாயக்கர் குறித்து எழுதுக.
2. முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் பற்றி விவரி
3. திருமலை நாயக்கர் குறித்து எழுதுக.
4. மூக்கறுப்புப் போர் - குறிப்பு வரைக.

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. நாயக்க மன்னர்கள் குறித்து கட்டுரை வரைக.
2. நாயக்கர்களின் போர்ச் சிறப்பினை விளக்குக.
3. நாயக்க மன்னர்களின் ஆட்சி முறை குறித்து விவரி
4. நாயக்கர் காலத்துச் சமுதாய நிலை குறித்து கட்டுரை வரைக.

# பாடம் 14

# ஐரோப்பியர்கள் காலம்

## 1. ஐரோப்பியர்

நாயக்கர், மராட்டியர் ஆகியோரது வீழ்ச்சிக்குப் பின் தமிழகம் போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரது வாணிகச் சந்தையாகவும், அரசியல் போராட்டக்களமாகவும் ஆகியது. கோவாவைப் போர்ச்சுக்கீசியரும், புதுச்சேரியைப் பிரெஞ்சுக்காரர்களும், நாகப்பட்டினத்தை டச்சுக்காரர்களும், சென்னையை ஆங்கிலேயர்களும் தங்கள் களங்களாகக் கொண்டனர்.

### 1. போர்ச்சுக்கீசியர்

இந்தியாவுக்குள் முதன் முதல் அடியெடுத்து வைத்த ஐரோப்பியர் போர்ச்சுக்கீசியர் ஆவர். கடலாதிக்கம் பெறவும், கிருத்துவ சமயப் பரப்புதலுக்கு களம் காணவும் கி.பி. 1498ல் போர்ச்சுக்கீசியர் இந்திய மேற்குக் கடற்கரையை வந்தடைந்தனர். தொடக்கக் காலத்தில் கோவாவையும், பின்னர் நாகப்பட்டினத்தையும் சாந்தோமையும் அவர்கள் தங்கள் களங்களாகக் கொண்டனர்.

### 2. டச்சுக்காரர்கள்

கி.பி. 1595ல் வாணிகக் கப்பல்களுடன் கிழக்கு நாடுகளை, நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்த டச்சுக்காரர்களின் இந்திய வரவு, போர்ச்சுக்கீசியர்களுடன் நடத்திய போராட்டங்களில் கி.பி 1658ல் தூத்துக்குடியையும், 1659ல் நாகப்பட்டினத்தையும் கைப்பற்றினர். நாகப்பட்டினம் டச்சுக்காரர்களின் தலைநகரமாக மாறியது.

### 3. ஆங்கிலேயர்

கி.பி. 1639ல் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை உருவாக்கி வாணிகத்தை விரிவுபடுத்த தொடங்கிய ஆங்கிலேயக் கிழக்கு .இந்தியக் கம்பெனி உளநாட்டு அரசியலில் தலையிட்டுத் தம் போர் திறனையும் பொருள் பலத்தையும் வெளிப்படுத்தியது. கி.பி. 17ம் நூற்றாண்டின் இறுதிக்குள் சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்கள் ஆங்கிலேயர்களின் மையங்களாகின.

### 5. பிரெஞ்சுக்காரர்கள்

கி.பி. 1664ல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி முதன்முதலில் தோற்றுவிக்கப்பட்டது. கி.பி. 1740ல் டூப்ளேவின் தலைமைக்குப் பின் அது தன்

வலிமையைப் பெருக்கி நின்றது. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பு முழுவதையும் மேற்கொள்ளும் நிலைக்கு உயர்ந்தது. 1947 ஆகஸ்ட் 15 வரை இந்தியா முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது.

## பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரசியலும் தமிழகத்தின் சமூக நிலையும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியானது இமயம் முதல் குமரி வரையிலும், சட்லெஜ் முதல் பிரமபுத்திரா வரையிலும் விரிவடைந்திருந்தது. வெல்லெஸ்லி பிரபுவின் காலத்தில் டில்லி, அயோத்தி, மைசூர், ஐதராபாத், கர்நாடகம், சூரத், தஞ்சாவூர் ஆகிய பகுதிகள் அனைத்தும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்தன.

### 1.ஒற்றுமையை ஏற்படுத்தியமை

ஆங்கிலேயரின் ஆட்சியால் தோன்றிய நன்மைகளுள் குறிப்பிடத்தக்கவை சிதறிக் கிடந்த இந்தியாவில் ஒருமைப்பாட்டை உருவாக்கியதாகும்.

### 2. கல்விச் சீர்திருத்தம்

நாடு முழுவதும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் நிறுவித் தாய்மொழி அறிவையும், ஆங்கிலக் கல்வி பயிலும் வாய்ப்பையும் ஏற்படுத்தினர். 1857ல் சென்னையில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. சென்னை அரசினர் உயர்நிலைப்பள்ளி மாநிலக்கல்லூரி ஆக்கப்பட்டது. ஆங்கிலேய அரசின் இந்த நடவடிக்கைகள், இந்திய எல்லைக்குள் அடைக்கப்பட்டு கிடந்த மக்களை வெளியுலகை எட்டிப்பார்க்கச் செய்து அவர்களின் சிந்தனையைத் தூண்டின.

### 3. நாணயங்கள்

தமிழகத்தில் பலவகையான நாணயங்கள் புழக்கத்தில் இருந்நது. நட்சத்திர வராகன்கள், ஆர்க்காட்டு ரூபாய்கள், மைசூர் மொகராக்கள், வெள்ளி டாலர்கள், ஐதாரி வராகன்கள், இராசகோபால் பணங்கள் ஆகிய நாணயங்கள் மக்கள் கைகளில் நடமாடி வந்தது. ஆங்கிலேயர்களின் ஆட்சியின்படி இந்த நாணயங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான ரூபாய் நாணயங்கள் புழக்கத்தில் கொண்டு வரப்பட்டது.

### 4. சமய வழிபாட்டுக்கு முன்னுரிமை

இந்தியர்கள் தங்கள் பழக்கவழக்கங்களையும், சடங்குகளையும் பின்பற்ற ஆங்கிலேய ஆட்சியினர் அனுமதித்தனர். இந்துக்களின் விழாக்களுக்கும், சமய வழிபாட்டு மரபுகளுக்கும் பெரும் மதிப்பு கொடுத்தனர்.

## 5. சமுதாயப் புனரமைப்பு

நேர்த்திக் கடனுக்காகக் குழந்தைகளைக் கங்கையில் எறியும் சிசுக்கொலை, இறந்த கணவனின் பிணத்துடன் மனைவியை எரிக்கும் உடன்கட்டை ஏற்றுதல், குழந்தை மணம் போன்ற சமுதாயக் கொடுமைகள் சட்டத்தின் வாயிலாகக் களையப்பட்டன.

### நிர்வாகச் சீரமைப்பு

பட்ஜெட் எனப்படும் வரவு-செலவுத் திட்டமுறை கி.பி. 1860-ல் ஏற்படுத்தப்பட்டது. இதனால் மாநில அரசுகள் வருவாய்க்குத் தகுந்தாற்போலச் செலவு செய்யுமாறு நெறிப்படுத்தப்பட்டன.

### செய்தித்துறை

சென்னையில் முதல் அச்சுக்கூடம் 1711-ல் கிறித்தவப் பாதிரிகளால் அமைக்கப்பட்டது. அவ்வச்சுக்கூடத்தினின்றும் விவிலிய வேதநூல் புதிய ஏற்பாட்டின் தமிழ்ப்பதிப்பு ஒன்று வெளிவந்தது. ‘மதராஸ் கெஜட்’ என்னும் ஒரு பத்திரிக்கையும், கூரியர் என்னும் ஒரு பத்திரிகையும் அரசாங்கச் செய்திகளை ஏற்றுக் கொண்டு வெளிவந்தன.

‘மதராஸ் மெயில்’ என்னும் ஆங்கிலப் பத்திரிக்கைகள் முதல் பதிப்பு 1878 டிசம்பர் 14ம் நாள் வெளிவந்தது. ‘சுதேசமித்ரன்’ என்னும் தமிழ்நாளேடு 1880ல் தொடங்கப்பட்டது.

### ஆட்சித் துறை

கி.பி.1882ம் ஆண்டு மே மாதம் ரிப்பன் பிரபு கொண்டு வந்த சட்டம் நகரசபைகளை உருவாக்கி மக்களாட்சி முறையை இந்தியர்கள் பழகிக் கொள்ள வாய்ப்பளித்தது. கல்வி, உடல்நலம், போக்குவரத்துத் தடங்கள், குடிநீர் போன்ற வசதிகளை மக்களுக்குச் செய்துதர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### இலக்கியத்துறை

ஆங்கிலமொழிப் பயிற்சி புதுக்கவிதை, புதினம், சிறுகதை, மொழியியல், மொழிபெயர்ப்புத் துறை, ஒப்பீட்டுத் துறை போன்ற புதிய இலக்கியத் துறைகள் வளர வழிகாட்டி நின்றது. திருக்குறள், திருவாசகம் போன்ற சிறந்த நூல்களை ஐரோப்பியர்கள் தம் மொழிகளில் மொழி பெயர்த்துத் தமிழின் பெருமையைத் தரணியெங்கும் அறியச் செய்தனர்.

## புதைபொருள் ஆய்வுத் துறை

சிந்துவெளி, அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், சாயர்புரம், பல்லாவரம், வல்லம் போன்ற இடங்களில் புதைபொருள் ஆய்வு நடத்தித் தமிழக வரலாற்று மரபகளையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகம் அறியச் செய்த பெருமை ஹுராஸ் பாதிரியார், ஜொய்னர், புரூஸ்.ஃ.பூட் போன்ற அயல்நாட்டு அகழ்வாராய்ச்சியாளர்களையே சாரும்.

## நீதித்துறை

கி.பி.1801ல் சென்னையில் தலைமை நீதிமன்றம் நிறுவப்பட்டது. ஊரவை மன்றங்கள் முதல் உயர்நீதிமன்றங்கள் வரை பல படிநிலைகள் அமைக்கப்பட்டன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என யாவரும் உணருமாறு நீதி வழங்கப்பட்டது.

## வருவாய்த்துறை

சென்னை மாநிலத்திற்கெனத் தனி வருவாய்த் துறைக் கழகம் நிறுவப்பட்டு, அத்துறையில் காணப்பட்ட சீர்கேடுகள் அகற்றப்பட்டன. மன்னர்களாலும், பாளையக்காரர்களாலும் இடம்தோறும் மாறுபட்டு விதிக்கப்பட்ட வரி விதிப்பு முறைகள் ஒழுங்காகச் சீரமைக்கப்பட்டன. இதனால் குடிமக்கள் அரசுக்கு நேரடியாக வரிகட்டும் வாய்ப்பைப் பெற்றனர்.

## தொழில்துறை

தொழிலாளர்கள் வேலை நேரத்தைக் குறைக்கவும், பெண்டிர், சிறுவர் ஆகியோரின் வேலை நேரத்தை வரையறுக்கவும் கி.பி.1881, 1891ம் ஆண்டுகளில் தொழிலாளர் நலச்சட்டங்கள் இயற்றப்பட்டன.

# பயிற்சி வினாக்கள்

## ஒரு பக்க அளவில் விடை தருக

1. தமிழகம் வந்த ஐரோப்பியர் பற்றி விவரி
2. ஐரோப்பியர் கல்வி, நீதித் துறைகளில் செய்த சீர்திருத்தங்களைக் கூறுக.

## மூன்று பக்க அளவில் விடை தருக.

1. ஐரோப்பியர் வரவு பற்றி விவரி
2. ஐரோப்பியர் செய்த சீர்திருத்தங்களை விவரிக்க.

# பாடம் 15

# இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு

இந்தியாவின் விடுதலைப் போராட்ட நிலைகளைப் பொதுமக்களின் ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பகுப்பர் வரலாற்றாசிரியர்கள்.

1) காங்கிரசுக்கு முந்தைய காலம்
2) காந்தியடிகளுக்கு முந்தைய காலம்
3) காந்தியடிகள் காலம்

## காங்கிரசுக்கு முந்தைய காலம்

தமிழகத்தில் காங்கிரசுக்கு முன் தோன்றிய புரட்சி இயக்கங்கள் கால இடையீட்டால் குறுகியவை. ஆனால் தன்மையாலும், நோக்கத்தாலும், நிறைவேற்ற எடுத்துக்கொண்ட ஈடுபாட்டாலும் ஆழமானவை, தீவிரமானவை. ஆளும் ஆங்கிலேயர்க்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் தந்து நின்றவை. அவ்விடுதலை முயற்சியை இருவகையாகப் பகுக்கலாம்.

அ. விடுதலை இயக்கத்தில் பாளையக்காரர்களின் பங்கு
ஆ. வேலூர்ச் சிப்பாய்க் கலகம்

## விடுதலை இயக்கத்தில் பாளையக்காரர்களின் பங்கு

ஆர்க்காட்டு நவாப்பின் நேரடி ஆதிக்கத்தில் அடங்கிய பாளையங்கள் கி.பி. 1790இல் ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பாளையக்காரர்களுக்கும் கம்பெனிக்கும் இடையே கசப்புணர்வு தோன்றியது. இதைத் தொடர்ந்து போராட்டங்கள் தொடங்கின.

புரட்சிசெய்த பாளையக்காரர்கள் தங்களுக்குள் கூட்டிணைப்புக்களை உருவாக்கிக்கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்கத் திட்டமிட்டனர். இக்கூட்டிணைப்புக்களுக்குத் தலைமை தாங்கியவர்களுள் வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், கோபாலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

## வீரபாண்டிய கட்டபொம்மனின் விடுதலைப் புரட்சி

கி.பி.1700 முதல் 1799 வரை பாஞ்சாலங்குறிச்சியை ஆண்டவன் வீரபாண்டிய கட்டபொம்மன். அவன் தொடக்கத்தில் ஆங்கிலேய மேலாளரை அனுசரித்துப்போகும் கொள்கை கொண்டிருந்தான். ஜான்சனைச் சந்திக்கக் கையில் வரிப்பணத்துடன் பின்தொடர்ந்து அலைந்தான். இறுதியில் இராமநாதபுரத்தில் சந்தித்த கட்டபொம்மனை

ஜான்சன் இழிவுப்படுத்திய முறைகளும் கைது செய்ய எடுத்த நடவடிக்கைகளும் அவனை அங்கிருந்து தப்பிச்சென்று புரட்சி செய்யத் தூண்டின.

கி.பி.1799 செப்டம்பர் ஐந்தாம் நாள் பாஞ்சாலங்குறிச்சி மீது பானர்மேன் படைதொடுத்தான் ஊமைக்துரையின் தற்காப்புப்படை துணைநின்றும், பாதுகாப்பற்றுப்போன பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையினின்று வீரபாண்டிய கட்டபொம்மன் தன் படைகளுடன் பாதுகாப்பான இடம் தேடி வெளியேற நேர்ந்தது. எனினும் ஆங்கிலேயப் படை கோலர்பட்டியில் வீரபாண்டியனை இடைமறித்துப் போரிட்டு அவனைத் தோற்கடித்தது. கி.பி.1799 அக்டோபர் 16ம் நாள் பாளையக்காரர்கள் உள்ளிட்ட விசாரணை மன்றத்தில் கட்டபொம்மன் விசாரிக்கப்பட்டு கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டான்.

## மருதுபாண்டியரின் சிவகங்கைக் கூட்டிணைப்பு

கி.பி. 1780 முதல் 1801 வரை சிவகங்கைச் சீமையை ஆண்டவர்கள் மருதுசகோதரர்கள். சின்ன மருது, பெரியமருது என அழைக்கப்படும் இவர்களின் புரட்சிக் கோட்டையாகக் காளையார்கோவில் விளங்கியது. ஆங்கிலேயர்க்கு எதிரான புரட்சியில் இணைந்து செயல்பட வாய்ப்பாக இவர்கள் ஒரு கூட்டிணைப்பை உருவாக்கினர்.

அவர்கள் தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இருந்த ஆங்கிலேயரின் காவல் நிலையங்களைத் தாக்கிப் படைக்கருவிகளையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றினர். புரட்சிக்காரர்களின் இச்செயலைத் தண்டிக்கும் நடவடிக்கையாகக் கி.பி. 1801 செப்டம்பர் திங்களில் காளையார்கோவில் ஆங்கிலேயரால் தாக்கப்பட்டது. மருதுபாண்டியர், கோபாலன் உள்பட எழுபத்து மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

## வேலூர்ச் சிப்பாய்க் கலகம்

கி.பி. 1806ம் ஆண்டு ஆங்கிலேய அரசு ஆயுதப்படைகளில் சில சீர்திருத்தங்களைச் செய்தது. இவ்விதிகளின்படி, படைவீரர்கள் ஐரோப்பியரது தலைப்பாகை போன்ற புதிய தலைப்பாகையை அணிந்து கொள்ள வேண்டும். மீசை தாடி வைத்துக் கொள்ளக் கூடாது. சாதி சமய வேறுபாடுகளைச் சுட்டும் நெற்றிப் பொட்டு, காதணி போன்றவற்றை இடக்கூடாது. இச்சீர்த்திருத்தங்கள் உள்நாட்டுப் படைவீரர்களின் சமய உணர்ச்சிகளைத் தூண்டின. மனக் கசப்படைந்து நின்ற படைவீரர்கள், இச்சீர்த்திருந்தங்களுக்குக் காட்டிய எதிர்ப்பு இறுதியில்

பெருங்கிளர்ச்சியாக உருவெடுத்தது. இக்கிளர்ச்சி வேலூர்க் கோட்டைக்குள் நடைபெற்றமையின் இது வேலூர்ப்புரட்சி என அழைக்கப்பட்டது.

வேலூர்க் கோட்டையைக் கைப்பற்றுவது என்ற நோக்குடன் கி.பி. 1806 ஜுலை பத்தாம் நாள் புரட்சியில் இறங்கிய படைவீரர்கள் ஐரோப்பியர் மிக்கிருந்த படைப்பிரிவையும், ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புக்களையும் கடுமையாகத் தாக்கினர். எனினும் இப்புரட்சி மிக விரைவில் ஒடுக்கப்பட்டது. இம்மோதலில் 100 ஐரோப்பியர்களும் 300 உள்நாட்டுப் படைவீரர்களும் உயிரிழந்தனர்.

## வேலூர்க் கலகத்தின் விளைவுகள்

புரட்சியால் தோன்றிய மோதலுக்குப் பின் சென்னை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். சிக்கல் தோன்றக் காரணமாயிருந்த விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. கி.பி. 1857ல் வடநாட்டில் நடைபெற்ற சிப்பாய்க்கலகம் என்று அழைக்கப்படும் முதல் இந்திய விடுதலைப் போராட்டம் வேலூர்க் கிளர்ச்சியின் விளைவு அல்லது தொடர்ச்சி எனச் சில வரலாற்றாய்வாளர்கள் மதிப்பிடுவர்.

## காந்தியடிகளுக்கு முந்தைய காலம்

கி.பி. 1885ல் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. 1885 முதல் 1905 வரை இவ்வியக்கம் சமூகப்பணிகளில் பெரிதும் ஆர்வம் செலுத்தியது. தேய்ந்திருந்த இந்தியரின் நிலையை மேம்படுத்தும் நோக்கம் கொண்டிருந்தமையால் இவ்வியக்கம் நேர்மையான முறையீடுகளை, அடக்கமாக அரசிலாரிடம் விண்ணப்பித்து நின்றது.

கி.பி. 1906ல் காங்கிரஸ் மாநாடு திலகரின் தலைமையில் கூடி சுயராஜ்யம் நமது பிறப்புரிமை என அறிவித்த பின்னர் விடுதலை இயக்கம் தீவிரமடைந்தது. இம்மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் கலந்து கொண்ட வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் தீவிரவாதப் பிரிவில் நின்றனர்.

## காந்தியடிகள் காலம்

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு ஆற்றல்களை ஒருமுகப்படுத்தி, சத்தியாக்கிரகம் என்ற கோட்பாட்டின் கீழ் கொண்டு வந்த பெருமை காந்தியடிகளைச் சாரும். கி.பி.1919ல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். சட்டப்படியான கிளர்ச்சியாக இல்லாமல், மக்கள் விரும்பி அளிக்கும் ஆதரவு என்ற பரந்த அடிப்படையில் இவ்வியக்கம் எழுப்பப்பட்டது.

இந்திய தேசிய காங்கிரஸ் கி.பி.1885ல் தொடங்கப்பட்டபின் 1887, 1874,1898,1903,1914,1927 ஆகிய ஆண்டுகளில் சென்னையில் மாநாடுகளைக்

கூட்டியது. கி.பி.1927ம் ஆண்டு மாநாட்டில் ‘நாட்டின் முழு விடுதலையே காங்கிரசின் குறிக்கோள்’ என அறிவிக்கப்பட்டது. 1930 ஜனவரி 29ம் நாள் இந்தியா முழுவதும் விடுதலை நாள் விழா கொண்டாடப்பட்டது. கி.பி. 1942ல் இந்திய தேசிய காங்கிரஸ் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கியது. இவ்வியக்கத்தில் தீவிரம் காட்டியவர்களுள் சத்தியமூர்த்தி, காமராஜர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இதன் விளைவாக இரண்டாம் உலகப்போரால் வலுவிழந்தகிடந்த ஆங்கிலேய அரசு 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ல் இந்திய விடுதலை பெற்றதாக அறிவித்தது.

## பயிற்சி வினாக்கள்

### ஒரு பக்க அளவில் விடை தருக

1. விடுதலை இயக்கத்தில் பாளையக்காரர்களின் பங்கினைக் கூறுக.
2. வீரபாண்டிய கட்டபொம்மனின் விடுதலைப் புரட்சியை விவரி
3. வேலூர்ச் சிப்பாய்க் கலகத்தை விளக்குக.

### மூன்று பக்க அளவில் விடை தருக.

1. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கினை விவரிக்க

# பாடம் 16

# இருபதாம் நூற்றாண்டில் தமிழகம்

நாட்டின் வளர்ச்சிநிலை பல துறைகளிலும் சீராக அமைய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் நன்கு வரையறுக்கப்பட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவை ஐந்தாண்டுத் திட்டங்கள் என அழைக்கப்பட்டன. இத்திட்டங்களில் வேளாண்மைத்துறை, கனரகத் தொழில்துறை ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

2001-2002 ஆண்டுடன் முடிவடையும் ஒன்பது ஐந்தாண்டுத் திட்டங்களால் தமிழகம் பெற்றுள்ள வளர்ச்சி நிலைகளை உற்பத்தித்துறை வளர்ச்சி, வாழ்க்கை வளத்துறை வளர்ச்சி, அறிவுத்துறை வளர்ச்சி, சமுதாய நலத்துறை வளர்ச்சி என நான்கு பெரும் பிரிவுகளாக உள்ளடக்கலாம்.

## உற்பத்தித் துறைகளின் வளர்ச்சி நிலைகள்

வேளாண்மை, நீர்ப்பாசனம், தொழில், பால், மீன், வனவளம் ஆகியன உற்பத்தித் துறைகளுள் அடங்கும்.

## வேளாண்மைத் துறை

இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம் வேளாண்மை. வேளாண்மை உற்பத்தியின் அளவைக் கொண்டுதான் நமது பொருளாதாரத்தின் வெற்றிகளை மதிப்பிடுகிறோம். நீர்ப்பாசன வளம், ஊட்டச்சத்து மிக்க விதைகள், இரசாயன உரங்கள், இயந்திரக் கலப்பைகள் வேளாண்மைக்குத் துணைநிற்கும். இவை அனைத்திலும் முழுக்கவனம் செலுத்தியதால் நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் ‘ ரோஜ்கார் யோஜனா’ திட்டத்தின் கீழ் தமிழக விவசாயிகளுக்கு 205.10 கோடி மத்திய காலக் கடனும், 368.64 கோடி நீண்டகாலக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

## நீர்ப்பாசனத் துறை

தமிழ்நாட்டில் 17 நீர்மின் நிலையங்கள், 3 அணுமின் நிலையங்கள், ஒரு அணு ஆற்றல் மின் நிலையம் ஆகியன உள்ளன. இவற்றுள் குந்தா, பிரம்பிக்குளம், ஆழியாறு, பெரியாறு, பாபநாசம் ஆகிய அணைகள், வைகை, மேட்டூர் அணை, பவானிசாகர் நீர்த்தேக்கம் ஆகியவை அணைக்கட்டுக்களுள் குறிப்பிடத்தக்கவை.

## தொழில்துறை

1992-93 இல் 6808 கோடிக்குப் பொருள்களை இறக்குமதி செய்த தமிழகம், 200-2001 இல் 21,387 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்துள்ளது. 1,56,893 கோடி ரூபாய் முதலீடு செய்து 2001 ல் தமிழகம் இந்தியாவிலேயே தொழில்துறையில் முதலாவது மாநிலமாகத் திகழ்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம், பெரம்பூர் இணைப்புப் புகைவண்டிப் பெட்டி தொழிற்கூடம், சேலம் இரும்பு எஃகாலை, எண்ணூர், கல்பாக்கம் அணுமின் நிலையங்கள், திருச்சி உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்கூடம், ஆவடி டாங்கித் தொழிற்கூடம், மணலி மண்ணெண்ணெய் சுத்தி செய்யும் தொழிற்கூடம். அம்பத்தூர் டி.ஐ. மிதிவண்டித் தொழிற்கூடம், சென்னை ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள மிகப்பெரிய தொழிற்கூடங்களுள் குறிப்பிடத்தக்கவை.

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டம் தமிட்நாட்டுக்குத் தேவைப்படும் மின்சாரம், செயற்கை உரம், அடுப்புக்கரி ஆகியவற்றை உற்பத்தி செய்யப் பெரிதும் துணை நிற்கிறது. தென்னிந்தியத் துணி ஆய்வுக் கழகத்தின் தலைமையகம் கோவையில் உள்ளது, இந்திய மருத்துவ ஆராய்ச்சியகம் சென்னையில் உள்ளது. இந்திய வேளாண்மை ஆய்வகம், இந்திய வானியல் இயற்பியல் நிலையம், படச்சுருள் தயாரிப்பகம் ஆகியன கொடைக்கானலில் நிறுவப்பட்டுள்ளன என்பனவும் இங்கு நினைவு கூறத்தக்கவை.

ஹோசூர் ராணிப்பேட்டை, அம்பத்தூர், காரைக்குடி, சிவகங்கை, பரமக்குடி, திருச்சி ஆகிய இடங்கள் தொழில் கூட மையங்களாக விளங்குகின்றன.

## கைத்தறித்துறை

புதுக்கோட்டை, தருமபுரி, எட்டயபுரம், தேனி ஆகிய இடங்களில் 21 கோடி ரூபாய் செலவில் புதிய நூற்பாலைகள் கட்டப்பட்டுள்ளன.

## கதர், கிராமத் தொழில்

தமிழ்நாட்டில் 1,250 கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 90,000 கைவினைத் தொழிலாளிகள் கிராமத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

## பிற உற்பத்தித்துறைகள்

மீன்வள ஆய்வகம் மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது. கடலோர ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 100 கோடி செலவில் விபத்துத்தடுப்பு, போக்குவரத்து, சுற்றுலாத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

## வாழ்க்கை வளத்துறைகள்

வீட்டுவசதி, குடிநீர், மின்சாரம், போக்குவரத்து ஆகிய துறைகள் வாழ்க்கை வளத்தை வளர்க்கத் துணைநிற்கும் துறைகளாகும்.

## வீட்டுவசதி

'தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்', 'தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்', 'வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்' மூலம் 1991-96 ஆண்டுகளில் மொத்தம் 1267.80 கோடி செலவில் 3,81,243 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## குடிநீர் வசதி

2000-2001 இல் சிற்றூர்களுக்குக் குடிநீர் வசதி செய்ய 842 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 34,526 சிற்றூர்கள் குடிநீர் வசதி பெற்றுள்ளன.

## மின் வசதி

சென்னை அணுவாற்றல் நிலையம், கல்பாக்கம் அணுமின் நிலையம், எண்ணூர் அணுமின் நிலையம், நெய்வேலி அனல்மின் நிலையம் ஆகியன தமிழகத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் ஆகும். குடிசைகளுக்கு மின் இணைப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 5.2 நூறாயிரம் குடிசைகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

நீர், அனல், சூரிய வெப்பம், அணுமின் சக்தி ஆகிய மரபு சாரா எரி சக்தி வளங்களை மிக அதிகமாக இந்தியாவில் பயன்படுத்தும் மாநிலம் தமிழகம் ஆகும்.

## போக்குவரத்து வசதி

சென்னை மீனம்பாக்கம் ஒரு சர்வதேச விமான நிலையம் ஆகும். இது தவிர மதுரை, கோவை, தஞ்சை, திருச்சி, வேலூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலும் விமானத்தளங்கள் நிறுவப்பட்டுள்ளன. தெற்கு இரயில்வேயின் தலைமையகமாகச் சென்னை உள்ளது. தமிழகத்தில் 1.70 லட்சம் கிலோ மீட்டர் நீளச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

## அறிவுத்துறை வளர்ச்சி

கல்வித்துறை, கல்வி, சுற்றுலா, தொல்பொருள் ஆய்வு, தமிழ் ஆகிய வளர்ச்சித் துறைகள் இதனுள் அடங்கும்.

## பள்ளிகள்

தமிழ்நாட்டில் மொத்தம் 36,396 பள்ளிகள் உள்ளன. உயர்நிலைப்பள்ளிகள் 3,357. மேல்நிலைப்பள்ளிகள் 1,405 இவற்றில் பணியாற்றும் மொத்த ஆசிரியர்கள் 2.71 நூறாயிரம் பேர்.

**பல்கலைக்கழகங்கள்:**

தமிழகத்தில் 28 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றுள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. உலகத்தமிழ் இணையப் பல்கலைக்கழகம், சென்னை
2. அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம், சென்னை
3. திருச்சி அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம், திருச்சி
4. கோவை அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம், கோவை
5. திருநெல்வேலி அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், சென்னை
7. அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
8. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
9. கோவை பாரதியார் பல்கலைக்கழகம்,
10. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
11. சேலம் பெரியார் பல்கலைக்கழகம்,
12. திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
13. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்,
14. காந்திகிராமப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்

**கல்லூரிகள்**

தமிழ்நாட்டில் மொத்தம் 188 கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்லூரிகள் 45. கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவை 33. மதுரை, திருநெல்வேலி பல்கலைக்கழகங்களைச் சார்ந்தவை 77.

**அஞ்சல்வழிக் கல்வியும் தொடர்கல்வியும்**

மதுரை, அண்ணாமலை, சென்னை ஆகிய பல்கலைக்கழகங்களில் அஞ்சல் வழிக்கல்வி தொடங்கப்பட்டு அதன் மூலம் 900,000 பேர்க்கு கல்வி பயில வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2001ல் நூற்றுக்கணக்கான கல்லூரிகள் மாலை நேர வகுப்புத் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

## தொழில்நுட்பக் கல்வி

தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்கென அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 14 பொறியியல் கல்லூரிகளும் 59 பாலிடெக்னிக் கல்லூரிகளும் உள்ளன.

## இட ஒதுக்கீடு

இன அடிப்படையில் முற்பட்ட இனம், பிற்பட்ட இனம், தாழ்த்தப் பட்ட இனம், பழங்குடிகள் எனப் பகுக்கப்பட்டுக் கல்வி கற்க அவர்களுக்குப் பொருளாதாரச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## கல்வித் துறை

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உயர்கல்விக்கு 15 கோடியும், தொழில் கல்விக்கு 20 கோடியும் ஒதுக்கப்பட்டிருந்தது. முதியோர் கல்விக்கு மட்டும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1807 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

## தகவல் தொழிநுட்பத் துறை

1990ல் 2 கோடியாக இருந்த தமிழக மென்பொருள் ஏற்றுமதி 2001ல் 1964 கோடியாக உயர்ந்துள்ளது. சென்னையில் 340 கோடிச் செலவில் டைடல் மென்பொருள் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்த ‘டானிடெக்’ என்னும் தகவல் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது.

## பிற அறிவுத் துறைகளின் வளர்ச்சி

பயணிகள் தங்கவும் பொழுதுபோக்கு வசதிகளைப் பெருக்கவும் என்னும் இருநிலைக் குறிக்கோளுடன் சுற்றுலா வளர்ச்சிக்கழகம் இன்றுவரை சிறந்த முறையில் இயங்கி வருகிறது. பழங்கல்வெட்டுகளைக் கண்டறிதல், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தல், கிடைத்த சின்னங்களைப் பாதுகாத்தல் என்னும் மும்முனைக் குறிக்கோள்களுடன் தொல்பொருள் ஆய்வுத்துறை செயல்படுகிறது. இத்துறை அகழ்வாய்வு நடத்திய இடங்களுள் பூம்புகார், கங்கைகொண்ட சோழபுரம், கோவலன்பொட்டல் ஆகியன குறிப்பிடத்தக்கவை. தமிழ் வளர்ச்சிக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச்சங்கம், சென்னை உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஆகியவை தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிலையங்களுள் குறிப்பிடத்தக்கவை.

## சமுதாய நலத்துறை வளர்ச்சி

குடும்பநலத்திட்டம் உழைப்புக்கு உணவு அளிக்கும் கிராம வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வளர்ச்சியின் தன்னிறைவுத் திட்டம், பசிப்பிணி நீக்கும் சத்துணவுத்திட்டம், இருபது அம்சத்திட்டம் ஆகியன இத்துறைக்குள் அடங்கும்.

## குடும்பநலத் திட்டம்

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது, மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பது ஆகிய குறிக்கோளுடன் செயல்படுவது குடும்பநலத்திட்டம் ஆகும்.

## கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

உழைப்புக்கு உணவு தரும் திட்டம் 1977 ஏப்ரலில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக பல்லாயிரம் தொழிலாளிகள் ஆண்டுதோறும் பயன் பெறுகின்றனர். 10 கோடி பெறுமான பணிகள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றனர்

## தன்னிறைவுத் திட்டம்

குறிப்பிட்ட சில வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அவ்விடங்களில் உள்ள பாதைகளைச் செப்பனிடுதல், குடிநீர் வசதி செய்தல், நீர்ப்பாசன வசதி செய்தல், பள்ளிகள், மருத்துவமனைகள் கட்டுதல் போன்ற முக்கியப் பணிகளில் ஈடுபடுவது தன்னிறைவுத் திட்டம் ஆகும்.

## சத்துணவுத்திட்டம்

1982 ஜூலை 1 முதல் தமிழக அரசால் தொடங்கப்பட்ட இலவசச் சத்துணவுத்திட்டம் 2 வயது முதல் 10 வயது வரையில் உள்ள 40 நூறாயிரம் குழந்தைகளுக்கு ஒரு வேளைப் பகல் உணவு அளிக்கும் நோக்கம் கொண்டது. இதற்கென ஒரு தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது.

## இருபது அம்சத் திட்டம்

சமூக, பொருளாதாரத்திற்குப் புதிய ஊக்கம் ஊட்டும் நோக்குடன் மைய அரசு 1975ல் தொடங்கிய இருபது அம்சத் திட்டத்தை முழு ஈடுபாட்டுடன் நிறைவேற்றுவதில் முதலிடம் பெற்று நிற்கும் மாநிலம் தமிழகம் ஆகும். இத்திட்டத்தின் படி கட்டுப்பாட்டு விலையில் பொருள் விநியோகம், நில உயர்வரம்பு, கொத்தடிமை ஒழிப்பு, சிற்றூர் கடன் நிவாரணம், மின்ஆற்றல், நீர்ப்பாசனம், கைத்தறி ஆகியவற்றில் உயர்கவனம் செலுத்திய பெருமை தமிழகத்திற்கு உரியது.

## பயிற்சி வினாக்கள்

**ஒரு பக்க அளவில் விடை தருக**

*1. 20-ம் நூற்றாண்டில் வேளாண்மைத்துறை பெற்ற வளர்ச்சியை விளக்குக.*

*2. 20-ம் நூற்றாண்டில் அறிவுத்துறை பெற்ற வளர்ச்சியை விளக்குக.*

**மூன்று பக்க அளவில் விடை தருக.**

*1. 20-ம் நூற்றாண்டில் தமிழகம் பெற்றிருந்த வளர்ச்சியைக் குறித்து கட்டுரை வரைக.*

## துணை நூல்கள்


1. டி.வி. சதாசிவ பண்டாரத்தார் பாண்டியர் வரலாறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
2. டி.வி. சதாசிவ பண்டாரத்தார் பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலை பல்கலைக்கழகம்,
3. மா. இராசமாணிக்கனார் பல்லவர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை
4. கே.வி. இராமன் பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.
5. அ. தெட்சிணாமூர்த்தி தமிழக வரலாறும் பண்பாடும், தஞ்சாவூர்
6. அ.கி. பரந்தாமனார் மதுரை நாயக்கர் வரலாறு
7. ம.பொ.சி இந்திய விடுதலைப்போரில் தமிழகம்
8. சு. வித்யானந்தம் தமிழர் சால்பு
9. ஆ. வேலுப்பிள்ளை தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்
10. க. நெடுஞ்செழியன் இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழகமும்
11. ஆ. இராமசாமி தமிழ்ப் பேரரசுகளின் சரிவும் வீழ்ச்சியும்

## மாதிரி வினாத்தாள்

## Paper VI – தமிழக வரலாறும் பண்பாடும்

**நேரம் : 3மணி** **மதிப்பெண் : 100**

### பகுதி அ (5 x 5= 25)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. தமிழக வரலாற்றை அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் குறித்து எழுதுக.
2. புதிய கற்காலம் குறித்து விவரி
3. தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட தொடர்பினை இலக்கியச் சான்றுடன் வழி விவரி
4. சங்க கால மகளிர் நிலை குறித்து எழுதுக
5. பல்லவர் காலத்து குகைக் கோயில்கள் பற்றிக் கூறுக.
6. முதலாம் ராஜராஜ சோழனின் சிறப்புகளைக் கூறுக.
7. பாண்டியர் வீழ்ச்சிக்கான காரணங்களை விளக்கு
8. தமிழகம் வந்த ஐரோப்பியர்கள் யாவர்? விவரி
9. வீரபாண்டிய கட்டபொம்மனின் விடுதலைப் புரட்சியை விளக்கு
10. இருபதாம் நூற்றாண்டில் கல்வித்துறை பெற்ற வளர்ச்சியைக் குறிப்பிடுக.

### பகுதி – ஆ (15x5=75)

**எவையெனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.**

11. தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்கள் யாவை? விவரி.
12. சிந்துவெளி நாகரிகம் தமிழ்ப்பண்பாட்டுடன் கொண்ட தொடர்பினை விளக்குக.
13. சங்கம் இருந்தமைக்கான சான்றுகளை விளக்குக.
14. பழந்தமிழரின் சமய வழிபாடு, உணவு, விழாக்கள் பற்றி விவரிக்க.
15. பல்லவர்களின் தோற்ற வரலாற்றை எழுதுக.
16. பிற்காலச் சோழர்களின் சமூக, பொருளாதார நிலையை விவரிக்க.
17. நாயக்கர் காலம் - கட்டுரை வரைக.
18. ஐரோப்பியர்கள் வரவும் அவர்தம் சீர்திருத்தப் பணிகளும் - விவரி
19. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு.
20. இருபதாம் நூற்றாண்டில் தமிழகம் - கட்டுரை வரைக.

**Prepared by**
**Dr. R. SUDHAMATHI**
Assistant Professor in Tamil
Rani Anna Government College for Women, Tirunelveli – 627 008